விலை: 30
பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 358 கார்த்திகை 3ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 19 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

அருந்ததி
இணைய திருமண சேவை
FREE Registration Available
* conditions apply
www.arunthathee.com
+94 777 16 45 24
021 49 27 527 | 011 40 63 282

## பிரபாகரனிடம் இருந்தே போரைக் கற்றுக்கொண்டோம்

### பொன்சேகா ஒப்புதல் வாக்குமூலம்

கொழும்பு, நவ. 19
வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் இருந்தே நாம் போரைக் கற்றுக்கொண்டோம். பிரபாகரன் உருவாகியதன் காரணமாகவே பீல்ட் மார்சல் உருவாகினார். தற்போதுள்ள பலமான இராணுவம் அப்போது இருந்திருந்தால் இரு ஆண்டுகளில் போரை முடித் >> 53

## விக்கி, க.குமார், சிவாஜிலிங்கம் இடையே இனவாதி போட்டியாம்

### கண்டு பிடித்திருக்கிறார் ஜே.வி.பியின் அநுரகுமார எம்.பி.

கொழும்பு, நவ. 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டுள்ளது. இதனால் வடக்கில் யார் இனவாதி என்பதில் தற்போது போட்டி ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், சிவாஜிலிங்கம் ஆகியோர் போட்டியிட்டு இனவாதத் >> 53

## ரி.ஆர்.ஓவின் கணக்குகள் பற்றி ரி.ஐ.டி. விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 19
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (ரீ.ஆர்.ஓ) பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் கழகத்தின் வைப்புக்கள் இருந்த வங்கிகளின் முன்னாள் முகாமையாளர்களை விசாரணைக்கு வருமாறு பயங்கர >> 53

# காலி வன்முறைகள் அருவருக்கத்தக்கன

## சம்பந்தன் காட்டம்

கொழும்பு, நவம்பர் 19
காலியில் முஸ்லிம்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், இது அருவருக்கத்தக்க செயல் எனவும் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது சகோதர இனமான முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவத்தை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது வேண்டத்தகாத செயல் அருவருக்கத்தக்க செயல். நாட்டில் மீண்டுமொரு இன ரீதி >> 53

## 35 கிலோ கஞ்சா கொடிகாமத்தில் நேற்றிரவு மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 19
பொதியிடத் தயாராக இருந்த 35 கிலோ கஞ்சா கொடிகாமத்தில் நேற்று இரவு மீட்கப்பட்டது. சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
இரகசியத் தகவலையடுத்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தை ஒட்டி சோதனை செய்த >> 53

## ஆஸியிலிருந்து ஏதிலிகளை இலங்கை திருப்பி அழைக்கும்

கொழும்பு, நவ. 19
ஆஸ்திரேலியாவில் குடியுரிமையற்ற நிலையில் ஏதிலி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பி அழைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை வாய்மூலகேள்வி நேரத்தின்போது அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் புத்திக பத்திரண கேள்வி எழுப்பினார்.
"சட்டத்துக்குப் புறம்பாக படகுகள் மூலமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கையர்கள் அங்கு தடுப்பு முகாம்களில் உள்ளனர். அந்த மக்களுக்கு மேற்படி முகாம் >> 53

### 1983 இனக் கலவரம் போன்று

## குற்றங்களை மறைப்பதற்காக இனவாதம் தூண்டப்படுகிறதா?

### விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் கேள்வி

கொழும்பு, நவ. 19
அண்மையநாள்களாக பிணைமுறி மோசடிகள், அலோசியஸுடன் உரையாடிய கோப் குழு உறுப்பினர்களின் விவரங்களே பத்திரிகையில் முன்பக்கச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில்தான் கிந்தோட்டையில் இனமோதலும் நடக்கின்றது. இந்த இரண்டுக்கும் இடையிலான தொடர்பு என்ன? குற்றங்களைமறைக்க மக்களிடத்தில் இனவாதத் தீ மூட்டப்படுகின்றதா?
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித் >> 53

## கிந்தோட்டை வன்முறைகள்; 19 பேர் இதுவரையில் கைது

### இரவு முழுவதும் ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, நவ. 19
காலி, கிந்தோட்டை வன்முறைச் சம்பவம் தொடர்பில் 19பேர் கைது செய்யப்பட்டனர். இன்று காலை வரையும் அங்கு ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டது. சமூகவலைத் தளங்கள், இணையங்களில் இந்தப் பிரச்சினையை பூதாகரமாக்கும் வகையில் செயற்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு >> 53


வன்முறையில் தீக்கிரையான வாகனம்

# வாள்வெட்டுக்கள் குறித்து எஸ்.டி.ஐ.ஜி. கள ஆய்வு

### சம்பவ இடங்களுக்கும் வைத்தியசாலைக்கும் நேரில் சென்றார்

யாழ்ப்பாணம், நவ. 19
வாள்வெட்டுக் கும்பல்கள் தாக்குதல் நடத்திய இடங்களில் நேற்று நேரடி களஆய்வை மேற்கொண்டார் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ.
வாள்வெட்டுச் சம்பவங்களில் படுகாயமடைந்தவர்களையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார். காயமடைந்தவர்களிடம் சம்பவம் தொடர்பாக நேரில் விசாரித்தறிந்தார். >> 53



### புதிய அரசமைப்புக்கான

## ஆதரவுப் பரப்புரையில் தகவல் திணைக்களம்

### உடன் ஈடுபடுத்த வழிகாட்டல் குழு முடிவு

கொழும்பு, நவ. 19
அரசமைப்பு உருவாக்கப் பொறிமுறை தொடர்பில் பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதால், உண்மையைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை அரச தகவல் திணைக்களத்தின் ஊடாக உடனடியாக ஆரம்பிப்பது என்று வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.
புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை அரசமைப்புச் சபையில் செப்ரெம்பர் 21ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. அறிக்கை மீதான விவாதம் ஒக்ரோபர் மாதம் >> 53

## மகிந்த - மைத்திரி இரகசிய சந்திப்பு

### கோத்தபாயவின் ஏற்பாட்டில்

கொழும்பு, நவ. 19
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நேரடிச் சந்திப்பொன்று இரகசியமாக இடம்பெற்றுள்ளது என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் பிரபல வர்த்தகருமான டட்லி சிறிசேனவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு மிக இரகசியமாக நடைபெற்றது எனவும் அந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
முன்னாள் பாதுகாப்புச் செயலரும் மகிந்த ராஜபக்சவின் தம்பியாருமான >> 53

# வடக்கு வாள்வெட்டுக்கள் பயங்கரவாதச் செயலல்ல

### பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19
வடக்கில் நடந்த வாள்வெட்டுக்கள் பயங்கரவாதச் சம்பவங்கள் இல்லை. இருபது வயது இளையோருக்கு (பெடியள்) இடையிலான சிறு மோதல்களே. அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்.
இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.
"யாழ்ப்பாணத்தில் மீளவும் விடுதலைப் புலிகள் உருவாகிவிட்டனர் என்று நாடாளுமன்றில் சிலர் பேசுகின்றனர். அவ்வாறு ஒரு நிலமை யாழ்ப்பாணத்தில் இல்லை. >> 53

## ஐ.நாவின் 53 பரிந்துரைகள் இலங்கை அரசால் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 19
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவ பூகோள கால மீளாய்வின் போது, உலக நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட 53 யோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.
கடந்த புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவ பூகோள கால மீளாய்வு அமர்வு இடம்பெற்றது.
மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை நிறைவேற்ற வேண்டிய 230 >> 53






# இயற்கையை நேசிக்கின்ற சமூகத்தை உருவாக்குவோம்

## சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,நவ.19
இயற்கையை நேசிக்கின்ற. இயற்கையோடு ஒன்றி வாழுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டிய பெரிய பொறுப்பு எமக்கு உண்டு. இவ்வாறு சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்தப்படும் கண்காட்சியில் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் கலந்து கொண்டார். அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மரநடுகை மாத நிகழ்வு வடமாகாணசபையின் திணைக்களங்களுக்கு மட்டும் உரித்தான ஒரு நிகழ்வு என்ற தவறான கருத்து பொதுமக்களிடையே நிலவுகின்றது. இந்நிகழ்வானது வடமாகாணசபையின் விவசாய அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் இது வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பொது மக்களுக்கும் உரிய ஒரு நிகழ்வாகும்.

நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களின் உள்நுழைவுகள் பற்றியும் எமது வளங்களைச் சுரண்டிச் செல்கின்றமை பற்றியும் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். இவை மத்திய அரசின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றதோ என்ற சந்தேகம் எம்மிடம் வலுப்பெற்றுள்ளது.

வளர்ச்சியடைந்துள்ள இலத்திரனியல் யுகத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையற்ற சமூகத்தை உருவாக்குவதென்பது இயலாத காரியம். எனினும் இந்த இலத்திரனியல் சாதனங்களை எம்மில் இருந்து எவ்வளவு தூரத்தில் வைத்திருக்க வேண்டும், அதன் பயன்பாடுகளை எவ்வாறு மட்டுப்படுத்த முடியும் என்பன பற்றி பொதுமக்கள் அறிவூட்டப்பட வேண்டும்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் சங்கிலியன் பூங்காவையும் பழைய பூங்காவையும் இணைக்கின்ற கச்சேரி நல்லூர் வீதியின் இரு மருங்கிலும் வரிசையாக மரங்களை நாட்டு ஒரு பசுமை நிறைந்த சாலையாக இந்த வீதியை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சாலையின் இருமருங்கிலும் நடப்படுகின்ற மரங்களை நீருற்றி பராமரிக்கின்ற பொறுப்பை அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களே மனமுவந்து ஏற்றுக் கொண்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும் இதன் மூலம் மக்களிடையே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் குறிக்கோள்கள் ஆழப்பதிந்திருப்பது தெளிவாகின்றது என்றார்.

(ந.ரி4)



## மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு



முல்லைத்தீவு,நவ.19
மறைந்த முன்னாள் வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதனின் ஞாபகார்த்தமாக இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு, கள்ளப்பாடு, தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

179 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

வன்னிக்குறோஸ் சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் இணைப்பாளர் ரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சி. தவசீலன், றென்சிரவி, மறைந்த முன்னாள் மாகாண சபைப் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதனின் மகன் பீற்றர் இளஞ்செழியன், சிலாவத்தை க.தொ.கூ சங்கத்தின் தலைவர் வை.கெங்காதரன், ஆசிரியர் செந்தூரன், கிராம அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-ரி5)

## சு. கட்சியின் பிரச்சினையில் தலையிடப் போவதில்லை

### உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு,நவ.19
சுதந்திரக் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையில் தலையிடப் போவதில்லை என பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
"சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், கூட்டு எதிரணியும் சேர்வதா? இல்லையா? என்பது கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையே தவிர அது ஒரு தேசியப் பிரச்சினையல்ல.

இது தொடர்பாக கூட்டணியில் ஒரு கட்சி என்ற வகையில் பிவித்துறு ஹெல உறுமய பொது மக்கள் மத்தியில் கருத்து எதனையும் தெரிவிக்காது. அந்தக்கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையை வெளிப்படுத்தக் கூடாது என்பதால், எமது கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது" என்றார்.

(ற-ரி5)

## 72ஆவது பிறந்தநாளை கொண்டாடிய மகிந்த

கொழும்பு,நவ.19
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தனது 72ஆவது பிறந்த நாளை குடும்பத்தாருடன் இணைந்து தனது அலுவலகத்தில் நேற்றுக் கொண்டாடினார்.

குடும்பத்தாருடன் கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடியுள்ளதுடன், திஸ்ஸமகாரம பகுதியில் மஹிந்தவின் சகோதரர்கள் மக்களுக்கு பாற்சோறு பகிர்ந்தளித்தனர்.

இந்த நிகழ்வில் மகிந்தவின் குடும்பத்தினர் உட்பட திஸ்ஸராம பகுதி ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (ற-ரி5)







## சிறப்புத் தெளிவூட்டல் நிகழ்வு மாங்குளத்தில்

வவுனியா,நவ.19
புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தில் பல விடயங்கள் மக்கள் நலன் சார்ந்து உள்வாங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நேற்று மாங்குளத்தில்சிறப்புத் தெளிவூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

இந்த விடயத்தை வலியுறுத்தி கையெழுத்துப்பெறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப் பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் பகுதியிலுள்ள இளைஞர் யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டு புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டிய கோரிக்கைகளை உறுதிப்படுத்தினர்.

(ற-ரி5)



சுதந்திரபுரம் சந்தியில் 21 வயது மதிக்க தக்க மனநலம் குன்றிய இளைஞன் ஒருவரை கப் ரக வாகனம் ஒன்று மோதியது. விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

## வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

நெல்லியடி, நவ.19
நெல்லியடி, ஐயனார் கோயில் பகுதியில் கிணற்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த தே. அன்னலட்சுமி (வயது84) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம்
வீட்டில் இருந்த பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் நிகழ்வுக்கு சென்றிருந்த வேளை அவரின் பேரப்பிள்ளையும் இவரிடம் கூறிவிட்டு செல்வதற்காக தேடிய போது கிணற்றுக்கு வெளியே அவரின் ஊன்றுகோல் கிடப்பதை கண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. (ற-422)

## முறைகேடாக குப்பை கொட்டியவர்கள் கைது

கொழும்பு,நவ.19
முறைகேடான விதத்தில் குப்பைகளை வீசிய குற்றச்சாட்டில் 93 பேர் கைதுசெய்யப்பட்டரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மேல்மாகாணத்தில் நேற்று நடைபெற்றது.
பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் இணைந்து, கடந்த 14ஆம், 15ஆம் திகதிகளில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டரென தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு கம்பஹா, களனி, நீர்கொழும்பு, களுத்துறை உள்ளிட்ட இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

(ந.ரி4)

# சிவில் விடயங்களில் இராணுவம் ஒருபோதும் தலையிடக் கூடாது

## வட மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19
இராணுவம் இராணுவத்தின் செயற்பாடுகளை மட்டும் பார்க்க வேண்டுமே தவிர சிவில் விடயத்தில் தலையிடக் கூடாது. இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உலகத்தில் வேறு எங்கும் இல்லாதவாறு இலங்கை இராணுவம் முன்பள்ளிகளை நடத்துகிறது.

வன்னியில் பல பிரதேசத்தில் இராணுவம் முன்பள்ளிகளை நடத்துவது உலகத்தில் இல்லாத செயல். இது ஒரு முறையற்ற செயலுமாகும். நடுவண் அரசுடன் இது தொடர்பில் பேசியபோதும் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் அது இருக்கிறது. இது மாற வேண்டும் இராணும் இராணுவத்தினுடைய செயற்பாடுகளை மட்டுமே பார்க்க வேண்டும். சிவில் விடயத்தில் ஒருபோதும் தலையிடக் கூடாது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலே இராணுவம் சிவில் விடயங்களிலே தலையிட்டுள்ளது இதனால் அந்த நாடுகள் குழம்பிப் போய் உள்ளன.

அதை எமது கூட்டாட்சி அரசும் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து செல்கிறது. இவற்றை நாமும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தொடர்பில் நாம் மீண்டும் நடுவண் அரசுடன் பேசுவோம் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் . அமைச்சுக்களுடன் தொடர்பு கொள்ளுவோம். அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளுவோம்.

குழந்தைகள் 5 வயதுவரை பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி, மடியில் வளர வேண்டும். நாங்களும் அப்படித்தான் வளர்ந்தோம். அவ்வாறு குழந்தைகள் வளர்வது தான் வேண்டும் என்பதுதான் அவர்களின் உடல் உள ஆரோக்கியம் சிறந்தது என்பது பன்னாட்டு ஆய்வாளர் கருத்து. முன்பள்ளி என்பது பாடசாலைக்கு முதலாவது பருவம் மட்டுமே.

ஆகவே 5 வயதுடைய குழந்தைகள் மட்டுமே அங்கு சேர்க்கப்பட ஆவேண்டும் அதற்கு குறைந்த வயதுடைய குழந்தைகள் பகல் பராமரிப்பு இல்லங்களில் சேர்க்கப்படல் வேண்டும்.

நூற்றுக்கணக்கான குழந்தைகளின் கை வண்ணங்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய கலை வண்ணங்கள் இங்கு மேடையேற்றப்பட்டன. அவை உண்மையிலேயே மிக அழகாக இருந்தன.

குழந்தைகள் வளர்கின்றபோது அவர்களின் பெற்றோர் தரும் பாசம் பேரன் பேத்திகளின் அரவணைப்பு, அவர்கள் சொல்லக்கூடிய நீதிக் கதைகள் , அவர்களின் பழைய அனுபவங்களை குழந்தைகளுக்குச் சொல்லும்போது அவர்கள் இயற்கையாகவே நிறைய அறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

குழந்தைகளுக்கு மிக மிக முக்கியமான அடிப்படையான விடயம் ஒழுக்கம். இந்த ஒழுக்கத்துக்கு அடுத்ததுதான் எங்களுடைய கல்வி. ஒழுக்கம் இல்லாத கல்வி என்பது பயனற்றதாகி விடும்.

ஒழுக்க விழுமியங்களோடு கல்வி கிடைக்குமாயின் அந்த கல்வி மக்கள், சமூதாயம், உலகம் என்று அனைவருக்கம் பயன்படுகின்ற கல்வியாக இருக்கும். முன்பள்ளி மாணவர்களுக்கு சமூகத்தை புரிந்துகொள்ள வேண்டிய அறிவை ஆசிரியர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார்.

(ற-ரி2)



# முல்லையில். மாவீரர் வணக்க நிகழ்வும் பெற்றோர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வும்



முல்லைத்தீவு,நவ.19
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் வணக்க நிகழ்வும் பெற்றோர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றன. ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் கைவேலிப்பகுதியில் அமைந்துள்ள ஜனநாயக போராளிகள் கட்சி தலைமைச்செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் செயலாளர் உள்ளிட்டவர்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. நினைவுப் பந்தலில் வைக்கப்பட்ட 200 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டது.

மாவீரர் பெற்றோர்களுக்கு மாவீரர்களின் திருவுருவப்படங்கள், தென்னங்கன்றுகள் மற்றும் நினைவுப்பொருள்களும் வழங்கப்பட்டன. ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கிருபாகரன், புதுக்குடியிப்பு வணிகர்சங்க தலைவர் செ.செல்வச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி, மற்றும் பொது மக்கள் என நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். -(ரி2,ரி3)

# வவுனியாவில் மர நடுகை செயற்திட்டம்

வவுனியா,நவ.19
"ஆளுக்கொரு மரம் நடுகை செய்வோம்" எனும் தொனிப்பொருளில் பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளரின் வழிகாட்டலில் பழமரக் கன்றுகள் நேற்று நடப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

பண்ணை முகாமையாளர் கு. கஜரூபன் தலைமையில் 1/2ஏக்கர் நிலப்பரப் பில் தாய்த்தாவர பழமரக்கன்றுகள் நடுகை செய்து வைக்கப்பட்டுள்ளது. கார்த்திகை மாதத்தினை வடமாகாணசபை மரம் நடுகை மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

(ரி-2)





# போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்கள்கல்விச்சுற்றுலா





தென்மராட்சி நவம் 19
கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாடசாலை மாணவர்கள் நேற்று காலை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். மிகுந்தலை அனுராதபுரம் திருகோணமலை போன்ற இடங்களுக்கு அவர்கள் சுற்றுலா சென்றுள்ளனர். பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் ஆசிரியர்கள் மாணவர்கள் நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி2-9)

வேலைவாய்ப்பு!
ANDRA DIGITAL IMAGE நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
➤ வரவேற்பாளர்கள் RECEPTIONIST
➤ சிற்றூழியர் தேவை!
கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
செவ்வாய்க்கிழமை (21.11.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
ANDRA DIGITAL IMAGE 379,Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696






## வவுனியா இ.போ.ச. ஊழியர்கள் நேற்றுச் சேவைப் புறக்கணிப்பு

வவுனியா,நவ.19
இலங்கைப் போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்றுப் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண முகாமையாளரையும், பாதுகாப்பு உத்தியோத்தரையும் உடனடியான இடமாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி இந்த சேவைப் புறக்கணிப்பு முன்னெடுக் கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
வட பிராந்திய முகாமையாளர் ஒரு தலைப்பட்சமாகச் செயற்படுகின்றார். பழிவாங்கும் வகையில் நடந்து கொள்கின்றார் என்று போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.
“உனது சொந்தத் தேவைக்கான வவுனியா சாலையின் எரிபொருளையும் சொத்துக்களையும் வீணடிக்காதே, உன் சொந்த விருப்பு ,வெறுப்புகளுக்காக மற்றவர்களை பழி வாங்காதே, வட பிராந்திய பாதுகாப்பு உத்தியோகத்தரின் தலைமைக்காரியாலய பதவிமாற்ற கட்டளையை நடைமுறைப்படுத்தாதது ஏன்?" என்பவை போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பாதாகைகள் இ.போ.ச வவுனியா சாலைக்கு முன்பாக காட்சிப்படுத் தப்படுத்தப்பட்டிருந்தன.



இந்த இடத்துக்குச் சென்ற சிறிலங்கா சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் வாசல இவர்கள் இருவரையும் ஒரு வாரத்தினுள் வடமாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்வோம். இந்த இடமாற்றம் இடம்பெறதா பட்சத்தில் தானும் இ.போ.ச ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டத்தில் இணைந்து கொள்வேன் எனத் தெரிவித்தார்.
இதன் பின் வவுனியா மத்திய பேருந்து நிலையத்திலிருந்து வவுனியா சாலைக்கு சொந்தமான அனைத்துப் பேருந்துகளும் சேவையில் ஈடுபட்டன எனத் தெரிவிக்கப்பட்டன. (ற-ரி5)

# 12 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் சிக்கியது

## பெண் உட்பட இருவர் கைது

வவுனியா, நவ.18
வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று 12 கிலோ கேரளக் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டது. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஒருவரிடமிருந்து 10 கிலோ 23 கிராம் கேரளக் கஞ்சாவும் மற்றொருவரிடமிருந்து 2 கிலோ 32கிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொடிகாமத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே 10 கிலோ 23 கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். இவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கஞ்சாவைக் கொண்டு சென்ற சமயம் மடக்கிப் பிடிக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



வவுனியா பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி மஹிந்த வில்லுவாராட்சி தலைமையில் எஸ்.ஐ.அசோக பிரசன்ன, பொலிஸ் பரிசோதகர்களான சூரசேன, குணதிலக,கீர்த்தி, பிரதீப், பண்டார, சமரதுாங்க, ஹேரத், சாரங்க, கொத்தலாவ ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது. அதேவேளை வவுனியாப் பேருந்து நிலையத்தில் 2கிலோ 32 கிறாம் கேரளக் கஞ்சாவுடன் பெண்ணொருவரும் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
முல்லைத் தீவைச் சேர்ந்த இவர் புத்தளத்துக்கு கஞ்சாவைக் கடத்த முயன்றபோது வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றின் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)




## மாவா போதை பொருளுடன் ஒருவர் கைது

ஹற்றன்,நவ.19
தலவாக்கலை அதிரடிபடையினரும் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 100 கிலோ மாவா போதை பொருள் நேற்று கொட்டகலையில் மீட்கப்பட்டது.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மாவா போதை பொருள், இனிப்பு பானங்கள் மற்றும் புகையிலை போன்ற பொருள்கள் கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் பேரில் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்டவர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் வழக்கு பதிவு செய்து ஹற்றன் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

## மன்னாரில் தொடர்கின்றது பிள்ளையார் சிலை உடைப்பு


மன்னார், நவ.19
மன்னாரில் பல்வேறு இடங்களில் நேற்று பிள்ளையார் சிலைகள் உடைக்கப்பட்டன என்றும், தேவாலயத்தின் உண்டியல் உடைத்துத் திருடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
மன்னார்யாழ்ப்பாணம் பிரதான வீதி, தள்ளாடி விமான ஓடு பாதைக்கு முன்பாக வீதியோரத்தில் உள்ள பிள்ளையார் சிலை நான்காவது தடவையாக உடைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
பிள்ளையார் சிலைகள் உடைப்பு, தேவாலயத்தின் உண்டியல் உடைப்பு மற்றும் மூன்று இடங்களில் காணப்பட்ட பிள்ளையார் சிலைகள் திருடப்பட்டமை தொடர்பில் மன்னார் மற்றும் அடம்பன் பொலிஸார் தீவிர விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## நீரிழிவு பற்றிய கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,நவ.19
யாழ் நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் பெண்களும் நீரிழிவும் எனும் தொனிப் பொருளில் நீரிழிவு பற்றிய கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று இடம் பெற்றது.
இந்தக் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அ.திலீபனும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் இ.சுரேந்திரகுமார் மற்றும்யாழ்.போதனா மருத்துவமனையின் நீரிழிவு பொறுப்பதிகாரிஎன் அரவிந்தன், மாணவர்கள், பொதுமக்கள் எனப் கலந்துகொண்ட னர்.(ற.ரி4)

## உயிரிழந்த மாணவர்களுக்கு வவுனியாவில் நினைவேந்தல்



வவுனியா,நவ.19
2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த விவசாயக் கல்லூரி மாணவர்களின் 11ஆவது நினைவேந்தல் வவுனியா விவசாயக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.
மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தலில் மரநடுகை, இரத்ததானம், தாகசாந்தி போன்ற சேவைகள் விவசாயக்கல்லூரி மாணவர்களால் மேற்கொள்ளப் பட்டன.
நிகழ்வில் தாண்டிக்குளம் விவசாயக்கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்த மாணவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு உயிரிழந்த மாணவர்களின் படத்துக்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.
விவசாயக் கல்லூரிக்கு அருகில் இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தியதை அடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் விவசாய கல்லூரி வளவில் கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த ஐந்து மாணவர்கள் உயிரிழந்தனர். (ற-ரி4)



*2017 ஆம் ஆண்டுக்கான பிரதேச கலை, இலக்கிய விழா நேற்றுக் கிண்ணியா மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் எம். ஏ. அனஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கிண்ணியா பிரதேச கலை இலக்கிய ஆர்வலர்கள் பலர் மதிப்பளிக்கப்பட்டனர். (ற-4-ரி5)*

## சாலை மூடப்பட்டமை தொடர்பாக விளக்கம்

கொழும்பு,நவ.19
புதிதாக நீர்க்குழாய்கள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கொழும்பின் சில வீதிகள் மூடப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டமொன்று நேற்றுக் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.
சில வீதிகள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மூடப்பட்டுள்ள வீதிகளுக்கு பதிலாக மாற்று வீதிகளை பயன்படுத்த வேண்டும் என்று பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஹெட்டியாவத்தை சந்தியிலிருந்து இப்பாவத்தை வரையான வீதி நேற்று இரவு 9 மணி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை மூடப்படவுள்ளது.
மட்டக்குளி விஸ்வைக் சந்தியில் இருந்து பார்கியூஷன் வீதியூடாக மட்டக்குளி பிரதான வீதிக்கு சென்று அங்கிருந்து கதிரானவத்தை வீதியூடாக பாம் வீதிக்கு செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# வீதியின் குறுக்கே வெள்ளம் வழிந்தோட வெட்டிய பகுதி வாய்க்காலாக மாறியுள்ளது

## சீரமைக்குமாறு மணல்காட்டுச் சாலை மக்கள் கோரிக்கை

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ மேற்குப் பகுதியில் வெள்ளம் வழிந்தோட வெட்டப்பட்டு போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ள மணல்காட்டுச் சாலையைச் சீரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையினரைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது: இந்தச் சாலை பிரதேச சபையால் சீரமைக்கப்பட்ட போது இருபுறமும் வயல்கள் காணப்பட்டதால் வெள்ளம் வழிந்தோடக் கூடிய நிலையில் சாலையில் மதகு அமைக்குமாறும் அல்லது வெள்ளம் வழிந்தோடக்கூடியதான பதிவு அமைக்குமாறும் மக்கள் கோரியிருந்தனர். சாலை சீரமைக்கப்பட்ட போது அவ்வாறு செய்யப்படாததால் கடந்த வருடம் பெய்த மழையின் போது வெள்ளம் வழிந்தோட முடியாமல் குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் வெள்ளம் வழிந்தோடக் கூடிய நிலையில் வெட்டப்பட்ட பகுதி பாரிய வாய்க்காலாக மாறிப் போக்குவரத்தைத் துண்டித்தது. இது தொடர்பாக பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டு அதிகாரிகள் வந்து பார்வையிட்டு சீரமைப்பதாகக் கூறியபோதிலும் அதற்கான வேலைகள் செய்யப்படவில்லை. இதனால் மக்கள் தற்காலிகமாக பள்ளத்துக்கு மணல் போட்டு போக்குவரத்துக்குப் பயன்படுத்தினர். அண்மையில் பெய்த மழையால் சாலைக்குப் போடப்பட்டிருந்த மணல் வெள்ளத்துடன் அள்ளுண்டு சென்றதால் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு அந்தச் சாலை சேதமடைந்தது. அதனூடாகச் செல்லும் பயணிகள், வாகனங்கள் இரண்டு மைல் தூரத்துக்குச் சுற்றிச் செல்கின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர் என்றனர்.

"நிதிப் பிரச்சினை காரணமாக கடந்த வருடம் சாலையின் சேதமடைந்த பகுதி சீரமைக்கப்படவில்லை. தற்போதுள்ள நிலமைகளை சபை அதிகாரிகள் பார்வையிட்டு மதிப்பீடு செய்துள்ளனர். மழை ஓய்ந்ததும் சேதமடைந்த பகுதி சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படும் என சாவகச்சேரி பிரதேச சபையினர் தெரிவித்தனர். (21.9)

# கிளிநொச்சியில் மாணவருக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

கிளிநொச்சி உருத்திரபுரம், சாந்தபுரம் ஆகிய பகுதிகளில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய சிறுவர்பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கான 'சிறுவர் பாதுகாப்பும் சிறுவர் சட்டங்களும்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி சாந்தபுரம் பாடசாலையில் இளவயதுத் திருமணங்கள் இளவயதுக்கர்ப்பங்கள் போன்றவற்றால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பிலான செயலமர்வு நடைபெற்றது. இதில் முதற்கட்டமாக மாணவர்களுக்கான செயலமர்வு இடம்பெற்றதுடன் தொடர்ந்து பெற்றோருக்கான செயலமர்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் மைதிலிகலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார். அத்தோடு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர்கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கியிருந்தனர். (எ.6)

## விநியோகஸ்தர்கள் தேவை

- குடிநீர் போத்தல் (Sanjo Brand)
- இனிப்பு வகைகள் } (Taztre Brand)
- Snake /Bites }

போன்றவற்றை விநியோகிக்க கீழ் வரும் மாவட்டங்களுக்கு

- வவுனியா
- கிளிநொச்சி / முல்லைத்தீவு
- மன்னார்

விநியோகஸ்தர்கள் தேவை.

தேவையானவை

- வங்கிப் பிணை (300, 000/=)
- களஞ்சிய வசதி/ சிறிய வாகனம்

**Uni Lanka Trading Company**
No 51, AttampalaWathe,
Hendala Wattala.
077 690 0813/ 077 561 6082

## காணவில்லை

கறுப்புநிற கேப்பை இன நெத்திச்சுட்டி வால் வெள்ளை நிறத்தினையுடைய 11 மாத நாம்பன் கன்றும் வெள்ளை கறுப்பு கலந்த நெத்திச் சுட்டியுடன் கூடிய 07 மாத பசுக்கன்றும் 25 நாள்களாக சாவகச்சேரி நகர்ப்பகுதியில் காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 968 3075**

## கண்ணீர் அஞ்சலி



வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான ஆயுட்கால உறுப்பினரும், முன்னாள் கணக்காய்வாளரும் , ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபருமாகிய

### நடராஜா ராஜா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல அன்னை காமாட்சியின் பாதார விந்தங்களில் அடைய பிரார்த்திக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபையினர்.**
**வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**(நாச்சிமார் கோயில்) யாழ்ப்பாணம்.**

# நேர்முகத்தேர்வு

## 20ஆம் 21ஆம் மற்றும் 22 ஆம் திகதி நவம்பர் 2017

## NORTH GATE BY JETWING

காலம் - 20 ஆம் திகதி பி.ப.1.00 - 4.00 மணிவரை
21ஆம், 22ஆம் திகதி - மு.ப. 9.00 - பி.ப.4.00 மணிவரை
இடம் - இல. 136 மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். (NORTH GATE BY JETWING)

**வீட்டுப்பராமரிப்பு (House Keeping)**
- விடுதி பராமரிப்பு மேற்பார்வையாளர்
- உதவியாளர்கள் (றூம் போய்)

**வரவேற்புப் பகுதி (Front Office)**
- வரவேற்புப் பகுதி மேற்பார்வையாளர்
- வரவேற்பாளர்
- வரவேற்பு உதவியாளர்

**சமையலறைப் பகுதி (Kitchen)**
- தலைமைச் சமையலாளர் (சூடான / குளிரான / பேஸ்ரி)
- கொமி I,II,III( சூடான /குளிரான பேஸ்ரி / பேக்கரி)
- கொமி I,II, (இறைச்சிவெட்டுபவர்)
- சமையல் உதவியாளர் (சூடான / குளிரான / பேஸ்ரி / பேக்கரி)
- சமையலறை சுத்திகரிப்பாளர் (Kitchen Steward)

**உணவு மற்றும் குடிவகை (Food and Beverage)**
- உணவு மற்றும் குடிவகை மேற்பார்வையாளர்
- மதுபான விற்பனையாளர்
- பரிமாறுபவர்

**பராமரிப்பு பகுதி (Maintenance)**
- பராமரிப்பு மேற்பார்வையாளர்
- பராமரிப்பு உதவியாளர் (A/C, Electrical)
- பெயின்டர்
- தச்சுத்தொழிலாளி
- குழாய் பொருத்துபவர்
- கழிவு நீர் சுத்திகரிப்பு (S.T.P) இயக்குபவர்
- மெய்க்காப்பு மற்றும் நீச்சல் குள உதவியாளர்

**கணக்குப் பகுதி (Accounts)**
- கிரயக் கட்டுப்பாட்டாளர்
- களஞ்சிய உதவியாளர்
- கணக்கு உதவியாளர்.

**மனித வளப் பகுதி (Human Resources)**
- மனித வள உதவியாளர்

NORTH GATE
by
Jetwing
JAFFNA · SRI LANKA

## பட்டதாரிக் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம்

UGC Approved

**Intake 2017/ 2018 - BA, BSc, BBA**

அனைத்துத் துறைப் பட்டதாரிக் கற்கைகளுக்கான பதிவுகள் 25.11.2017 இலிருந்து ஆரம்பமாகின்றன. விரிவுரைகள் 01.12.2017 இல் நடைபெறவுள்ளன.

S.சிவபாலன், தலைவர், முகாமைத்துவ சபை.
தொழில்சார் கற்கைகள் நிறுவனம், திருநெல்வேலி.
e-mail:degreepgrm@gmail.com
Hot line:- 076 685 2529 / 075 475 5177

## Vacancy for Web Application Developer and Data Processing Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Web Application Developer and a Data Processing Analyst to work in the Jaffna office. Both candidates should have a degree or diploma in the field of Computer Science/IT and should posses strong technical and analytical skills. Candidates for Web Application Developer should have good programming knowledge; familiarity with PHP, HTML/CSS and Javascript is a plus. Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must. Send your CV tosiva@monthlywarranty.com

## சிறுநீரகம் தேவை

11 வயதுடைய நோயாளி
ஒருவருக்கு O+,B+
இரத்த வகையைச் சேர்ந்த
(40 வயதுக்குட்பட்ட)
சிறுநீரகம் உடன்தேவை.

தொடர்பு: 077 940 6774,076 830 5722
077 523 7508, 077 529 7084

## உடல் எடை குறைய வேண்டுமா?

- உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா?
- உடல் எடை, வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை கூடிப் பல்வேறு நோயால் அவதிப்படுகிறீர்களா?

கவலை வேண்டாம்! உடல் எடையை மிக இலகுவாகக் குறைக்க முடியும்.
அற்புத ஆயுள்வேத ஔடதம் (விலை 3500, 9000, 18,000)
டொனிக், குளிசை, கிறீம், பால்மா. மேலும்,

**உடல் எடை கூட**

- உடல் எடை கூட
- கணச்சூடு நீங்க
- மார்பு கூட்ட
- ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற
- எதைச் செய்தாலும் எடை கூடுகிறதேயில்லை என்கிறவர்களுக்கு

**உடல் எடை கூட்டும் ஆயுள்வேத ஔடதம். பாவித்துப் பலனடையுங்கள். (விலை 3500/-, 6000/-, 24000/-)**

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

- நீளமாக முடி வளர
- இளநரை. தலையிடி. பேன். பொடுகுத் தொல்லை நீங்க
- முடி அற்ற இடங்களில் புதிதாக முடி முளைக்க
- புளுவெட்டு. அரிப்பு தலையில் நீங்க

(பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, வல்லாரை, மருதாணி, நெல்லி, வெட்டிவேர், கருவேப்பிலை மற்றும் பல மூலிகைகள்) சேர்த்துக் காய்ச்சிய ஆயுள்வேத எண்ணெய் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

077 210 6155
பதிவு இல: 16168
221,நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## STUDY IN CANADA

2018 May / June கனடா செல்ல விரும்புபவர்களுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- Business Management
- Computer Science
- IT
- NURSING
- Bio Science

- நீங்கள் விரும்பும் பாடநெறித் தேர்வு
- ஆகக்குறைந்த தகைமை O/L அனைத்துப் பாடங்களிலும் சித்தி
- IELTS இல் சிறந்த புள்ளி பெற விசேட பயிற்சிகள்
- 100% விசா பெற்றுக் கொள்ள சிறந்த ஆலோசனைகள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்.
- வயதெல்லை 16 - 25

விண்ணப்ப முடிவு திகதி:- 30.11.2017

**WIN STAR VISA CONSULTANTS**
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
www.winstarjaffna.com

# அம்பலவன்பொக்கனையில் தத்தளிக்கின்றனர் மக்கள்

## கப்பல் வீதி சீரமைக்கப்படாமையால் அவலம்

யாழ்ப்பாணம்.நவ 19.

முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கனை கப்பல் வீதிநீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த நாள்களில் பெய்த கடும் மழையினால் வீதிகளிலும், மக்கள் வாழும் குடியிருப்புக்களிலும் வெள்ளம் அதிகமாகக் காணப்படுவதால் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது; அம்பலவன் பொக்கனை, கப்பல் வீதியை அண்டிய பகுதியிலேயே இவ்வாறு வெள்ளம் தேங்கி நிற்கின்றது. 25 குடும்பங்கள் வாழும் மிகவும் பின்தங்கிய இந்தப் பிரதேச வீதியைச் சீரமைத்துத் தருமாறு நீண்ட காலமாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அதிகாரிகள் இன்று வரை செவிசாய்க்கவில்லை.

வீதி குண்டும், குழியுமாக வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதால் அதனூடாகப் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாமல் வீடுகளிலேயே நிற்கின்றனர்.

அந்த வீதியில் நடந்து சென்றால் சேறுகளில் காலணிகள் புதைந்து வீடு திரும்புகின்றனர். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. முதியவர்கள், கர்ப்பவதிகள் இதனூடாகப் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதியைச் சீரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை, வடக்கு மாகாணத்தில் உள்ள கிராமங்களின் வீதிகளைச் சீரமைத்துக் கொடுத்த அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த டெனீஸ்வரனால் கூட எமது வீதி திரும்பிப்பார்க்கபட வில்லை. எனவே எமது மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இந்த வீதிஂயச் சீரமைத்துத் தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கிராம வீதிகள் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கொண்டு இருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் சில வீதிகளின் சீரமைப் புகள் தற்போது இடம்பெறுகிறது. இந்த வீதியும் கவனத்தில் கொள்ளப்படும்" என பிரிவு கிராம அலுவலர் தெரிவித்தார்.

(21)


## நினைவு அஞ்சலி (பத்தாம் நாள்)

### அமரர் இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா

வள்ளுவர்க்கோர் வாசுகியாய் வாழ்வியலுக்கோர் உதாரணராய் தெள்ளு தமிழ் வித்தகர் ஸ்ரீ பஞ்சாட்சரசர்மா விற்கோர் பதி விரதையாய் உள்ள முயர் தன்மை நிறை மக்கள் தம்மை உவந்து பெற்று பெருமை சேர்த்த பெருமாட்டியே அள்ளுமிகு அன்பு நிறை இராசாத்தியம்மாவே அடிபணிந்து வேண்டுகிறோம் ஆத்ம சாந்திக்கு

ஓம் சாந்தி

நீர்வேலி.

கு. தியாகராசக்குருக்கள் சா. சோமதேவக்குருக்கள்
இ. சுவாமிநாதக்குருக்கள் க. பாலமுருகசர்மா
நீர்வையூர் அந்தணர்கள்

## பௌதீகவியல் இணைந்த கணித, தமிழ்/ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் 2018 A/L 2019 A/L 2017 (Repeat)

பிரபல கல்லூரிகளில் (3 தேசிய பாடசாலைகள் உட்பட) பல ஆண்டுகள் சிறப்பாகக் கற்பித்து மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மேற்படி பாடங்களை ஏராளமான பயிற்சிகளுடன் (30 வருட வினாத்தாள் உட்பட) மிகச் சிறப்பாக கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. **2019 New A/L** பாடத்திட்டங்களுக்குரிய புதிய நூல்களும் வந்துள்ளன. (கொழும்பு ஆசிரியர்களின்)

**ஆசிரியர் - R.பாலசுப்பிரமணியம் B.Sc PGDE**

65, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளச்சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம்.
T. P : 077 2423 400, 077 887 1217, 077 517 8727

## விற்பனைக்கு

சாவகச்சேரி - பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோவிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M (1/2 Km) தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், புகையிரத நிலையம், சந்தை முதலியவற்றிலிருந்து நடந்து செல்லக்கூடிய தூரத்தில் பஸ் வசதியுடனும் அமைந்துள்ள 60 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. துண்டுகளாகவோ (வரைபடமுள்ளது) முழுமையாகவோ விரும்பியபடி வாங்கமுடியும். உடனே தொடர்புகொள்ளுங்கள்.

திருமதி.யோகா நாகேந்திரம், கெருடாவில் கந்தசாமி கோவில் அருகாமை, பருத்தித்துறை வீதி, கெருடாவில், சாவகச்சேரி.
தொலைபேசி இல. 0771601115, 0112588325
விலை பேசித் தீர்மானிக்கலாம். (வீதி ஓரமாக எனில் பரப்பு 4 லட்சம், பின்பகுதி எனில் பரப்பு 2 1/2 லட்சம்)

## அமெரிக்க வீஸா லொத்தர்

முடிவு திகதி: 22/11/2017
விண்ணப்பம் EXPRESSல் அனுப்பவும்.
விண்ணப்பத்திற்கு: SEND SMS
From By Email:bbsnetting@gmail.com
BBSNETTING
3/14,PINWATTA ROAD,
DEHIWALA. 0775811106
யாழ்ப்பாணத்தில் விண்ணப்பத்துக்கு
உமா ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி,
(வண். சிவன் கோவில் முன்பாக).
www.bbsnetting.com

## விவசாய பண்ணை முகாமையாளர் தேவை

எமது விவசாய பண்ணையினை நிர்வகிப்பதற்கு சகல முகாமைத்துவ மற்றும் தொழில் துறை சார் நிபுணத்துவம் கொண்ட முகாமையாளர் தேவை.

தகைமைகள்

- விவசாய முகாமைத்துவ பட்டம் அல்லது டிப்ளோமா
- குறைந்தது மூன்று வருட அனுபவம்
- அரச நிறுவனங்களுடனான தொடர்பு பற்றிய முன்னைய அனுபவம் வரவேற்கத்தக்கது.
- யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்

மேற்கூறிய தகைமைகளை நீர் கொண்டவராயின் உமது தனிப்பட்ட விபரத்திரட்டு (CV) இனைகீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

மனித வள முகாமையாளர்
கொரல் புரப்பட்டி டெவலப்பர் (தனி) லிமிட்.
343, காலி வீதி, கொழும்பு - 04, தொலைபேசி:0112596 225

GOODWIN

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் செம்மணி வீதியில் வேலிகந்த பிள்ளையார் கோவில் அருகில் வீடு வாடகைக்கு உண்டு. -077 6721687

## பணிப் பெண் தேவை

கந்தர்மடத்தில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்புக்கு - 077 6319984

## பணிப்பெண் தேவை

வயோதிப பெண்ணிற்கு உதவி செய்தல்
கவர்ச்சியான சம்பளம்
பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - சிதம்பரநாதன்
077 150 9492 சரசாலை, சாவகச்சேரி.

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு - 076 6512 404

## தேவை

யாழ். நகரப் பகுதியில் வீட்டில் தங்கி நின்று வேலை பார்க்க கூடிய பணிப்பெண் தேவை.
(35 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
தொடர்பு - 076 9972 886


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை இரத்தினராசா



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், யாழ். திருநெல்வேலி ஆடியபாதம் வீதியை வ்சிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இரத்தினராசா நேற்று (18.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாலாம்பிகை தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசசேகரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமருமகனும் பத்மாராணி (இந்தியா), வரலட்சுமி (லண்டன்), இராசலட்சுமி (காரைநகர்), விக்னேஸ்வரன் (யாழ்ப்பாணம்), நாகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜபூபதியின் அன்புக்கணவரும் ஜனகன், ஜோதிகா, நிமல் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 5418 633

---

பிறப்பு
15
01
1929



இறப்பு
17
11
2017

### திருமதி அன்னமுத்து குணரட்ணம்

மாதகலைப் பிறப்பி மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து குணரட்ணம் கடந்த (17.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும் கணேசலிங்கம் (கனடா), அமுதலிங்கம் (கனடா), கனகலிங்கம் (கனடா), காலஞ்சென்ற மனோகரி, வசந்திராதேவி, விமலாதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருச்செல்வராணி (கனடா), செல்வராணி (கனடா), பகவதி (கனடா) குமாரசாமி, சிவகுருநாதன், வரதராஜன், சிறீரங்கவாசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2017) திங்கட்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனாய் வீதி, மாதகல்.
077 263 9947

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
1953
06
29



மறைவு
2017
11
18

### கிருஷ்ணன் சந்திரசேகரம்

**(ஓய்வு நிலை உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம் )**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொ்ண்ட கிருஷ்ணன் சந்திரசேகரம் (2017.11.18) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் - கண்மலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசமணி தம்பதியரின் அன்புமருமகனும் ஸ்ரீநயினை நாயகியின் அன்புக்கணவரும் நர்த்தனன் (யாழ். பல்கலைக்கழக ஊழியர்), துவாரகன் (தினேஷ் வெதுப்பகம்), பிரணவன் (யாழ்.மத்திய கல்லூரி 2018 ஆம் ஆண்டு தொழிநுட்பப் பிரிவு மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சச்சிதானந்தசிவராசா (ஓய்வு நிலை களஞ்சிய காப்பாளர், கோண்டாவில் இ.போ.ச), விஜய்கோபாலராசா (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), சித்திரவதனா (கொழும்பு) காலஞ்சென்றவர்களான சந்திரவதனா, சந்திரகாந்தன் , ஸ்ரீஜெயகாந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜேஸ்வரியின் பெறாமகனும் சந்திரகுமார், அம்பிகாதேவி, ஸ்ரீபதி, சிவகுமார் (கோப்பாய் அஞ்சல் அலுவலகம்) , சிவஸ்ரீ ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய்.
077 471 4620

தகவல்:
குடும்பத்தினர்.

காணி உறுதிகள் வழங்கப்படாமையால்

# இன்னல்களை எதிர்கொள்ளும் பரிகாரிகண்டல் பிரதேச மக்கள்

மன்னார்.நவ.19

மன்னார் முருங்கன் பரிகாரிகண்டல் பிரதேச மக்களுக்கான காணி உறுதிகள் இன்னமும் வழங்கப்படாமையினால் வாழ்வாதாரச் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதில் அந்த மக்கள் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

முருங்கன் பரிகாரிகண்டற் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக 150க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றோம். எமக்கான காணிகள் ஆரம்பத்தில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டன. தேவையின் நிமிர்த்தம் இந்தக் காணிகள் எமக்கு வழங்கப்பட்டன. ஆனால் வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிகள் இன்னமும் பிரதேச செயலகத்தால் வழங்கப்படவில்லை. உறுதி இல்லாததால் எமக்கான உதவித் திட்டங்கள், கடன்கள் போன்றன கிடைப்பதில்லை. எனவே எமது காணிகளுக்கான உறுதிகளை நானாட்டான் பிரதேசசெயலகம் பெற்றுத்தர வேண்டும் என்றனர்.

இது தொடர்பில் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்ததாவது: காணிகள் மக்களின் தேவை கருதி வழங்கபட்டன. போர்க் காலச் சூழலில் காணிகளின் அளவீடுகள் நடைபெறாமல் அவசரமாக வழங்கப்பட்டன. எனினும் இந்தக் காணிகள் தொடர்பாகச் சட்ட ரீதியான ஆவணங்களைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் மக்களின் காணிகள் விரைவில் அளவிடப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படும் -என்றார். (எ.ரி)

## சேவை நயப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.19

சேவைநயப்பு விழாவும், விடைபெற்றுச் செல்லும் தரம் 5 மாணவர்களுக்கான மதிப்பளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், கோண்டாவில் ஆசிமட விநாயகர் தேவஸ்தானக் கல்யாண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. கோண்டாவில் சி.சி. த.க பாடசாலையின் அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பளர் தெய்வேந்திரராஜா பாமாவும், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் குகதாசன் லெஜினாவும், மதிப்புறு விருந்தனராகச் சமுர்த்திச் சங்கத் தலைவர் ஆ. ஜெயதாசன் அமிர்தகௌரியும் கலந்து கொள்ளவுள்ளனர். சேவை நயப்பு நாயகர்களாக யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் நாக. சிதம்பரம், கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலய ஆசிரியை த. தமிழ்ச்செல்வன், யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய ஆசிரியை கோ.நி[illegible]லன், முல்லைத்தீ[illegible]ு ஒலுமடு தமிழ் வி[illegible]தியாலய ஆசிரி[illegible]ய சு.சதீஸ்குமார் ஆகியோர் மதி[illegible]க்கப் படவுள்[illegible]னர். (21)

## 45 – 60 வயதினருக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்ப்பாணம், சின்மயா மிஷனில் 45 வயது முதல் 60 வயதினருக்கான வாசகர் வட்டம் மற்றும் 60 வயதினருக்குக்கான வானப்பிரஸ்தம் ஆகிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வகுப்புக்கள் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார், பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் இல. 09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இதற்கு அனைவருக்கும் பொருத்தமான நேரத்தை நிர்ணயிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் 4.30 மணி வரை இடம் பெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் எனச் சின்மயா மிஷன் தெரிவித்தது. (21)

## அரிசியின் விலையை காட்சிப்படுத்தாது கூடிய விலைக்கு அதை விற்றவருக்கு ரூ.3 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி. நவ. 19

கிளிநெர்ச்சி வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அரிசியின் விலையைக் காட்சிப்படுத்தாது அதிக விலைக்கு அதை விற்பனை செய்த உரிமையாளருக்குக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கடை உரிமையாளர் ஒருவர் வியாபார நிலையத்தில் அரிசியின் விலையைக் காட்சிப்படுத்தாது கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்தார் எனப் பாவனையாளர் அதிகார சபையினருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கைகளை முன்னெடுத்த சபையினர் அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிமன்ற விசாரணைகளில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனால் அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் அரிசியைச் சரியான விலைக்கு விற்பனை செய்ய வேண்டும் எனக் குற்றவாளிக்கு மன்று கட்டளையிட்டது. (21.6)

# தென்னைப் பயிர்ச்செய்கைக்கு வறட்சிக் காலத்துக்கான நீரை சேமிப்பதற்கு புதிய திட்டங்கள்

பின்பற்றுபவர்களுக்கு மானியம் வழங்கப்படும்

தென்னைப் பயிர்ச் செய்கையின்போது தண்ணீரைச் சேமிக்க, தென்னை மரங்களுக்கு இடையில் தேங்காய் மட்டைக் குழி அமைத்தல் மற்றும் குழாய் மூல நீர்ப்பாசனத்தைப் பின்பற்றுதல் என்பவற்றுக்கு மானியம் வழங்கத் த[illegible]ாராக உள்ளோம் என்று யாழ்ப்பாணப் பிராந்தியத் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்துக்கு அதிக தண்ணீர் தேவைப்படுகின்றது. ஆகவே அதனைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. வடக்கு மாகாணத்தில் உள்ள தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் இது பற்றிக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

தென்னங் கன்றுகள் வளர்வதற்கு ஆரம்பத்தில் அதிக தண்ணீர் தேவைப்படும். எனவே வறட்சிக் காலத்துக்கு ஏற்ற வகையில் தண்ணீரைச் சேமிக்க வேண்டும். தென்னை மரங்களுக்கு இடையே தேங்காய் மட்டைக் குழி அமைத்தல், மற்றும் குழாய் மூலமான நீர்ப்பாசன முறையைப் பின்பற்றல் மூலம் தண்ணீரைச் சேமிக்க முடியும்.

இரண்டு தென்னை மரங்களுக்கு பொருந்தக் கூடியவாறு 8,4,3,2 அடி என்ற சுற்றுவட்டத்தில் குழிகளை அமைத்து அதில் தேங்காய் மட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்க வேண்டும் நில மட்டத்தின் விளிம்பு வரை இவ்வாறு படையாக அடுக்க வேண்டும். ஒரு ஏக்கரில் இவ்வாறு 20 குழிகளை அமைக்க முடியும். இந்த தேங்காய் மட்டைகள் 9 மடங்கு நீரை உறிஞ்சி வைக்கக்கூடியன. இவ்வாறு உறிஞ்சப்படும் நீர் வறட்சிக் காலத்தில் விடுவிக்கப் படும். இந்த நீர் 3 மாதங்கள் வரை போதுமானது. ஆகவே இந்த முறையினைத் தென்னைச் செய்கையாளர்கள் பின்பற்றினால் 1 ஏக்கருக்கு 15ஆயிரம் ரூபா வீதம் 50 ஏக்கர் வரையில் வழங்கப்படும்.

'தென்னை மரத்தின் அடியில் அதிகளவான தண்ணீரை இறைக்க வேண்டும்.' அப்போது தான் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று பலர் நம்புகின்றனர். ஆனால் மரத்தைச் சுற்றியுள்ள பசளை வட்டத்துக்கு தண்ணீர் கிடைத்தால் போதும் என்பது தெரிய வேண்டும். ஆகவே அடி மரத்துக்கு அதிகளவான தண்ணீரை இறைத்து தண்ணீரை விரயம் செய்யாமல் ஒரு முதன்மை நீர் மூலத்தில் இருந்து குழாய்களைப் பொருத்தி அதன் மூலம் தண்ணீரைத் தென்னைக்கு விசிறினால் போதுமானது. ஒரு குழாயில் இருந்து பல கிளைக்குழாய்களை அமைத்து 16 அடி வரை தண்ணீரை விசிற முடியும். இந்தத் தண்ணீரைத் தென்னை வளர்ச்சிக்கு போதுமானது. அத்துடன் நீரும் விரயமாகாமல் இருக்கும். இந்த முறையிலான நீர்ப்பாசனத்துக்கு ஒரு ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபா வீதம் 5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.

ஆகவே இந்த முறைகளைப் பயன்படுத்தி தண்ணீரைச் சேமித்து, மானியத்தை பெற முடியும். இவ்வாறு நடப்பு வருடத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 600 பயனாளிகளுக்கான மானியம் வழங்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ.ரி)



யாழ்ப்பாணம் குருசோ வீதியில் உள்ள மதகு கடந்த ஒரு வாரமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியூடாக இரவு நேரங்களில் பயணிப்போர் பெரும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும், சேதமடைந்துகாணப்படுகின்ற மதகை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்ற போதும் இன்னும் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (21,23)

# கிளிநொச்சி- சாந்தபுரம் சந்தையை நிரந்தரமாக அமைத்துத் தாருங்கள்

பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள சந்தையை நிரந்தரமாக அமைத்துத் தாருங்கள் என அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் 800 குடும்பங்களின் கொள்வனவுகளுக்காகவும், விவசாயிகளின் சந்தைப்படுத்தல் உள்ளிட்டவற்றைக் கவனத்திற்கொண்டும் குறித்த சந்தையை நிரந்தரச் சந்தையாக மாற்றம் செய்து தருமாறு மக்கள் கோருகின்றனர்.

சாந்தபுரம் பகுதியில் தற்போது அமைந்துள்ள சந்தைக் காணியானது கூட்டுறவுச் சபையினருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டதாகவும், அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் கரைச்சிப் பிரதேசசெயலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இரணைமடுச் சந்தை மற்றும் 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சிச் சந்தைகளுக்குச் சென்று சந்தைப்படுத்த வேண்டியுள்ளது. அதே வேளை எமது அன்றாட தேவைகளுக்காக குறித்த சந்தைகளுக்கும் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையே உள்ளது.

அதிக குடும்பங்கள் வசிக்கும் எமது கிராமத்துக்கான சந்தை ஒன்றை அமைப்பதற்குப் பலமுறை கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது. எவரும் முன்வராத நிலையிலேயே நாம் குறித்த பகுதியில் சந்தை ஒன்றை அமைத்துள்ளோம். எனினும் பிரதேச செயலர் தற்போது அமைந்துள்ள சந்தைக் காணியானது கூட்டுறவுச் சபையினருக்கு நீண்ட காலக்குத்தகைக்கு வழங்கப்பட்டது எனவும் எம்மை அங்கிருந்து வெளியேறுமாறும் கோரியுள்ளார். பிரதேச சபைச் செயலரும் இந்த விடயம் தொடர்பில் கரிசனை காட்டவில்லை. எனவே எமது கிராமத்துக்கான சந்தையை அமைப்பதற்கு குறித்த பகுதியை ஒதுக்கித் தருமாறும் இல்லையேல் பொருத்தமான பகுதி ஒன்றை எமக்குத் தந்து எமது தேவைகளை முழுமை செய்வதற்கு உதவுமாறும் கோருகின்றோம் -என்றனர். (21.35)



# வவு. வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள் வழங்கிவைப்பு

வவுனியா, நவ.19
வவுனியா ஈரப்பெரியகுளம் மகாவித்தியாலயத்தில் 2018ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள 110 வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா இறம்பைக்குளம் ஈஷி பூரண சுவிசேஷ சபையின் அனுசரணையில் முதன்மை பிஷப் பி. என். இராஜசிங்கம் (இ.பி.எம்) தலைமையில், மகாவித்தியாலயத்தின் முதன்மை மண்டபத்தில் இடம்பெற்றது. வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் வன்னிப் பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவின் தலைமை அதிகாரி, உத்தியோகத்தர்கள், வவுனியா தெற்கு வலய கல்வி அதிகாரிகள், ஈரப்பெரியகுளம் மகாவித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (21)

# அரசமைப்பைவிட பௌத்தத்தால் சாந்தி, அமைதியை ஏற்படுத்த முடியும்

## இப்படிக் கூறினார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ.19
அரசமைப்பைக் கொண்டு செயற்படுத்தும் சமாதானத்தை விட பௌத்த தர்மத்தின் மூலம் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.
புத்தூர் மடிக்கே பஞ்ச ஹீத வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் புதிய நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் அனைத்தையும் மறந்து அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி புதிய பாதையில் பயணிக்க வேண்டும். தன்னைக் கொல்ல வந்த நபருக்கே அரச தலைவர் மைத்திரிபாலசிறி சேன மன்னிப்பு அளித்து விடுதலை செய்திருக்கின்றார்.
அதனை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும்.
வெற்றி பெற்றுவிட்டோம் என்ற இறுமாப்பைக் களைந்து பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களை வெல்ல இதுபோன்ற முன்னேற்ற கரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
திருகோணமலை யிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் பௌத்த குருமார்கள் வடக்குக்கு வந்து இதுபோன்ற நல்லிணக்கப் பணிகளை முன்னெடுப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வணக்கங்கள். இந்த நாட்டில் புத்த பெருமானின் போதனையைக் கடைப்பிடித்து ஒழுகினால் நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்பட்டுவிடும் - என்றார்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டிஆராய்ச்சி, திருகோணமலை இராஜகிரிய ஆனந்த மகாநாயக்க தேரர், ஆளுநரின் செயலர், எல்.இளங்கோவன், மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (21,101)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆலோசனை குழுக்கூட்டம்

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் இந்த ஆண்டுக்கான ஆலோசனைக்கூட்டம் அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தின் கூட்ட அரங்கில் இடம்பெற்றது. பிரதேசசபையின் செயலாளர் கு.சற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனும் கலந்து கொண்டு இந்த ஆண்டுக்கான செயற்பாடுகளைப் பார்வையிட்டு கலந்துரையாடியதுடன், எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், மற்றும் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக தனது ஆலோசனைகளையும் தெரிவித்தார். மாகாணசபை உறுப்பினர் உள்ளிட்ட வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபையின் செயலாளர் கு.சற்குணராஜா மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (21)

# தண்டம்

கொடிகாமம் பகுதியில் 43 கிராம் 350 மில்லிக்கிராம் கஞ்சா வைத்திருந்த நபருக்கு 12 ஆயிரம் ரூபாவும் ஆயிரத்து 125 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 4 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றால்நேற்று முன்தினம் தண்டமாக அறவிடப்பட்டது. (எ.9)

## உலக கழிவறை தினத்தை முன்னிட்டு

# சுகாதார மேம்பாட்டுத் திட்டம் முல்லை, கேகாலையில் நாளை

யாழ்ப்பாணம், நவ.16
2017ஆம் ஆண்டுக்கான உலக கழிவறை தினத்தையொட்டி நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டமானது நாளை முதல் ஒரு வார காலத்துக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
அதன்படி நாளை கேகாலை, முல்லைத்தீவு, மாவட்டங்களிலும், நாளை மறுதினம் இரத்தினபுரி, கிளிநொச்சி மாவட்டங்களிலும், எதிர்வரும் 22 ஆம் திகதி பதுளையிலும், 23 ஆம் திகதி நுவரெலியாவிலும், 24 ஆம்திகதி மொனராகலையிலும் இந்தத் திட்டங்கள் நடைபெறவுள்ளன என சுகாதார மேம்பாட்டுப் பகுதியினர் தெரிவித்தனர். இதன் போது இது தொடர்பான சுவரொட்டிகள், போட்டிகள், வீதி நாடக நிகழ்வுகள், காணொலி ஆவணம், துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் போன்றனவும் இடம்பெறவுள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (21)

## மொட்டை மாடியில் தங்கியிருந்து

# இரவு வேளை மது அருந்திய இருவர் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர்

யாழ்ப்பாணம், நவ.19
யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் வீதியோரம் இருந்த வர்த்தக நிலையத்தின் மொட்டைமாடிப் பகுதியில் இரவுவேளை தங்கி நின்று மதுபானம் அருந்திய இருவர் வீதிச் சுற்றுக் காவல் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள குறித்த சந்தியில் உள்ள ஓர் கடையின் மேலே உள்ள பாவனையற்ற பகுதியில் தினமும் பகல் இரவு வேளைகளில் புகைத்தல் பாவனையும் இரவுவேளைகளில் மதுபானப் பாவனையும் இடம்பெறுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரமே பொலிஸார் அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது அந்தப் பகுதியில் இருந்த இரு இளைஞர்கள் மட்டும் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டனர். இதனையடுத்து அங்கு சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் ஏதும் உண்டா எனவும் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர். இறுதியில் அங்கிருந்த இருவரையும் பொலி ஸார் அழைத்துச் சென்றனர். (21,101)

# ஒரே நாளில் 12 விளக்கக் கடிதங்கள் அனுப்பிய அமைச்சுச் செயலாளர்

## பிரச்சினை ஆளுநரின் கவனத்துக்கு வந்தது

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட செயலாளர் ஒருவர் தனது அமைச்சுக்கு உட்பட்ட பணிப்பாளர் ஒருவருக்கு ஒரே நாளில் 12 விளக்கக் கடிதம் அனுப்பியமை தொடர்பான சர்ச்சை வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஓர் அமைச்சின் செயலாளர் தனது அமைச்சின் கீழ் உள்ள திணைக் களப் பணிப்பாளரிடம் 12 விடயங்கள் தொடர்பில் ஒரே திகதியில் விளக்கக் கடிதங்கள் அனுப்பி அவற்றுக்கான விளக்கங்களைக் கோரியுள்ளார். இவ்வாறு ஒரே தினத்தில் அதிக விடயங்கள் தொடர்பில் அதிருப்தி கொண்டமை பணிப்பாளர் மீது வேண்டுமென்றே குற்றம் சாட்டும் நோக்கம் கொண்டதா என பணிப்பாளர் ஐயம் கொண்டுள்ளார்.
இதன் காரணமாக ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது குறித்த விடயத்தை பணிப்பாளர் சுட்டிக் காட்டி ஆளுநரின் கவனத்தைக் கோரியிருந்தார். குறித்த விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளரோ பணிப்பாளர் எவை தொடர்பிலும் உரிய முறையில் பதிலளிப்பதில்லை எனவும். செயலாளருக்குரிய வகிபங்கை ஏற்பதில்லை என பதில் குற்றச் சாட்டை அடுக்கியுள்ளார். இது தொடர்பில் ஆராய்ந்த ஆளுநர் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதாகக் கூறி சமரசம் செய்து வைத்துள்ளார். வடக்கு மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்களுள் சாதாரண ஊழியர்கள்முதல் மேல் அதிகாரிகள் வரையில் முரண்பாடுகள் நிலவுகிறது என தெரிவிக்கப்படுகிறது. (21, 101)

## மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், நவ. 18
மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை வழி மறித்த நால்வர் அவர்களை மோசமாகத் தாக்கியதுடன் கடித்தும் காயம் விளைவித்தனர். தாக்குதலில் ஒருவருக்குப் பல் உடைந்தது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சரசாலை கனகன்புளியடிச் சந்தியில் இடம்பெற்றது. வேலைக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் மட்டுவிலில் உள்ள வீட்டுக்கு வரும் வழியில் கனகன்புளியடிப் பேருந்துத் தரிப்பிடத்தில் நின்ற நால்வர் வழி மறித்து காரணமின்றித் தாக்கிக் கடித்துவிட்டுத் தப்பியோடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. தாக்குதல் மற்றும் கடிக் காயங்களுக்கு இலக்கான மட்டுவில் மத்தியைச் சேர்ந்த தெய்வேந்திரன் திலீஸ்வரன் (வயது 36) இரத்தினசிங்கம் மனோகரன் (வயது 22) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (எ. 9)

## கச்சாய் அ.த.க. பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு

தென்மராட்சி நவ 18
கச்சாய் அ.த.க.பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு நாளை மறுதினம் (20.11.) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
பாடசாலை அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் அமர்வில் முதன்மை விருந்தினராக போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமாரும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)



எழுதுமட்டுவாழ் முதன்மைச் சாலையில் இரு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று சிக்குண்டதில் இரு வாகனங்களும் சேதமடைந்ததுடன் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை காலை எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றது. (21.9)

# சில்லறை விடயங்களுக்கும் இன்றும் கையூட்டு கொடுக்கவேண்டியுள்ளது

## வியாழேந்திரன் எம்.பி. விசனம்



கொழும்பு, நவ. 18

கீழ் நிலையில் உள்ள மக்கள் இன்னும் சாதாரண விடயங்களுக்கும் கையூட்டுக் கொடுக்க வேண்டிய நிலமை உள்ளது. கையூட்டு மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வேகமாகச் செயற்பட வேண்டும். அடிமட்ட ஊழலைத் தடுக்க இதனூடாகவே முடியும். அடிமட்ட ஊழலைத் தடுத்தால் மேல் மட்டத்திலும் ஊழலைத் தடுக்க முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், ஆணைக் குழுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் காணி உறுதிப்பத்திரத்தைப் பெறுவதற்குக் கையூட்டுக் கொடுக்க வேண்டிய நிலமை உள்ளது. அடிமட்டத்தில் இருக்கின்ற மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பலர் கிராமத்தில் இருந்து நகரத்துக்கு வர முடியாத கட்டத்தில் கையூட்டுக் கொடுக்கும் நிலை இன்னும் உள்ளது. ஆணைக்குழுக்கள் வேகமாகச் செயற்பட்டால் அடிமட்டத்தில் இருந்து ஆரம்பிக்கும் ஊழல் மேல் மட்டம் வரை வராது.

எந்தவொரு தலையீடும் இல்லாத சுதந்திரத்தை கையூட்டு மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நல்லாட்சி அரசு வழங்க வேண்டும். இலங்கையில் அனைத்துக் கிராமங்களிலும் காடுகள் அழிக்கப்பட்டு வயலாக்கி வீடு கட்டி வாழ்ந்து வரும் நிலையில் தொல்பொருள், வனத் திணைக்கள அதிகாரிகள் வந்து அதனை மீண்டும் மக்களிடம் இருந்து சுவீகரித்து வருகின்றனர். இதனால் மூவின மக்களும் பாதிக்கப்படுகின்றனர். முப்பது வருடங்களாக இருந்து வந்த நிலையில் இப்படி நடந்தால் என்ன நடக்கும். கால் நடைப் பண்ணையாளர் பலர் விரட்டப்பட்டுள்ளனர். நாம் மனித நேயத்துடன் சிந்திக்கவேண்டும்.

கிழக்கு மாகாணப் பொலிஸ் அதிகாரிகள் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். தற்போதைக்கு தமிழ் முறைப்பாடுகள் செய்வதில் சிக்கல் நிலை உள்ளது. தமிழ் அதிகாரிகள் இல்லாமையால் பிரச்சினைகள் இருக்கின்றன. தற்போதே தமிழர்கள் பொலிஸில் இணைகின்றனர். தமிழ் பேசும் அதிகாரிகளை இடமாற்றம் செய்வதால் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை ஏற்படும். அதனை நிறுத்த வேண்டும். சட்டம் ஒழுங்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். வழக்குத் தாமதத்தால் குற்றவாளிகள் பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலமைகள் காணப்படுகின்றன. பாலியல் துர்நடத்தை, கொலைக் குற்றச்சாட்டில் உள்ளவர்கள் பிணையில் வரும் போது அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்கின்றனர். இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். அனைவரையும் சமமாகக் காணும் நீதித்துறை உருவாக வேண்டும். கையூட்டு ஊழல் ஆணைக் குழுவிற்குப் பெரிய பொறுப்புக்கள் உள்ளன. இதற்கு அரசியல் தலையீடு இருந்தால் நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (5.31)

# கல்முனை நகர சபையை உள்ளூராட்சி சபைகளாக பிரிக்க இணக்கம்

கல்முனை மாநகர சபையை 4 உள்ளூராட்சி சபைகளாகப்பிரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் பேச்சு நடைபெற்றது.

அதில் 4 உள்ளூராட்சி சபைகளை அமைப்பது தொடர்பாக யோசனைகள் முன் வைக்கப்பட்டு இணக்கம் காணப்பட்டது. அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ஆர்..சம்பந்தன் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேசசபை வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த தினங்களில் போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன. அதற்கு சிலர் எதிரப்பும் தெரிவித்திருந்தனர். (ற)






SEYLAN LEASING
மேலதிக விபரங்களுக்கு: அருகில் உள்ள செலான் வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது தொடர்பு கொள்ளுங்கள்
077 3815147 / 0112 45 68 49 / 0112 00 88 88
www.seylan.lk
www.facebook.com/SeylanBank
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: A-(lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

தேவையுடன் வந்து திருப்தியுடன் செல்லுங்கள்

4 மணி நேரத்தில் கடன் அங்கீகாரம்

முன்கூட்டிச் செலுத்தினால் மேலதிக கட்டணம் இல்லை



Softlogic Finance
Flexi LEASING
සොෆ්ට්ලොජික් ෆිනෑන්ස් ෆෙලෙක්සි ලීසිං

ஆரம்பக் கொடுப்பனவு எதுவுமின்றி வாகனத்தை எடுத்துச்செல்ல முடியும்

Softlogic Finance இன்றே அழையுங்கள் 072 7 880 880


ES Printers

2018ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள்
அனைத்து அளவுகளிலும்,
அனைத்து நிறுவனங்களுக்கும்.





மிகக் குறைந்த விலையில்
பஞ்சாங்க மாதக்
கலண்டர்கள் எம்மிடம்





தின நாள்காட்டி (கலண்டர்)
'டெஸ்க் கலண்டர்'
'வோல் கலண்டர்'
'நம்பர் சீற் கலண்டர்'
பஞ்சாங்கக் 'கலண்டர்'
'போட்டோக் கலண்டர்'

JANUARY ஜனவரி 2018

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | 08 | 09 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

புதுவருடத்தை
மங்களகரமாக ஆரம்பிக்க
கலண்டர்களை
அன்பளிப்பாக வழங்குங்கள்

மக் பிரிண்ட்
( MUG )
350/=



அன்புக்குரியவர்களின்
அன்பளிப்பாக விரும்பிய
படம், வாழ்த்து பொறித்த
'மக்' வழங்கி வாழ்த்துங்கள்.
குறைந்த விலையில்
குறுகிய காலத்தில்
நேர்த்தியாக செய்து
தரப்படும்.

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கைபேடு (Handbills), நோட்டீஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

பிரதான அலுவலகம்:- 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

கிளை அலுவலகம்:- நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 492 7432 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

K.K.S வீதி சுன்னாகத்தில் 9 1/2 பரப்பு காணி வீடு, கிணற்று வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 0776913059

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோகத்திலுள்ள சிறிய குடும்ப மொன்றுக்கு கொக்குவில், கல்வியங்காடு, இணுவில், சுன்னாகம், உரும்பிராய் பகுதிகளில் இருந்து வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு :-0766813520, 0772588938

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

எம்மிடம் நல்லினத் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.

077 659 2044

## தேவை

ஆண் ஒருவருக்கு இணைந்த குளியல் அறையுடன் கூடிய அறை வாடகைக்குத் தேவை. யாழ். நல்லூர், திருநெல்வேலிக்கு அருகாமையில் / வவுனியா Town அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

0112365192 / 0775149869

## பணியாளர் தேவை

- இரவு நேரப்பணியாளர்
- சுத்திகரிப்பாளர்

**மூர்த்தி கெஸ்ட் கவுஸ்**

62/20 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

077 224 7428

**அறைகள் வாடகைக்கு**

யாழ்.மருத்துவ பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் மூன்று அறைகள் வாடகைக்குண்டு. ஆண் பல்கலைக்கழக மாணவர்கள்/ உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

071 856 5662

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

நான்குபேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

077 477 9444

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. Road,
கொக்குவில் 2 ½ பரப்பு
காணியுடன் கூடிய வீடு
உடன் விற்பனைக்கு உண்டு

0777-781221

## Luxury Apartment வாடகைக்கு

நாள், கிழமை, மாத அடிப்படையில்
கொழும்பு 3, 4, 6,
மற்றும்
தெஹிவளையில்



0773 540 632 / 0774 440 586
0776 332 580 / 0779 919 388
011 2363991

**தேவை**

ஓய்வூதியக்காரருக்கு சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகள் விரும்பத்தக்கது.

077 300 1713

**தேவை**

மேசன்மார், சியறாவின் வேலைத்தளங்களாக உள்ள கொழும்பு, கண்டி, அநுராதபுரம் இடங்களுக்கு தேவை. தொடர்பு - 077 297 5395, 071 1642 180, 077 945 7953, 077 5639 30

**அறைகள் வாடகைக்கு**

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் ஆண் மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு.

076 804 6562

**வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் நகருக்கு அருகில்
அறைகள் (றூம்)
வாடகைக்குண்டு.

077 728 3811

## விற்பனைக்குண்டு

வெள்ளவத்தை, காலி வீதிக்கு முன்பாக. 4½பரப்புக் (பேர்ச்சஸ்) கொண்ட பாவனையிலுள்ள 3 மாடிக் கட்டடம் கொண்ட விடுதி. 13 அறைகள். இரண்டு குளியலறையும் கொண்டது.

உடனடியாக விற்பனைக்குண்டு.

Only for Land value

( 5 - 6 லட்சம் வரை வருமானம் கிடைக்கும்)

072 231 3305

**அறுவடை இயந்திரம் விற்பனைக்கு**

குவாட்டா G68 அறுவடை இயந்திரம் விற்பனைக்குண்டு.

077 412 1992, 077 658 8205

**வீடு வாடகைக்கு**

யாழ் கந்தர் மடம் பழம் வீதியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு :- 071 843 2004

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1987,
கார்த்திகை 1 ஆம் பாதம்,
செவ்வாய்க்குற்றம் இல்லை.
ஆஸ்திரேலியா Citizen மணமகனுக்கு
மணமகள் தேவை.

077 210 7886

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1979,
பூராடம், 1 ஆம் பாதம், 7 இல் செவ்வாய்,
விவாகரத்துப் பெற்றவர்.
லண்டன் Citizen மணமகனுக்கு
மணமகள் தேவை.

077 164 6340

**நாகபூஷணி திருமணசேவை (நல்லூர்)**

உள்நாட்டு, வெளிநாட்டு, அரச, தனியார்துறை, மணமக்கள் ஜாதகங்களை உடன் மிகப் பொருத்தமாகத் தரப்படும்.

021 222 9306, 077 138 7596

**விற்பனைக்கு**

வேலணையில் :- சிமெந்துக் கல்
சிமெந்து வேலி தூண்
ஏனைய சிமெந்து தூண் வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
வாகன வசதி செய்து தரப்படும்.

077 534 8357

**வான் வாடகைக்கு விடப்படும்**

Hiace (டொல்பின்) A/C வான் வாடகைக்கு விடப்படும்.
அரச / அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 700 9628 யாழ்நகர்.

**தேவை**

வவுனியாவில் இயங்கிவரும் Super Market இற்கு உதவி முகாமையாளரும் (தகைமை A/L ). விற்பனையாளரும் தேவை. சுயவிவரக்கோவையை மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

rsubaranjan@yahoo.com

**வாகன கண்காணிப்பு**

உங்கள் வாகனங்களின் நடமாட்டங்களை எளிதாக தொலைபேசி ஊடாக அவதானிக்கலாம்.

தொடர்பு :- 077 888 7051

# யாழ்நகரில்

# ASR Hotel



மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள
சர்வதேச தரத்துடனான
நட்சத்திர தங்குமிட விடுதி

# ASR Wedding Halls





திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட் டங்கள், மற்றும் வங்கிகள், கம்பனிகளின் வைபவங்கள், பாடசாலை நிகழ்ச்சிகள் உட்பட சகலவிதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்




புதுப்பொழிவுடன் புதிய வைபர் மணவறை அமைக்கப்பட்டு இருப்பதால்
இப்போதே உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்**
**கலாசார திருமண மண்டபம்.**

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 373 4116, 021 222 1355

Annamalaiyan Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd
asrhall@hotmail.com Find us on : Facebook.com/jaffnaasrenterprises

நத்தார் பண்டிகை, புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய டிசைன்களில் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகளை எண்ணம் போல் நியாயமான விலையில் வாங்கி மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்

# ஆர்.வி.ஜி மருந்தகம்



**ARVEGIE MEDICALS**

இல.504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 2129

## MAJESTIC CINEPLEX Jaffna

A CEYLON THEATRES CINEMA

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021- 2227712

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## Home Visiting Class

Medical Faculty (Mega Merit) V.K.S. Manokaran (Scholar ship - O/Level - A/Level / Bio அனைத்துமே Jaffna district First) உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். Scholar ship முதல் O/Level வரை அனைத்துப் பாடங்களும். A/ Level, Biology, Chemistry, Physics.

071 314 1834, 077 084 4542

**வாடகைக்கு**

குப்பிளான் சந்தியில் புதிதாக கட்டிய கடைகள் சகல வசதிகளுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. தேநீர், உணவு கடைகள் தவிர்ந்த மற்றைய அனைத்து கடைகளுக்கும் பொருத்தமானது.

சிவஞானம் - 076 658 9254

**உடன் வாடகைக்கு**

நல்லூர்க் கோயிலுக்கு வடக்குப் பக்கம் அமைதியான சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

077 770 4457, 077 138 7596

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## ஒன்பதாம் ஆண்டு நினைவு

அமரர் செல்வி
**மகேந்திரன் கௌரி**



அன்னை மடியில்
**02.08.1989**

ஆண்டவன் அடியில்
**19.11.2008**

இன்று நீ பிரிந்து ஒன்பது ஆண்டுகள் ஆனதே!
தாங்க முடியவில்லை உந்தன் இழப்பை!!
முகத்திலே சிரிப்பதனை உதிர்த்து விட்டு
முத்தான கதைகள் பல பேசிக்கொள்ளும் செல்லமே!!!
எங்கள் உயிர் இருக்கும்வரை என்றும்
உன் நினைவுகளுடன் ............. வாழும்

விடி வெள்ளி வீதி, வேம்படி.
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

அம்மா அப்பா சகோதரிகள்,
மைத்துணன், பெறாமகன்,
பெறாமகள்

உ
சிவமயம்

## நன்றி நவிலல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 | 19 |
| 04 | 10 |
| 1930 | 2017 |



## அமரர் சபாபதி இராமேஸ்வரன்

எமது அன்புத் தெய்வம்

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத்தலைவர் நோயுற்று இருந்த வேளையில் வந்து நலம் விசாரித்து ஆறுதல் கூறியோருக்கும், ஈமக்கிரியைகளின் போது நேரில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைத்தொடர்பு மூலம் அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும், நாம் துயருற்றிருக்கும் போது எமது துயரில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த, உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அனைத்து உள்ளங்களிற்கும் 17.11.2017 இல் நடைபெற்ற அந்தியேட்டி சபிண்டிகரணம் மற்றும் அதன் பின் 19.11.2017 அன்று நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு பற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு : திருமதி ம. இராமேஸ்வரன்
8A/2 De Fonseka Road, Colombo - 05
Tel : 2581150

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 17 |
| 01 | 11 |
| 1942 | 2017 |



## கந்தசாமி இராசரட்ணம்

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் முன்னை நாள் உபதலைவரும் கௌரவ பொருளாளரும், ஆலய புனரமைப்புப் பணிகளை முன்னின்று செய்தவரும், அருணோதய சன சமூக நிலையத்தின் முன்னைநாள் தலைவராக இருந்து நிலையத்தைப் புனரமைப்பு செய்ததுடன் விளையாட்டுத் துறையை ஊக்குவித்துக் கரப்பந்தாட்ட அணியை உருவாக்கி பயிற்று வித்தவரும், யாழ்.மாவட்டத்தில் சிறந்த கரப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்து அருணோதய கரப்பந்தாட்டக் கழகத்தை 1958களில் தேசிய ரீதியில் வெற்றிபெறச் செய்தவருமான **கந்தசாமி இராசரட்ணம் அவர்கள் 17.11.2017 அன்று லண்டன் மாநகரில்** அமரத்துவம் அடைந்ததை செவியுற்று ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

அன்னாரது ஆத்மா எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானின் பாதாரவிந்தங்களை அடைந்து சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!**

பரிபாலனசபை,
அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 18 |
| 09 | 11 |
| 1935 | 2017 |



## திருமதி ஞானேஸ்வரி பத்மநாதன்

தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி ஞானேஸ்வரி பத்மநாதன் சனிக்கிழமை 18.11.2017 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜா பத்மநாதன் (Rerired D.O.A Irrigation Department) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகம் மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற நடராஜா விசாலட்சி தம்பதியரின் மருமகளும், ஸ்ரீ மகேஸ்வரன், திருமதி புவனேஸ்வரி தேவகாந்தன், காலஞ்சென்ற ஸ்ரீ இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நகுலேந்திரன், தமயந்தி குணசேகரன், லவன், தயாநந்தினி உலகநாதன், யசோதா பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரவதனி நகுலேந்திரன், குணசேகரன், சிவசக்தி லவன், உலகநாதன், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியும், டினோஜன், கோபிகா, பிரியங்கா, கவினா, கபில், பிரவீனா, டிலுக் ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர்ச்சாலையில் (591,Galle Road, Mt.Lavinia) இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும். அதனைத்தொடர்ந்து கிரியைகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 4.30 மணிக்கு கல்விசை பொது மயானத்தில் தகனக்கிரிகைகள் நடைபெறும். இந்த அறிவித்ததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"White House" 180,6/1, Manning Place,
Colombo-06

தகவல்
குடும்பத்தினர்

0112365842/077 7470621

## முதலாம் ஆண்டு நினைவு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 29 |
| 05 | 11 |
| 1937 | 2016 |



திருமதி
## சிவக்கொழுந்து வினாயகமூர்த்தி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

திதி : 19.11.2017 வளர்பிறை பிரதமை

ஒரு மனைவி தன்கணவனுக்கு எப்படி இருக்க வேண்டும்
அம்மா தன்பிள்ளைகளுக்கு எப்படி இருக்க வேண்டும்
ஒருவன் சமூகத்தில் எப்படி வாழவேண்டும்
எல்லாவற்றையும் உங்கள் வாழ்க்கை மூலம்
வாழ்ந்து காட்டினீர்கள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

மீசாலை வடக்கு,
மீசாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
## கார்த்திகேசு நவரட்ணம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.04.1944 | 21.10.2017 |

கடந்த 21.10.2017 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தவர் கார்த்திகேசு நவரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 6.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று நாளை (20.11.2017) திங்கட் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபீண்டீகரண கிரியையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இராஜசிங்கர் வீதி,
வல்வெட்டி.

குடும்பத்தினர்.
021 373 7764

## துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி நேற்று

மட்டக்களப்பு. நவ.19

மாவீரர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை மாவடி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

இந்தச் சிரமதானப் பணியில் பனிச்சையடி முன்மாரி, மாவடி முன்மாரி, கொக்கட்டிச் சோலை போன்ற பிரதேசங்களின் பொது மக்கள் பலரும் கலந்து சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (ற-ரி5)

## அமைச்சர் சர்வேஸ் மீது விசாரணைவேண்டும்

### முன்னாள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்ற மறுத்திருப்பது தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு வடக்கு மாகாண ஆளுநருக்கு இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பிரதிபா மகாநாமகேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளின் அமைச்சர்கள் அரசமைப்பை ஏற்பதாகவே சத்தியப்பிரமாணம் மேற்கொண்டுள்ளனர். அவ்வாறான நிலையில், தேசியக் கொடியை ஏற்றாது, அதனைப்புறக்கணித்திருப்பதனூடாக அந்த அமைச்சர் அரசமைப்பை மீறியுள்ளார்.

அமைச்சர் ஒருவர் தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை, நல்லிணக்கம் என்பனவற்றுக்கு எதிராக செயற்பட்டுள்ளார். இதற்கு வடக்கு முதலமைச்சர் முதலில் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (5)

## நாடாளுமன்றத்தில் பாம்பு

கொழும்பு,.நவ. 19

நாடாளுமன்றத்தின், முதலாவது இலக்கக் குழு அறைக்குள் இருந்து பாம்பு ஒன்று நாடாளுமன்றப் பணியாளர்களால் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

நாடாளுமன்ற தரைத்தளத்தில் உள்ள முதலாவது இலக்க குழு அறையில் நேற்றுமுன்தினம் காலை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள், அங்கு ஒளிந்திருந்த பாம்பைக் கண்டுபிடித்து பிடித்துச் சென்றனர்.

பிடிக்கப்பட்ட பாம்பு, பூனைப்பாம்பு வகையைச் சேர்ந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாம்பு கண்டுபிடிக்கப்பட்ட குழு அறை பெரும்பாலும், அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்புகளுக்குப் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

நாடாளுமன்றத்தின் பல்வேறு பகுதிகளிலும், இதுபோன்ற பாம்புகள், முன்னரும் கண்டுபிடிக்கப்பட்டன.

நாடாளுமன்ற வளாகத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதால், நாடாளுமன்றப் பணியாளர்கள் சிலருக்கு அண்மையில் பாம்புகளைப் பிடிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (5)

## இரண்டாம் தேசிய மொழி சிங்களச் செயலாற்றுகை தினம்

இரண்டாம் தேசிய மொழி சிங்கள செயலாற்றுகை தினம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை யாழ்ப்பாண வேம்படிப் பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைகழகக் கணிதத் துறைப் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராசா, மதிப்பு விருந்தினரர்களாக வடக்கு மாகாண நிபுணத்துவ ஆலோசகர் வீ.இராசையா மற்றும் யாழ்ப்பாண வலயக் கல்வி அலவலகக் கணக்காளர் மஞ்சுளாதேவி றஞ்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என யாழ்ப்பாண வலய கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## நீரிழிவுப் பரிசோதனை

யாழ்ப்பாணம் நவ.19

பன்னாட்டு நீரிழிவு வாரத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நீரிழிவு பரிசோதனைகளை சாவகச்சேரி பொதுச் சந்தை மண்டபத்தில் நடாத்தவுள்ளனர்.

லயன் மருத்துவர் சு.சி அருளானந்தம் தலைமையிலான கழக அங்கத்தவர்கள் பரிசோதனையில் கலந்துகொண்டு மருந்துகளும் வழங்கவுள்ளதால் அனைவரையும் பரிசோதனையில் பங்குபற்றுமாறு கழகத்தலைவர் உ. சிசில் றெமின்டஸ் அறிவித்துள்ளார். (21.9)

### திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள். ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள், பெண்கள், உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

### வேலை வாய்ப்புக்கள்

01. ஆங்கிலத்திலும், தமிழிலும் கணினியில் டைப் செய்யக் கூடிய அனுபவமுள்ளவர்கள்.
02. தமிழ் மொழியில் உள்ள கட்டுரைகளை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கக் கூடியவர்கள் (பகுதி நேரம்)
03. சுக வாழ்வு வாழ்வதற்கு ஆரோக்கியமான உணவு வகைகளை சந்தைப் படுத்துவதில் ஆர்வமுள்ளவர்கள்.

தங்கள் சுயவிவரக்கோவையுடன் (Bio Data) 20.11.2017 திங்கட்கிழமை 10 மணி முதல் 12 மணி வரை எங்கள் காரியாலயத்தில் நேரில் வரவும்.

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம்
கே.கே.எஸ் றோட், தெல்லிப்பழை. (துர்க்கையம்மன் கோயில் முன்பாக)
021 205 9256

### முருங்கைக்காய் விதைகள் கொள்வனவு செய்யப்படும்

உலர்ந்த முருங்கைக்காய் (Dried Moringa Seeds) விதைகள் தொகையாகக் கொள்வனவு செய்யப்படும்

உங்களது விபரங்களுடன் அழைக்கவும்.
072-2235460 : புத்திக
076-3602233 : சஹன்
(சிங்களம் / ஆங்கிலத்தில்)



மின்னஞ்சல்:
buyyourcinnamon@gmail.com

### நரம்பு நோய்கள் தொடர்பான புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்

IMS



முதன்முறையாக மானிப்பாயில்........

- 24 மணிநேர உள்ளகநோயாளர் விடுதியுடன் கூடிய தாதிய பராமரிப்பு.
- விசேட வைத்திய நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள்
- உடற்பயிற்சி உபகரண வசதிகளுடன் கூடிய சிறந்த இயன்முறை சிகிச்சை (Physiotherapy).
- விசேட பயிற்சி பெற்ற சுகாதார உதவியாளர்களின் சேவைகள்.
- பேச்சுத்திறன் சிகிச்சை முறை.(Speech therapy)

நரம்பு நோய்கள் தொடர்பான புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்.
(Neuro Rehabilitation Centre)
கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்.
T.P: 0212256335/ 0212256990
Website: www.theims.net



### MUWASIRASA INTERNATIONAL

Tel : 0112 232280 / 0770 588143
Email : lorencesri@yahoo.it




MAYOORA Gift Center & Distributors
No.14, New Market, Power House Road, Jaffna.
021 222 2084

### விற்பனைக்கு

யாழ். நகரில் :- கருங்கல் ½" (3 Cubes)
கருங்கல் ¾" (3 Cubes)
கருங்கல் 1" (3 Cubes)
கருங்கல் 1½" (3 Cubes)

கண்டாவளை மணல் (3 Cubes)
டஸ்ட் வகைகள், அத்திவாரக்கல் (6x 9)

சிப்ஸ் வகைகள், சிமெந்து மற்றும் சிமெந்துக்கல், சிமெந்து வேலி தூண், சிமெந்து தூண் வகைகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

TVM Transport Point - Pedro Road, Kopay.
077 766 6620, 077 766 6619

### கெஸ்ட்ரைடிஸ் பிரச்சினைக்கு முறையான தீர்வு 'ராஜபுர பஞ்சபல அமிர்த பானம்'



பஞ்ச பல அமிர்த பானம் என்பது ஐந்து வித பலன்களை பெற்றுக்கொடுக்கும் ஒரு பானமாகும். இது உஷ்ணமாக சரீரத்தை குளிர்மையாக்குகின்றது. பசியின்மையை போக்குகின்றது. நெஞ்சு எரிச்சல், வயிறு ஊதல், அதிக தலைவலி, உணவு ஒவ்வாமை, வயிற்றுப் புண், அடி வயிற்று வலி, உணவு உட்கொண்டதும் மலம் கழித்தல் போன்ற சிக்கல்களுக்கு இது ஒரு தீர்வாக அமைந்துள்ளது. அத்துடன் கால் வெடித்தல், தோல் வறட்சியடைதல் மற்றும் பெண்களின் உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்தவும் இது சிறந்தது. இது 100 சதவீதம் உள்நாட்டு ஔடதங்கள் அதிகளவில் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது. இது ஆயர்வேத திணைக்களத்தில் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் சான்றளிக்கப்பட்ட ஔடதமாகும். அந்நிறுவனங்களின் அறிக்கைகள் இது மிகவும் சுகாதாரமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.




இலங்கையரில் நால்வரில் மூவரை தாக்கியுள்ள ஒரு நோயாக கெஸ்ட்ரைடிஸ் எனப்படும் அமில பித்த நோய்க் காணப்படுகின்றது. சிறுவர் முதல் பெரியவர் வரை வயது வேறுபாடின்றி பாதிப்புள்ளாக்கியுள்ள இந் நோய்க்கு உள்நாட்டில் நிரந்தரமான தீர்வுக்கான சிகிச்சையை பெற்றுக்கொடுக்கும் மொனராகலை சிறிகலை ராஜபுர வைத்திய பரம்பரையைச் சேர்ந்த வைத்தியர் சுமித் ராஜபுர அவர்கள் பிரசித்திபெற்று விளங்குகின்றார். இந்நோய் ஏற்படும் விதம் மற்றும் அதற்கான சிகிச்சை முறைகள் மற்றும் அதனை குணப்படுத்திக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி அவர் வழங்கிய செவ்வி.

**கெஸ்ட்ரைடிஸ் எனப்படும் அமில பித்த நோய் என்றால் என்ன?**

மனித உடலில் ஏற்படும் நோய்க்காரணி பிரதான நோயாக இந்நோயை கருத முடியும். ஆயுர்வேதத்தில் அமில பித்த நோயாக கருதப்படுகின்றது. எமது உணவு பழக்கத்தில் ஏற்படும் மாற்றத்தினால் இந்நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது. மேற்கத்தேய முறையில் அறியப்படும் ஹைட்ரோக்குலோரிக் அமில மாற்றத்தினால் இந்நோய் ஏற்படுகின்றது.

**இந் நோய் ஏற்படுவதற்கு வயதெல்லை உண்டா?**

சிறுவர் முதல் பெரியவர் வரை இந்நோய் ஏற்படுகின்றது. விஷேடமாக பிள்ளைகள் காலையில் பால் மாத்திரம் குடித்து பாடசாலைக்கு செல்வதால் காலை உணவு உட்கொள்ளாமையினாலும் நீண்ட காலம் கோதுமை மாவிலான உணவு வகைகளை உட்கொள்வதனாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

**இது பரம்பரையாக வரும் ஓர நோயா?**

இது தொற்று நோயோ அல்லது பரம்பரை ரீதியாக வரும் ஒரு நோயோ அல்ல. தவறான உணவுப்பழக்கத்தினாலும் உணவு ஒவ்வாமையினாலும் ஏற்படுகின்றது.

**இந்நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணிகள் யாது?**

எமது நாட்டின் சனத்தொகையில் நான்கில் மூவருக்கு இந்நோய்த்தாக்கம் உள்ளது. இந்நோய் ஏற்படுவதற்கு பிரதான காரணிகளாக சரியான முறையில் உணவு உட்கொள்ளாமை மற்றும் சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளாமையாகும். காலை 8 மணி முதல் மாலை 1 மணிக்கு முன்னதாகவும் இரவு 7.30 மணி முதல் 8 மணிக்கு முன்னதாகவும் பொதுவாக உணவு உட்கொள்ளுதல் வேண்டும். இந்நேரங்களில் உணவு உட்கொள்ளாமையினால் இந்நோய் ஏற்படுகின்றது.

**உள்நாட்டு சிகிச்சை முறைகளினால் கெஸ்ட்ரைடிஸை குணமாக்கும் வைத்தியர்.**

அதே போல் அநேகமானவர்கள் போதிய அளவு நீர் அருந்தாமல் இந்நோயை அதிகரித்துக்கொள்கின்றனர். அதே போல் சில உணவு வகைகளும் இதற்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது. விஷேடமாக இனிப்பு பானம் வகை. இரசாயன பொருட்கள் உள்ளடக்கிய உணவு உண்ணுதல். அதிக உப்பிலான உணவு. அதிகளவான பலசரக்கு பொருட்கள் சேர்த்த உணவு போன்றவற்றை அடிக்கடி உண்ணுவதால் இந்நோய்த்தாக்கம் அதிகமாகின்றது. நீண்ட கால மது பாவனையும் இந்நோய் அதிகரிக்க பிரதான காரணியாக அமைகின்றது. இவ்வாறான தவறான நடவடிக்கைகளினால் இன்று சமூகத்தில் இந்நோய் அதிகரித்து காணப்படுகின்றது.

**இது தொடர்பில் நீங்கள் அறிமுகப்படுத்தும் பஞ்சபல அமிர்தபானம் பற்றிக் கூறினால்?**

பஞ்சபல அமிர்த பானம் என்பது ஆயுள். நிறம்.நலம்.பலம் மற்றும் ஆரோக்கியம் போன்ற ஐந்தினையும் பெற்றுத்தரும் அமிர்த பானமாகும்.இதன் மூலம் அதிக வெப்பமான உடலானது குளிர்வடையச் செய்வதாகும்.முறையற்ற உணவுப் பழக்கத்தை சீராக்கும்.

நெஞ்சு எரிச்சல். அதிக தலைவலி. உணவின் மீது நாட்டமின்மை. எப்பொழுதும் வயிறு நிரம்பிய உணர்வு. உடல் உட்புற பகுதிகளில் காயங்கள். அடிவயிற்று வலி. உணவு உடனடியாக உட்கொள்ளும் போது உடனடியாக மலசல கூடத்திற்கு செல்லவேண்டிய தேவை போன்ற பிரச்சினைகளுக்கு உடனடி நிவாரணியே இது. அது மாத்திரமன்றி பாதங்கள் வெடித்தல், சருமம் உலர்தல், பெண்களின் உடலின் அதிக வெப்பத்தன்மை போன்ற பிரச்சினைகளுக்கும் சிறந்த பிரதியுபகாரமாக இப்பானம் செயற்படும். இது முற்றுமுழுதும் உள்நாட்டு ஆயுர்வேத குணநலன்கள் நிறைந்த மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. இது பூரணமாக சுத்தமாக தயாரிக்கப்பட்டு. காய்ச்சிய சிறந்த மூலிகைப் பானமாகும்.

**கெஸ்ட்ரைடீஸ் நோய்க்கான நிரந்தரமான சிகிச்சை குறித்து உங்கள் கருத்து யாது?**

இந்நோய்க்கு ஆயுர் வேதமுறை சிகிச்சை மிக முக்கியமானது. விஷேடமாக ஆயுர் வேத மருத்துவத்தில் உடம்பின் உஷ்ணத்தை குறைத்து உடம்பிற்கு நீரை பெற்றுக்கொடுக்கின்றது.

**பெரும்பாலானோர் கூறுவதன்படி இதுபோன்ற மூலிகைப் பானங்களைப் பருகுவதனால் சிறுநீரக தொற்றுக்கள் ஏற்படுவதாக கருத்துக்கள் நிலவுகின்றன. இது தொடர்பில் சற்று விளக்கமாக கூறினால்?**

இப் பஞ்சபல அமிர்த பானமானது ஆயுர்வேத திணைக்களம் மற்றும் தொழிற்சாலை தொழிநுட்ப ஆய்வு நிறுவனத்தினரால் நூற்றுக்கு நூறு வீதம் அங்கீகரிக்கப்பட்ட ஔடத பானமாகும். இந்நிறுவனங்களின் ஆய்வு அறிக்கைகள் இவ்வுறபத்தித் தொடரபில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. அத்தோடு இப்பானத்தினால் நன்மையடையந்தோர் பலரின் சான்றுகளால் மூலிக பானங்களை பருகுவதனால் சிறுநீரக தொற்றுக்கள் எறபடும் எனும் கூற்று பொய் என்று ஒப்புவிக்க முடியும்.

**பஞ்சபல அமிர்த பானத்தினை எவ்வாறு கொள்வனவு செய்வது?**

நாடு முழுதும் உள்ள அனைத்து ஆயுர்வேத மருந்தகங்களிலும் கார்கீல்ஸ், ஆர்ப்பிக்கோ, லாப்ஃ மற்றும் கீல்ஸ் போன்ற சுப்பர் மார்க்கட்டுகளிலும் உள்ள பாமசிகளில் கொள்வனவு செய்ய முடியும். நபரொருவருக்கு என்னை சந்தித்து சிகிச்சைகளைப் பெற விரும்பினால் 0115 727 519 அல்லது 0716 000 250 என்கிற தொலைபேசி இலக்கங்களினூடாக என்னைத் தொடர்பு கொள்ள முடியும்.

அதுமாத்திரமன்றி www.asthma-rajapura.com என்கிற இணையதள முகவரியிலும், youtube இலும், முகப்புத்தகத்தின் ஊடாகவும் ராஜபுர பஞ்சபல அமிர்த பானம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சிகிச்சைகள் பெற விரும்புபவர்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பெலவத்தையிலும் வாரநாட்களில் மொனராகலை ராஜபுர மருந்தகத்திலும் நேரடியாக வந்து என்னிடம் சிகிச்சைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மொனராகலை சிரிகல ராஜபுர மருந்தகத்தின் ஆயுர்வேத வைத்தியர் சுமித் ராஜபுர அவர்கள்.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி சிவகுரு

கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவகுரு 16.11.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவகுருவின் அன்பு மனைவியும், சிறிதரன் (சுவிஸ்), வனஜா (கனடா), வதனி (சுவிஸ்), சசிதரன் ஆகியோரின் அன்புத் தாயும், கேதீஸ் பாமா (சுவிஸ்), யோகராசா (கனடா), சத்தியன் (சுவிஸ்), நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் அதிதரன், அதுசன், யதுசன், ஆர்த்திகா, சஸ்மிதா, சஞ்ஜித், சர்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமோதர வித்தியாலய வீதி,**
**கரணவாய் வடக்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 205 6920**



### ஆறுமுகம் சிவதாசன்

(ஓய்வு பெற்ற எழுது வினைஞர்)

வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவதாசன் 17.11.2017 வெள்ளிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பர்வதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவதாசன், விஜயலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, செல்லத்துரை, கந்தசாமி, பாலாம்பிகை(கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் பரேந்திரன்(கனடா) காலஞ்சென்ற கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தியின் (கனடா) மாமனாரும் விர்ஜினி, யாழினி, சிரகிரி(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 224 0653**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 05 . 1954



இறப்பு 17 . 11 . 2017

### நடராஜா ராஜா (T.N ராஜா)

(ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர், வவுனியா)

வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ராஜா 17.11.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரி (றஞ்சி - பிரதம முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்) அவர்களின் அன்புக் கணவரும், அருண்ஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேசசபை, நானாட்டான்), அனுராகவன் (2017 உயர்தரம், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), சிறீதரன் (ஜேர்மனி), நகுலேசன், காலஞ்சென்ற ரதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன் (கனடா), கிருஸ்ணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரதான வீதி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 902 1717, 021 300 1476**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா அம்பலவாணர்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா அம்பலவாணர் நேற்று (18.11.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பச்சி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆறுமுகம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் ஆறுமுகம், தேவி, நாகேஸ்வரி, திருச்செல்வம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரி, திருஞானம், இலட்சுமணன், ஜெயரஞ்சினி, துரைர்ராஜசிங்கம் (அசோக் - மாங்கல்யா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயசீலன் - லக்சனா(லண்டன்), ரஜிவதனன்(லண்டன்), சிறீவதனா, கஜலக்சுமி, திருமகள், கம்சிகா, லௌசிகா, அனுத்திகா, திபீகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அட்சகி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் மனோன்மணி, இராசம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**(மாங்கல்யா ஜீவல்லரி)/ நியூ அன்னம்ஸ்**

**077 113 2332**

### கதிரவேலு ஜெயரத்தினம்

**(கோப்பாய் மாந்தோப்பு மாரியம்மன் முன்னாள் செயலாளர்)**



மலர்வு 28.11.1943 உதிர்வு 18.11.2017

பழைய தபாற்கந்தோர் அருகில், கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஜெயரத்தினம் நேற்று (18.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - அமராவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், நிஷாகர் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி வலயம்), நிரஷா (ஆசிரியர் - வ/ மாறாவிலுப்பை அ.த.க.பாடசாலை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஜிதாவின் அன்பு மாமனாரும், அக் ஷயா, அக்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, நடராஜலிங்கம் மற்றும் யோகரத்தினம் (டென்மார்க்), தர்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் கதிர்காமநாதன், விமலநாயகி,மகாதேவி (இந்தியா), பத்மநாதன் (ஜேர்மனி), ஜெயசீலன் (பிரான்ஸ்), தர்மசீலன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

**021 223 2123**

### பரத நாட்டிய நிகழ்வு

யாழ்ப்பாணம், இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தால் பரதநாட்டிய நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அருணகிரிநாதர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இணுவையூர் ரசிகப் பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் தலைவர் வி.கே. குகானந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினராக இலங்கை சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் க.கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன் போது இந்தியக் கலைஞர்களான நிருத்திய கலா ரத்தின சின்னமனூர் ஜெ. கிருஸ்ணகுமாரின் பரதநாட்டிய இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது என ரசிகப்பிரியாசபாகலைவளர்ச்சி மையதலைவர் வி.கே. குகானந்தன் அறிவித்துள்ளார். (21)


1717 FOLLOW US
www.mobitel.lk
குறைவான கட்டணத்தில் ஐக்கிய இராச்சியத்திற்கு விருப்பம் போல கதையுங்கள்
மொபிடெல் IDD
ஐக்கிய இராச்சியத்திற்கு நிமிடத்திற்கு ரூபா 5 என்பதால் விருப்பம் போல கதையுங்கள்.
இச்சலுகை 2017 நவம்பர் 30 வரை மட்டுமே.
Sri Lanka Telecom
Mobitel


HNB LOANS
தனிநபர் மற்றும் வீட்டுக் கடன்களுக்கான இக்கொடுப்பனவு
டிசெம்பர் 31 வரை மட்டுமே
ஹோ ஹோ ஹோ!
நத்தார் ஆரம்பமாகிவிட்டது
இலங்கையின்
மிகக் குறைந்த வட்டி வீதங்களுடன்
உங்கள் அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்தை அணுகுங்கள் அல்லது
அழையுங்கள்: 011 266 1961 - 011 266 1923
HNB தலைமையகம்,
HNB டவர்ஸ், 19வது மாடி, 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
பெக்ஸ்: 0112 662798 மின்னஞ்சல்: pfsdivision@hnb.lk வெப்தளம்: www.hnb.net
HNB


வருந்துகிறோம்!
புத்தம் புதிய உற்பத்திகள்
உலகத் தரமான உற்பத்திகளை வேறு எப்போதும் இல்லாத விசேட விலைக்கழிவில் பெறக்கூடிய அரிய வாய்ப்பை இழக்கப்போகும் அனைவரும் எம்மை மன்னித்துவிடுங்கள்.
65% வரை தள்ளுபடி
நவம்பர் 19ம் திகதி முதல் 26ம் திகதி வரை நாடளாவிய சகல அபான்ஸ் காட்சியறைகளிலும்..!
கையிருப்பு சொற்ப அளவே உள்ளன!
31% தள்ளுபடி
65% தள்ளுபடி
25% தள்ளுபடி
57% தள்ளுபடி
42% தள்ளுபடி
30% தள்ளுபடி
ரூ. 5,499/-
நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் லைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் பெறலாம்.
Abans

# சிறுவர் தொழிலாளரின் அளவு குறைந்துள்ளது

## தொழில் அமைச்சர் தகவல்



கொழும்பு, நவ. 19
சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பில் 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு சிறுவர் தொழிலாளர்களின் தொகை கணிசமாகக் குறைவடைந்துள்ளது எனத் தொழில் மற்றும் தொழிற் சங்கங்கள் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற 'சிறுவர்களைத் தொழில்களுக்கு உட்படுத்துவதைத் தடைசெய்தல்' தொடர்பான 4ஆவது மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்வி கற்கும் குறைந்த பட்ச வயதெல்லையானது 14 வயதிலிருந்து 16 வரையில் உயர்த்தப்படவேண்டும் என்று சில தினங்களுக்கு முன்பாக இலங்கை அரசு தீர்மானித்தது.

அதேபோல வேலை வாய்ப்புகளுக்கான குறைந்தபட்ச வயதெல்லையும் 16 ஆக உயர்த்தப்பட்டது.

குழந்தைகளைக் கட்டாயப்படுத்தி வேலைகளுக்கு அமர்த்தல், குழந்தைகளைக் கடத்தல், குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல் தடுப்பு மற்றும் சட்ட விரோதச் செயல்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் ஆகியவை நாட்டின் குற்றவியல் சட்டத்தில் ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது.

எவ்வாறாயினும், இன்று பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்து வந்த சிறுவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது- என்றார். (5)

# திறைசேரி பிணைமுறி விசாரணை அறிக்கையாவது பகிரங்கப்படுத்தப்படுமா?

## அநுரகுமார நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, நவ. 19
அரச தலைவர் ஆணைக்குழு பெரிய மோசடிகள் தொடர்பில் 17 அறிக்கைகளை அரச தலைவர் மைத்திரிபாலவிடம் ஒப்படைத்திருந்தது. அதனை இன்னும் பகிரங்கப்படுத்தவில்லை. இதே நிலைதான் பிணைமுறி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் நடக்கும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெரிய மோசடிகள் தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக் குழு 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைக்கப்பட்டதன் பின்னர், விசாரணைகளை நிறைவுசெய்து கடந்த ஜூலை மாதம் 17 அறிக்கைகளை மைத்திரிக்கு கையளித்திருக்கின்றது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் பற்றியே இந்த விசாரணை அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்படுமாயின் சர்ச்சைக்குரிய பிணை முறி விவகாரம் தொடர்பான விசாரணைகளும் மூடி மறைக்கப்படும். அதில் நியாயம் காணப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

இது தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேரடியாக முறைபாடு செய்ய முடியாது. அதற்காகவே ஊழல் மோடிகளுக்கு எதிரான செயலகக் குழு என்ற அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் தற்போது அந்தச் செயலகக் குழு அலுவலம் கலைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தின் காலத்தை நீடிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், இறுதியில் அதைக் கலைப்பது என்று அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

அந்த அலுவலகம் கலைக்கப்பட்டதன் பின்னர் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைபாடுகள் செல்வதில்லை. ஏற்கனவே கிடைக்கப்பெற்ற பழைய முறைப்பாடுகளை மட்டுமே நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரிக்கிறது. புதிய முறைப்பாடுகளை ஏற்க முடியாத நிலமையே காணப்படுகின்றது.

தலைமை அமைச்சர் அலுவலகத்திலிருந்துதான் இதற்கான உத்தரவு சென்றிருக்கின்றது, தலைமை அமைச்சர்தான் இதைச் செய்திருந்தார். இந்த அலுவலகம் கலைக்கப்பட்டது ஏன் என்று தெளிவுப்படுத்தப்படவேண்டும். குற்றவாளிகள் அமைச்சர்களின் வீடுகளில் அடைக்கலம் புகுந்திருந்தால் அதிகாரிகள் எப்படி விசாரணை செய்வது என்பது பிரச்சினைக்குரிய விடயம். மக்கள் அதிகாரத்தால் மட்டுமே இவ்வாறான விடயங்களை ஒழிக்க முடியும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பணியாட்தொகுதிப் பிரதானியாக இருந்த காமினி செனரத் எங்கிருந்தார் என்று கண்டுபிடித்திருக்காமை தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. இவையெல்லாம் தான் தற்போது அரங்கேறும் வேடிக்கைகளாக உள்ளன - என்றார். (5,31)


# எச்சரிக்கை அறிவித்தல்

BAJAJ
BAJAJ MOTORCYCLES
BAJAJ RE THREE WHEELER
BAJAJ GENUINE parts

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் பூனே மாநகரில் – 411035 அகுர்தி என்னுமிடத்தில் தனது பிரதான தலைமை வியாபார இடத்தைக் கொண்டு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், கொட்றோ சைக்கிள்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள், துணைப்பாகங்கள் மற்று சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் நிலை நிறுத்தப்பட்ட வியாபார நடவடிக்கையொன்றில் ஈடுபட்டு வரும் எமது சேவை வழங்குனரான பஜாஜ் ஓட்டோ லிமிடட் [BAJAJ AUTO LIMITED] தாபனத்தினர் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், மற்றும் அசல் உதிரிப்பாகங்கள் சம்பந்தமான வியாபாரக்குறியீடுகளின் உரிமையாளர்களாவர். அதாவது "பஜாஜ்" [BAJAJ], "டொமினர்" [Dominar], "பல்சர்" [Pulsar], " ", "டிஸ்கவர்" [Discover], "பொக்ஸர்" [Boxer], "பிளட்டினா" [Platina], "சீடி" [CT], "அவென்ஜெர்" [Avenger], ஆர்ஈ, [RE], "மக்ஸிமா" [Maxima], தியுட் [Qute], மற்றும் "டீரிஎஸ்-ஐ" [DTS-i] (முழுமையாக "பஜாஜ்" வியாபாரக்குறியையே [BAJAJ Trademarks] குறிக்கும்.)

எமது சேவை வழங்குனர் இலங்கையில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் அசல் உதிரிப்பாகங்களின் வியாபாரம் சம்பந்தமாக மேலே சொல்லப்பட்ட பஜாஜ் [BAJAJ] வியாபார குறியீடுகளை நீண்ட காலமாக உபயோகித்து வருகின்றனர். இத்தகைய வியாபார குறியீடுகள் மீதமான அனைத்து புலமை சார் சொத்துரிமைகளும் எமது சேவை வழங்குனருக்கே முழுவதுமாகவும் பிரத்தியேகமாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் அசல் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றுக்கு எமது சேவை வழங்குனரின் அதிகாரமளிக்கப்பட்ட இறக்குமதியாளராகவும் மற்றும் விநியோகஸ்தராகவும் இல 75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு-02. எனும் முகவரியில் அமைந்துள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியே திகழ்கின்றதென்பதனையும் இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு சொல்லப்பட்ட பஜாஜ் [BAJAJ] வியாபாரக்குறியீடுகளை நேரடியாகவோ அல்லது அதன் விநியோக வழி மூலமாகவோ உபயோகிப்பதற்கான அதிகாரம் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனிக்கே அளிக்கப்பட்டுள்ளதென்பதனை நாம் பொது மக்களுக்கும், வர்த்தக சமூகத்தினருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

எமது சேவை வழங்குனரின் தொடர்புகளைக் கொண்டிராத மூன்றாம் தரப்பினர் போலியான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் போலியான முறையில் ஒத்த தன்மை மிக்கதாகவுள்ள வியாபாரக்குறியீடுகளை பாவிப்பதற்கு முயற்சித்து வருகின்றமை அண்மையில் எமது சேவை வழங்குனரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஏதேனும் மூன்றாம் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பஜாஜ் [BAJAJ] வியாபாரக்குறியீடுகளின் பாவனையானது எமது சேவை வழங்குனரின் புலமைசார் சொத்துரிமைகளை மீறுவதற்கு ஒப்பான செயலாகும். எமது சேவை வழங்குனர் பஜாஜ் [BAJAJ] வியாபாரக்குறியீடுகள் மீதான தமது பிரத்தியேக உரிமைகளைப் பாதுகாப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும், எப்போதும் கண்ணும் கருத்துமாகவே இருந்து வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பஜாஜ் வியாபாரக்குறியீடுகளுக்கு [BAJAJ Trademarks] முற்றிலும் பொருந்திய அல்லது அவற்றை ஒத்த வர்த்தக நாமங்கள், வியாபாரக்குறியீடுகள், உரிமம், சொற்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் முயற்சிக்கும் அல்லது அத்தகைய பொருட்களையும் சேவைகளையும் உருவாக்குவதற்கு முயற்சித்தல் மூன்றாம் தரப்பினர் குடிசார் மற்றும் குற்றவியல் ஆகிய இரண்டு நடவடிக்கைகளிற்கு இட்டுச் செல்லும் தண்டனைக்குரிய குற்றத்தைப் புரிந்துவருவதாகும்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது வேறுமுறையில் வஞ்சக நோக்கத்துடன் செயற்படுதல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தக சமூகத்தினரும் பொதுமக்களும் இத்தால் எச்சரிக்கப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட "பஜாஜ்" [BAJAJ], வியாபாரக்குறியீடுகளை பாவித்து ஏதேனும் மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் துஷ்பிரயோக முயற்சிகள் குறித்து எமது சேவை வழங்குனரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு வர்த்தக சமூகத்தினரும் பொதுமக்களும் மேலும் அன்பாக வேண்டப்படுகின்றனர்.

ஜூலியஸ் மற்றும் கிரீசி
சட்டத்தரணிகள் மற்றும் பிரசித்த நொத்தாரிசுகள்
இல 41, சனாதிபதி மாவத்தைஇ (இராணி வீதி)
த. பெ. இலக்கம் - 154, கொழும்பு 01.
இலங்கைக் குடியரசு

Email ID : vishalg@bajajauto.co.in , rbkothawade@bajajauto.co.in , Spares_ info@dpmco.com


# அர்ஜுன் – கோப்குழு உறுப்பினர்கள் தொடர்பு: அலைபேசி உரையாடலால் சபையில் சர்ச்சை

பேர்ப்பச்சுவல் ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸ், கோப்குழு உறுப்பினர்களுடன் அலைபேசியில் உரையாடியமை தொடர்பான விவகாரத்தால் நாடாளுமன்றில் நேற்றுப் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியது. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சர்ச்சைகள் நிறைவடைந்ததையடுத்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி.ரத்நாயக்க ஒழுங்குப் பிரச்சினை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

'அரச தொழில் முயற்சிகள் பற்றிய நாடாளுமன்றக்குழு (கோப் குழு) உறுப்பினர்கள் சிலர் மத்திய வங்கிப் பிணை முறிகளுடன் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர். இது தொடர்பில் சாபாநாயகர் கவனத்தில் எடுக்கவேண்டும். கோப்குழு உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொள்வதானது அந்தக் குழுவின் மீதான நம்பிக்கைத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அவர்கள் தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுப்பாரா? என்று கேள்வி எழுப்பினார்.

சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, பிணை முறிகள் மோசடி தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் வழங்கப்பட்ட சாட்சியம்தொடர்பில் நாடாளுமன்றம் தீர்ப்பு வழங்க முடியாது - என்றார்.

மகிந்த அணி உறுப்பினர்கள் பலத்த கோசம் எழுப்பியதோடு பதிலுக்கு ஆளும் தரப்பு உறுப்பினர்களும் கோசங்களை எழுப்ப ஆரம்பித்தனர். சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர்அப்புஹாமி, நான் நாடாளுமன்றத்துக்கு வந்து இரண்டு வருடங்களாகின்றன. நான் கிராமத்தில் மக்களுடன் இருக்கும் ஒரு அரசியல்வாதி கோப் குழுவில் அங்கத்துவம் வகித்தவாறு அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்புகொண்டு பேசியதாக என் மீது வீணாகச் சேறு பூச முனைகின்றார்கள்.

எனது தந்தையாரும் அர்ஜுன் அலோசியஸுன் தந்தையாரும் நண்பர்கள். பிணைமுறி மோசடியானது நான் நாடாளுமன்றத்துக்கு வருகை தருவதற்கு முன்னரே நடைபெற்றதாகும். எங்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு வரவேண்டாம். நான் அர்ஜுன் அலோசியஸுடன் டீல் செய்திருந்தால் எப்படி கோப் குழு அறிக்கையில் கையொப்பமிட்டேன் என்பதைச் சிந்தியுங்கள். கோப் அறிக்கை தொடர்பில் நான் பிற நபர்களுடன் பேசியிருக்கவில்லை. எனது கரங்கள் சுத்தமானவை. அலோசியஸுடன் என்னால் நாளை கூடப் பேசமுடியும். என் மீதும் ஐக்கிய தேசியக் கட்சி மீதும் ஊடகங்கள் திட்டமிட்டுச் சேறுபூசுவதற்கு முயன்ற நடவடிக்கை இது என்பது தெளிவாகின்றது. நாம் யாருக்கும் அஞ்சப்போவதில்லை-என்றார்.

இந்தச் சமயத்தில் குறுக்கிட்டு எழுந்த அமைச்சர் தயாசிறி, நானும் கோப் குழுவில் அங்கம் வகிக்கின்றேன். அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால் அலைபேசி உரையாடல் தொடர்பான ஆதாரங்கள் சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவுக்குசமர்ப்பிக்கப்பட்டுவிசாரணை நடத்தப்படவேண்டும். குறித்த அழைப்புக்கள் தொடர்பான பதிவுகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடத்தில் கோர வேண்டும். சபாநாயகர் இது குறித்துக் கவனமெடுங்கள் - என்றார். (5,31)

# SINGER

## உலகத் தரம் வாய்ந்த சலவை இயந்திரங்கள்

5 வருட உத்தரவாதத்துடன்

**beko**

- Fully Auto - Top Loader 11Kg
- விசேட விலைக்கழிவு 11,200
- மாற்று முறை விலைக்கழிவு 13,000

B-WTL11019G
Rs. 74,499/=

**SINGER**

- Fully Auto - Top Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 5,000
- மாற்று முறை விலைக்கழிவு 7,500
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-FA70R
Rs. 48,999/=

- Fully Auto - Front Loader 6Kg
- விசேட விலைக்கழிவு 14,000
- மாற்று முறை விலைக்கழிவு 16,000

B-WMY61283MB3
Rs. 111,099/=

- Semi Auto - 6Kg
- விசேட விலைக்கழிவு 2,500
- மாற்று முறை விலைக்கழிவு 5,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-SAR6
Rs. 27,799/=

**SAMSUNG**

- Fully Auto - Top Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 4,000
- மாற்று முறை விலைக்கழிவு 6,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

SMGWA70H4000
Rs. 55,999/=

- Fully Auto - Front Loader 6Kg
- விசேட விலைக்கழிவு 5,000
- மாற்று முறை விலைக்கழிவு 8,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-FLG057R
Rs. 82,999/=

- Fully Auto - Front Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 11,000
- மாற்று முறை விலைக்கழிவு 20,000

SMGWA70J3283
Rs. 109,999/=

அருகில் உள்ள SINGER Plus காட்சியறையை நாடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408 | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 221 6320 | மானிப்பாய் 021 225 5343 | சங்காணை 021 225 1100 | சுன்னாகம் 021 224 0555 |
| | | சாவகச்சேரி 021 227 0197 | கொடிகாமம் 077 785 8232 | கிளிநொச்சி 021 228 0199 |
| நெல்லியடி 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | முல்லைத்தீவு 021 229 0180 | விற்பனைக்கு பிந்திய சேவைகளுக்கு:- 021 222 4577 | |

www.softlogicfinance.lk




**சொ.ஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் அத்த ஹித்த வியாபாரக் கடன் வசதி, தன்னம்பிக்கையுடன் உழைக்கும் உங்களுக்காகவே!**

அங்கும் இங்கும் அலைச்சலின்றி எந்தவொரு பணத்தேவையுடைய சிறு தொழில் செய்வோருக்கு துரிதமாகவும் இலகுவாகவும் எளிதாகவும் கடன் தேவைகளை பெற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு. சொ.ஃப்ட்லொஜிக், நாம் 25 வருடகாலமாக உங்களைப் போன்ற தைரியத்தின் வீரியத்துடன் திகழும் பல்லாயிரக்கணக்கான வியாபாரிகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அர்ப்பணிப்புடன் கைகோர்த்துள்ளோம்.

- ஒரு நாளில் கடன் அனுமதி
- இரு மணித்தியாலங்களில் பணத்தொகை
- வாராந்தம் மீள் செலுத்தும் வசதி (24 – 48 வாரங்கள்)
- வியாபார பதிவுடைய 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்

Softlogic Finance

Softlogic Finance
அதஹித
வியாபாரக் கடன்கள்

கொழும்பு நகர அலுவலகம் - 0112 303 373 | நாவலை - 0112 807 080/1 | பதுளை - 0552 224 206 | சிலாபம் - 0322 221 415 | தம்புள்ளை - 0662 284 737 | எம்பிலிப்பிட்டிய - 0472 230 590/1 | கடவத்தை - 0112 923 011/2 | கண்டி - 0812 224 913 | மாத்தறை - 0412 220 195 | நுவரெலியா - 0522 223 382 | நீர்கொழும்பு - 0312 224 714 | இரத்தினபுரி - 0452 230 677 | பொலன்னறுவை - 0272 226 727 | காலி - 0912 226 501 | யாழ்ப்பாணம் - 0212 219 444 | அனுராதபுரம் - 0252 226 279 | குருநாகலை - 0372 232 875 | செங்கடகலை - 0812 232 602 | பம்பலபிட்டி - 0112 367 901 | சுன்னாகம் - 0212 242 770 | ஹட்டன் - 0512 222 289 | திஸ்ஸமஹாராம - 0472 239 933 | வெலிகம - 0412 252 888 | மாத்தறை வெ.மோ - 0412 238 890 | பொரளை - 0112 694 262 | மாத்தளை - 0662 226 461 | வத்தளை - 0112 051 660 | புறக்கோட்டை - 0112 334 461 | கொச்சிக்கடை - 0312 272 670 | தெமட்டகொட - 0112 679 089 | கொட்டாவை - 0112 178 464 | களுத்துறை - 034 312 7164 | கொட்டாஞ்சேனை - 0727 027 922

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பொறிமுறை ரீதியான சித்திரவதை தொடர்கிறது

தற்போதைய அரசின் காலத்திலும் தமிழ் இளைஞர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது. 'அசோசியேட் பிரஸ்' பன்னாட்டு ஊடகம் இதுதொடர்பாக அண்மையில் அறிக்கையிட்டிருந்தது. அதில் புலம்பெயர் நாடுகளில் தஞ்சமடைந்த இளைஞர்கள் பலரது உடல்களில் காணப்பட்ட காயங்களும் ஆதாரமாக முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் பூதாகாரமாகக் கிளம்பியதை அடுத்து அப்படிப்பட்ட எந்தவொரு குற்றங்களும் நடக்கவில்லை என்று இலங்கை அரசதரப்பிலிருந்து மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது. படையினர் பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று வெளியான குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரங்கள் அற்றவை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்தியரட்ன மறுத்திருந்தார்.

அந்தச்செய்திக்கான ஆதாரங்களாகக்க ட்டப்பட்ட இளைஞர்களின் உடல்களில் காணப்பட்ட காயங்கள் அவர்களின் நண்பர்களால் ஏற்படுத்தப்பட்டவையாக இருக்கும் என்றுகூறி அத்தகைய குற்றச்சாட்டுக்களை இலகுவாக அவர் மறுத்திருந்தார்.

பாலியல் வன்முறை, சித்திரவதைகள் போன்றவற்றை அடியோடு ஏற்றுக்கொள்வதில்லைஎன்பதுதான்அரசின்கொள்கைஎன்றும்அவர் தெரிவித்திருக்கிறார்.

எழுந்தமானமான, முறையான் விசாரணைகள் ஏதுமற்ற அவரது கருத்து கண்டிக்கத்தக்கது. யதார்த்தத்துக்கு எந்தவகையிலும் நெருங்கிவர முடியாதது.

இலங்கை அரசுகள் கொண்டிருக்கும் கொள்கைக்கும் உண்மைக்கும் இடையே மிகப் பெரும் இடைவெளி இருக்கும் என்பதை வைத்தியரத்ன அறியாதவரல்லர். எந்தவொரு அப்பாவிப் பொதுமகனையும் கொல்வதில்லை என்கிற அறிவிக்கப்பட்ட கொள்கையுடன் முன்னெடுக்கப்பட்ட இறுதிப் போரில் 40 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையும், அரச புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் வரையானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தன்னார்வ அமைப்புகளும் தகவல் தருவதை அவர் அறியாதவருமல்லர். எனவே அறிவிக்கப்பட்ட கொள்கைக்கும் இலங்கையின் களயதார்த்தத்துக்கும் என்றுமே தொடர்புகள் இருந்ததில்லை.

தடுப்புக்காவலில் இருப்போர் மீதான சித்திரவதைகளும் வன்முறைகளும்கூட அப்படிப்பட்டவைதான். முன்னைய அரசின் காலத்தில் தமிழ் மக்களையும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தையும் அடக்கி ஒடுக்குவதற்கான திட்டமிட்ட பொறிமுறையாக சித்திரவதைகளும் பாலியல் வன்முறைகளும் பயன்படுத்தப்பட்டு வந்தன. வடக்கு கிழக்கு வாழ் ஒவ்வொரு தமிழனும் அதற்குச் சாட்சி. அந்தப் பொறிமுறைக்குள் வாழ்ந்து, பயிற்றப்பட்டு, பழக்கப்படுத்தப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டு இருப்பவர்களே இன்று வரையிலும் படையினராகவும் பொலிஸாராகவும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் கடமையாற்றுகிறார்கள்.

2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இந்தத் திட்டமிட்ட சித்திரவதைப் பொறிமுறைக்குள் இருந்து அவர்களை வெளியே கொண்டுவருவதற்கான பயிற்சிகளோ, முறையான உளவளத்துணையோ, சித்திரவதை உத்திக்குப் பதிலீடான மேம்பட்ட தொழில்நுட்ப அறிவுப்புகட்டலோ பெரியளவில் படையினர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்படவில்லை என்னும்போது, அவர்கள் தொடர்ந்தும் சித்திரவதை மற்றும் பாலியல் வதையை தமது விசாரணை நுட்பமாக, உத்தியாகப் பயன்படுத்துவதைக் கைவிடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. உண்மையும் அதுதான்.

பொலிஸாரினாலும் சில படைத்துறைப் புலனாய்வாளர்களாலும் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்படுபவர்கள் சித்திரவதைகளுக்கும் பாலியல் வதைகளுக்கும் உள்ளாகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தப் பொறிமுறை தொடர்கின்றது. அதில் கடந்த 2 வருடங்களில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை.

தற்போதைய கூட்டு அரசின் காலத்தில் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அதற்காக பொலிஸ் அதிகாரி உட்பட ச் சில பொலிஸார் நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளார்கள் என்பதே அதற்கான சான்று. அரசபடையினரின் இதுபோன்ற குற்றங்கள் தொடர்பில் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் உள்ளூரில் வந்துகொண்டே இருக்கின்றன.

வைத்தியரத்ன சொல்வதைப் போன்று புலம்பெயர்ந்து தஞ்சம் பெறுவதற்காக யாரோ ஒரு சிலர் தம்மைத் தாமே காயப்படுத்திக்கொள்வதும் நடக்கத்தான் செய்கிறது. அதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அந்த ஒன்றிரண்டு உதாரணங்களுக்காக அரச கட்டமைப்பில் திட்டமிட்டு இயங்கும் சித்திரவதைப் பொறிமுறையை இல்லை என்று சாதிப்பது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயற்சிப்பதற்கு ஒப்பானது.

எனவே இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படும்போது விரிவான விசாரணைகளை நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும், குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும். அதன் மூலம் மட்டுமே திட்டமிட்ட சித்திரவதைப் பொறிமுறையை உடைக்க முடியும் இந்த அரசால்.

அவ்வாறில்லாமல் எந்தவிசாரணையும் இன்றி எழுந்தமானமாக மறுப்பது ஏற்புடையதல்ல. கொழும்பு அரசின் இத்தகைய போக்கால்தான் உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகள் மீது தமிழ் மக்கள் எப்போதும் நம்பிக்கை வைப்பதில்லை. உண்மைக்கும் நீதிக்குமான பன்னாட்டு அமைப்பின் தலைவர் யஸ்மின் சூக்கா மிக அழகாகச் சொல்லியிருக்கிறார், "அறிக்கை வெளியாகி ஒருவாரத்திற்குள் நம்பகத்தன்மையுள்ள விசாரணை ஒன்றை இலங்கை அரசு நடத்தியிருக்கும் என்பதை ஏற்க முடியாது. நீதிப் பொறிமுறை குறித்த இலங்கை அரசின் இத்தகைய நிலைப்பாடுகள் காரணமாகத்தான் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் நிராகரிக்கிறார்கள்."

# இனவாத நிலைப்பாடு நாட்டுக்கு நன்மை தரப் போவதில்லை

சிங்கள மூலம்:
கீர்த்தி ரூபசிங்க
தமிழில்: வீ.எஸ்.ரீ.

"அரச தலைவர் அவர்களே! மிகச் சிரமமான தொரு வேலையை நாம் மேற்கொண்டோம். ரொட்டி சுடும் கல்லைச் சூடாக்க நாங்கள் வருடக்கணக்கான நாள்களை புகையில் கழித்தோம். அவ்விதம் அந்தக் கல்லை, ரொட்டி சுடுவதற்காகவே நாம் சூடாக்கிக் கொடுத்தோம். ஆனால் தற்போது பார்க்கும்போது அது தீப்பற்றி மூண்டெரிகிறது. நாங்கள் அதனை ரொட்டி சுடுவதற்காகத்தான் தயார் செய்தோம். ஆனால் அந்த ரொட்டி தற்போது கருகிச் சாம்பராகிப் போயுள்ளது."

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியன்று மேற்கண்ட கருத்தை வெளியிட்ட பிரமுகர் சாதாரணமான ஒருவரல்லர். வணக்கத்துக்குரிய மாதுளுவேவ சோபிததேரரே மனம் நொந்த நிலையில் அவ்விதம் கருத்து வெளியிட்டிருந்தார். மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசை அகற்றி, நியாயமான சமூகமொன்றை உருவாக்கும் முயற்சியில் முன்னின்று பாடுபட்ட சோபிததேரர். தாம் உயிரிழக்கு முன்னர் மைத்திரிபால அரசுக்கு விடுத்த கடைசி அறிவுறுத்தல் இதுவாகும். உண்மையில் மைத்திரிபால சிறிசேன அரசு மற்றெல்லோரது ஆலோசனைகளையும்விட, சோபித தேரரது ஆலோசனைக்கே முன்னுரிமை வழங் கிச் செயற்பட்டிருக்கவேண்டும். மகிந்தவின் தலைமையிலான அரசை அகற்றி, மைத்திரிபால தலைமையிலான அரசைப் பதவியில் அமர்த்த சோபித தேரர் மேற்கொண்ட முயற்சிகள் பெரும் பெறுமதிமிக்கவை.



சேர்.ஜோன் கொத்தலாவ



லீகுவான்யூ

### ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதில் சோபிததேரரது பங்கு முக்கியத்துவமானது

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதிய அரசியல் தலைமைத்துவ மாற்றத்தின் பின்னர், சோபிததேரர் பொது சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐ.தே. கட்சியுடன் உடன்படிக்கையொன்றை மேற்கொண்டார். முக்கிய 14 விடயங்களை உள்ளடக்கி வரையப்பட்ட அந்த உடன்படிக்கையில் கீழ்க் குறிப்பிடப்படும், புனர்நிர்மாணங்களை மேற்கொள்ளல், புதிய நாடாளுமன்றத்தை அரசமைப்பு உருவாக்கல் சபையாக ஆக்கி நடைமுறையிலுள்ள நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழித்து நாடாளுமன்றம் பொறுப்புக்கூறத்தக்க அமைச்சரவை அரசமைப்பொன்றை உருவாக்க முன்னுரிமை வழங்கல், நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நாடாளுமன்றம் உருவாக்கப்பட்ட பின்னர் அரசமைக்கும் அதிகாரத்தைப் பெற்ற கட்சியை மாற்ற இயலாத விதத்திலான சட்டமொன்றை அரசமைப்பு விதிகளில் உள்ளடக்கல் போன்ற முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

குறித்த அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஐ.தே. கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி என்பவை இணைந்து இணக்கப்பாடொன்றை எட்டின. நிறைவேற்று அரச தலைவர் பதவியை ஒழிப்பதென்பது மைத்திரிபால ஏற்றுக் கொண்ட முக்கிய அம்சமாக அமைந்திருந்தது. ஆனால் தற்போது சுதந்திரக் கட்சியோ "மைத்திரிபால அவ்விதம் இணக்கப்பாடொன்றுக்கு ஒப்புக் கொண்டிருந்தாலும், சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு அதுவல்ல" எனத் தெரிவித்துள்ளது. அந்த வகையில் சுதந்திரக் கட்சி ஒரு நிலைப்பாட்டிலும் தாம் மற்றொரு நிலைப்பாட்டிலும், இருப்பதாக மைத்திரியால் உணர இயலாது எனக் கூறிவிட இயலாது.

"எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளும் சகல பிரிவினை முயற்சிகளையும் நான் கடுமையாக எதிர்க்கிறேன்; வெறுக்கிறேன். நான் எனது வாழ்நாள் முழுவதும் பிரிவினைவாதத்துக்கு எதிராகப் போராடி வந்துள்ளேன்; தற்போதும் போராடிவருகின்றேன்; எனது உயிர்பிரியும் நாள் வரை போராடுவேன்" என பிரிவினைவாதத்துக்கு எதிரான கடும் கொள்கை நிலைப்பாட்டைக் கடைக்கொண்டவர் தென்னாபிரிக்காவின் முன்னாள் அரச தலைவர் நெல்சன் மண்டேலா. பல்லாண்டுகள் காலமாக ஐரோப்பாவின் குடியேற்ற நாடாகவிருந்த தென்னாபிரிக்காவில் நிலவிய அடிமைத்தளை நடைமுறைக்கு எதிராகப் போராடிய அவர், இனபேதமற்ற உலகொன்றுக்காகக் கனவு கண்ட பெருமகனாவார்.

### சிங்கப்பூரை உருவாக்கிய சிற்பியின் இலங்கை குறித்த நிலைப்பாடு

"ஒரு இனத்துக்கு இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களென சொந்த இனக்குழுமம், பொதுவான மொழி, பொதுவான கலாசாரம் என்பவை ஆரம்பத்தில் எம்மிடம் இருந்ததில்லை. நாம் தென் சீன, தென்னிந்திய, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் (பாகிஸ்தானிலிருந்து பிரிவதற்கு முன்னர்) இலங்கை மற்றும் தீவுக் கூட்டங்களிலிருந்து வந்து குடியேறிய சமூகங்களைக் கொண்டிருந்தோம். இத்தகைய சகல நாடுகளிலிருந்தும் வந்து குடியேறிய இனத்தவர்களையும் ஒன்றிணைத்து நாட்டை நிர்வகிக்க இயலுமா என்ற சிக்கல் நிலை எம்முன் பூதாகரமாக எழுந்து நின்றது.

மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டவர் சிங்கப்பூரை உருவாக்கிய சிற்பியாகக் கொள்ளப்பட்ட சிங்கப்பூரின்

தலைமை அமைச்சர் பொறுப்பு வகித்த லீகுவான் யூ என்ற பெருமகனாவார். ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமாகவேயன்றி இரண்டு மூன்று பிரிவுகளாக நாட்டைப் பிரித்து அந்த நாட்டை முன்னேற்ற இயலாதெனக் கூறியவர் லீகுவான்யூ. நாட்டில்வாழும்சகலருமேசிங்கப்பூர் பிரஜைகள்தான் என்ற உணர்வை அங்கு வாழ்ந்த பல்வேறு நாட்டவர்கள் மனங்களில் நிலைபெறவைத்து, சிங்கப்பூரின் பல்வேறு இனக்குழுமங்களையும் சிங்கப்பூரின் தேசிய அன்னியோன்ய நிலைப்பாட்டுக்கு ஒன்றிணைத்ததன்மூலம்லீகுவான் யூ சிங்கப்பூரை உலகின் தலைசிறந்த நாடன்றாகக் கட்டியெழுப்புவதில் வெற்றிகண்டவர்.

1948ஆம் ஆண்டளவில் ஆசியப் பிராந்தியத்தில் முன்னேற்றமடைந்த நாடாகத் திகழ்ந்தது ஜப்பானே ஆகும். அதற்கடுத்த இரண்டாவது நிலையில் இலங்கை திகழ்ந்து வந்தது. சிங்கப்பூரைச் சிறந்ததொரு நாடாக உருவாக்கக் கடுமையாக உழைத்த லீ குவான் யூ, இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட வேளை, சிங்கப்பூரைஇலங்கை போன்ற நாடாக ஆக்குவதே தமது கனவாகும் எனத் தெரிவித்திருந்தார். அவ்விதம் தெரிவித்த லீ குவான் யூ, பின்னர் ஒரு காலகட்டத்தில், இத்தகைய எதிர்கால எதிர்பார்ப்பைக் கொண்டிருந்த இலங்கை, சுதந்திரம் பெற்றதன் பின்னர் எத்தகைய விதத்தில் பின்னடைவுக்கு உட்பட்டதென்பதைத் தாம் கண்டு கேட்டு உணர்ந்ததாகக் கூறியிருந்தார். அது இன, மத பேதங்கள் அடிப்படையில் முரண்பாடுகளுக்கு உட்பட்டதனால் ஏற்பட்ட விளைவேயாகும்.

1953ஆம் ஆண்டில் நாட்டில் வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.தே.கட்சி அரசின் தலைமை அமைச்சர் சேர்.ஜோன். கொத்தலாவல, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் நாட்டில் சம அந்தஸ்து வழங்கப்படுமெனக் கூறியமை தென்பகுதியைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. சேர்.ஜோன் சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக எதிர்க்கட்சித் தரப்பினர் குற்றம்சாட்டினர்.

### தலைமை அமைச்சர் சேர் ஜோனுடன் முரண்பட்ட சுதந்திரக் கட்சித் தலைவர்கள்

பௌத்தமதத் துறவிகள் தரப்பினர் சேர்.ஜோனுக்கு எதிராக தீவிர எதிர்ப்பை வெளிக்காட்டியதுடன், பண்டாரநாயக்க மற்றும் பிலிப் குணவர்த்தன போன்ற இனவாத அரசியல்வாதிகள் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தமை போன்று, ஐ.தே. கட்சி அரசுக்கு எதிரான செயற்பாடுகளுக்குத் தூண்டுதல் அளித்து வந்தனர்.

இத்தனைக்கும் தலைமை அமைச்சர் சேர்.ஜோனோ, பௌத்த துறவிகள் எத்தகைய எதிர்ப்பை மேற்கொண்டாலும் நான் என்னுடைய கொள்கையில் இருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். 'அப்படியானால் நாம் சிங்கள மொழியை அரச கரும மொழி ஆக்குவோம்' என 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வேளையில் பண்டாரநாயக்கா தமது தேர்தல் குறித்த கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

மக்கள் அலை பண்டாரநாயக்கவின் நிலைப்பாட்டால் கவரப்பட்டு பண்டாரநாயக்கவுக்கு ஆதரவாகத் திரண்டெழுந்தது. அந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு ஆக எட்டே எட்டுத் தொகுதிகளில் மட்டும் வெற்றி கிட்டியது. சேர்.ஜோனினது கொள்கை நிலைப்பாட்டாலேயே தோல்வி கிட்டியது எனவும், நாட்டின் தேசியப் பாதுகாப்புக் குறித்து அவர் அக்கறை கொள்ளாததனாலேயே அத்தகைய பின்னடைவை ஐ.தே. கட்சி அரசு சந்திக்க நேர்ந்ததெனவும் பலர் அரசுக்கு எதிராக விமர்சனம் முன்வைத்தனர். இவற்றையெல்லாம் ஒருசிறிதுதானும் கணக்கில் எடுக்காத சேர்.ஜோன் கொத்தலாவல, பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியிருந்த பண்டாரநாயக்கவிடம் அரசுப் பொறுப்பை முறைப்படி ஒப்படைத்து விட்டு, தமது கந்தவளைத் தோட்டத்தில் சென்று ஓய்வாகப் பொழுதைக் கழிக்க



நெல்சன் மண்டேலா

முடிவு செய்து அதற்கமையச் செயற்பட்டார். இனவாதத்தைத் தூண்டி அரச அதிகாரத்தைப் பண்டாரநாயக்க கைப்பற்றிக் கொண்டாலும் பாதிக்கப்படப் போவது எந்தத் தரப்பினர் என்பது மிக விரைவில் தெரியவருமெனவும் சேர்.ஜோன் தெரிவித்திருந்தார்.

### தலைமை அமைச்சர் பண்டாரநாயக்க தவறு இழைத்ததாக சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் குற்றச்சாட்டு

காலப்போக்கில் சிங்களத்தை அரசகருமமொழியாக்க பண்டாரநாயக்க தாமதிப்பதாகக் குற்றஞ்சாட்டி அவர் பதவிக்கு வருவதற்கு ஆதரவளித்த பௌத்த துறவிகள் உட்பட்ட இனவாதத்தரப்பினர் பண்டாரநாயக்கவுக்குப் பலவழிகளில் இடையூறுகளை ஏற்படுத்த ஆரம்பித்தனர். காலப்போக்கில் அத்தகைய எதிர்ப்புணர்வு தீவிரமடைந்து கடைசியில் பண்டாரநாயக்க பௌத்த துறவியொருவரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட நேர்ந்தது.

பண்டாரநாயக்கவின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தச் சென்ற சேர் ஜோன் கொத்தலாவல, "இவ்வாறு நடக்கக்கூடுமென நான் எதிர்பார்த்தேன். நான் கட்டி வைத்திருந்த நாய்களை பண்டாரநாயக்க அவிழ்த்து விட்டிருந்தார். அவைகள் பண்டாரநாயக்கவையே கடித்துக் குதறிவிட்டன" எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

சேர் ஜோன் இனவாதிகளையே அவ்விதம் விமர்சித்திருந்தார். அந்த வகையில் அவர் இனவாதப் போக்கில் ஒருபோதும் செயற்படவில்லை. இன்றைய மைத்திரி - ரணில் கூட்டு அரசும்கூட நடுநிலைப் போக்கில், மிதவாதப் போக்கில் செயற்படுகிறது என்றே இன்று கடும் கோட்பாட்டாளர்கள் தரப்பால் விமர்சிக்கப்படுகிறது.

சேர் ஜோன் தலைமை அமைச்சராகச் செயற்பட்ட வேளையில் நாடுகுறித்து அக்கறை காட்டாத தலைவரென எதிர்கட்சியினர் அவரை விமர்சித்து வந்தனர். ஆனால் ஒன்றரை வருடங்கள் வரைமட்டுமே தலைமை அமைச்சராகப் பதவி வகித்த சேர். ஜோன், தனது பதவிக் காலத்தில் முதன்முதலாக இலங்கைப் பிரஜையான சேர் ஒலிவர் குணதிலகவை தேசாதிபதியாக நியமித்து இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய சகாப்தம் ஒன்றை ஏற்படுத்தினார். நாட்டின் சகல சுதந்திரதினக் கொண்டாட்டங்களின்போதும் இலங்கைத் தேசிய கொடியுடன் பிரிட்டன் கொடியையும் ஏற்றிவைக்கும் நடைமுறையை முதன்முதலில் கைவிட்டு நாட்டின் தேசியக் கொடியை மட்டுமே ஏற்றிவைக்கும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் சேர் ஜோனே. அது மட்டுமன்றி, இலங்கைக்கு ஐ.நா. சபையின் உறுப்புரிமையை முதன் முதலில் பெற்றுக் கொடுத்தவரும் சேர் ஜோன் கொத்தலாவலவே. அந்த வகையில் சேர் ஜோன் இலங்கையின் தலைமை அமைச்சராகச் செயற்பட்ட குறுகிய காலம், இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது.

இன்றைய கூட்டாட்சி அரசின் மீதும்கூட, கூட்டு எதிரணியினர் சிங்கள இனம் குறித்து அரசு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுவதில்லை என்று குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் எவ்வாறு மனம் போனபடியெல்லாம் செயற்பட்டார்கள் என்பது குறித்து சிந்தித்துப் பார்க்க அவர்கள் தவறியுள்ளனர்.

தாம் உயிரிழப்பதற்கு முன்னர் கூட்டு ஆட்சித் தரப்பினருக்கும், எதிரணித்தரப்பினருக்கும்சேர்த்து வேண்டுகோளொன்றை விடுத்த காலஞ்சென்ற சோபித தேரர், கட்சிகளது கொள்கை நிலைப்பாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டுச் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி புதிய அரசமைப்பொன்றை உருவாக்குமாறு கோரியிருந்தார். நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழித்துக் கட்டி நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லுமாறு கோரியிருந்தார்.

சோபித தேரரது மேற்குறித்த கோரிக்கையை மறந்துபோய் விட்ட தரப்பினர்கள், மீண்டும் அதனை நினைவுபடுத்திப் பார்த்தல் இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.



## ஆசிரியருக்கான கடிதம்

### விழுங்கப்பட்டு விட்ட வடிகால்கள்

வடிகால் அமைப்பு முறைமை சீரின்மையே வடக்கு மாகாணத்தில் வெள்ளம் காரணமான நெல் அழிவுக்குக் காரணம் என்ற யதார்த்த உண்மையை வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் சுட்டிக்காட்டி யுள்ளதாக சில நாள்களுக்கு முன்னர் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. அவருடைய கூற்று நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் கடந்த பல ஆண்டுகளாக சில்லாலை தும்பளப்பாய் நெல் வயல் வெளியில் நெல் பயிரிட்டு வருகிறேன். சுமார் அறுபது வருடங்களுக்கு முன் குறித்த இந்த வயல்வெளியில் இருந்த சில வாய்க்கால்கள் இன்று இருந்த இடம் தெரியாது (காணி உறுதிகளில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன) விழுங்கப்பட்டுள்ளன. குறித்த இந்த வெளியில் ஒரு பெரிய குளமும், 4 சிறிய குளங்களும் என ஆகமொத்தம் ஐந்து குளங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பெரிய குளத்துக்கான வாய்க்காலுடன் வட்டக்குளம், வண்ணான் குளம், ஆராய்ச்சி குளம் ஆகிய மூன்று குளங்களையும் இணைக்கும் நீண்ட வாய்க்கால் இதற்கு முன்னர் பாவனையில் இருந்து வந்துள்ளது.

வயல்களிலுள்ள மேலதிக நீர் சிறிய குளங்களது வாய்க்கால்கள் மூலம் பெரிய குளத்தை (தும்பளப்பாய்குளம்) அடைந்து, மேலதிக நீர் கடலுடன் கலக்கும் பொறிமுறை முன்னர் இருந்து வந்தது. இப்போது இந்தச் சிறு வாய்க்கால்களை எல்லைக் காணி உரிமையாளர்கள் விழுங்கிவிட்டனர். (தங்கள் நிலத்துடன் சேர்த்துவிட்டனர்) இதனால் இந்தக் குளங்கள் தனித்தனிக் குளங்களாக நீரைக் கடத்த முடியாத நிலையில் உள்ளன. இந்தப் பகுதி வெள்ளத்தை பள்ள வயல்களுக்கு வெட்டிக் கடத்துவதால் இந்தவெளியின் வடக்குப் பகுதியிலுள்ள பெருமளவுபள்ளக்காணிகளில் நெற்பயிர்கள் வெள்ளத்தால் முற்றாக அழிந்து நாசமடைகின்றன.

எனவே குறித்த இந்த வாய்க்கால்களை மீளப்புரனமைத்து சிறு குளங்களில் மழைகாலங்களில் நிறையும் மேலதிக நீரை இந்த வாய்க்கால்கள் மூலம் கடத்தவதற்கு நடவடிக்கை எடுத்தால், இந்த வெளியின் வடக்குப் பக்கத்திலுள்ள பெருமளவு காணிகளின் நெற்பயிர்களை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயம் குறித்துக் உரிய நடவடிக்கை மேற்கொள்வார்களா?


ஆ.த.குணத்திலகம்,

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்

# நித்திய சுகம் 344

உடலே கோயில்



# உடற்பருமன்

## உடல் ஆரோக்கியம் பேணும் கணியம்

உடற் பருமன் என்பது, "உடலின் உயரம் மற்றும் வயது என்பவற்றுக்கிடையேயான தொடர்பில் அதிகரித்த கொழுப்புச்சத்து அசாதாரணமாக தேங்கி நிறை அதிகரிப்பை ஏற்படுத்தல்" என பொருள் கொள்ளப்படுகிறது. எமது நாளாந்த செயற்பாடுகளில் தேவையான அளவு கலோரிப் பெறுமானத்துக்கு அதிகமான உணவுப்பதார்த்தங்கள் அதாவது,காபோவைதரேற்று ஈரலிலும்,தசைக்கலங்களிலும் சேகரிக்கப்படுகிறது. இதே போல கொழுப்பு தோலின் அடிப்பகுதியிலும்,உள் அவயங்களைச் சுற்றியும், குருதிக்குழாய்களிலும் படிவுறுகின்றது.

**உடற்திணிவுச் சுட்டெண்**

பன்னாட்டு ரீதியாக ஒருவரின் பால், வயது, உயரம் என்பவற்றின் அடிப்படையில் உடற் திணிவுச் சுட்டெண் காணப்படுகிறது. ஒவ்வொரு தனிநபரும் இதனை அறிந்து வைத்திருப்பதன் மூலம் தமது உடற்பருமன் அதிகரிப்பையும் அதனை ஆரம்பத்திலேயே தடுக்கக் கூடிய வழிவகைகளையும் மேற்கொள்ளலாம். உடற் திணிவுச் சுட்டெண் ஆனது உடல் நிறையை கிலோகிராமில் (kg) உயரத்தின் வர்க்கத்தினால் (m2) வகுப்பதன் மூலம் பெறப்படுகிறது.

இதன் அடிப்படையில் உடற் திணிவுச் சுட்டெண் (BMI) 18 இலும் குறைவாக காணப்படின், குறைந்த உடல் நிறையுடையவர்களாக கருதப்படுவர். இது மருத்துவ ரீதியாக விரும்பத்தக்கது அல்ல. இவர்கள் வைத்திய ஆலோசனை மற்றும் உணவுப் போசணை மீது ஆர்வம் செலுத்தி,உடற்பருமனை சரியாக பேணவேண்டும். இதே போன்று உடற்திணிவுச் சுட்டெண் (BMI) 23 இலும் அதிகமாக காணப்படின் அதிகரித்த உடற்பருமனாக கருதப்படும். 27 இலும் அதிகமாக உடற்திணிவுச் சுட்டெண் காணப்படுவது மருத்துவ ஆலோசனை பெறுவதற்குரிய அறிகுறியே. கண்டிப்பாக உடற்பருமனைக் குறைப்பதற்குரிய வழிவகைகளை பின்பற்ற வேண்டும்.

**உடற் பருமன் அதிகரிப்பதற்கான காரணம்**

போதுமான அளவு உடற்பயிற்சி இன்மை, தவறான உணவுப்பழக்க வழக்கம், மன அழுத்தம்,சில மருந்துகளின் பாவனை, பரம்பரைக் காரணங்கள் மற்றும் உடல் ரீதியான ஓமோன் செயற்பாடுகளினாலும் உடற் பருமன் அதிகரிக்கலாம். அதில் தைரொக்சின், வளர்ச்சி ஓமோன் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வாறான உடற்பருமன் அதிகரிப்பானது, பல்வேறு பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. அந்த வகையிலே என்பு,மூட்டு நோய்கள் குறிப்பாக உடற்பருமனை தாங்குகின்ற முழங்கால், குதிக்கால் மூட்டுக்களில் தாக்கங்கள் மற்றும் வலிபோன்றன ஏற்படலாம். மூச்சு விடுதலில் சிரமம், குருதிக்கலன்களிலும் உள் அங்கங்களிலும் கொழுப்புப் படியுறுவதால் குருதி அமுக்கம் அதிகரித்தல், பெண்களைப் பொறுத்தவரை மார்பகம் மற்றும் கருப்பை போன்றவற்றில் கொழுப்பு படியுறுவதால் பிள்ளைப்பேறு தொடர்பான பிரச்சினைகளையும் ஏற்படுத்தலாம். மேலும் நரம்புகளுக்கான குருதிவிநியோகம் தடைப்படுவதால் கைகால் விறைப்பு ஏற்படலாம். இதய நோய், உயர் குருதி அமுக்கம் போன்ற நீண்டநாள் நோய் நிலைகளுக்கும் இட்டுச் செல்லக்கூடும். பித்தப்பையில் கற்கள் உருவாகுதல், மன உளைச்சல்,சமூக ஒதுக்கம் போன்ற நிலைக்கும் இட்டுச் செல்லக்கூடும்.

**உணவுக் கட்டுப்பாடு**

இத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய உடற்பருமன் அதிகரிப்பினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க நாளாந்த செயற்பாடுகளை மாற்றியமைத்தல் மிக முக்கியமான செயற்பாடு. அந்த வகையில் எமது உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது மிக அவசியமாகும். மாப்பொருள், இனிப்பு,கொழுப்பு சேர்ந்த உணவுப் பொருள்கள் உட்கொள்வதை குறைத்தல் அல்லது தவிர்த்தல் விரும்பத்தக்கது. உதாரணமாக ஆட்டிறைச்சி,மாட்டிறைச்சி,வெண்ணெய், ஐஸ்கிறீம், கிழங்கு வகைகள்,எண்ணைப்பண்டங்கள் இனிப்பு உணவுகளைத் தவிர்த்தல் நன்று.

மேலும் தினமும் 30 நிமிடத்துக்கு குறையாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பருமனானவர்கள் தினமும் 60 நிமிடம் வரை உடற்பயிற்சி செய்யவேண்டும். வீட்டு வேலைகளில் ஈடுபடுதல், வேகமாக கைகளை வீசி நடத்தல் போன்றனவும் இதனுள் அடங்கும். உடற்பயிற்சி மனதுக்கும் உடலுக்கும் நன்மை பயக்கும்.

தானிய உணவு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு நேர உணவாக உட்கொள்ளலாம். மேலும் உணவில் கீரைவகைகள், இலைக்கறிவகைகள்,மரக்கறிவகைகள் சேர்த்துக் கொள்வது கொழுப்புச் சத்து அதிகரிப்பை குறைக்கும். மேலும் தினமும் சீரான மலங்கழிக்கும் பழக்கத்தை கொண்டிருத்தல் நல்லது. இது உடற்பருமன் அதிகரிப்பில் தாக்கத்தை நேரடியாக செலுத்தாவிட்டாலும் உணவுக் கால்வாய்த்தொகுதியை சீராக பேணுவதன் மூலம் சமிபாட்டை அதிகரிப்பதோடு,பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ளலாம். தியானம், சிறந்த பொழுது போக்கு குடும்ப உறுப்பினர்களிடையேயான ஊடாட்டம் போன்றனவும் உடற் பருமனில் தாக்கம் செலுத்தும்.

வாழைப்பழம்,அப்பிள்,மாதுளம் பழம் என்பன உட்கொள்வதால் தேவையான போசணைப் பெறுமானம் கிடைப்பதோடு மேலதிகமான கொழுப்பு,காபோவைதரேற்று என்பன கழிக்கப்படும். வெண்ணெய் அகற்றிய மோர் அருந்துவது நல்லது. மேலும் உணவு உட்கொள்ளும் போது அவசரப்பட்டு உட்கொள்வது நல்லதல்ல. குறைந்த பட்சம் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் ஒதுக்கி ருசித்து நன்றாக மென்று சாப்பிடுவது உடல் நலத்துக்கு நல்லது. தொலைக்காட்சி பார்த்தபடி உணவு உட்கொள்வதால் உடற்பருமன் அதிகரிப்பதாக ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**ஆரோக்கியமாக வாழ்வோம்**

உணவு உட்கொண்ட பின் நடத்தல் போன்ற சிறியளவு அப்பியாசம் செய்தல் நல்லது. இரவில் அதிகளவு உணவு உட்கொள்வதை தவிர்த்தல் நல்லது. இரவிலேயே கொழுப்பு உற்பத்தி அதிகமாக இடம்பெறுவது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. எனவே அதற்கு இடம் தராமல் எமது உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி சிறப்புடன் வாழ்வோம். ஆரோக்கியமான வாழ்வுதனை வாழ்வோம். அதிகரித்த உடற்பருமன் உடையோர் மருத்துவ ஆலோசனைப்படி வைத்தியரின் சிபாரிசின்படி தேவையேற்படின் உடற்பருமனைக் குறைப்பதற்கு மருந்துகளையும் உள்ளெடுக்க வேண்டியிருக்கும்.

பத்மராசா பத்மநிரூபன்
தாதிய உத்தியோகத்தர், சத்திரசிகிச்சைப்பிரிவு,
யாழ் போதன வைத்தியசாலை.

**கேள்வி பதில்**

## நோய் தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்

**கேள்வி : எனது மகனின் வயது 9 ஆகும். எனது மகனின் உயரம் வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. இது பற்றி ஆலோசனை வழங்கவும்...?**

**பதில் :** ஒருவரின் உயரமானது பெற்றொரின் உயரம், உள்ளெடுக்கும் போசணையின் அளவு போன்ற பல காரணங்களில் தங்கியுள்ளது. நீண்டகாலமாக சிறு பிள்ளையொருவர் உள்ளெடுக்கும் உணவு குறைவாக இருக்கம் போது (chronic malnutrition) அவரது உயரமும் உடல் நிறையும் சாதரண அளவை விடக் குறைவாக இருக்க நேரிடுகிறது.

இவ்வாறு உயரம் தொடர்பான பிரச்சினையுள்ள சிறுவர்கள் வைத்திய ஆலோசனையை விரைவாகப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். நோய்கள் தொடர்பான வினாக்கள் மற்றும் உடற்பரிசோதனை (History taking and examination) மூலம் உயரம் குறைவாக இருப்பதற்கான காரணத்தை வைத்தியரினால் ஊகித்துக் கொள்ள முடியும்.

பெற்றோருடைய உயரத்தை அளவிட்டு அதன் மூலம் சராசரியான பெற்றோரின் உயரக் கணிப்பின் மூலம் (mid parental geight) குறித்த சிறுவன் அல்லது சிறுமியின் உயரத்தில் பிரச்சினை இருக்கிறதா இல்லையா எனக் கண்டறிய முடியும்.

இவ்வாறு உயரக் குறைபாடு இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து கொண்டால் அதற்கான சிகிச்சையை வழங்குவதன் மூலம் குறைபாடுள்ள சிறுவர்கள் சாதரண உயரத்தை அடையக் கூடியதாக இருக்கும். உயர வளர்ச்சி ஓமோன் (Growth homone) குறைபாடு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் அதனை நிவர்த்தி செய்யும் விதத்தில் உயர வளர்ச்சி ஓமோனை வழங்குவதன் மூலம் குறைபாடுள்ள சிறுவர்கள் எதிர்காலத்தில் சாதரண உயரத்தினை அடையக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான குறைபாட்டினை எவ்வளவு சிறுவயதில் இனங்காணுகின்றோமோ அதற்கேற்ப தரமான சிகிச்சையை வழங்கக்கூடியதாக இருக்கும். வடக்கு,கிழக்கு மாகணங்களிலேயே முதற் தடவையாக உய்ர வளர்ச்சி ஓமோன் (Growth hormone) சிகிச்சை வசதியானது யாழ் போதன வைத்தியசாலையில் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது எமது மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

மருத்துவர் எம். அரவிந்தன்
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி,
சிறப்பு மருத்துவ நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு அம்சம் 19.11.2017




# சைட்டமும் சிக்கல்களும்

கட்டுரை

சி.சந்திரகலா

கடந்த ஒன்பது மாதங்களாக இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள மருத்துவபீட மாணவர்கள், ஒருவர் விடாது தமது கற்கையைப் புறக்கணித்து வருகின்றனர். இத்தனைக்கும் காரணம் 'சைட்டம்' எனும் தனியார் மருத்துவக் கல்லூரியே. 2008ஆம் ஆண்டு மருத்துவர் நெவில் பெர்னாண்டோ என்பவரால் 'சைட்டம்' ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் 'ரெறிற்ரறி' கல்வித் தகைமைப் பட்டத்தை வழங்குவதாகும்.

வைத்தியத்துறை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம், ஊடகத்துறை சார்ந்து இது பாடவிதானங்களை மேற்கொள்கின்றது. இதற்கான பட்டங்களை ரஷ்யா, தாய்லாந்து நாடுகளின் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து வழங்குவது சைட்டத்தின் பணி. மேற்படி பட்டப்படிப்புக்களையும் அவற்றுக்கான பட்டங்களையும் இலங்கையர்களுக்கு வழங்குவதற்கான அனுமதியை 2013ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது. இதற்கான ஏனைய சட்டபூர்வ அனுமதிகளையும் உரிய முறையில் பெற்றே இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனியார் பல்கலைக்கழகத்தை மூடவேண்டுமென அனைத்துப்பல்கலைக்கழ மாணவர் ஒன்றியம், அரசவைத்தியர்கள் சம்மேளனம் ஆகியன எதிர்த்து வருகின்றன. ஆனால், இலகுவில் இதை மூடிவிட முடியாது. இதனால் இன்று வரைக்கும் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் கற்கை தடைப்பட்டிருக்கின்றது.

சைட்டத்துக்கான எதிர்ப்பால் கடந்த 9 மாதங்களாகப் பல்கலைக்கழகங்களின் மருத்துவபீடங்கள் இயங்காதிருக்கின்றன. இந்தப் பிரச்சினையை அரசு முடிவுக்குக் கொண்டுவருவதாக இல்லை. சைட்டத்தை மூடுவதற்கு மாணவர்களால் எடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை வன்முறைகளைக் கையாண்டு அரசு அடக்கி வருகிறது. அதேவேளை, வைத்திய பீட மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை வைத்தியர்களாகப் பார்த்துவிட ஆசைப்படுவதும் நீண்டு கொண்டே போகின்றது. அதற்காக உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் அவர்கள் முன்னெடுத்திருந்தனர். பின்னர் அதைத் தற்காலிகமாகக் கைவிட்டிருக்கின்றனர்.

**சைட்டம் வழங்கும் வரப்பிரசாதம்**

வருடாந்தம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3இலட்சம் மாணவர்கள் முகம் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட அதில் மூன்றிலொரு பங்கினரே பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதிபெறுகின்றனர். அதிலும் அரச பல்கலைக்கழகங்களில் 26ஆயிரம் பேர் மட்டுமே சேர்ந்து கல்வி கற்கும் வசதி உள்ளது. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்கும் ஆற்றல் அரச பல்கலைக்கழகங்களுக்கு இல்லை. இந்த நிலையிலேயே பணத்தைச் செலவிட்டுத் தமது பட்டத்தைப் பெற ஏனைய மாணவர்கள் முயற்சிக்கின்றனர். இந்தக் கல்வியைத் தொடர்வதற்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களுக்குச் செல்வதற்குப் பெருந்தொகைப்பணம் செலவிடவேண்டி உள்ளது. ஆனால் குறைந்த செலவுடன் உள்நாட்டில் பட்டம்பெறும் வாய்ப்பை வழங்குவதாகச் சைட்டம் திகழ்கிறது.

**வைத்தியபீட மாணவர்கள் ஏன் எதிர்க்கின்றனர்?**

தற்போதுள்ள நிலையில் மருத்துவப் பரீட்சையில் சித்தியடைந்துவிட்டால், இலகுவாக வேலைக்குச் சேர்ந்துவிட முடியும். வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு இலங்கைக்கு வரும் மாணவர்கள் இலங்கையில் கடமையாற்றுவதாயின் பிரத்தியேகமாக பீ.ரி.ஐ.எம். என்ற பரீட்சை ஒன்றை எழுதவேண்டி உள்ளது. இவர்களில் 10வீதமானவர்களே இங்குள்ள அந்தத் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைகின்றனர். இந்த மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புக்களை எடுக்கின்ற பேராசிரியர்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 2ஆயிரம் ரூபா வழங்கவேண்டியிருக்கின்றது. இதனால் சைட்டத்தின் கல்வி தொடர்ந்தால், இந்த நிலை தொடரும். சைட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இந்தத் தடைதாண்டல் பரீட்சை இல்லாதிருப்பதால் அவர்கள் பட்டப்படிப்பை முடித்ததும் வேலையைப் பெற்றுவிடுகிறார்கள். இதனாலேயே அரசின் இலவசக் கல்வியைப் பெறும் மாணவர்களும் வெளிநாட்டில் கற்கையைப் பூர்த்தி செய்த மாணவர்களும் அரச மருத்துவர்களும் சைட்டத்தை எதிர்க்கின்றனர்.

ஆயிரம் வரையான இலங்கை மாணவர்கள் வருடாந்தம் வெளிநாட்டுத் தனியார் பல்கலைக்கழகங்களை நாடிச் செல்கின்றனர். குறிப்பாக ஆஸ்திரேலியாவில் மருத்துவக் கல்வியைப்பெற வருடாந்தம் 35ஆயிரம் டொலர்கள் வரைச் செலவிடுகின்றனர்.

ஆனால், உள்நாட்டில், சைட்டத்தில் கல்வி கற்பவர்கள் மிகக் குறைந்த செலவில் மருத்துவராகிவிடுகிறார்கள். இலங்கையில் தற்போதுள்ள கல்வி முறையில் பாலர் பாடசாலைக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரைக்கும் தனியார் கல்வியே பெரும்பகுதியாகப் புகட் டப்பட்டு வருகிறது. அதில் ஓர் அம்சமாகிவிட்ட பல்கலைக்கழகப் படிப்பு விடயத்தில் மட்டும் தனியார் பல்கலைக்கழகப் படிப்புத் தேவையில்லை என்கின்றனர் இவர்கள்.




> உணர்ச்சிவசப்படுவதாலும், எதிர்ப்புக்களைக் காண்பிப்பதாலும் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இவற்றுக்கு மாறாகச் சைட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்ற குறைபாடுகள் நீக்கப் பட்ட சிறந்த கட்டமைப்புடன் மீண்டும் பல தனியார் பல்கலைக்கழகங்கள் முளைக்கவே செய்யும். ஆகவே சைட்டத்துக்கு மாத்திரமல்ல தனியார் துறைகள், வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்துக்கும் எதிராக அனைவரும் போராட வேண்டும்

**கூட்டாட்சிக்குள் ஆதரவு**

1977ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். அடுத்தகட்டமாக 1980ஆம் ஆண்டில் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்களை உருவாக்க முனைந்தார். அது விடயத்தில் ஏற்பட்ட கடுமையான எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால், 2013ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் அது நடைமுறைக்கு வந்தது.

தனியார் துறையினருக்கு முக்கியத்துவம் வழங்கும் தலைவராக இப்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருவதால், மகிந்த ஆட்சிக்காலத்து விடயங்கள் அனைத்தும் பிழையென அடித்துக்கூறும் கூட்டாட்சி அரசு சைட்டம் விடயத்தில் அவ்வாறு நடந்துகொள்வத்ற்குத் தயங்குகிறது.

அரச பல்கலைக்கழகங்களில் இலவசக் கல்வி என்று குறிப்பிட்டபோதிலும் பல மில்லியன் ரூபாக்களை மக்களின் வரிப் பணத்திலிருந்து பெற்றே ஒவ்வொரு மாணவனுக்கும் செலவிடப்படுகிறது. இந்தத் தொகையானது சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்விக்காக ஒரு மாணவன் செலவிடும் தொகையைவிட அதிகமானதாகும். நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குச் சென்று மருத்துவக் கல்வியை முடிப்பதற்கு 28மில்லியன் ரூபா செலவாகிறது. இதனால் அந்த நாட்டுக்கே வருமானம் அதிகரிக்கிறது. அதை உள்நாட்டில் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அந்த அந்நியச் செலாவணியைச் சேமிக்க முடியும் என்பது அரசின் ஒரு நோக்கமாக உள்ளது. இலங்கை அரசுக்குக் கடன் தொல்லை அதிகமாக இருப்பதால் தனியார் துறையை ஊக்குவிப்பதன் மூலம் கடன்தொல்லையிலிருந்து மீள முடியும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

**இன்னும் பல தனியார்களை உள்ளிழுக்கத் திட்டம்**

இந்தியாவில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஏராளம் உள்ளன. பல மாநிலங்களில் குறிப்பிட்ட ஒரு சாதிக்காரர் வைத்தியராக வரவேண்டும் என்பதற்காக அந்தச் சாதியில் உள்ள பெரிய முதலீட்டாளர்கள் இத்தகைய பல்கலைக்கழகங்களை உருவாக்கித் தமது இனத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தும் ஏனைய மாணவர்களுக்கு அல்லது சாதியினருக்கு குறைந்தளவு இட ஒதுக்கீடு வழங்கும் நிலையும் உள்ளது. இலங்கை அரசைப் பொறுத்தவரையில் சைட்டம் பல்கலைக்கழகத்தைப் பதிவு செய்ததில் மகிந்த அரசு விட்ட தவறுகளை மே[illegible]படுத்திப் புதிய தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் திட்டமும் இல்லாமல் இல்லை.

**மக்களுக்குச் சேவை செய்ய இவர்கள் முன்வருவார்களா?**

இதுவரை சைட்டத்துக்கு எதிராகப் போராடுபவர்கள் இலங்கை அரசின் இலவசக் கல்வியைப் பெறுவோரும், மருத்துவர் சங்கமுமே தவிர சாதாரண மக்கள் அல்லர். இவர்களும் இவர்கள் சார்ந்தவர்களும்; சைட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதைவிட, சைட்டம்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் பட்சத்தில் தான் நாட்டை விருத்திசெய்ய முடியும். இப்போது போராடும் பெற்றோர் யாரும் தமது பிள்ளைகள் இலவசமாக மருத்துவப் படிப்பைமுடித்ததன் பின் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்ல மாட்டார்கள் என்றோ, மக்களின் வரிப்பணத்தில் படிப்பதால் மக்களுக்கு இலவச சேவை செய்வதே அவர்களின் நோக்கம் என்றோ கூறவில்லை.

அரசைப் பொறுத்தவரை தனியார் பல்கலைக்கழகம், அரச பல்கலைக்கழகம் ஆகிய இரண்டிலும் பட்டம் பெறுபவர்கள் தனிய்யார் துறையை நோக்கியே அதிக ஈடுபாடு காட்டுவதால், அரசும் அவர்களை அதைநோக்கித் தள்ளிவிடுவதில் பின்நிற்கப் போவதில்லை.

**தனியார் பரவலடையும் வாய்ப்பு**

வடமாகாணத்தை எடுத்துக்கொண்டால் ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையினர் பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும் தமது பிள்ளைகளைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் 1 ஏ.பி பாடசாலைகள் சில தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மிக நீண்டகாலமாக இவற்றில் மாற்றம் செய்யப்படாமலும், புதிதாக உருவாக்காமலும் மட்டுப்படுத்தி வைத்திருப்பது நாம் கூர்ந்து அவதானிக்காத விடயம்.

மட்டுப்படுத்தப்பட்ட இவற்றால் பாதிக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத பண வசதியுள்ள மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் தமது பட்டப்படிப்பை நிறைவேற்றிக்கொள்ள முற்படுவார்கள். இதனால் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்களின் பெற்றோர் தனியார் பல்கலைக்கழகங்களை வரவேற்பர். தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குகின்ற முதலீட்டாளர்கள் அங்கு கற்றுத் தேறுகின்ற மாணவர்கள் பணியாற்றுவதற்காக அதிநவீன தனியார் வைத்தியசாலைகளையும் நிறுவுவர். இவற்றில் தமது பல்கலைக்கழகத்தில் படித்து தேறிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவர். இதன்மூலம் அரச பல்கலைக்கழகங்களில் இலவசக் கல்வியைப் பெறுகின்ற மாணவர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிந்து அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பை இழப்பர். சமூகத்தில் வைத்தியர்களுக்கு இதுவரை இருந்து வரும் அந்தஸ்து குறைவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும். எல்லோரும் வைத்தியர்கள்தானே என்ற நிலை மிகச் சாதாரணமாக ஏற்பட்டுவிடும்.

**மக்கள் போராட வேண்டும்**

மொறட்டுவ, வயம்ப, சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல் பாட நெறிகளை ஆரம்பிப்பதற்கு 2018ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதிக மாணவர்களை உள்வாங்குவதற்காக 3ஆயிரத்து 500மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் இலவசப் பட்டப்படிப்பை பெறும் வாய்ப்பு நாடு தழுவிய ரீதியில் இன்னும் பலருக்குக் கிடைக்கவுள்ளது. தனியார் பல்கலைக்கழங்களில் படிப்பவர்களின் கல்வி தரமில்லை அவர்கள் மக்களைக் கொன்றுவிடுவார்கள் என்ற கருத்துக்கள் தற்போது உண்டு. ஆனால், தற்போது இலங்கையிலிருக்கும் பிரபல்யமான வைத்திய நிபுணர்களில் பலர் தனியார் பல்கலைக்கழகங்களில் வெளிநாடுகளில் கல்வி கற்றவர்களே.

தற்போதுள்ள தனியார் மயமாக்கலில் தனியார் பல்கலைக்கழகங்களும் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக மாறிவிடும். இதனால், உணர்ச்சிவசப்படுவதாலும், எதிர்ப்புக்களைக் காண்பிப்பதாலும் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இவற்றுக்கு மாறாகச் சைட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்ற குறைபாடுகள் நீக்கப்பட்ட சிறந்த கட்டமைப்புடன் மீண்டும் பல தனியார் பல்கலைக்கழகங்கள் முளைக்கவே செய்யும். ஆகவே சைட்டத்துக்கு மாத்திரமல்ல தனியார் துறைகள், வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்துக்கும் எதிராக அனைவரும் போராட வேண்டும். அத்துடன் இன்று போராடும் மருத்துவர்களும் இலவச மருத்துவம் தவிர்த்துத் தனியாரை நடாமலிருக்க வழிவகை செய்ய வேண்டும்.



# சின்னதா ஓர் அரட்டை

அலசல்

மேரிகிரேஸ் வரதராஜன்



## பெற்றோலில் கொஞ்சம் நல்லாட்சி

மகிந்த ஆட்சியிலென்றால் பெற்றோலுக்கு இப்படி ஒரு தட்டுப்பாடு வந்திருக்குமா? எப்படி வரும் தரமற்ற எரிபொருள் என்றாலும் பரவாயில்லை என்று மகிந்த 'அப்பாச்சி' எண்ணை நிறுவனத்திடமிருந்து கொமிசனை வாங்கிட்டு நாடு எப்படி ஆனாலும் பரவாயில்லை என்று கப்பலிலிருந்து எரிபொருளை இறக்கியிருப்பார். தட்டுப்பாடே வந்திருக்காது.

ஆனால் என்னை வீட்டுக்கு அனுப்பினாலும் பரவாயில்லை நான் அமைச்சராக இருக்கும் வரை கப்பலிலிருக்கும் தரமற்ற எரிபொருளை நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டேன் என்றுரைத்திருக்கிறார்.


அமைச்சர் அர்ஜீன ரணதுங்க. நாடா? மக்களா? கொமிசனா? எது முக்கியம்.

*"பரவாயில்லை நல்லாட்சி எண்டு சொல்லுறதிலை கொஞ்சம் நல்லதும் இருக்கத்தான் செய்யுது''*

## கமலும் கவனமும்

"நடிகர் கமல்ஹாசன் அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவருவார்" என்று கூறியிருக்கிறார் நடிகை கஸ்தூரி. "அவர் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வாறது இருக்கட்டும், உன்னிலை மாற்றத்தைக் கொண்டுவராமல் பாத்துக்கொள்ளம்மா" என்கின்றனர் முகநூல் அரட்டையர்கள் பலர்.

அத்தோடு "இப்ப கௌதமியும் வீட்டிலை கமல் இல்லையாம்" எண்டைதையும் புதினமாயச் சொல்லி அரட்டை அடிக்குதுகள். "மக்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ளக் கமல் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார்" என்ற ஒரு செய்தியும் முகநூலில் வைரலாகியிருந்தது. இதற்குப் பதில் இப்படியிருந்தது. "தமிழ்நாட்டிலை 63 வருசமா இருந்தும், மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கெண்டே தெரியாமல் தான் அரசியலுக்கு வரப்போறீரா ஆண்டவரே.?" என்று.



## ஊழல் இந்தியா



"சசிகலா குடும்பச் சொத்துக்களைப் பற்றி ஆராய்வதற்கு ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டார்கள்" என்று அறியக்கிடைத்ததும் முகநூலில் பலரும் கருணாநிதி பக்கம் தமது பார்வையைத் திருப்பி விட்டுள்ளனர்.

"இதுக்கே இவ்வளவு ஆள்கள் தேவைப்பட்டால், தமிழ்நாட்டையே ஆ .டையப்போட்ட கருணாநிதியின் வீட்டை ஆராய்ச் [illegible] பண்ண இந்தியாவிலுள்ள அதிகாரிகள் போது [illegible]? என்ன? அமெரிக்காவிலும் இவங்கள் ஆ[illegible] எடுக்கவேண்டி வரும் பாருங்கோ" இது நம்மவர்கள் சிலரின் நையாண்டி...

## பெற்றோல் தட்டுப்பாடு காரணம் என்ன?

உலகில் பெற்றோலிய உற்பத்தி நாடுகள் தாராளமாகப் பெற்றோலை உற்பத்தி செய்கின்றன. அவற்றின் உற்பத்தியில் எந்தவொரு தடங்கலும் ஏற்படவில்லை. ஆனால், இலங்கையில் திடீரெனப் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இல்லை... இல்லை... ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்குரிய பெற்றோலை விநியோகப்பதில் 40சதவிகிதத்தை இந்திய நிறுவனமான எல்.ஐ. ஓ.சியிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த நிறுவனமானது தரம் குறைந்த பெற்றோலைக் கொண்டு வந்திருக்கிறது. அதனால், அதை இறக்குவதற்கு அனுமதிக்கவில்லை.

தரம்குறைந்த பெற்றோல் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டால் அது வாகனங்களைப் பாதிக்கும் என்பதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே ஒருமுறை இதுபோல தரம்குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்து, இந்த இந்திய நிறுவனம் நாடு முழுவதுமாக அதை விநியோகித்திருக்கிறது. இது காரணமாகச் சில வாகன உரிமையாளர்களுக்கு நஷ்டஈடும் வழங்கியிருக்கிறது.

அது தடுக்கப்படும் என்று தெரிந்தும் இப்போது மீண்டும் தரம் குறைந்த பெற்றோலைக் கொண்டுவந்திருக்கிறது. வேண்டுமென்றே பெற்றோல் தட்டுப்பாட்டை அந்த இந்திய நிறுவனம் உருவாக்கியுள்ளது.

பெற்றோல் தட்டுப்பாட்டுக்குக் காரணம் ஒரு இந்திய நிறுவனம் என்பதையோ அல்லது முக்கிய எரிபொருள் விநியோகத்தை அன்னிய நாட்டு நிறுவனத்துக்குக் கொடுத்தது பற்றியோ எவரும் பேசவில்லை.

மாட்டுவண்டியில் நாடாளுமன்றம் வந்த நாடா்ளுமன்ற உறுப்பினர்கள் பெற்றோல் தட்டுப்பாடு குறித்து பேசுகின்றார்களேயொழிய அதற்குக் காரணமான இந்திய நிறுவனம்குறித்து எதையும் பேசவில்லை.

இன்னும் வேடிக்கை என்னவெனில் இந்தப் பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் அதிபர் மகிந்தா சைக்கிளில் நாடாளுமன்றம் வந்துள்ளார். ஆனால், அவருடைய ஆட்சியில் நாட்டின் எரிபொருள் விநியோகத்தைக் குறித்த இந்திய நிறுவ னத்துக்குத் தாரை வார்த்தவர் அவர்தான். இலங்கையின் எரிபொருள் விநியோகத்தை அரச நிறுவனமான பெற்றோலியக் கூட்டுத் தாபனமே செய்ய முடியும் என்றிருந்த சட்டத்தை இந்திய நிறுவனத்துக்கு மாற்றியவரும் இந்த மகிந்த தான். இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில் வெறும் 40வீத பெற்றோல் தேவையைப் பூர்த்தி செய்யும்போதே குறித்த நிறுவனத்தால் நாட்டில் ஒரு தட்டுப்பாட்டை ஏற்படுத்திக் குழப்பத்தை உருவாக்க முடியும் என்றால் அந்த நிறுவனம் 100சதவீத பங்கையும் கொண்டிருந்தால் என்னவாகும் எமது நாட்டின் நிலை?

## பிரபாகரன் தந்த மணிக்கூடு



17.04.2000ஆம் ஆண்டு அன்று அருட் தந்தை இமானுவேல் அடிகளார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு எழுதினார் "தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க துணிச்சலுடனும் முதுகெலும்புடனும் நீங்கள் செயற்பட வேண்டும் . இல்லையேல் அரசியலில் இருந்து ஒதுங்குங்கள்". இந்தக் கடிதத்தை எழுதும்போது அவருடைய கையில் இருந்த மணிக்கூடு 'டிக்... டிக்...' என அடித்துக்கொண்டிருந்தது.

1.11.2003ஆம் ஆண்டு அன்று அவர் அமெரிக்காவில் பேசும்போது, "அநீதியான முறையில் நான் அடக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டால் எந்த ஆயுதத்தையும் பாவித்து சண்டையிடும் உரிமை எனக்கு உண்டு" என்று கூறினார். அப்போதும் அந்த மணிக்கூடு 'டிக்... டிக்...'. என அடித்துக் கொண்டிருந்தது.

31.7.2004ஆம் ஆண்டு அன்று தான் எழுதிய நூல் ஒன்றைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்பிவைத்தார். அதில் அவர் "உண்மை எங்கள் விடுதலைக்கு வழி வகுக்கும்" என்று எழுதி கையெழுத்திட்டார். அப்போதுகூட அவர் கையில் அந்த மணிக்கூடு 'டிக்... டிக்...'என்றே அடித்துக் கொண்டிருந்தது.

அவருடைய கையில் உள்ள அந்த மணிக்கூடு 'டிக்... டிக்' என அடித்துக் கொண்டிருக்கும்போதெல்லாம் "இது பிரபாகரன் எனக்குத் தந்த மணிக்கூடு" என்று பெருமையுடன் கூறி வந்தார் தந்தை இமானுவேல் அடிகளார்.


அதே தந்தை அண்மையில் இலங்கைக்கு வந்தார். உலகின் வல்லாதிக்க சக்திகளுக்கு அடி பணியத் தேவையில்லை என்று பேசிய அவர் இங்கு வந்ததும் முதலில் சென்று கைகுலுக்கியது அமெரிக்கத் தூதுவருடனேயே. அப்போதும் அவர் கையில் இருந்த மணிக்கூடு 'டிக்... டிக்' என அடித்துக்கொண்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முதுகெலும்புடன் செயற்பட வேண்டும் எனக் கூறிய அடிகளார் அடுத்து முதுகு குனிந்து கைகுலுக்கியது முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாருக்கு. அப்போதும் அந்த மணிக்கூடு 'டிக் டிக்' என அடித்துக்கொண்டிருந்தது.

அவர் கையில் உள்ள மணிக்கூடு எப்போதும்போல் 'டிக் டிக்' என்று அடித்துக்கொண்டே தான் இருக்கிறது. ஆனால் தந்தை இமானுவேல் அடிகளார்தான் இப்போதெல்லாம் அதை "இது பிரபாகரன் தந்த மணிக்கூடு" என்று சொல்வதில்லை.

## கவிதை

வானவன்



# மனிதனை சபித்த பறவைக்கதை

திசைதோறும் முட்டித்
தேடியலைந்தது
ஒற்றைப் பறவை.
ஒன்றுமே கிடைக்கவில்லை
எனினும்
தேடலை நிறுத்தும்,
உணர்வு சோரும் நிலையை
அது அடையவேயில்லை.
உண்மையின்
விளக்கத்தை அது
ஓயாமல் பாடவேண்டி
ஆவலுற்ற
அந்தப் பொழுதிருந்து
அலைகிறது
தன் பாடலைச் சுருக்கி
வைத்தபின்.
பறவையின்
பாடலறுந்த பெருவெளி
சூனியமாயிற்று.
காற்றும்
அதற்கசையும் இலையும்
அதிலாடி மகிழும் முசுறும்
எல்லாமும்
சோர்ந்து போயின.
உண்மையின்
சரடேதுமின்றிப்
பாடல் புனையவும்
அதனைப் பாடவும்
விரும்பாத பறவை
ஓயவேயில்லை.
கடலின் அலை தூங்கிய
அகாலப் பொழுதிலும்
அடிக்கடி தலையை
உதறி உச்சியில்
தீமூட்டும் நடுப்பகலில்
ஒரு நாளல்ல

பலநாள்கள்
தன் சிறகடியிலிருந்து
நமைச்சல் தரும்
பேனின் கால் விரலிடுக்கு
நக நகத்திடுக்கு
என்றுகூட விடாது
தேடிப் பார்த்துவிட்டது.
ஓரிடமும்
கடந்து போன
இருந்துவிட்டுப் போன
எந்தச் சுவடும் இல்லை.
பாடலறுந்த பறவை
தேடலைத்
தொடர்கிறது
என்னையும்
கூட்டிணைத்து...

## அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகிறது
## 'கப்டன் மலரவன்' எழுதிய

# போர் உலா



தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்துச் செயற்பட்டஒரு புலி வீரன் எழுதிய தலைசிறந்த படைப்பு இது.

மணலாற்றிலிருந்து, மாங்குளம் முகாம் தகர்ப்புக்கெனச் சென்ற புலி வீரர் அணியில் இடம்பெற்றிருந்த கப்டன் மலரவன்(லியோ – காசிலிங்கம் விஜித்தன்) என்ற போராளி, தனது பயணத்தின்போதும் தான் தரிசித்த நிகழ்வுகளையும், பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாகப் படைத்திருக்கிறார்.

அவரின் இந்த எழுத்துருவாக்கம், 'போர் உலா' என்ற தலைப்பில் நூலாக 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் வெளிவந்தது. ஆழமான புரிந்துணர்வை, அளவிட முடியாத அன்புறவை, வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்கு உயிரான நேசிப்பை, ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு ஒருவருக்காக மற்றவர் உயிர் கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போர் வாழ்வை இந்த நூலின் பக்கங்களில் காணலாம். அதேவேளை மக்கள் மீது போராளிகள் வைத்திருக்கும் பெரு மதிப்பும் வன்னிப் பகுதி மக்களின் போராட்டப் பங்களிப்புக்களும், இந்த நூலில் அழகாக விவரிக்கப்பட்டுள்ளன.

முற்று முழுதாக் தன்னோடு தொடர்புபட்ட விடயங்களைக் கோவைப்படுத்துகின்றபோதும் தன் சுயத்தை வலியுறுத்தாமல் சக போராளிகளையும், எமது தாய் நாட்டையும், எமது மக்களையும், எமது இயக்கத்தையும் முதன்மைப்படுத்தி மலரவன் இங்கே எழுதியிருக்கின்றார்.

தனது தனித்துவத்துக்கு அப்பால் தேசத்துக்குச் சேவை புரியும் இந்த உயரிய பண்பு, புலிகள் இயக்கத்தின் விழுமியங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை இந்தப் புலி வீரனின் போராட்ட வரலாறு, பல சாதனைகளையும், மறக்க முடி யாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இருக்கின்றது.

'போர் உலா' என்ற இந்த நூலை எழுதிய கப்டன் மலரவன், தொடர்ந்து சிலாவத்துறை கள நிகழ்வுகளைச் சுற்றி அலைபாயும் தன் நினைவுகளை எழுதவிருந்தார். அதை இந்த நூலின் இறுதியில், தன் கைப்படக் குறிப்பிட்டுமிருந்தார்.

ஆனால் பலாலிப் படைத்தளத்தின் மீது, 1992ஆம் ஆண்டில் தொடுத்த தாக்குதலின்போது மலரவன் வீரச்சாவடைந்தான். அதன்பின் அவரது உடைப்பையிலிருந்து எடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிதான், 'போர் உலா' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

# நூல் அறிமுகம்

## தொகுப்பு

அயக்கிரீவன்





**நூல் : ஜீவநதி (110 கார்த்திகை 2017- மாதாந்த சஞ்சிகை)**
**ஆசிரியர் : க.பரணீதரன்**
**விலை : 150ரூபா**

ஜீவநதியின் கார்த்திகை இதழ் ஹைக்கூ கவிதைச் சிறப்பிதழாக வெளிவருகின்றது. ஜீவநதி வெளியிட்டு வைத்த சிறப்பிதழ் வரிசையில் இது பதினெட்டாவது சிறப்பிதழாகும். இதுவரை 110ஜீவநதி இதழ்களைத் தொடர்ச்சியாக வெளிக்கொணர்ந்த நிலையில், அவற்றுள் பதினெட்டு இதழ்களைச் சிறப்பிதழ்களாக வெளியிடுவது என்பது ஓர் அசுர முயற்சியாகும். அதேவேளை ஈழத்தில் முதன் முதலில் வெளிவரும் ஹைக்கூ கவிதைச் சிறப்பிதழ் என்ற அடையாளத்தையும் இந்த இதழ் பெறுகின்றது. ஜீவநதியின் பதினெழாவது சிறப்பிதழானது 'சிறுவர் சிறப்பிதழகா' வெளிவந்து, ஈழத்தில் வெளிவந்த முதலாவது சிறுவர் சிறப்பிதழ் என்ற வகையில் பலரதும் பாராட்டைப் பெற்றது. அதேபோல இந்தச் சிறப்பிதழையும் வாசகர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுண்டு.

ஜப்பானியக் கவிதை மரபான ஹைக்கூ தமிழில் அறிமுகமாகிப் பல ஆண்டுகளாகியும் தமிழில் அந்தக் கவிதை மரபுக்கான இலக்கண விதிகளோ அமைப்பு விதிகளோ இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. நாம் அறிந்தவகையில் ஈழத்தில் பதின்மூன்று ஹைக்கூ கவிதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. எனவே தமிழில் 'ஹக்கூ' கவிதை மரபு பற்றிய விழிப்புணர்வையும் அறிநிலையையும் தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தச் சிறப்பிதழ் வெளிவருகின்றது. இந்தச் சிறப்பிதழ் ஈழத்தில் இருந்து வெளியான பதினொரு ஹைக்கூ கவிதைத் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள ஆயிரத்து முன்னூற்று முப்பத்து இரண்டு கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது ஆய்வாளர்களுக்குப் பயனுள்ள வகையில் அமையும் என்பதே எம் நம்பிக்கை. அத்துடன் சு.முரளிதரன், இ.சு. முரளிதரன் ஆகியோரின் ஹைக்கூ குறித்த கேள்விகள் அடங்கிய நேர்காணலும் ஹைக்கூ கவிஞர்களது படைப்புகள் பற்றிய கட்டுரைகளுமாக இந்தச் சிறப்பிதழ் வெளிவருகின்றது.

(ஆசிரியர் – க.பரணீதரன்)

**நூல் - பெரியதும் சிறியதும்**
**ஆசிரியர் - பேராசிரியர் வ.மகேஸ்வரன்**
**வெளியீடு - குமரன் புத்தக இல்லம்**
**விலை - 450ரூபா**



தமிழ் இலக்கியச் சூழலும் ஆய்வுச் சூழலும் இன்று புதிய பரிணாமங்களை உருவாக்கியுள்ளன. ஆரம்பகாலத் தமிழ் ஆய்வுகள் எடுத்துரைப்பு நோக்கினையே பெரிதும் மையம் கொண்டிருந்தன. எனினும், கால மாற்றங்கள் அவற்றைக் காலம், கருத்தமைவு, கொள்கை என, பல்வேறு தளங்களில் மாற்றியமைத்தன. இதனால் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பல்வேறு தளங்களில் தமிழாய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பதை நாம் யாவரும் அறிவோம். தமிழாய்வுச் சூழல் பக்கச் சார்பான பார்வைகளில் இருந்தும் விடுபட காலனியக் கருத்துக்கள் வழி சமைத்தன. எனினும் அவைகூட தமக்கான நியமங்களை ஆய்வுச் சூழலில் புகுத்தி ஆய்வினை ஒரு தலைப் பட்சமாக நிகழ்த்தவும் வழிசமைத்தன என்பர் அறிஞர். ஆனால், இவற்றிலிருந்து விடுபட்டு உள்ளதை உள்ளவாறு அதன் தாற்பரியங்களுடன் எடுத்தியம்புகிற முறைமை இன்று பெரும்பாலும் வழக்கில் உள்ளது. இந்தக் கருத்தியலைப் பின்பற்றியே இந்நூலின் கட்டுரைகள் பெரும்பாலும் அமைந்தன எனலாம். நமது பண்பாட்டுச் சூழலில் இன்று பெருமரபு – சிறுமரபு என்ற இரு மரபுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிலவுவதை நாம் அவதானிக்கலாம். அது சகல தளங்களில் வேரூன்றியிருப்பதையும் நாம் அறிவோம். ஆனால், இவை இரண்டுக்கும் இடையிலான இடையுறவு அநாதியானது. ஒன்றிலிருந்து ஒன்று தோற்றம் கொண்டது. பண்பாடு என்பது அவ்வாறான படிமலர்ச்சி கொள்ளும் என்பதுதான் மானுடவியலாளர்களுடைய கருத்தாக அமைகிறது. எனவே, அந்தப் பண்பாட்டுப் படிமலர்ச்சி தொடர்பான ஒரு கருத்தாடலை இந்நூலினூடாக நிகழ்த்துவதுதான் எமது நோக்கமாக அமைகிறது.

(நூல் ஆசிரியர் – வ.மகேஸ்வரன்)

பதிவுகளின் தொடர்

கே.ஆர்.டேவிட்

# மக்களுக்காக.....



இன்று செப்ரெம்பர் பன்னிரண்டாந் திகதி... இன்னும் மூன்று நாள்களின் பின்:. செப்ரெம்பர் பதினைந் தாந் திகதி தீபனின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகுமெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்துத் தீபன் நடத்தப் போகின்ற நீர்கூட அருந்தாத உண்ணாவிரதப்போராட்டம் பற்றிய பேச்சே சகல இடங்களிலும் முதன்மை பெற்றிருந்தது. வடக்குக் கிழக்கில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடி யேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட வேண்டும், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங் கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெற வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இந்திய அரசிடம் தீபன் முன் வைத்த கோரிக்கைகள் இவைகள்தான்.

இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும்... ஏதோ அரசியல் அலுவலாக வெளியே சென்றிருந்த தீபன் இப்போதுதான் திரும்பி வந்தான். தீபனின் வருகையை எதிர்பார்த்து ராகுலன் காத்திருந்தான்

தீபனும், ராகுலனும் நண்பர்கள்... சாதரண நண்பர்களல்ல. ஆத்மார்த்த நண்பர்கள் 'இரட்டையர்கள்' என்று அழைக்கப்படும் அளவுக்கு இவர்களது நெருக்கம் அமைந்திருந்தது. தீபன் ஏற்கனவே ராகுலனிடம் தனது உண்ணாவிரதத்தைப் பற்றிப் பேசியிருக்கிறான். அப்போதெல்லாம் ராகுலன் எதுவுமே பேசவில்லை உண்ணாவிரதம் நடத்துவதென்று மேலிடம் தீர்மானித்ததும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நாள்குறித்தும் கூட ராகுலனுக்குத் தெரியும். அப்போது கூட ராகுலன் எது வுமே பேசவில்லை.

ராகுலன் தினசரி தனக்குள்ளேயே அழுது... தாங்கமுடியாத எல்லைக்கு வந்துவிட்டான்... தீபன் செய்யவிருக்கின்ற உண்ணாவிரதப் போராட்டம் பற்றிப் பேசுவதென்ற முடிவோடுதான் இன்று ராகுலன் வந்திருக்கின்றான்.

"ராகுலன்...வேளைக்கு வந்திட்டீங்களா...? என்ன முகம் அதச்சுப் போயிருக்கு...? ஏதாலும் சுகமில்லையா..." தீபன் கேட்கிறன்.

"...நான் உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும் ..."

"என்ன உங்கடை பேச்சுகள், நடவடிக்கையள் எல்லாம் வித்தியாசமாய் இருக்கு... என்னத்தைப் பற்றிக் கதைக்க வேணும் ...?" கேட்டபடி ராகுலனுக்கு முன்னாலிருந்த கதிரையில் தீபன் அமர்கிறான்.

"..நீங்கள் செய்யவிருக்கிற தண்ணீர்கூட அருந்தாத உண்ணாவிரதத்தைப் பற்றி..."

"அதுதான் எல்லாம் முடிவாய்ப் போச்சுதே... ஒரு பிரச்சினையை முடிவாக்க மனந்தான் யோசிக்க வேணும்... முடிவாக்கினாப்பிறகு அதைப்பற்றி யோசிக்கக்கூடாது. சரி இப்ப உங்களுக்குள்ள பிரச்சினை என்ன...? உங் கடை மனதிலை உள்ளதைச் சொல்லுங்கோ...?" தீபன் கேட்டுவிட்டு ராகுலனின் முகத்தை உற்று நோக்குகிறான்.

\- - - -

"தீபன்... சிலவேளை இந்திய அரசு உங்கடை கோரிக்கைகளை நிராகரிச்சுப் போட்டுதெண்டால்... முடிவு...?" ராகுலன் கேள்விக் குறியோடு தீபனின் முகத்தைப் பார்க்கிறான்.

"சரி... எனது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளுமா...? அல்லது நிராக ரிக்குமா...? உங்கடை அபிப்பிராயம் என்ன?" தீபன் சிரித்தபடி ராகுலனிடம் கேட்கிறேன்.

"எங்களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்கின்ற இந்தியா, உங்கடை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் என்பதுதான் பொதுவான அபிப்பிராயம்... என்ரை அபிப்பிராயமும் அதுதான்... ஏனென்டால்... இந்தியா 'காந்தி தேசம்' என்று பேரெடுத்த நாடு. சாத்வீகப் போராட்டத்தை மதிக்கிற நாடு" ராகுலன் கூறுகிறான்.

"எனது கோரிக்கைகளை இந்திய அரசு அங்கீகரிச்சால் சந்தோசம்தானே. பிறகு என்ன யோசினை?"தீபன் சிரித்தபடி கேட்கிறான்.

"இது தனிப்பட்ட பிரச்சினை அல்ல, அரசியல் பிரச்சினை. சிலவேளை இந்தியா உங்கடை கோரிக்கைகளை நிராகரிச்சுப் போட்டால்... அதை நினைக்கத்தான் என்ரை மனம் எரியுது..." ராகுலன் முளிகள் பிதுங்கிய நிலையில் கூறுகிறான்.

தீபன் மீண்டும் சிரிக்கிறான்...

"என்ன தீபன்... நான் மனமெரிஞ்சு கதைக்கிறன்... நீங்கள் சிரிக்கிறியள்...?"

"ராகுலன்...! நீங்கள் உங்களுக்கும் எனக்கும் இடையிலை உள்ள நட்பை வைச்சுக்கொண்டு யோசிக்கிறியள். ஆனால், நான் அடக்கப்பட்டு வாழுற தமிழ் மக்களை மனதிலை வைச்சுக் கொண்டு யோசிக்கிறன். சிந்தனைத் தளங்கள் வேறுபட்டால், சிந்தனையின் முடிவுகளும் வேறுபடும். இதுதான் யதார்த்தம். இந்தியா 'காந்தி தேசம்' என்ற சிறப்புப் பெயர்பெற்ற நாடு. அதாலைதான் நான் இந்திய அரசுக்கு முன்னாலை அகிம்சை வழியிலை போராட முடிவு செய்தன்.

நாம் நடத்துகின்ற போராட்டம் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான அரசியல் போராட்டம். நாம் நடத்துகின்ற போராட்டத்தின் பலமும் பலவீனமும் பொதுமக்களிடம் தான் தங்கியுள்ளது. எங்களுடைய நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரிக்க வேண்டும். இந்தியா எமக்கு அயல் நாடு. தமிழ் மக்களின் உரிமைகளை இலங்கை அரசிடமிருந்து இந்திய அரசு பெற்றுத் தருமென்று தமிழ் மக்கள் நம்புகின்றனர்." இப்படிக் கூறிவிட்டுத் தீபன் மௌனமாக இருக்கிறான். ராகுலன் திகைத்துப் போய் நிற்கிறான். மூலை யில் வைக்கப்பட்டுள்ள பானைக்குள்ளிருந்து ஒரு டம்ளர் தண்ணீரைக் கோலி எடுத்துக் குடித்துவிட்டு மீண்டும் பேச ஆரம்பிக் கிறான்

"இந்தியா ஒரு வல்லரசு நாடு. இந்த வல்லரசு நாடு சீனா, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் உறவில்தான் நம்பிக்கை வைத்திருக்கும். இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளதொரு சிறிய தீவு. வல்லரசு நாடுகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும், தங்களின் கடல் வழிப்பயணங்களை இலகுவாக்கவும் இலங்கைத் தீவைத் தங்களின் தங்குமடமாகவே பாவிக்கின்றனர்.

இதனால் உலக வல்லரசு நாடுகள் இலங்கையிலுள்ள ஆட்சியாளர்களைப் பகைத்துக் கொள்ள ஒருபோதுமே விரும்ப மாட்டார்கள். இதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம். இந்தியா எனது கோரிக்கைகளை ஒருபோதும் அங்கீகரிக்காது. எனக்கு ஏற்படப்போவது சாவுதான் என்பது எனக்குத் தெரியும்" இப்படிக் கூறிய தீபன், ராகுலனின் முகத்தைப் பார்க்கிறான். ராகுலன் விறைத்துப்போய் இருக்கிறான்.

தீபன் மீண்டும் பேச ஆரம்பிக்கிறான். "போராட்ட அரசியலுக்குப் பொறுப்பானவன் நான். நான் இந்தியாவை நம்பவில்லை. ஆனால், இந்தப் போராட்டம் யாருக்காக நடத்தப்படுகின்றதோ அந்த மக்கள் இந்தியாவை நம்புகின்றனர். இதுதான் இன்று எமது போராட்டக் களத்தின் யதார்த்த நிலை... இந்த நிலை மாற்றப்பட்டு, பொது மக்கள் தங்களின் நம்பிக்கை மீது நின்று போராடத் துணிய வேண்டும். எனது சாவு இதைச் சாதிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" தீபன் கூறி முடிக்கிறான். ராகுலன் தலை குனிந்து இருக்கிறான்.

தீர்மானிக்கப்பட்டபடி செப்ரெம்பர் பதினைந்தாம் திகதி தீபனின் போராட்டம் ஆரம்பமாகின்றது. காவோலை கொழுத்தி முருங்கை மரத்தடியில் மயிர்க் கொட்டிகள் சுடப்படும்போது அவைகள் தீயில் வெந்து மயிர் புலுண்டிக் கருகிச் சாவது போல்... பதினோராம் நாள்... பசி வெக்கையில், தீபனின் குடல் கருகிப் பகிரங்கமாகச் சாவைத் தழுவிக் கொள்கிறான். தண்ணீர் கூட அருந்தாமல் வெந்து மரணித்த தீபனுக்காகக் காந்திதேசம் ஒரு துளி கண்ணீர்கூடச் சிந்தவில்லை...!



# அழுக்கும் வெள்ளையும்

கவிதை

கவிக்காவலன்


அழுக்கோடு ஒரு மேனி
ஆகாயம் பார்க்கும்
நல்ல வெண் தாளில்
கவி பூசியே விளையாடித் திரியும்

எட்டாத கதை சொல்லி
ஏட்டிலே கொட்டும்
அன்று கவலைகள் என்னோடு
பேசியே சிரிக்கும்

தனிமை கூடியே
மண்ணில்
மனிதனாய் ஆனேன்
தவங்கள் செய்யாமல்
வரவாய் வரங்கள்
வாங்கினேன்

சிந்திய தமிழிலே
பெருத்த இன்பங்கள் கண்டேன்
வீழ்ந்த இடங்களையும்
விதைத்துத்தான் போட்டேன்

இன்றோ
எழுத்தாணியைத்தொட
நேரம் இல்லை
வெள்ளையாய்
புதுமேனி
வெகுதே கூட்டில்
எண்ணிய
நோக்கத்தை
மறந்துதான் இங்கே
காலத்தின் பிடியிலே
நான் மாட்டிக் கொண்டேன்
காகிதம் தொடாமல்
வாழ்ந்தென்ன பயனோ...?



சிறுவர் நவீனம்

செல்லையா குமாரசாமி




# தங்கப்பறவை

அரசகுமாரிகூறியவார்த்தைகளைக்கேட்டதும் ஒரு சில அரச குமாரர்களின் முகங்கள் கூம்பின. தனெனில் தமக்கே மாலையிடுவாள் என்னும் நம்பிக்கையில் ஓடோடி வந்தவர்கள் அவர்கள். சிலர் முகமலந்து கிளம்பினர். தமக்கு அவள் மாலையிடமாட்டாள் என்னும் எண்ணத்தோடு வந்தவர்கள் மட்டுமல்லாது, வைரத்தையும் தங்கப் பறவையையும் தேடிக் கஷ்டப்பட்டாவது கொண்டு வந்தால் அவளை அடைந்துவிடலாம். அதற்கான வாய்ப்புத் தமக்கும் கிட்டியிருக்கிறதே என்னும் மன நிறைவில் எப்பாடுபட்டாவது, எந்தக் காடு வனாந்திரத்தில் அலைந்தாவது தங்கப்பறவையைக் கண்டு பிடிப்பது வைரத்தை மீட்டுவது அவளைத் திருமணம் செய்வது என்னும் நட சங்தர்ப்பத்துடன் தாம் வந்த ரதங்களிதும் குதிரைகளிலும் ஏறி விரைந்தனர். பறந்தனர் என்பதே பொருந்தும்.

அரசரின் அழைப்பினை ஏற்று வந்திருந்தவர்கள் அனைவரும் கிளம்புவதற்கு முன்னரே அரசகுமாரி தோழிப்பெண்களுடன் மண்டபத்தை விட்டுப் போய்விட வாளேந்திய சிலவீரர்களும் சேந்தனும் அரசரும் முதன் மந்திரியும் மட்டுமே எஞ்சியிருந்தனர் மண்டபத்தில்.

— — —

"வாரும் சேந்தரே" அரசர் அழைத்தார். பணிந்து நின்றார் சேந்தன். அரசர் சிரித்தார் "வைரம் பறிபோனதையிட்டு கவலைப் படுகிறீர் .போலத் தோன்றுகிறது" "கவலைமேல் கவலைதான் அரசே" "கவலையை விடும்" மீண்டும் அரசர் சிரித்தார்.

"பெறுமதிமிக்க வைரத்தை, இழந்த பார்வையை மீட்டும் வைரத்தை, தங்கள் கிரீடத்தை அலங்கரிக்கவேண்டிய வைரத்தை தங்கள் கிரீடத்திலிருந்து ஒளி வீசவேண்டிய வைரத்தைப்பறிகொடுத்து விட்டு எப்படி அரசே கவலையில்லாது இருக்க முடியும்?"

"தேடியது போனாலே கவலை கொள்ளாது இருக்க வேண்டிய நாம் தேடாது வந்ததற்குக் கவலைப்படலாமா சேந்தரே?"

"தேடாது வந்தது என்பதை நான் மறுக்கவில்லை. தேடினாலும் கிடைக்காததல்லவா கைக்கு வந்த இந்த வைரம், விலைமதிக்க முடியாத பொருளல்லவா அரசே இந்த வைரம்"

"உமது கவலை எனக்குப் புரிகிறது. நீர் கொண்டு வந்தது விலைமதிக்க முடியாதது உண்மைதான். உமது கைமாறி எனது கைக்கு வந்ததன் பின்னர்தான் வைரம் பறிபோனது. அதற்கு நிகரான வெகுமதியை நான் தரத் தயாராக இருக்கிறேன். எமது கஜானாவை இப்போதே திறப்பித்து விடுகிறேன். எவ்வளவு தேவையோ அவ்வ ளவை விரும்புகிறீரோ அவ்வளவு தங்க நாணயங்களை நீர் அள்ளிப் போகலாம்."

அரசரின் வார்த்தைகள் காதெட்டியதும் குன்றிப் போனார் சேந்தன். உடல் வியர்த்துக் கொட்டியது. கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து கன்னங்களை நனைத்தது. கைகள் கொண்டு கண்ணீரை அகற்றினார். தலை கவிழ்ந்து நிலம் நோக்கினார் அரசரை நிமிர்ந்து பார்க்க விரும்பாதவராக குனிந்தே நின்றார். சேந்தன் ஏன் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதை விளக்கியாக வேண்டும். தான் கண்டெடுத்த வைரத்தை அரசரிடம் ஒப்படைக்க நூறுவித விருப்பத்தோடு தாமதிக்காது வந்தாரே தவிர அரசரிடமிருந்து எதனையும் பெற்றுக்கொண்டு போகும் எண்ணம் துளியும் இருக்கவில்லை. அவருக்கு.



"ஏன் சேந்தரே தலை தாழ்த்தி நிற்கிறீர்?" அரசர் வினாவினார். சேந்தர் மெல்ல நிமிர்ந்தார். "நான் இந்த நாட்டையும் தங்களையும் விட்டு இக்கணமே குடும்பத்தோடு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். தங்கள் மேல் விசுவாசம் கொண்டவன் நான் என்பதை இன்னும் தாங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று எண்ணும் போது சொல்லொணா வேதனை என்னை வாட்டுகிறது. பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டவனா அரசே நான். பொன்னும் பொருளும் வாங்கிக் கொள்ளும் எண்ணத்துடனா வைரத்தைத் தங்களிடம் கொண்டு வந்தேன்?" விம்மி விம்மி அழுதார். அரசருடைய கண்களிலும் நீர்த் திவலைகள் தோன்றின.

"முதன் மந்திரியாரே" மந்திரி பக்கம் பார்வையைத் திருப்பினார் அரசர். "அரசன் கட்டளையிடுகின்றேன் இப்போதே இன்றே அதனை நிறைவேற்றி ஆகவேண்டும். என்னையும் நாட்டையும் விட்டு வெளியேறப் போவதாதாகச் சேந்தர் கூறிய வார்த்தைகளை என்னால் பொறுக்க முடியவில்லை. சேவகர்களையும், வண்டிகளையும் சேந்தருடைய வீட்டுக்கு அனுப்புங்கள். அவருடைய வீட்டிலுள்ள பொருள்கள் அனைத்தையும் ஒன்று விடாது வண்டிகளில் ஏற்றி அரண்மனைக்கு அருகேயிருக்கும் மாளிகையில் இறக்குங்கள். சேந்தரின் தாயாரையும் இல்லாளையும் அவருடைய மகனையும் ரதத்தில் ஏற்றி வீட்டைப் பூட்டித்திறப்பை எடுத்து, மாளிகையில் இறக்குங்கள்" அரசரின் முகம் நோக்கி வாயடைத்து நின்றார் சேந்தன்.

"சேந்தரே!"

"இத்தனை பெருந்தண்டனையா எனக்கு?" மெல்லக் கேட்டார் சேந்தன். "ஆம் சேந்தரே, சொல்லக் கேளும். ஒரு சாதாரண குடிமகன், பறிபோன வைரத்தைக் கொண்டு வந்திருந்தால் அதற்குரிய பெறுமதியை எப்படி எவ்வளவு கொடுத்திருப்பேனோ அதனையே உமக்கும் வழங்க முன்வந்தேனே தவிர உம்மைப் புரிந்து கொள்ளாது அப்படிச் சொல்லவில்லை. நீர் என்னிடமிருந்து எதையும் எதிர்பார்த்து வைரத்தைக் கொண்டு வரவில்லை என்பது எனக்குப் புரியாததல்ல.

"இன்றே ஓலை எழுதித் தரவிருக்கின்றேன் நீரும் குடும்பமும், மகன் வழி வரப்போகும் வழித் தோன்றல்களும் எம்மோடு இந்த மாளிகையிலே வசிக்கப் போகிறீர்கள். அரசர் வீட்டு உணவே உங்கள் பரம்பரையினருக்கும் வழங்கப்படும்" கூறிக் கொண்டே வந்து சேந்தரை அணைத் தார் அரசர்.

— — —

ஒரு முழுநிலா நாளிலேதான் சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிறகு ஓர்அமாவாசையும் இரண்டு நவமிகளும் ஓடிக்கழிந்து விட்டன. அடுத்த முழுநிலா நாளும் வந்துவிட்டது. எந்த நாட்டு அரசகுமாரனும் தங்கப் பறவைக் கண்டுபிடித்ததாகவோ வைரக்கல்லை மீட்டதாகவோ செய்தி எதுவும் அரசர் காதில் எட்டவில்லை. மனம் வாடிப்போன அரசர் அரசவையைக் கூட்டினார் ஆன்றோரின் ஆலோசனையைக் கேட்டார். இன்னுமொரு திங்கள் பொறுத்திருந்து பார்க்கலாம் என்றனர் சிலர்.

சிலர் "மீண்டும் சுயம்வரத்துக்கு ஒழுங்குகள் மேற்கொள்வதே நன்று" என்றனர். வெகுண்டார் அரசர். "மீண்டும் ஒரு சுயம்வரமா? வேண்டவே வேண்டாம். அரச குலதுக்கே அவமானம். அரசகுமாரியும் அதனை விரும்பமாட்டார்." அடுத்து வரும் முழுநிலா வரை பொறுத்திருப்பதற்கு இணங்கினார். அரசர். பயனற்றுக் கழிந்தது காலம் ஒற்றர்களை. அரசகுமாரர்களின் நிலையை அறிந்துவரப் பணித்தார் அரசர். அயல் நாடுகளுக்குச் சென்று ஒரு வாரகாலம்கழித்துத்திரும்பி வந்தனர் ஒற்றர்கள்.

— — —

இரண்டு திங்கள், தங்கப் பறவையினையும் வைரத்தையும் தேடி அலைந்து, நோய்பீடித்து, தாடிவளர்த்து "எம்மால் தேட முடியாது. ஆனால் இளவரசி எழில் நிலாவை மறக்க முடியவில்லை என அரசகுமாரர்கள் கூறிய செய்தியினை அரசர் காதில் போட்டு வைத்தனர். அரசர் உரத்துச் சிரித்தார். ஒற்றர்கள் விழித்தனர். அரசர் சொன்னர் "அன்று சுயம்வரத்துக்கு வருகை தந்திருந்த அரசகுமாரர்களில் ஒருவர் கூடத் தங்கப் பறவையைத் தேடிப்பிடிக்கும் தகுதி இல்லாதவர்என்று தெரிகிறது"

அயல் நாடுகளுக்குப் போய்த் திரும்பிய ஒற்றர்கள் கொணர்ந்த செய்தியினை அறிந்த இளவரசி தந்தையிடம் வந்தாள். "தந்தையே ! சுயம்வரம் நின்று போனதும் ஒரு வகையில் மிகவும் நல்லதென்றே நான் நினைக்கிறேன் ஏனென்றால், வைரத்தை மீட்டுவரத் திராணியற்ற ஒருவரை கணவராக ஏற்கும் சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. இந்த நேரத்தில் அதற்காகத் தங்கப் பறவைக்கு நன்றி சொல்லவேண்டும்." என்று சொல்லி நகைத்தாள்

"நீ இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய்மகளே" மீண்டும் இளவரசி சிரித்தாள். என்றும் நான் உங்களுக்குக் குழந்தைதானே தந்தையே காலமா போய்விட்டது? திருமணத்துக்கு இப்போது என்ன அவசரம் வந்துவிட்டது? பொறுத்திருப்போம். ஒரு வீரனைக் காணும் வரை" "நீ என்ன கூறுகிறாய்?"

"எங்கள் நாட்டில் யாரோ ஒருவன், எனக்கு ஏற்றவன் பிறந்திருப்பான்."

"எங்கள் நாட்டில் அரசர்கள் என்னைத் தவிர வேறும் யாரோ இருப்பது போலக் கூறகிறாயே."

> வீரமற்ற ஒருவன் எனக்கு மருமகனாகவும் உனக்கு மணாளனாகவும் வருவதிலும் பார்க்க ஒரு வீரனை நாம் ஏற்றுக் கொள்வதே மேல் என்று எனக்கும் தோன்றுகிறது. மகளே! விருப்பத்தினை நாடு முழுவதும் பரவச் செய்கிறேன்.

"அரச குலத்தில் பிறக்காதவனாயிருந்தாலும் வீரனாக இருந்தால் அவனைத் திருமணம் செய்வதில் தவறொன்றும் இல்லை தந்தையே. வீரதீரம் கொண்ட இளைஞர்கள் எமது நாட்டில் இருப்பார்கள். வைரத்தினைச் சேந்தர் எடுத்துவந்ததும் அதனைத் தங்கப் பறவை தூக்கிப் போனதும் நாடறிந்த செய்திதானே. அறிவித்தல் ஒன்றினை விடுப்போம். எவராயிருந்தாலும் எக்குடியில் பிறந்தா லும் தங்கப்பறவையை உயிரோடும்வைரத்புதைம்தேடிக்கொண்டு வரும் இளைஞனை அரசகுமாரி மாலையிட்டு மணவாளனாக ஏற்க வுள்ளார் என்று" "மகளே நீ கூறுவதும் ஒரு வகையில் நன்றாகத்தான் தோன்றுகிறது என் மனதுக்கு.ஒரு வீரன் என் மருமகனாகவும் உனக்கு மணாளனாக வருவதையே நானும் விரும்புகிறேன்."

"அரச வம்சத்தில் உதிக்காதவர் பலர் ஆட்சி செய்தது நாடாறிந்த உண்மையாக இருக்கும்போது நாம் ஏன் ஒரு வீர புருசனை மணாளனாகவும் ஏற்கத் தயங்கவேண்டும்?"

வீரமற்ற ஒருவன் எனக்கு மருமகனாகவும் உனக்கு மணாளனாக வருவதிலும் பார்க்க ஒரு வீரனை நாம் ஏற்றுக்கொள்வதே மேல் என்று எனக்கும் தோன்றுகிறது. மகளே! விருப்பத்தினை நாடு முழுவதும் பரவச் செய்கிறேன்."

வைரத்தினையும் தங்கப் பறவையினையும் தேடிக் கண்டு பிடித்து அவற்றை அரசரிடம் ஒப்படைக்கும் வாய்ப்பொன்று தமக்கும் கிட்டியதில் பல வாலியர்கள் துள்ளிக் குதித்து எழுந்தனர். அரச குமாரியான எழில் நிலாவை நேரில் காணாது விட்டாலும், அவளுடைய அழகினையும் மன உறுதியினையும் அறிந்திருந்த வாலிபர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை உயிரைக் கொடுத்தாவது பயன்படுத்த நினைத்ததில் வியப்பில்லை. சில வாலிபர்கள் முதன் மந்திரிமூலமாகத் தாம் வைரத்தினையும் தங்கப்பறவையையும் மீட்டுவர அரசரிடம் குதிரைகள் பெற்றுக் கிளம்பினர். ஓரிரு வாரத்தில் தம்மால் இயலாது எனச் சிலர் குதிரைகளை அரசரிடம் திரும்ப ஒப்படைத்தது அவமானமென்று வீடுகளில் முடங்கினர். சிலர் தேடிக்கொண்டே இருக்கும் செய்தி அரசர் காதுக் கெட்டியது.

(தொடரும்)

# உங்கள் வீட்டிலும் 'அவர்' இருக்கிறாரா?





> பிராணிகளை நேசிப்பவர்கள், அவைகளை மரியாதை கொடுத்துத்தான் அழைப்பார்கள். 'அவர் அப்படித்தான். அவருக்குப் பிடிக்காது. அவர் மச்சம் இல்லாமல் சாப்பிடமாட்டார்' இப்படியாகக் குடும்பத்தில் அவரையும் இணைத்துக் கொண்டுவிட்டார்கள்.



கட்டுரை

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

பூனையானது அந்தப் பெண்ணின் கால்களைச் சுற்றிச் சுற்றி வந்தது. தனது முதுகினை வாஞ்சையோடு அவளுடைய கால்களில் தேய்த்தது. அதோடு நின்றுவிடாமல் தனது கால்களால் பெண்ணின் கால்களைச் சுற்றி வளைத்துக் கட்டிப் பிடித்தது. அவளோ, பூனையின் செய்கையை ரசித்தாள். "டேய் விடடா, விடடா" எனச் செல்லமாக அதட்டினாள். பிற்பாடு கையால் தடவிக் கொடுத்தாள். அது அவளின் அன்பை, ஆதரவைப் பெற்றுக் கொண்டு 'மியாவ், மியாவ்' எனக் கத்தியது. ஆனால் தனது கால்களின் பிடியைக் கை விடவில்லை.

''அவர் பிஸ்கெற்றுக்கு வளயம் பண்ணுகிறார். அதான் உப்பிடி சேட்டைவிடுகிறார்" அவள் முணுமுணுத்தபடி குளிர் சாதனப்பெட்டியிலிருந்து பிஸ்கற்றுக்களை எடுத்துப் பூனைக்குப் போட்டாள். அது செல்லமாய்க் கத்தியபடி பிஸ்கெற்றுக்களை ருசி பார்த்தது. அவள் அதன் செய்கையை மீண்டும் ரசித்தாள். அவளின் வயது இருபதுக்குள்தான் இருக்கும்.

"உதுக்குப் பூனைப் பைத்தியம். காசைக் கொடுத்து வாங்கி வைக்கிற பிஸ்கெற், முறுக்கு, கேக், மிக்சர், பால்மா எல்லாத்தையும் பூனைக்குப் போட்டுத்துலைக்குது. பூனை மயிர் கூடாதெண்டு சொல்லினம்... தலைக்குள்ள ஏதேனும் கிடந்தாலெல்லோ..?"

பெண்ணுக்கு அம்மாவின் திட்டுப் பெரிதாக உறைக்கவில்லை. அவளுக்கு அது பழக்கமாகிவிட்டது. பூனைக்கும் அவளுக்குமான உறவு எப்படி உருவானது? பலர் இதைத் தவிர நாய், கிளி, புறா எனப் பல தரப்பட்ட உயிர்களோடு அன்பு பாராட்டி நேரத்தைச் செலவிடுகின்றனர்தானே!

— — — —

வெளிநாடுகளில் சிலர் கொடூரமான விலங்குகளைக் கூடத் தமது செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகின்றார்கள். மலைப்பாம்பு, கரடி, சிங்கம் என்பனவும் அடக்கம்.

இவர்கள் தமது ஓய்வு நேரங்களை இவ்வகையான ஜீவராசிகளோடு செலவிடுகிறார்கள். பேசத் தெரிந்த மனிதனுக்கும் பேச முடியாத ஜீவனுக்கும் இருக்கும் இந்த உறவை எப்படிக் கருதிக் கொள்ளலாம்? இதன் மூலம் இருவருக்கும் என்ன கிடைக்கிறது. என்ன வகையான திருப்தியை மனிதன் அடைகின்றான். அவனை விடுங்கள். ஓடியும் பறந்தும் வான் வெளியில் உல்லாசமாகத் திரியும் இந்த ஜீவன்கள் இவர்களின் பராமரிப்பில் சந்தோசமாக இருக்குமா?

ஆனால், வெளிப்படையில் அவை சந்தோசமாகத் தானே தம்மைக் காட்டிக் கொள்கின்றன. தம்மோடு பழகுபவர்களைக் கண்டால், ஓடுவதும் தாவுவதும் துள்ளிக் குதிப்பதும் (எம்மவர் சிலர் ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சரைக் கண்டு செய்வதுபோல்) நிஜமாகத்தானே உள்ளது. செல்லப்பிராணிகளோடு நேரத்தைச் செலவழித்துக் கொஞ்சிக் கொண்டு இருப்பவர்களின் வீட்டில் பெற்றோர்கள் அவர்களைப் பேசிக் கொண்டுதான் இருப்பார்கள். வளர்ப்பவர்கள் தமது பழக்கவழக்கங்களைப் பிராணிகளுக்கும் பழக்கமாக்கி விடுவார்கள். "உதுகளுக்கு நாங்கள் சாப்பிடேக்கை, சாப்பாட்டைப் போட்டு பழக்கி எங்களைச் சாப்பிட விடுகுதுகளில்லை. வீட்டுக்கு வாற ஆக்களுக்குப் பிஸ்கெற்றுக்களைக் குடுத்தால் அவையளைச் சாப்பிட விடுகுதிகளில்லை. சமைச்ச சோத்தை உதுகள் மாதிரி அதுகளும் வாயில் வைக்குதிகளில்லை"

மனிதர்களைத் தவிர வேறு உயிரினங்களுக்கு அன்பை, ஆதரவைக் கொடுப்பது தவறான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. பூனையால், குருவிகளால் வீட்டில் உள்ளவர்களுக்கு நன்மை இல்லையா? நாய் மாத்திரம் வீட்டில் உள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய, பிராணியாகத் தெரிகிறதே! அது குரைக்குமாம். காவல் காக்குமாம். குரைக்கும் நாய், கள்ளன் வரும் நேரம் எனக்கு ஓவர் ரைம் செய்ய முடியாதென்று குரைக்காமல் படுத்துவிட்டால்...? வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இந்த மனிதர்கள் பிராணிகளின் உறவுப் பந்தத்தைப் புரிந்து கொள்வது கஸ்ரம்தான். இங்கே செல்லப்பிராணிகள் உறவுகள் கொஞ்சம் வரையறை எல்லைகளோடுதான் உள்ளது. வெளிநாடுகளில் இரவு படுக்கையில் கூட பிராணிகள் அவர்களோடு படுத்தும் கிடக்கும். மலைப்பாம்போடு கூடப் படுத்திருப்பார்கள்.

— — — —

மனிதர்களிடமிருந்து உண்மையான பரிசம் , நேசம் கிடைக்காத நிலையில், தமது உணர்வுகளை, வேதனைகளை, மனிதர்கள் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள். ஒரு கதையைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினால்கூட அதைச் சலிப்புடன் கேட்கின்றார்கள். இந்த நிலையில்தான் இந்த வயது மட்டங்கள், மனிதர்கள் இப்படி ஐந்தறிவுள்ள பிராணிகளிடம் தமது உறவைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கிவிட்டார்களோ?

இதில் சக மனிதர்கள் செய்யும் போராட்டங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு விளங்கவில்லையே? ஒரு மனிதனது வேதனை, இழப்புக்கள், அவலங்கள் சக மனிதர்கள் விளங்காது போனால் யார் விளங்கிக் கொள்வார்கள். நண்பர் வீட்டில் நடந்த ஆச்சரியப்பட வைத்த விடயம் இது. தமது வளர்ப்பு நாய்க்கு மதிய உணவாகத் தமக்குப் பரிமாறப்பட்ட உணவையே கொடுத்தார்கள். அதாவது வழமையாக நாம் சாப்பிட்டு முடித்த எமது எச்சில்பட்ட உணவை அவர்கள் தமது நாய்க்குப் போடவில்லை. இந்த விடயம் அவருக்குத் திருப்தியாக இருந்தது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நண்பர் அந்த நாய்க்காக இனிப்பு, பிஸ்கெற், பணிஸ் என வாங்கிக் கொண்டு வருவதை அந்த நாய் தினமும் எதிர்பார்த்தபடி காத்து நிற்பது வேறு விடயம்.

— — — —

பிராணிகளை நேசிப்பவர்கள், அவைகளை மரியாதை கொடுத்துத்தான் அழைப்பார்கள். 'அவர் அப்படித்தான். அவருக்குப் பிடிக்காது. அவர் மச்சம் இல்லாமல் சாப்பிடமாட்டார்' இப்படியாகக் குடும்பத்தில் அவரையும் இணைத்துக்கொண்டுவிட்டார்கள். ஒரு சமயம் நான் வெளியூர் போனேன். அங்குள்ள எனது பெரியய்யாவைப் பார்ப்பதற்கு அவர் வீட்டில் பலபேர் இருப்பார்கள் என்று நினைத்தால் கடைசியில் அங்கே இருந்தது இரண்டே இரண்டு ஜீவன்கள் மாத்திரமே. அதில் ஒன்று நடுத்தர வயதுடைய பெண், மற்றையது அவர் வளர்த்த நாய். அதுக்கென உணவு, உறையுள் எல்லாமே அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு பிள்ளை அவரின் அனுமதி இல்லாமல் உள்ளே வர முடியாது. அந்தப் பெண் சிரித்தால் அவர் சிரிப்பார். அழுதால் அழுவார். கோபித்தால் கோபிப்பார். பெண் தூங்கினால் தூங்குவார்.

மொத்தத்தில் அந்த மகிழ்மதி சாம்ராஜ்ஜியத்தில் பாகுபலி அவர்தான். அந்தப் பெண்ணின் உறவுக்காரர்கள் அந்தப் பெண்ணை வெளிநாட்டுக்குக் கூப்பிட்டும் அவர் போகவில்லை.

"நான் வெளிநாடு போனால், அவர் தனித்துப் போவார். யாரும் என்னை மாதிரி இவரைப் பார்க்க மாட்டினம். அப்படி அவரை வளர்த்துப் போட்டன். நான் வெளியால போகேல்ல" என்றார். சிலருக்கு இது சிரிப்புக்கிடமாகவும் முட்டாள்தனமாகவும் இருக்கலாம். ஆனால் இதனால் கீடைக்கின்ற சந்தோசம், நிம்மதி அவருக்குத்தான் தெரியும்.

— — — —

வன்னி நோக்கிய இடப்பெயர்வின்போது எத்தனை பேர் தாம் சேகரித்த பொருள்களோடு வளர்ப்புப் பிராணிகளையும் கூட்டிச் சென்றார்கள். இந்த நேரத்தில் அவர்கள் மற்றவர்களின் கருத்துக்களை எடுத்துக் கொள்ளவில்லை. 2015ஆம் ஆண்டு மார்கழி மாதம் சென்னை- தமிழ்நாட்டில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கிலும் தமது உறவுகளோடு வளர்ப்புப் பிராணிகளையும் காப்பாற்றித் தூக்கிச் சென்றவர்கள் எத்தனைபேர்!

"வாழ்க்கையில் நீங்கள் அதிகம் பெற விரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாகக் கொடுங்கள்" சொன்னது ஸ்டோன். அன்பை அதிகமாகக் கொடுங்கள் பலனும் அதிகமாகக் கிடைக்கும்.

> "வாழ்க்கையில் நீங்கள் அதிகம் பெற விரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாகக் கொடுங்கள்"
> ஸ்டோன்

அண்மையில் படித்த விடயம் இது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமண்டா கிரீன் என்ற பெண்மணி ஆபிரிக்கா இனத்தைச் சேர்ந்த 17வயதை உடைய ஆமையொன்றைச் செல்லமாக வளர்க்கிறார். 9கிலோ எடையுள்ளது. தொடர்ந்து அதனுடன் வீட்டிலேயே இருப்பது அலுப்பாகி விட்டதால் அதை வெளியே அழைத்துச் செல்வதற்கு ஆள் தேவையென்று விளம்பரம் செய்தார். சம்பளம் ஒரு மணி நேரத்துக்கு 700 ரூபா. என்ன யோசிக்கிறீர்கள்...? இந்த ஆமையோடு யார் 'வாக்கிங்' போவார்கள் என்றா? ஆனால், அமலியா மெக்காலிஸ்டர் என்ற பெண் இந்த வேலையை ஏற்றுக் கொண்டுள்ளார். எங்களுக்குத் தெரிந்த ஒருவர் வீட்டில் கீரி வளர்க்கிறார். இதைப் படித்துவிட்டு அவரும் தன்னுடைய கீரியை 'வாக்கிங்' கூட்டிச் செல்ல ஆள் தேவையென்று விளம்பரம் செய்கிறாரோ தெரியாது....

(யாவும் கற்பனையல்ல)

கவிதை

விவேகானந்தனூர் சதீஸ்

## வக்கற்றவர்கள்

*சீதனத்துக்காய்ப் பிறப்பெடுத்த*
*சீமான்களே*
*உங்களில் ஒருவர்கூட*
*எந்தப் பெண்களுக்கும்*
*மாப்பிள்ளையாக வக்கற்றவர்களே...*

*பட்டினியில் பல காலம்*
*வாடி வதங்கினாலும்*
*விலைபேசும் ஆண்களுடன்*
*விருந்துண்ணத் தயாரில்லை*

*பாதைகளில் போகையில்*
*பாதகன் பார்வையது*
*மேலாடை மேல் மோதி*
*மானத்தை விலை பேசுது*

*பேருந்து நெருக்கடியில்*
*பாவிகளின் சேஷ்டைகள்*
*பாவையர் நம் வாயால்*
*பகர்ந்திட முடியவில்லை...*



ஒவ்வொரு மாதத்திலும், அதன் மூன்றாவது வாரத்தில், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகுக்கு வளம்சேர்த்து மறைந்த சிறுகதையாசிரியர் ஒருவரின் சிறுகதை மறுபிரசுரம் செய்யப்படும். அந்த வகையில் இந்த வாரம் அமரர் அ.ந.கந்தசாமியின் நள்ளிரவு எனும் சிறுகதை பிரசுரமாகின்றது.



# பத்தாயம்



அ. ந. கந்தசாமி 1924ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணையில் பிறந்தவர். ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் முன்னோடி எனப் போற்றப்படுகின்றவர். ஈழகேசரியில் தனது முதலாவது சிறுகதையை எழுதினார். தொடர்ந்து 'தேசபிமானி', 'சுதந்திரன்', 'வீரகேசரி' ஆகிய பத்திரிகைகளில் நாற்பது சிறுகதைகள் வரை எழுதினார். 'இரத்த உறவு', 'சந்திப்பு' என்பன இவருடைய தரமான சிறுகதைகள். 'மதமாற்றம்' இவரது சிறந்ததொரு நாடகம். சுவீந்திரன் என்ற பெயரில் கவிதைகளும் யாத்துள்ளார். பண்டிதர் திருமலைராயர், கலையரசன், சிப்பி, புரூனே என்னும் புனை பெயர்களிலும் எழுதியிருக்கிறார்.

## சிறுகதை

## நள்ளிரவு

அ.ந.கந்தசாமி

"நான் நாளைக்கு ஜெயிலுக்குப் போகிறேன்" என்றான் அவன் சர்வசாதாரணமாக.

அவன் பேச்சிலே துக்கமோ, துயரமோ, அல்லது ஏக்கத்தின் ரேகைகளோ தென்படவில்லை. அமைதியாகவும் ஒருவித விரக்தியோடும் பேசினான் அவன். என் மனதிலே சுந்தரம்பாள் பாடிய "சிறைச்சாலை ஈதென்ன செய்யும்' என்ற பாடல் ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் பாடலே கூறப்பட்ட 'சரீராபிமானமற்ற ஞான தீரரில்' இவன் ஒருவனோ என்று என்னுள் நானே கூறிக்கொண்டேன். ஆனால் அவன் பேச்சில் விரக்தி மட்டுமல்ல ஒருவித ஆனந்தம் கூட அலை வீசியது. ஜெயிலுக்குப் போவதற்கா இவ்வளவு தூரம் சந்தோஷப்படுகிறான் என்று எண்ணினேன் நான்.

என்னுடன் பேசிய 'அவன்' ரொம்பக்காலம் என்னுடன் பழகியவன் அல்ல. அன்றுநான் அகஸ்மாத்தாக அவனைச் சந்தித்தேன். இரவு சினிமாவில் இண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டுத் தன்னந்தனியாக கொழும்பு நகரில் எனது அறையை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென எங்கள் நட்புக்குதவியாக மழை பொழிய ஆரம்பித்தது. நான் ஓடோடிச் சென்று, மெயின் ஸ்ரீட்டும், பூந்தோட்ட வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கட்டடத்தில் ஒதுங்கிக்கொண்டேன். பழைய கிறிஸ்தவ தேவாலயங்களைப் போல் பிரமாண்டமான வளைவுகள் உள்ள வராந்தாவுடன் கூடிய இக்கட்டடத்தைப் பல தெருத்திகம்பரர்கள் தமது திருப்பள்ளிக்கு உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கம் என்பதை அப்படி ஒதுங்கியபோதுதான் தெரிந்து கொண்டேன்.

அங்குமிங்குமாய்ச் சிலர் நீட்டி நிமிர்ந்தும், மடங்கி முடங்கியும், கூனிக் குறுகியும் படுத்துக் கிடந்தார்கள். ஒருசிலர் நித்திரையாகிவிட்டார்கள். இன்னம் சிலர் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் சிலர் மெல்லிய குரலில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் அங்கே ஒதுங்கி ஒருசில வினாடிக்குள் மழையின் வேகம் அதிகரித்தது. சாரல் வராந்தாவின் உள் சுவர்வரை வீசி அடித்தது. படுத்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து விட்டார்கள். அங்குமிங்குமாக தமது படுக்கை இடங்களை மாற்றிக் கொண்டார்கள், அல்லது மாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சி எல்லாம் எனக்குப் புதுமையாகவும் கவர்ச்சி நிறைந்ததாகவும் தோன்றியது. அவற்றைப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்தேன். அப்பொழுதுதான் அங்கு மழையோடு போட்டி போட்டு வந்து வராந்தாவில் ஏறினான் அவன். பக்கத்திலே சந்தியிலிருந்த மின்சார வெளிச்சம் மழையால் மங்கி இருந்த போதிலும் வராந்தாவில் ஒரு சிறிது வீழ்ந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்திலே அவனைக் கவனித்தேன். உற்சாகமான சிரித்த முகம். சுத்தமான ஷரட்டும், கோடுகளிட்ட வெள்ளைச் சாரமும், இடையில் ஒரு புலித்தோல் பெல்ட்டும் காட்சி அளித்தன. வயதில் வாலிபன். நன்றாக நனைந்து போயிருந்தான்.

'இழவு பிடித்த மழை!' என்று கூறிய அவன் என்னைப் பார்த்து "நீங்கள் மழையினால் இங்கு அகப்பட்டுக் கொண்டீரர்களோ?" என்று கேட்டான்.

"ஆம்" என்றேன். அத்துடன் சம்பாஷிப்பது அந்த நேரத்தில் டானிக் போல உற்சாகம் தருவதாய் இருந்ததால் அதனைத் தொடர விரும்பி "நீ எங்க அவசரமாய்ப் போகின்றாய்?" என்றேன் சுமுகமாய்.

அவன் சிரித்தான். "இதுதான் நமது மாளிகை! படம் பார்த்துவிட்டு வருகிறேன் . படுப்பதற்கு"



இப்படியாக ஏற்பட்ட பேச்சு எங்கெல்லாமோ சுற்றி, எவ்விதமாகவோ வளைந்து வளைந்து சென்றது. அவன் நான் யார், எங்கேயிருக்கிறேன் என்பதையெல்லாம் விபரமாகக் கேட்டான். நான் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவன் என்றால் அவன் பயந்து திகைத்துப் போய் விடுவானோ என்று அஞ்சி ஒரு கடையிலே சேல்ஸ்மென் என்று கூறினேன்.

பேசிக்கொண்டிருக்கும்போதே அவன் சர்வசாதாரணமாக கஞ்சாச் சுருட்டொன்றைப் பற்றவைப்பதற்காக அதற்கு வேண்டிய முஸ்தீபுகளைச் செய்ய ஆரம்பித்தான். மடியில் இருந்த கஞ்சாவை எடுத்து கையில் வைத்துக் கசக்கினான். பின்னால் ஒரு சிகரட்டைச் சீர்குலைத்து அதனுள்ளே அதைப் பொதித்தான்.

என்னைப் பார்த்து "நீங்கள் கஞ்சா பிடிப்பதில்லையா?" என்றான் சிரித்துக்கொண்டு. "இல்லை" என் பாவத்தை முகத்தில் பரவவிட்டேன். "குளிருக்குக் கொஞ்சம் சூடேற்றிக் கொள்ளலாம், குடித்துப் பாருங்கள்" என்று வற்புறுத்தினான். அவன் பேச்சு, அவன் புன்னகை எல்லாமே என்னை அடிமை கொண்டிருந்தன. குடித்துத்தான் பார்ப்போமே என்று சிகரட்டை வாங்கினேன். அவன் தன் கையிலிருந்த நெருப்புப் பெட்டியால் பற்றவைத்துவிட்டான்.

கஞ்சாப் புகையை உள்ளே இழுத்தேன். அந்தக் குளிருக்கு அது சிறிது தெம்பு தரத்தான் செய்தது. மழையோ இப்போது மேலும் அடித்துப் பெய்யத் தொடங்கியது. பொட்டுப்பொட்டாக ஆங்காங்கு பரந்து கிடந்த மின்சார வெளிச்சத்தில் தார் ரோடு எண்ணெயால் மெழுகியது போலப் பளபளத்தது.

எனக்குப் போதை உண்டாகியதோ என்னவோ தெரியாது; ஆனால் மஸ்துப் பொருள்களின் போதைக்கு ஒரு அபூர்வசக்தி உண்டு. மனிதனின் தன்னுணர்ச்சியையும், வெட்கத்தையும், பயத்தையும், போக்கடித்து விடுகிறது. இதன் காரணமாகத்தான் சிலர் போதையின் வயப்பட்டதும் வேதாந்தம் பேசுகிறார்கள். பயத்தாலோ வெட்கத்தாலோ அவர்கள் உள்ளக் கூஜாக்களில் அடைபட்டிருந்த வேதாந்தம் மெல்ல வெளியே கிளம்ப லாகிரிப் போதை மூடியைத் திறந்து விடுகின்றது.

நானும் நண்பனும் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தோம். நான் ஐந்தாறு தடவை கஞ்சாவை இழுத்த பின்னர் குறைச் சிகரட்டை அவன் வாங்கிக் கொண்டான்.

நான் கேட்டேன்;

"நீ நாளைக்கு ஜெயிலுக்குப் போகிறேன் என்றாயே. ஏன் போகிறாய்? என்ன குற்றஞ்செய்தாய்?"

அவன் சிரித்தான். "அதோ பார்த்தீர்களா ஒரு பெண் முடங்கிப் படுத்திருக்கிறாள்! அவளைப் பலாத்காரம் செய்ததாகக் குற்றச்சாட்டு"

"ஒரு நாளிரவு கள்ளுக்கடை முடுக்கிலே அவளைப் பலாத்காரம் செய்கையில் பொலிஸார் பிடித்து வழங்குப் போட்டு விட்டனர்" என்று கூறி அவன் கலகல வெனச் சிரித்தான்.

"யார் அந்தப் பெண்?" என்றேன் ஆவலுடன்.

"அவளா? யாரென்று யாருக்குத் தெரியும்! ஆனால் அவள் பக்கத்திலே படுத்திருக்கிறதே குழந்தை, அது என் குழந்தைதான்!"

"அப்போ அவள் உன் மனைவியா?"

அவன் முகத்தைச் சுழித்தான். "அவள் எல்லோருக்கும் மனைவிதான். ஆனால் என்னிடம் மட்டும் அவளுக்குச் சிறிது அதிகப் பிரியம்! நானும் அப்படித்தான்!"

எனக்கு விடயம் ஒரே புதிராகிவிட்டது. கஞ்சா மயக்கத்தில் முன்னுக்குப் பின் முரணாக அவன் பேசுகிறானோ, அல்லது எனக்குத்தான் அவன் ஒன்று பேச வேறொன்று கேட்கிறதா என்ற சந்தேகம் ஜனித்தது.

எனது நண்பன் இப்பொழுது அந்தப் பெண்ணிருந்த பக்கத்துக்குச் சென்றான். நிச்சிந்தையாகத் துயின்று கொண்டிருந்த அவளுக்கு அருகில் சென்று "பேபி பேபி" என்று கூப்பிட்டான். அதை அவள் எதிர்பார்த்துத் துயின்று கொண்டிருந்தவள் போல எழுந்து உட்கார்ந்தாள். கண்களை கசக்கி விட்டுக் கொண்டாள். பின் அவர்கள் இருவரும் ஏதோ சில வார்த்தைகள் குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தனர். இரண்டு நிமிஷத்தில் நண்பன் மீண்டும் என்னிடம் வந்தான். அவன் கையில் வெற்றிலை பாக்கு நிறைய இருந்தது.

"நீங்கள் வெற்றிலை பாக்கு போடுவீங்களா?" என்று என்னிடம் கேட்டான் அவன். நான் வெற்றிலை பாக்குப் போடுவதில்லை. என் மனதில்



ஆச்சரியமும் இந்த வினோதமான காதலர்களின் தன்மையை அறிவதில் அவவாவும் அதிகமாகி இருந்தது. இவர்கள் காதலர்களா? அல்லது பலாத்கார வழக்கிலே சம்பந்தப்பட்ட இரு பகைவர்களா? அவன் கூறுவதின்படி அவர்கள் இரண்டுமென்று அர்த்தமாகிறது. குளிந்த நீர் கையை வைத்ததும் கையைச் சுட்டது என்று கூறுவதுபோல் இருந்தது. இந்த வினோதச் செய்தி. இதன் பூரா விவரங்களையும் அறிய வேண்டுமென்ற ஆவல் அடக்க முடியாமல் என் மனதிலே கிளம்பியது.

மீண்டும் சம்பாஷணையில் ஓட்டத்தை உண்டாக்குவதற்காக "நீ என்ன தொழில் செய்கிறாய்?" என்று அவனிடம் கேட்டேன்.

அவன் அர்த்த புஷ்டியுடன் புன்னகை புரிந்தான். "தொழில் எதுவென்றிருக்கிறது? எப்படியும் ஜீவனோபாயம் நடந்தாற் சரிதானே?" என்று வேதாந்தி போல் பேசினான் அவன்.

"அப்படியானால்..."என்று ஆரம்பித்த வசனத்தைப் பூர்த்தி செய்யாது நிறுத்தினேன் நான்.

அவன் சிரித்தான்.

மழை இப்பொழுது முன்னிலும் திடீர் வேகத்தோடு பெய்ய ஆரம்பித்தது. இடிகள் வானவெளியிலே உருண்டுருண்டு சப்தித்தன. வானம் தன் மூடிய கண்களைத் திறந்து உலகை ஒரு தடவை பார்த்து பின் படீரென்று இமைக் கதவுகளை மூடிக்கொள்வது போல மின்னல் ஒன்று பளிச்சிட்டு மறைந்தது.

எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. புத்திசாலியாகவும், நேர்மை உள்ளவனாகவும் தோன்றும் இவன் பிக்பாக்கட்டா? ஆம். அவன் நேர்மையுள்ளவன்தான். இல்லாவிட்டல் தான் பிக்பாக்கெட் என்பதைக் கூறி விடுவானா? இந்த முடிச்சுமாறிக்கும் சமூகத்தின் இதர கள்வர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. அவர்கள் தம்போக்கை மூடி மறைத்துக் கண்ணியம் நிறைந்தவர்களாக நடிக்கிறார்கள். இவனோ உண்மையைக் கூறிவிடுகிறான். இதன் காரணமாக என் உள்ளத்தில் ஒரு மகாத்மாவாக சத்தியவந்தனாகத் தோன்றினான் அவன்.

"அப்படியானால் உனக்கு ஒழுங்கான வருமானம் கிடைக்காதே! ஒருநாளைக்கு எவ்வளவு சம்பாதிப்பாய்?" என்று சாதாரணமாகக் கேட்டேன்.

உலகத்திலே எல்லோரும் பிக்பாக்ட்டைப் பற்றிப் பேசுகிறார்கள். ட்ராமிலும், பஸ்ஸிலும், சினிமா நெருக்கடியிலும், அங்கிங்கெனாதபடி நிறைந்திருப்பவன் போல, நகரத்தில் மடியிற் கனமுள்ள எவரும் அவனை ஞாபகப்படுத்தி அஞ்சிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஆயிரத்தில் ஒருவருக்குத்தானும் அவன் நேரில் காட்சியளிப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒருவக்க உடையைக் கொண்டு இவன் பிக்பாக் கட்டாயிருக்கலாம் என அனுமானிக்க முடிகிறதே அல்லாமல் நிச்சயம் செய்து கூறுவதற்கில்லை. பழைய காலத்து 'சதாரம்' நாடகத்தில் கள்ள உடைபோட்டு 'கொள்ளையடிக்கப் போவோமடா' என்று பாடிவரும் கொள்ளைக்காரர்கள் நாடகத்துக்குத் தான் சரியேயல்லால், வாழ்க்கையில் நாம் காணக்கூடியவர்கள் அல்ல. பிக்பாக்கட்டுகள் தீயணைக்கும் வீரர்கள் போல் அதற்கொன்றுள்ள உடையை உடுத்துக் கொண்டா மது தொழிலுக்குப் போகப் போகிறார்கள்? பார்க்கப் போனால் கடவுள் போல் இவர்களும் பலர் மனதிலே அரூபிகளாகத்தான் விளங்க முடியும். ஒரு சிலர் பிடிபடுவதும் உண்மைதான். ஆனால் அவர்கள் உண்மைக் குற்றவாளிகள்தாம் என்பதை யார் கண்டார்கள்.

என் மனதிலும் 'பிக்பாக்கெட்' என்பவன் நகரில் அங்கிங்கெனாதபடி நிறைந்திருக்கும் ஒரு அரூபியாகத்தான் இதுவரை இருந்தான்.

ஆனால் இப்பொழுதோ என் கண்முன் காட்சி தந்து விட்டான். என்பு தோல் போர்த்த சதையுடம்புடனே நிற்கும் அவனது அந்தரங்களை எல்லாம் கூடிய அளவு தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை. அந்த ஆசையில்தான் "எவ்வளவு சம்பாதிப்பாய்?" என்ற கேள்வி என் உள்ளத்தில் ஜனித்து வாயினால் வெளிப்பட்டது.

"மாதம் முடிந்ததும் இவ்வளவு கிடைக்கும் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடிய தொழில் அல்ல இது. சில சமயம் கிடைக்கும் சில சமயம் ஒன்றுமே கிடைக்காது"

எனக்கு இதிலே மனம் படியவில்லை. என் உள்ளத்தை அலைக் கழித்து அந்தப் பெண்ணின் விவகாரத்துக்கு எப்படி வருவது என்று தெரியவில்லை. இருந்தும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு "ஆமாம் நீ நாளைக்கு ஜெயிலுக்குப் போகிறாயே, உனக்குக் கவலையாய் இல்லையா?, பயம் கிடையாதா?" என்று அந்தத் திசைக்கு சம்பாஷணையைத் திருப்புவதற்குச் சாதகமான முறையில் என் பேச்சை ஆரம்பித்தேன்.

அவன் இதற்கும் தன் புன்னகையுடனேயே பதிலளித்தான். "பன்னிரண்டாவது தடவையாக ராஜா வீட்டுக்குப் போகிறேன். பயமா? எதற்கு?" என்றான் அவன்.

ஆரம்பத்திலிருந்தே அவன் பேச்சு, செயல் எல்லாம் எனக்குப் புதுமையாயிருந்தன. ஆனால் இப்பொழுதோ அந்தப் புதுமையின் உச்சியை நான் எட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

அவன் மேலும் தொடர்ந்தான். "ஜெயிலிலே எனக்கு எல்லோரும் நண்பர்கள்தான். உண்மையில் அங்கிருந்து நான் வெளியே வந்து ஒண்ணரை மாதந்தான் ஆகிறது. பத்துப் பன்னிரண்டு பேர்களைத் தவிர அனேகமாக மற்ற நண்பர்களெல்லாம் இன்னம் அங்குதான் இருப்பர்கள்..."


ஏதோ நண்பர்களைச் சந்திக்க வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டு செல்லும் ஒருவன் போல அவன் பேசினான். மறியற்சாலை அவனைத் தன் இருண்ட அறைகளைக் கொண்டு பயமுறுத்தவில்லை. அவன் வர்ணனையைப் பார்த்தால் அவனை அது மயக்கி அழைப்பது போலத் தெரிந்தது.

நான் அவன் முகத்தை நோக்கினேன். கஞ்சா நெருப்பு இப்பொழுது தன் முடிவான கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது. மழை நேரத்தில் குளிர்ந்த பாரமான காற்றினாற் போகும் புகை விரைவாக மேலெழுந்து மறையவில்லை. ஆறுதலாகச் சுருள் சுருளாக மாடிப்படிகளில் சிரத்தையோடு ஏறும் ஒரு குழந்தை போல புகை மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருந்தது. அதனூடாக அவன் கண்களைப் பார்த்தேன். அதில் ஒளியும் இன்பமும் அலைவீசிக் கொண்டிருந்ததைக் கண்டதும் ஆச்சரியம் மேலும் அதிகமாகியது.
"அப்போது சிறைக்குப் போவது உனக்குப் பிரியமென்று சொல்லு"
"சந்தேகமில்லாமல்"
"ஏன்?அங்கே என்ன அவ்வளவு விசேஷமிருக்கிறது?"
"என்ன இருக்கிறதா? அப்போது உங்களுக்குச் சிறையைப் பற்றி ஒன்றுமே தெரியாதென்று சொல்லுங்கள்"
குருவின் சொற்களை ஆவலுடன் எதிர்நோக்கும் பக்தி நிறைந்த ஒரு சிஷ்யன்போல் அவன் வார்த்தைகளை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.
"இந்த மழை ஓய்ந்ததன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டுக்கோ கடைக்கோ செல்வீர்கள். அடைமழை இரவுக்கும் நித்திரைக்கும் நல்ல பொருத்தம். நன்றாகத் தூக்கம் வருமல்லவா?
நான் தலையை 'ஆம்'என்ற பாவனையில் அசைத்தேன்.
"எனக்கும் தூக்கம் வரும். ஆனால் தூங்கத்தான் இடமில்லை! பார்த்தீர்களா நமது மாளிகை எப்படி ஈரமாய்ப் போய்விட்டதென்று"
கதை சுவாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்த நான் அப்போது தான் நிலத்தை நோக்கினேன்; காலிலே செருப்பு அணிந்து இருந்ததால் சுற்றிலுமிருந்த ஈரம் என்னை அவ்வளவாகத் தாக்கவில்லை. அவன் கால்களைப் நோக்கினேன். அவை ஈரத் தரையில் பதிந்து சிறிது வெளிறி இருந்தன.
குளிர்ந்த காற்றொன்று மழைச் சாரலை உள்ளே அடித்து வீசியது. உடம்பிலே சிலிர்ப்பும் நடுக்கமும் சிறிது தோன்றின.
"நீங்கள் சாப்பிட்டுவிட்டீர்களா? என்று என்னை விசாரித்தான் அந்த அதிசய நண்பன்.
"சாப்பிட்டுவிட்டுத்தான் படம் பார்க்கக் கிளம்பினேன்" என்றதும் அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். எதையோ பேச அவன் கூச்சமடைந்தானென்று தெரிந்தது.
பேசிக்கொண்டிருந்தவர்கள் மௌனமாகியதும் காதிலே மழையின் 'ஓ'வென்று இரைச்சல் ரீங்காரம் செய்ய ஆரம்பித்தது. அந்த ஓசையிலே ஒரு தனிமையுணர்ச்சி இருப்பது போல எனக்குப் பட்டது. வானம் யாரை நினைத்து இவ்வளவு கண்ணீரையும் கொட்டி ஓவென்று அழுது கொண்டிருக்கிறதோ? என்ற வினோதமான கற்பனை என் மனதிலே தோன்றியது.
"நீ சாப்பிட்டு விட்டாயா?" என்றேன்.
"இன்று இந்தக் கஞ்சாவோடு சரி! ஒரு டீ அடித்துவிட்டு படுக்க வேண்டியதுதான் ஆமாம், நீங்கள் கேட்டீர்களே, ஜெயிலிலே என்ன சுகமென்று. நேரத்துக்கு உணவு! இது போன்ற அடைமழை நேரத்திலி இருண்ட சிறைச்சாலை 'கம்' என்றிருக்கும். நல்லாக நித்திரை வரும்! அந்தக் கருங்கற் சுவர்களை மீறிக் குளிர் உள்ளே நுழைந்துவிட முடியாது..."
நான் திகைத்து விட்டேன்.
அடிமைத்தனத்திலே கிடைக்கும் சுகத்தை விரும்பிய இவன் சிறையை நாடுகிறான்! என் மனதைச் சிறிது நேரத்தின் முன் கவர்ந்து நின்ற அவனது உருவம் இப்பொழுது வெறுக்கத்தக்கதாகத் தோன்ற ஆரம்பித்தது. இப்படியும் ஒரு மனித ஜன்மம்! ஒரு வேளை ஆகாரத்துக்காகத் தனது சுதந்திரத்தையே விற்கத் தயாராகி விடுகிறதா?
"அப்படியானால் உன் சுதந்திரம் பறி போவதைப் பற்றி உனக்குக் கவலை இல்லையா?" என்றேன் நான்.

குற்றம் புரியாமலே குற்றம் புரிந்ததாகச் சட்டத்தை ஏமாற்றி அதனால் கிடைக்கும் தண்டனையை அடைந்து சுகிப்பதற்கு ஒருவன் முன்வருகிறான் என்றால் அது நம் சமுதாய அமைப்பின் ஓட்டையையே காட்டுகிறது என்ற எண்ணமும் என் உள்ளத்தில் பளிச்சிட்டது.

என் சிந்தனையில் புதிய அலைகளைக் கிளறிவிடும் அவன் பிக்பாக்கட் என்று என்னால் நம்ப முடியவில்லை. என் உள்ளத்திலே மீண்டும் மோகனரூபம் பெற்றான் அவன்.
"அப்படியானால் ஜெயிலுக்குப் போக நீயேதான் சந்தர்ப்பத்தை சிருஷ்டித்துக் கொண்டாயா?"
அவன் இதற்கும் சிரிப்புடனேயே பதில் தந்தான். அவனது கசந்த வாழ்விலே எப்படி இந்தச் சிரிப்பென்னும் இனிமை உதயம் ஆகிறது என்று ஆச்சரியப்பட்டேன் நான்.
"ஆம் அந்தப் பெண்ணின் ஒத்தாசையால் அது முடிந்தது. நான் என்ன சொன்னாலும் அவள் அதை மறுக்க மாட்டள். அவளுக்கு என் மீது அவ்வளவு பிரியம். அன்று பொலிஸ்காரர் ரோந்துவரும் நேரத்தில் பலாத்கார நாடகத்தை நடத்தினோம். அவள் பலே கெட்டிக்காரி. 'டவர்ஹால்' நடவடிக்கை கூட அவள் மாதிரி நடக்க மாட்டார்கள்! அவ்வளவு கூச்சல் போட்டாள் அவள்.. அடுத்த நாள் கோட்டில் ஆஜரானோம்" என்று கூறிச் சற்று நிறுத்தினான் அவன்.
"அங்கே குற்றத்தை ஒப்புக்கொண்டாயாக்கும்" என்றேன் நான்.
"சுதந்திரம்! ஜெயிலுக்குப் போனதும் அடுத்த வேளை உணவு எங்கே இருந்து எப்படிக் கிடைக்கும் என்பது போன்ற கவலையிலிருந்து விடுதலை கிடைக்குமல்லவா? என்றான் அவன்.
"இல்லை! நாளை தவணையன்றுதான் ஒப்புக்கொள்ளப் போகிறேன்" என்று விளக்கினான் அவன். இதுவரை பிணையிலிருந்து வருவதாகவும் அவனது கோஷ்டியில் ஒருவன் இப்பொழுது வர்த்தகத் துறையில் சிறிது முன்னேறி வந்ததாகவும் அவனே தனக்குப் பிணை கொடுக்க முன்வந்ததாகவும் மற்ற விவரங்களையும் தெளிவுபடுத்தினான்.
"நாளை குற்றத்தை ஒப்புக்கொண்டால் குறைந்த பட்சம் ஆறுமாதம் சிறைவாசம் நிச்சயம்!"
விஷமம் செய்து 'ஓ'வென்று கூச்சலிட்டு அழுதுகொண்டிருந்த இளம் சிறுமி ஒருத்தி படிப்படியே காரம் குறைந்து பின்னர் நீண்ட நேரம் சிணுங்கிக்கொண்டு உட்கார்ந்து விடுவது போல வேகமும் வலியும் குன்றி மழை மந்த நடைபோட்டுக்கொண்டிருந்தது. என்னுடைய உள்ளத்தில் தாண்டவமாடிய பல கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விட்டதால் அங்கும் சிந்தனைக்குகந்த ஒரு மந்தமான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது. மணிக்கூண்டுக் கோபுரம் சமீபத்தில்தான் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். இரண்டு மணிக்குப் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. ஒரு கூப்பிடு தொலைவில் தேநீர்க்கடை இருந்தது. தூறலிடையே அங்கு நண்பனையும் அழைத்துச் சென்று தேநீர் அருந்தினேன். நானே தேநீருக்குப் பணத்தைச் செலுத்தினேன். கடையிலிருந்துவெளியே வரும்போது மழை முற்றாக நின்று விட்டது. அவனிடம் விடைபெற்றுக்கொண்டு நான் ஜம்பட்டா வீதியில் உள்ள என் விடுதியை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.
சிறையை விரும்பி அங்கே செல்ல முனைந்த அந்த இளைஞன் எழுப்பிய எண்ணங்கள் மனதிலேசுழன்று கொண்டிருந்தன. அவன் கல்லால் ஆகிய சிறையை விரும்புவது நாட்டிலுள்ள பசி பட்டினி என்னும் சிறைகளிலிருந்து ஓரளவு விடுபடவே என்பதை நினைத்ததும் தான் அச்சிறைகள் எவ்வளவு பயங்கரமானவை என்பது எனக்குத் தெரிய ஆரம்பித்து. குற்றம் புரியாமலே குற்றம் புரிந்ததாகச் சட்டத்தை ஏமாற்றி அதனால் கிடைக்கும் தண்டனையை அடைந்து சுகிப்பதற்கு ஒருவன் முன்வருகிறான் என்றால் அது நம் சமுதாய அமைப்பின் ஓட்டையையே காட்டுகிறது என்ற எண்ணமும் என் உள்ளத்தில் பளிச்சிட்டது.
வீதியிலே யாருமில்லை. என் செருப்பின் சப்தம் மட்டுமே என்னைப் பயமுறுத்துவதுபோல ஒலித்துக் கொண்டிருந்தது. யாரோ ஒருவன் ஒரு குறுக்குத் தெருவில் இருந்து ஒரு 'கொக்கை'த்தடியுடன் அங்கே பிரசன்னமானான்.
மழையின் காரணமாக எங்கோ ஒதுங்கி இருந்து விட்ட நகரசபையின் இருட்டிப்புத் தொழிலாளியான அவன் மின்சார தீபங்களை அணைத்துச் சென்று கொண்டிருந்தான். இருளின் தூதுவனாக நடந்து கொண்டிருந்த அவன் மக்கள் வாழ்வில் இருளைப் பரப்பி நின்ற இன்றைய சமுதாயத்தைத்தான் எனக்கு ஞாபமூட்டிக் கொண்டிருந்தான்.

# அறிந்த மிருகம்



2

## அறியாத கதை

கட்டுரை

ஏ. ஜே. ஞானேந்திரன்



நடப்பதையும், பாய்ந்து, பாய்ந்து ஓடுவதையும் தான் ஒட்டகச் சிவிங்கிகளால் செய்ய முடியும். பின்காலையும் முன்காலையும் ஒரே நேரத்தில் முன்னோக்கி அசையவைத்து, தாவி ஓடுகின்றது ஒட்டகச்சிவிங்கி. ஓடும்போது வாலைக் கிளப்பிக் கொண்டு ஓடுவதும், தலையும் கழுத்தும் பின்னுக்கும் முன்னுக்குமாக அசைவதும் இதன் இயல்பாகும். அதிவேகமாக இவற்றால் மணிக்கு 67கி.மீ(37மைல்கள்) வேகத்தில் ஓடமுடியும்.

முலையூட்டிகளில் மிகக் குறைவான நேரம் உறங்குவது ஒட்டகச்சிவிங்கிகள்தான்! தினமும் சராசரியாக 4 மணி நேரம் உறங்கினால் இதற்குப் போதுமாயிருக்கிறது. நிலத்தில் கிடந்து, தன் தலையைப் பின்பக்கம் சுருட்டி பின்னங்காலில் நிறுத்தி வைத்துக் கொண்டு இது உறங்கும். இதனுடைய உடலமைப்பு, இதனை நீந்த முடியாமல் தடுக்கின்றது. எனவே நீச்சல் என்பது இதற்கு மிகச் சிரமமான ஒன்று! இதன் உடல் உரோமத்தில் ஒட்டுண்ணிகளை விரட்ட உதவும் இரசாயணப் பொருள்கள் நிறைய இருக்கின்றன. வேறுபட்ட மணங்களைக் கொண்ட 11வரையான இரசாயனத் திரவங்கள் இவற்றின் உரோமங்களில் இருக்கின்றனவாம். பெண் மிருகங்களை விட ஆண் அதிக அளவு செறிவான மணத்தைக் கொண்டிருப்பதாகவும், இவற்றின் பாலியல் வாழ்வில் இது சம்பந்தப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

### ஆண், பெண் என்று எப்படிப் பிரித்தறிவது?

சிவிங்கிகளில் ஆணின் கொம்புகள் முனைப்பகுதியில் மொட்டையாக இருக்கும். பெண்ணின் கொம்புகளோ கொத்து முடியைக் கொண்டதாக இருக்கும். ஆணின் கொம்புகள் அளவில் பெரிதானவையும் கூட! கொம்புகளைச் சதை மூடியபடிதான் இருக்கும். ஆண் மிருகங்களின் கழுத்து, அதே வயதையுடைய பெண் சிவிங்கிகளை விட நீண்டதாக இருக்கிறது. இவை தமக்குள் சண்டை போடுவதும் நிகழ்கின்றது. தங்கள் தங்கள் கழுத்துகளையே இவை சண்டை போடும் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. 'நெக்கிங்' என்று அழைக்கப்படும் இந்தச் சண்டை முறையால், இவற்றுக்கு எந்தக் காயமும் ஏற்படுவதில்லை. சண்டை பெரிதாக இல்லையென்றால், தமது தலையையும், கழுத்தையும், மற்றையதின் கழுத்தோடும், தலையோடும் மென்மையாக தேய்க்கும். மோதல் கொஞ்சம் தீவிரமாகும்போது, இப்படித் தேய்த்துக் கொண்டு, தலையையும், கழுத்தையும், தோள்பட்டையையும் ஒருவர்மீது ஒருவர் சாய்க்கமுற்படும்போது, அதற்கு ஈடுகொடுக்க முடியாத சிவிங்கி, அழுத்தம் காரணமாக நிமிர்ந்து நிற்க முடியாமல், "என்னைவிடு சாமி" என்று சொல்லிக் கொண்டு, அங்கிருந்து போய்விடுகின்றது.

### இவை கூட்டங்களாகத் திரிகின்றனவா?

இவை கூட்டங்களாகத் திரியும் மிருகங்களா? என்று ஆராய்ந்ததில், இந்த மிருகங்களுக்குள் அவ்வளவான நெருக்கமான உறவு, இல்லை என்றே தெரிகிறது. கூட்டம் என்று பார்த்தால், ஏறத்தாழ ஒரு கிலோ மீற்றர் தொலைவில் நின்று கொண்டு, ஒரே திசையை நோக்கி நகர்ந்தபடி மேய்கின்ற மிருகங்களே ஒரே கூட்டத்து மிருகங்கள் என்று கண்டறிந்திருக்கின்றார்கள். சில மிருகங்களே இந்தக் கூட்டத்தில் இருக்கும். 40 மிருகங்கள் வரையுள்ள கூட்டங்கள் மிக அரிதாகக் காணப்பபட்டுள்ளன. பெண் மிருகங்கள் பொதுவாகச் சில இளம் ஆண் மிருகங்களுடன் கூட்டமாகக் காணப்படுதுண்டு. இந்தக் கூட்டத்தில் பன்னிரண்டு மிருகங்களுக்கு மேல் இருப்பதில்லை.

### பாலியல் வாழ்க்கை எப்படியானது?

இதுவும் சற்று வித்தியாசமானதுதான்! ஆண் மிருகங்கள், எந்தவொரு பெண் மிருகத்துடனும் இணைசேர்ந்து கொள்கின்றன. பல பெண் மிருகங்களுடனும் உறவு கொண்டு அவற்றைக் கருவடையச் செய்கின்றன. எடுத்த எடுப்பில் இது சாத்தியப்பட்டு விடுவதில்லை. தம்மை அணுகும் ஆண் வயதில் மூத்ததாகவும், ஆளுமைச் சக்தி கொண்டதாகவும் இருந்தால்தான் தம்மை அணுகுவதற்குப் பெண் மிருகங்கள் அனுமதிக்கின்றன. நல்ல பொருத்தமான, இளமையான பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ள முயற்சிப்பது ஆணின் வழமை. அத்துடன் தன்னினச்சேர்க்கை விரும்பிகள் இந்த மிருகங்கள். ஆண் மிருகங்கள்தான் அதிகமாகத் தமக்குள் இப்படியான சேர்க்கையை நாடுகின்றன. இதுபற்றி ஆராய்ந்ததில், இந்தப் பழக்கம் 94வீதமான ஆண்மிருகங்களுக்கும், ஒரு வீதமாளவில் பெண் மிருகங்களுக்கும் இருக்கின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

### நின்ற நிலையில் தூக்கம்!

பொதுவாகவே அமைதியான சுபாவம் கொண்ட இந்த மிருகங்கள், வித்தியாசமான ஒலிகளை எழுப்பித் தமக்குள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றன. உடல் உறவு வைத்துக் கொள்ளும் சமயத்தில், பெரிதாக இருமுவது போன்ற ஒலிகளை எழுப்புகின்றன. பெண் மிருகங்கள் தங்கள் கன்றுகளை அழைக்க, வேறொரு விதமான ஒலியை எழுப்புகின்றன. கன்றுகளோ ஆட்டுக்குட்டிகளைப்போல சப்தம் எழுப்புகின்றன. முனகுதல், புல்லாங்குழல் ஊதுவதை ஒத்த சப்தம், பசு கத்துவது போன்ற சத்தம் என்று வெவ்வேறு ஒலிகளை ஒட்டகச் சிவிங்கிகள் எழுப்புகின்றன. அத்துடன் யானைகளைப் போல தொலைதூரத்திலுள்ள மிருகங்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்கின்றன. நின்ற நிலையில் இவற்றால் ஓய்வெடுக்க முடிவது, இறைவன் சிருஷ்டியில் இன்னொரு விந்தை. ஒரே நேரத்தில் இவை 5 நிமிடங்களுக்கு மேல் தூங்குவதில்லை என்பது இன்னொரு புதுமையான தகவல்.

### வாழ்க்கை வட்டம்

ஒரு பெண் மிருகம் பிறந்து தனது ஐந்தாவது வருடத்தில் தாயாகும் தன்மையை அடைகிறது. 15 மாதங்கள் வரை தன் வயிற்றில் கருவைச் சுமக்கிறது. 20 மாத இடைவெளியில் அது மீண்டும் தாய்மை அடைகின்றது. பிறந்த கன்று 6அடி உயரமானதாகவும், 150இறாத்தல் எடைகொண்டதாகவும் இருக்கும். பிறந்த ஒரு மணி நேரத்தில் கன்று நடக்க ஆரம்பித்துவிடும். பிறக்கும்போதே கொம்புகளுடன்தான் இவை பிறக்கின்றன. இவற்றின் சராசரி ஆயுள் ஏறத்தாழ 25வருடங்கள் என்று சொல்லப்படுகின்றது.

### மனித ஆசையால் அழிவு நிலை

ஆபிரிக்காவின் முழுப் பிராந்தியங்களிலும், ஒட்டகச்சிசிவிங்கிகள் வேட்டைகாரர்களின் இலக்காகவே இருந்துவருகின்றன. இவற்றின் வால், தோல், இறைச்சி போன்றவைக்காகவே இவை கொல்லப்பட்டு வருகின்றன. இதன் வாலை வைத்திருந்தால், வீட்டில் நல்ல அதிஷ்டத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை இருந்துவருகின்றது. ஈக்களைக் கலைப்பதற்கும் இது ஒரு நல்ல உபகரணமாகப் பயன்பட்டு வருகின்றது. இதன் தோல் கேடயத்துக்கும், செருப்புக்கும், மேளம் செய்வதற்கும் பயன்படுகின்றது. தோலை எரிக்கும்போது வெளிக்கிளம்பும் புகை, மூக்கால் குருதி சிந்துவதைத் தடுக்கும் வைத்தியத்துக்கு, ஆபிரிக்காவின் சில இன மருத்துவர்களால் உபயோகிக்கப்படுகின்றது. இதன் முடியைக் கொண்டு, கழுத்தணிகள், காப்புகள் செய்கின்றார்கள். இதனால் ஒய்யாரமாக நடந்து வரும் இந்த ஒட்டகச்சிவிங்கிகள் அழிக்கபட்டு வருகின்றன. மனிதனுடைய பேராசை அழிந்தால்தான், எந்த விலங்கும் தப்பிப் பிழைக்கும் என்பதற்கு, இந்த ஒட்டகச்சிவிங்கியும் விதிவிலக்கல்ல!



---

கவிதைகள்

சத்தி

## இத்தனை மாற்றங்கள்

கறுத்த இரவின்
மத்தியில் நீ,
திசைகள் தீண்டிட
விரல் கொண்டு
தேடுகிறேன்
இருள் முழுவதுமாய்
விடிவதாய்
இரவுமில்லை
அன்று நிலவும்
மறையவில்லை
நின் ஒளிர்முகம்
என் கண் முன்னே
தோன்றிடத்தான்
இத்தனை மாற்றங்களா...?



## உன்னைப்போல்

நீ நடை பழகிட
பெறும் நகரங்கள்
ஒவ்வொன்றும்
கிராமங்கள்தான்
நின் விரல் தீண்டிட
ஒவ்வொரு தாவரமும்
நெற்கதிர்தான்...
வா இந்தத் தரையெங்கும்
நீ நடை பழகிடு
நான் ஆடியில் விதைத்து
மார்கழியில் கண்ட
நிறைமாதக் கர்ப்பினி
உனைப்போல்
செழுமையாய்
வித்துக்களை
ஈன்றெடுக்கட்டும்



## நான் உன் மடியோடு....

நமைத் தீண்டிய
தென்றலும்
வெப்பம் கொண்டு
வெளியேறியது
இதழ்கள் பேசிய
வார்த்தைகள் யாவும்
இடைகளை மெல்ல
இருக்கிட பெருமூச்சென
புறப்படுகின்றன
உஸ்ணம் தணித்த
ஒவ்வொரு பொழுதுகளும்
குளுமைதான் நீ என்னோடு
நான் உன் மடியோடு





## மத்திய கிழக்கு பதறுகிறது

மத்திய கிழக்கு நாடுகளை உலுப்பி எடுத்துள்ளது நில நடுக்கமொன்று.

ஈராக் - ஈரான் நாடுகளின் எல்லை நகரங்களில் கடந்த திங்கட்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 7.2 அலகுகளாகப் பதிவான இந்த நில அதிர்வால் மத்திய கிழக்கு நாடுகள் மிகையாகப் பாதிக்கப்பட்டன. குறிப்பாக ஈரானின் ஹலாப்ஜா நகரம் பெரும் இடிபாடுகளுக்கு உள்ளானது. சுமார் 450 பேர் உயிரிழந்தனர். ஈரான், ஈராக்கில் மட்டுமல்லாது குவைத், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலும் இலேசான நிலஅதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் மத்திய கிழக்கு பாடாய்ப்படுகின்ற நிலையில் இந்த நில அதிர்வு பெரும் சோகத்தை உண்டு பண்ணியுள்ளது.

*"இயற்கையும் இடறுகிறது..."*

வேர்ல்ட் ரவுண்ட்



# கட்டலோனியாவும் விடுவதாயில்லை

ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து தனிநாடாகச் செல்வதில் பெரும்பான்மையான கட்டலோனியர்கள் உறுதியாகவுள்ளனர்.

ஸ்பெய்னின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணம் கட்டலோனியா. ஸ்பெய்னின் வருவாய், முதலீடு, சனத்தொகை, சுற்றுலாப் பயணிகளின் வருகை என்று அத்தனை விடயங்களிலும் கட்டலோனியாவின் பங்கு மிகவும் உச்சம். இதனால் கடந்த ஐந்து வருடங்களாக அங்கு தனிநாட்டுக் கோரிக்கைகளும் வலுப்பெற்றுள்ளன. இது தொடர்பான வாக்கெடுப்பையும் கடந்த மாதம் முதலாம் திகதி கட்டலோனியா நடத்தியது. பதிவான 2.3 மில்லியன் வாக்குகளில் 90 சதவீதமானவை பிரிவதற்கு ஆதரவாக அமைந்தன. இதையடுத்து கட்டலோனியாவை கடந்த மாதம் தனிநாடாக அறிவித்தது கட்டலோனிய மாநில அரசு. இந்த அறிவிப்பு வெளிவந்த அடுத்த சில மணிநேரங்களில் ஸ்பெய்னின் மத்திய அரசான மட்ரிட், கட்டலோனியாவின் மாநில ஆட்சியைக் கலைத்து உத்தரவிட்டது மட்டுமல்லாமல் கட்டலோனியத் தலைவர்கள் சிலரையும் கைதுசெய்தது.

கட்டலோனியாவின் முன்னாள் தலைவர் பூஜ்டியமன்டுக்கு எதிராக மட்ரிட் பிடியாணை பிறப்பித்துள்ளது. எனினும் பெல்ஜியம் பூஜ்டியமன்டுக்குத் தஞ்சம் கொடுத்துள்ளது. கட்டலோனியா விவகாரம் நாளுக்கு நாள் சூடுபிடித்து வரும் நிலையில் தமது மாநிலத்தைத் தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி லட்சக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். பார்சிலோனா நகரில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் சுமார் 4 லட்சம் மக்கள் பங்கெடுத்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

*"கட்டலோனியாவின் கோரிக்கைகள் மேலும் வலுப்பெறுகின்றன..."*

பிரகாஸ்

## ஹிட்லரை காணவில்லை



இந்தோனேசியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த ஹிட்லரின் மெழுகுச்சிலை பல போராட்டங்களுக்கு பின்னர் நீக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் டி மாட்டா டிரிக் ஐ என்ற அருங்காட்சியம் உள்ளது. உலகப்பிரபலமான இந்த அருங்காட்சியகத்தில் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க சிலைகள் மற்றும் ஒளிப்படங்கள் உள்ளன. பல உலகப் பிரபலங்களின் மெழுகுச்சிலைகள் உள்ளன. அவற்றில் ஹிட்லரின் மெழுகுச் சிலையும் ஒன்று. சர்வாதிகாரியான ஹிட்லரின் மெழுகுச் சிலையை நீக்க வேண்டும் என்று தெரிவித்து எதிர்ப்புக் குரல்கள் வலுத்தன. இதையடுத்து ஹிட்லரின் சிலை அவசரஅவசரமாக அகற்றப்பட்டது.

*"என்ன இது ஹிட்லருக்கு வந்த சோதனை..."*




## 5 லட்சம் கோடி

கடந்த நிதியாண்டில் அன்னிய நாடுகளில் இருந்து வந்து கல்வி கற்றவர்களின் மூலம் இலங்கை மதிப்பில் சுமார் 5 லட்சம் கோடி ரூபாவை வருவாயாகப் பெற்றுள்ளது அமெரிக்கா.

அமெரிக்காவின் பன்னாட்டுக் கல்வி மையம் 2016 17 கல்வியாண்டுக்கான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதிலேயே இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அமெரிக்காவில் உள்ள கல்வி நிறுவனங்களில் தற்போது 10 லட்சத்து 80ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களின் மூலமே இந்த இமாலய வருமானத்தை அமெரிக்கா குவித்துள்ளது.

*"அறிவும் அமெரிக்காதான்... ஆயுதமும் அமெரிக்காதான்..."*





## விளம்பரத்துக்காக பறந்தார் இயேசு

உலகப் பிரபலமான இயேசு சிலையொன்றை விளம்பரத்துக்காகப் பயன்படுத்தியுள்ளது பிரபல விளையாட்டு நிறுவனமொன்று.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் உலகின் நான்காவது மிகப்பெரிய இயேசு சிலை உள்ளது. இந்தச் சிலையை நேரில் பார்க்க வேண்டும் என்பதற்காகவே ரியோ டி ஜெனிரோ நகருக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகம். ரியோவின் எந்தப் பகுதியில் நின்று பார்த்தாலும் இந்தச் சிலை தெரியுமாம். அந்த அளவுக்குப் பிரமாண்டமானது அது.

உலகப் பிரபலமான இந்தச் சிலையைப் போல் வெப்பக்காற்றில் இயங்கும் மிகப்பெரிய பலூன் ஒன்று ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பறக்கவிடப்பட்டுள்ளது. நிறுவனமொன்றின் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைக்காகவே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புக்கள் வலுப்பெற்றுள்ள போதிலும், சர்ச்சைகளுக்கு நடுவே விளம்பரப்படுத்தல் வெற்றிபெற்றதென்னமோ உண்மை தான்.

*"பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்... இவர்கள் பாவங்களை மன்னியும்..."*








இஸ்ரோவின் ரொக்கெட் ஏவு தளமான ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அருகில் உப்பங்கழி ஏரிப்பகுதியை ஒட்டிய கிராமம் காட்டூர். குடிநீர் ஆதாரத்தை இழந்து அதற்காகப் போராடி வருகிறது அந்தக் கிராமம். அங்கே வாழும் ஏழைக் குடும்பங்களில் சுனு லட்சுமியின் குடும்பமும் ஒன்று. கருவேல முள் வெட்டும் வேலைக்குச் செல்லும்போது, தன் மகன், மகளை அழைத்துச் செல்கிறாள். அந்தப் பகுதியில் தோண்டப்பட்டு, மூடாமல் விடப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் எதிர்பாராதவிதமாக, விழுந்துவிடுகிறாள் சிறுமி. பெற்றோரும், ஊரும் கதற, ஊடகங்கள் ஓடிவர, குழந்தையை மீட்கும் பணியில் நேரடியாகக் களத்துக்கு வருகிறார் மாவட்ட ஆட்சியரான நயன்தாரா. அதிகாரவர்க்கம், ஊடகங்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகளிடம் இருந்து வரும் அழுத்தங்களை எதிர்கொண்டு, அவரால் அந்தக் குழந்தையை மீட்க முடிந்ததா, இல்லையா என்பதுதான் கதை.

### இந்தியத் தேசத்தின் அப்பட்டங்கள்

தமிழ்த் திரைப்பட உலகத்துக்கே உரிய எந்த ஒரு தொடுகையும் இல்லாமல் கச்சிதமான திரைக்கதையுடன் படம் படைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் கோபி நயினார். ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஒவ்வொரு முறையும் ரொக்கெட் விண்ணில் சீறிப்பாயும்போதும், அந்தக் கிராம மக்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு அடிப்படைத் தேவையான தண்ணீரைக்கூட வழங்காமல் இருக்கும் அரசின் முகத்திரையைப் பட்டவர்த்தனமாகக் கிழித்திருக்கிறது இந்தப் படம்.

விண்ணுக்கு ரொக்கெட்களை ஏவிக்கொண்டிருக்கும் நாட்டில், குழிக்குள் விழும் குழந்தைகளை மீட்க உருப்படியான கருவிகள் இல்லையே என்ற வேதனையை அறச்சீற்றத்தோடு கூறுகிறது. குழந்தை ஆழ்துளைக் கிணற்றில் விழுந்ததுமே, 'புறக்கணிக்கப்பட்ட மக்களின் இந்தியா இதுதான்' என்று நெற்றிப் பொட்டில் அறைகிறது. பெரும்பான்மை மக்களால் உருவாவதுதான் உண்மையான ஜனநாயகம், அரசு. அதிகார வர்க்கம் முன்னிறுத்தும் ஜனநாயகத்துக்கு கீழ்தான் ஒரு உயர் அதிகாரி ஏவல் செய்யவேண்டி இருக்கிறது என்பதை, நயன்தாராவின் போராட்டம் காட்டுகிறது.

### நடிப்பில் நயன்தாரா

'கலெக்டர் மதிவதனி' என்ற கதாபாத்திரத்தில் தமிழ்த் திரையுலகில் வேறு எவரையும் பொருத்திப் பார்க்க முடியாத அளவுக்குத் தன் நடிப்பில் நியாயம் சேர்த்திருக்கிறார் நயன்தாரா. கூரிய பார்வை, கம்பீர நடை, பக்குவ நடிப்பு, நுண்ணிய உணர்வுகளை வெளிப்படுத்தும் கனிவு என மதிவதனியாகவே மாறி இருக்கிறார். முழுத் திரைப் படத்துக்கும் சேர்த்து இரண்டே இரண்டு புடவைகளை மட்டுமே அணிந்து நடித்திருக்கும் நயன்தாராவுக்கு, மிகச்சிறிய கதாபாத்திரம்தான் என்றாலும், அவரது வாழ்நாளின் மிக முக்கிய கதாபாத்திரமாக மாறிவிடுகிறது 'மதிவதனி'. "நான் ஒரு ஜனநாயகவாதி", "எனக்குப் பவர் பொலிடிக்ஸ் தெரியாது", "என்னால் மக்களைக் குறைசொல்ல முடியாது", "ஓர் அடிமையால் இன்னொரு அடிமைக்குச் சேவை செய்ய முடியாது" என்று மதிவதனி பேசும் வசனங்கள், இயக்குநரின் தெளிவான அறம் சார்ந்த பார்வையை வெளிப்படுத்துகின்றன.

### ஏனைய பாத்திரங்கள்

சுமதியாக நடித்துள்ள சுனு லட்சுமி, குழந்தை தன்ஷிகாவாக வரும் குழந்தை நட்சத்திரம் மகாலட்சுமி ஆகியோரும் வெகுவாக ஈர்க்கின்றனர். சிறுமியின் தந்தையாக நடித்துள்ள ராமச்சந்திரன் துரைராஜ், 'காக்கா முட்டை' ரமேஷ், விக்னேஷ், பழனி பட்டாளம் என மற்றக் கதாபாத்திரங்களும் தனித்து நிற்கின்றன.

### ஒளிப்பதிவு, இசை

குடிநீர் இல்லாத நிலப்பகுதி, அங்குள்ள வாழ்க்கை, குழந்தை மீட்புக்களம் ஆகியவற்றை மிக நம்பகமாக முன்னிறுத்துகிறது ஓம்பிரகாஷின் ஒளிப்பதிவு. ஏழைகளின் பரிதவிப்பு, பதற்றத்தை நமக்குள்ளும் கடத்துகிறது ஜிப்ரானின் பின்னணி இசை. கு.உமாதேவியின் பாடல் வரிகள் எளிய மக்களின் போர்க்குணத்தைப் பிரதி பலிக்கின்றன. படத்தில் இடைச்செருகலாக வரும் தொலைக்காட்சி விவாதங்கள், சிறுமியை மீட்கும் காட்சிகள் பார்வையாளர்கள் எதிர்கொள்ளும் உணர்ச்சி அழுத்தத்தை மட்டுப்படுத்த உதவுகின்றன. சாதாரண மக்களின் அரசியலை அழுத்தமாகப் பேசியிருக்கும் 'அறத்'தைக் கொண்டாட வேண்டியதும் அறம்தான்!

**பரவாயில்லை ரகம்**

**தமிழ் சினிமா விமர்சனம்**

ராதிகாவின் மூத்த மகன் உதயநிதி ஸ்டாலின். மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்கிறார். பொலிஸ் அதிகாரியின் தங்கை மஞ்சிமா மோகனும் இவரும் காதலிக்கின்றனர். மென் பொருள் நிறுவனத்தின் ஆள்குறைப்பு நடவடிக்கையால் உதயநிதியின் வேலை போகிறது. அம்மா வருத்தப்படுவார் என்பதால் சொல்லாமல் மறைக்கிறார். வட்டிக்குக் கடன் வாங்கியும், காதலியின் உதவியுடனும் வீட்டுக் கடனுக்கு வட்டி செலுத்துகிறார். இதற்கிடையில், இவர்களது காதல் விவகாரம் மஞ்சிமாவின் அண்ணனான பொலிஸ் அதிகாரி ஆர்.கே.சுரேஷுக்குத் தெரியவர, பிரச்சினையாகிறது. இதனால், இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்கின்றனர். இன்னொருபுறம், டப்பிங் கலைஞர் சூரி. இவர்கள் இருவரது வாழ்க்கையும் தனித்தனியே பயணிக்கிறது. இந்த நிலையில், உத்தரப் பிரதேசச் சிறையில் குண்டு வைத்து அங்கிருந்து தப்பிக்கிறார் தீவிரவாதி சோட்டா. அடுத்த குண்டுவெடிப்புக்கான திட்டத்துடன் சென்னைக்கு வருகிறார். எதேச்சையாக சூரியும், உதயநிதியும் அவரை வெவ்வேறு தருணங்களில் சந்திக்கின்றனர். இதனால், இவர்கள் மீதும் பொலிசுக்குச் சந்தேகம் வருகிறது. சோட்டாவுக்கும், தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என இவர்கள் நிரூபிப்பதும், உதயநிதி, சூரி, மஞ்சிமா மோகன் கூட்டணி, பொலிசாருடன் சேர்ந்து சென்னையில் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, மக்களைக் காப்பதும் மீதிக் கதை.

### களமும் காதாபாத்திரங்களும்

குண்டுவெடிப்பு தீவிரவாதத்தை மையமாக வைத்துக் கதையை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் கவுரவ் நாராயணன். தோற்றம், நடிப்பு என்று உதயநிதி வழக்கத்திலிருந்து இந்தமுறை மாறியிருக்கிறார். படம் முழுவதும் பல்வேறு சிக்கல்களில் இருந்து சாதுர்யமாகத் தப்பிப்பது, வேலைகளைக் கச்சிதமாக முடிப்பது என அவரது போக்கு இரசிக்கும்படி இருக்கிறது. தமிழக அரச பேருந்தில் முதல் பெண் ஓட்டுநராக வருகிறார் ராதிகா. அவரது அறிமுகக் காட்சியில் 'தமிழகத்தின் முதல் பெண் ஓட்டுநர் கண்மணி' என்ற வாசகம், திரையில் படர்கிறது. ஆனால், தமிழகத்தின் முதல் பெண் ஓட்டுநர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த வசந்தகுமாரி. திரைப் படம் தானே விட்டுவிடலாம். நகைச்சுவையோடு கலந்து டப்பிங் கலைஞராக அசத்தும் சூரி, நாயகி மஞ்சிமா மோகன் உள்ளிட்ட கதாபாத்திரங்களும் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. குறைவான காட்சிகளே வந்தாலும் ராதிகாவும் முத்திரை பதிக்கிறார். சூரியின் நகைச்சுவை வழக்கம்போல திரையரங்கை சிரிப்பில் ஆழ்த்துகிறது. அதிலும் சூரியைப் பயங்கரவாதி என நினைத்து உதயநிதி பேசும்போது திரை யரங்கமே அதிர்கிறது.

### அருமையும் சிறப்பும்

தங்கையின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற பொலிஸ் அதிகாரி, சுரேஷிடம் உதயநிதி தானாக வந்து மாட்டிக்கொள்வது, கர்ப்பமாக இருக்கும் மனைவி மீது சூரி காட்டும் பாசம், வில்லனும் ஹீரோவும் ஒரே கட்டடத் தொகுதியில் கீழ் தளத்திலும், மேல் தளத்திலும் இருந்துகொண்டு ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் அடுத்தடுத்த வியூகங்களை வகுப்பது என்பது போன்ற காட்சிகள் அருமை. "இன்னிக்கு தெருவுக்கு நாலு இன்ஜினீயர் இருக்கிறான். கொத்தனார் கிடைக்கிறதுதான் கஷ்டம்" என உதயநிதியின் தங்கை பேசும் வசனம் சிறப்பு. துரத்தல் காட்சிகள், சம காலத்தோடு பொருந்துகிற கந்துவட்டி தொடர்பான காட்சிகள் ஆகியவை அருமையாக உள்ளன.

### இசை, ஒளிப்பதிவு

ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு, எடிட்டர் பிரவின் கே.எல் ஆகிய இருவரும் கவனத்தை ஈர்க்கிறார்கள். டி.இமான் இசையில் பாடல்கள் சுமார் ரகம். திரைக்கதை நகரும் போக்கிலும் இயக்குநர் இன்னும் சற்று கூடுதலாக ஈடுபாடு காட்டியிருக்கலாம். நாயகனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக நினைத்து தீவிரவாதிகளைப் பிடிப்பதில் பொலிசாரின் அணுகுமுறையை மெத்தனமாக்கி, முழுப் பாரத்தையும் உதயநிதியின் தலையில் ஏற்றியது பலவீனம். இறுதிக்காட்சிகளின் வேகத்தைப் படம் முழுவதும் படரவிட்டிருந்தால் இப்படை வென்றிருக்கும்!


## இப்படை வெல்லும்



**இன்னும் கொஞ்சம் ஈடுபாடு தேவை**



## ஈழத்து மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம்



1930ஆம் ஆண்டு ஒக்ரோபர் 3ஆம் திகதி யாழ்ப்பாணம்-கன்னாதிட்டியில் பிறந்தவர் எஸ்.எம். கோபாலரத்தினம். எஸ்.எம்.ஜி என்று சிறப்புப் பெயருடன் அழைக்கப்படுபவர். கோபாலரத்தினம் தனது பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கற்றார். பின்னர் மட்டக்களப்பைத் தனது வதிவிடமாக்கிக் கொண்டார். கொழும்பில் வீரகேசரி நாளிதழில், ஒப்பு நோக்குநராகக் காலடி எடுத்து வைத்ததன் மூலம் ஊடகத்துறைக்குள் நுழைந்தார். ஏழு ஆண்டுகள் அந்தப் பணியில் இருந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கினார். ஈழநாடு நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றிய அவர், பின்னர் ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார். ஊர்சுற்றி, கோபு, எஸ்.எம். ஜி, செந்தூரன், போன்ற பல புனை பெயர்களில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரியபீட மதிப்புறு ஆலோசகராகவும் பணியாற்றினார். பல நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்து ஊடகத்துறையில் அனுபவம் மிக்க பேராசானாக விளங்கிய எஸ்.எம்.கோபாலரத்தினம் 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது 87ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

## பள்ளிப் படிப்பு!

பள்ளிப் படிப்பு பட்டை தீட்டும்
பண்பை மட்டும் அன்றிப் பக்குவ
தெள்ளத் தெளிவை வளர்த்து பிள்ளை
தெரிவில் முதலாம் இடமும் பிடிக்கும்!

தமிழில் உள்ள சுழிவு நெளிவு
தகைமை கொண்ட ஆசான் மூலம்
அமிழ்த மென்கக் கற்றுக்கொள்ளின்
அன்னை மொழியில் உச்சம் பெறலாம்!

பள்ளி சென்று பள்ளி கொண்டால்
படிப்பு வாழ்வில் தூங்கிப் போகும்
அள்ளிக்கொள்ள எல்லாப் பாடமும்
அயரா வாசிப்பு துணையே செய்யும்!

தமிழொடு கணிதம், சூழல், ஆங்கிலம்
தன்னும் பள்ளிப் படிப்பில் ஓங்கும்
நிமிரும் வாழ்வை எதிர்க்கொள்ள
நிச்சயம் கற்றல் ஒன்றே மார்க்கம்!

பள்ளி தவிர்ந்த மீட்டல் படிப்பை
பருவம் எல்லாம் வீட்டில் செய்தல்
எள்ளத் தன்னும் குறைவு இல்லா
எழிதில் இலக்கை எய்த முடியும்!

'ஏட்டுச் சுரக்கா கறிக்கு உதவா'
என்னும் பழமொழி சுட்டும் விடயம்
கேட்டு அனுபவ கற்கை பெறுதல்
கேட்டை உண்டு பண்ணல் ஆகா!

பள்ளிப் படிப்பு வைரம் தன்னை
பட்டை தீட்டி ஒளிர்தல் என்றால்
தெள்ளத் தெளிவை ஊட்டும் அனுபவம்
தேவை மனிதர் வாழ்வை உயர்த்த!

*நவாலியூர் கவிராயர்*


## இனம் தெரியாதவர்களில் அவதானமாகவிருப்போம்




ஒரு கிராமத்தில் ஏழை ஒருவன் வசித்து வந்தான். அவனுக்கு அதிக வறுமை இருந்தது. உழைத்தான் ஆனாலும் அவன் மிகவும் ஏழ்மைப்பட்டான். இவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தும் எனக்குப்போதிய வருமானம் கிட்டவில்லையே என்று மனம் நொந்தான். ஒரு நாள் அவன் ஒரு திட்டம் தீட்டினான். தன்னைச் சுத்தமுடையவனாக்கி, நல்ல ஆடையை அணிந்தான். வேறு ஒரு மக்கள் நிறைந்த நகரத்துக்குச் சென்று புதியதொரு தொழிலைச் செய்வதென முடிவெடுத்தான். தனது திட்டத்தின்படி வெகு தொலைவிலுள்ள ஒரு நகரத்தைச் சென்றடைந்தான். அந்த நகரத்திலுள்ள ஒருவருக்கும் இவனைத் தெரிந்திருக்கவில்லை. இப்போது புதிய ஆடைகளுடன் புதுப்பொலிவாக ஜொலிக்கும் இவன் அங்குள்ளமக்களுக்குத் தன்னை ஒரு பாரம்பரிய வைத்தியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். அவனை யாருக்கும் தெரியாததால் எந்தப் படிப்பறிவும், சித்த மருத்துவத்தைப் பற்றித் துளியளவும் தெரியாமலேயே தனது கிராமத்து அனுபவத்தைக் கொண்டு அங்குள்ள மக்களுக்கு மருத்துவராகப் பணிபுரிய ஆரம்பித்தான்.

இப்போது தன்னை யாருக்கும் தெரியாத அந்த நகரத்திலுள்ள மக்களுக்கு இவன் நல்லதொரு பாரம்பரிய மருத்துவராகிவிட்டான். மூலிகைச் செடிகளைப் பயன்படுத்தித் தனக்குத் தெரிந்த மருந்துகளைத் தயாரித்துச் சிறு சிறு நோய்களுக்கும் காயங்கள், நோவுகளுக்கும் மருந்து செய்து பணம் தேடத் தொடங்கிவிட்டான். வருமானம் வாழ்க்கைக்குப் போதுமானதாகவிருந்தது. ஆனால் அவனுக்கோ பணம் சேர்க்கும் ஆசை கூடிவிட்டது. ஆர்வக்கோளாறு ஏற்பட்டு தனக்குத் தெரியாத நோய்களுக்கும் வைத்தியம் செய்யத் தொடங்கினான். ஒரு நாள் ஒரு ஏழை அந்தப் பிரபல வைத்தியரை நாடி வந்தான். அவனுக்கு மிகுந்த நெஞ்சுவலி. இதைக் கேட்டதும் இவனுக்கும் நெஞ்சுவலி வந்துவிட்டது. இதுவரை மிகவும் கடுமையான நோயாளர்களைச் சந்திக்காமல் தனக்குத் தெரிந்த வைத்தியங்களைச் செய்து வந்தவனுடைய தலையில் இப்போது பேரிடி விழுந்தது. என்ன செய்யலாம் என்று யோசிக்க நேரமில்லை. மருந்தைத் தேடுவதுபோல் பாவனை செய்தான். அந்தக் குவளைக்குள்ளிருந்த கற்பூரவள்ளிப் பாணியை ஒரு தேக்கரண்டியளவில் குடிக்கக் கொடுத்தான். அதைக் குடித்த நெஞ்சுவலிக்காரன் அது தான் வசிக்கும் சூழலில் கிடைக்கும் கற்பூரவள்ளி என்பதைப் புரிந்து கொண்டான். இவன் திரு திருவென விழிப்பது நோயாளிக்குள் இருந்த சந்தேகத்தைப் போக்கியது. "இவன் ஒரு போலி வைத்தியன்" என்று உரக்கக் கத்தினான். தன்னுடைய வேடம் கலைந்ததைக் கண்டு பயத்தில் அவனும் ஓட்டம் பிடித்தான்.

**பிள்ளைகளே வெளியூர்களிலிருந்து வியாபாரிகள் என்று தம்மைக் கூறிக் கொண்டு எமது வீடுகளுக்கு வருபவர்கள் மீதும் உங்களை அணுகும் இனம் தெரியாதவர்கள் மீதும் அவதானமாக இருப்பது அவசியம்.**




ஜெ.வளர்நிலா,
தரம் - 5,
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி.



த.காருணியா,
தரம் 2D,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

## புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்






## கோள்கள் பற்றிய தகவல்கள்

1. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள்- புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன்
2. ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து நீக்கப்பட்ட கோள்-புளூட்டோ.
3. சந்திரனது ஒளி புவியை வந்தடைய எடுக்கும் காலம் - 1½நிமிடங்கள்.
4. புதிய நட்சத்திரங்கள் தோன்றும் இடத்தின் பெயர் - ஓராயன் நெபியுலா
5. பூமி தன்னைத்தானே சுற்றிவர எடுக்கும் காலம் - 24 மணித்தியாலயங்கள்
6. பூமி தன்னையும் சுற்றிச் சூரியனையும் சுற்றிவர எடுக்கும் காலம் - 365¼நாள்
7. சப்தரிஷி மண்டலம் என அழைக்கப்படும் நட்சத்திரம் - பெருங்கரடி
8. சந்திர கிரகண நீடிப்புக்காலம் - 104 நிமிடம்
9. சூரியகிரகண நீடிப்புக் காலம் - 7 நிமிடம் 31 வினாடி
10. வளையம் கொண்ட கோள் - சனி, வியாழன், நெப்தியூன்

*அ.அன்பரசன்,*
*தரம்-9,*
*யா/வரணி மத்திய கல்லூரி.*

சூரியகாந்தி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# தீராத கோபம் யாருக்கு லாபம்?

கட்டுரை

வி. அருணாசலம்

**2017** நவம்பர் 12ஆம் நாள் தமிழர் அரசியலில் ஒரு பிரிகோடு கீறப்பட்டிருக்கிறது. இரா. சம்பந்தன் தலைமையில் இலங்கைத்தமிழரசுக்கட்சியினர் வவுனியாவிலும், சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் கூட்டு எதிரணியினர் யாழ்ப்பாணத்திலும் கூடிப் பேசினார்கள். தீர்மானம் எடுத்தார்கள். இந்தத் தமிழ் மூளைசாலிகள் ஒன்றுகூடி எதைச் சிந்தித்தார்கள் என்று தேடிப் பார்த்தால், மீண்டும் ஒரு பிரிவினை பற்றியதே அது. இனப்பெருக்கம் குறைந்த ஒரு மிகச் சிறிய சிறுபான்மை இனம் அதேவேளை, மிகத்தொன்மையான இனம் வடக்கு, கிழக்கு எனப் புவியியல் ரீதியாகவும், மதம், சாதி, சமூக ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கல்வியில் ஏற்றத்தாழ்வுகள் என்றும், நீண்ட போருக்கு முகம்கொடுத்து பல்வேறு முரண்பாடுகளை ஏற்கனவே வைத்திருக்கும் நிலையில், ஏற்கனவே இருந்த கட்சிகள் மேலும் வலுவிழக்கும் ஒருவேலைத்திட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அது தமிழர்களை ஏனைய இனங்கள் பிளவு படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

### கூட்டமைப்புத் தெளிவுபடுத்தவேண்டும்

தமிழினம் தமக்குள் ஒற்றுமையாக அல்லது தமது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முடியாத நிலையில் இருக்கும் போது சிங்கள, முஸ்லிம் இனங்களுடன் எவ்வாறு சமரசம் செய்துகொள்ளப் போகிறது…? என்ற மிகப்பெரிய கேள்வி எழுகிறது. ஏற்கனவே உள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருக்கின்ற முரண்பாடுகளை புதிய தமிழ்க் கூட்டு எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகிறது வடக்குக்கிழக்கை இணைப்பார்களா? இராணுவத்திடம் இருக்கும் காணிகளை விடுவிக்கப் போகிறார்களா? வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்களா? தற்போது வரையப்படுவதாகக் கூறப்படும் புதிய அரசமைப்பை மேம்படுத்தப் போகிறார்களா? ஜெனீவாத் தீர்மானங்களில் மாற்றங்களைக் கொண்டுவரப் போகிறார்களா? முள்ளிவாய்க்கால் பிரச்சினைக்கு நஷ்டஈடு பெற்றுத் தரப்போகிறார்களா? காணாமல் ஆக்கப்பட்டவர்களை இரகசிய முகாம்களுக்குள் புகுந்து இழுத்து வரப்போகிறார்களா? அரசியல் கைதிகளை ஒரே நாளில் வெளியில் எடுக்கப்போகிறார்களா? பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது செய்துவிடப் போகின்றார்களா? நயினாதீவில் கட்டப்பட்டு வருகின்ற மிக உயர்ந்த புத்தர் சிலை, தமிழர் பிரதேசங்களில் அமைக்கப்பட்டு வரும் புத்த கோயில்கள் சார்ந்து என்ன முடிவெடுக்கப்போகிறார்கள்? இவற்றையெல்லாம் செய்வதற்கு இவர்கள் முயற்சிப்பார்களா? இவர்களுக்குப் பின்னணியில் யார் இருப்பார்கள்? வேறு யாராவது கரம் கொடுப்பார்கள் என்று இனியும் நம்புவது சரியா? இலங்கை அரசுடன் எத்தகைய உறவுகளை வைத்திருக்கப் போகிறார்கள்? இந்த விடயங்களைப் புதிய தமிழ்க் கூட்டமைப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

### இன்னோர் கட்சி அவசியம் தானா?

இலங்கைத்தீவின் பூர்வீக இனமான தமிழர் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்துடன் நாட்டைவிட்டு ஓடத்தொடங்கினர். இற்றைவரை ஓடிக்கொண்டே இருக்கின்றர். உள்நாட்டில் இனப்பெருக்கம் குறைந்து சுருங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இன்னோர் கட்சி அவசியம் தானா?

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழருக்கென ஆரம்பித்த கட்சிகள் உடைந்துபோன வரலாறே தமிழருக்குண்டு. உதாரணமாக

1) அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (ஜி.ஜி.பொன்னம்பலம் - 29 ஓகஸ்ட் 1944)
2) இலங்கைத் தமிழரசுக் கட்சி (தந்தை செல்வா எம்.வி.நாகநாதன் - சி.வன்னியசிங்கம் - 18 மார்கழி 1949)
3) தமிழர் விடுதலைக்கூட்டணி (வீ. ஆனந்தசங்கரி சௌமியமூர்த்தி தொண்டமான் - ஜி.ஜி.பொன்னம்பலம் - எஸ்.ஜே.வி.செல்வநாயகம் - 4 மே 1972)
4) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (வே.பிரபாகரன் - இரா. சம்பந்தன் - 20 ஒக்ரோபர் 2001) போன்ற கட்சிகளைக் குறிப்பிடலாம்.

ஒரு சிறிய இனம் தமக்குள்ளேயே முரண்பாட்டுத் துகள் துகளாக உடைந்து செல்லும்போது, ஏனைய இனங்களுடன் எப்படிச் சேர்ந்துவாழ முடியும். முன்னர் நாட்டைப் பிரிக்க முற்பட்டுப் பின்னர் கட்சிகளைப் பிரித்து இன்று ஆளாளுக்குள் பிரியும் நிலை ஏற்பட்டுவிட்டது. இது தமிழ்த் தலைவர்கள் ஏற்படுத்திக் கொண்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சி முதல்வர் விக்னேஸ்வரன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் பின்னர் இளைஞர் அணியொன்று முதலமைச்சருக்கு ஆதரவாகக் கிளம்பிச் சென்ற வேளையில், தன்மீது நம்பிக்கையில்லாத தீர்மாத்தைக் கொண்டுவந்து தன் கட்சிக்குச் சவால் விடும் வகையில், புதிய கட்சி ஒன்றை முதல்வர் தன்னைத் தேடிச் சென்ற இளைஞர்கள் மத்தியில் அறிவித்திருக்க வேண்டும்.

அதுபோன்றதொரு சந்தர்ப்பம் முதல்வருக்கு இனி எப்போதும் கிடைக்கப்போவதில்லை. "ஏன் அவ்வாறு செய்தீர்?" என்று . இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் கேள்வி கேட்டிருந்தால் "நீங்கள் தான் என் மீது நம்பிக்கை இல்லை என்று முடித்துவிட்டீர்களே" என்று நியாயப்படுத்தியிருக்க முடியும்.

### விக்கினேஸ்வரனுக்கிருந்த செல்வாக்கு

மிக நீண்டகாலமாகத் தமிழ் மக்களின் வாக்குகளை எவ்வாறு பெறுவது என்ற அனுபவமிக்க இலங்கை தமிழரசுக் கட்சிக்காரரால், 2013 இல் வலுக்கட்டாயமாக அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட விக்னேஸ்வரன் தற்போது எடுத்த எடுப்பில் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவது என்பது சாதாரண விடயமல்ல. 2013ஆம் ஆண்டில் அரசியலுக்கு வந்த விக்னேஸ்வரன் தன்னை ஒரு நிராகரிக்க முடியாத தலைவராக ஆக்கிக்கொள்வதில் அதிக அக்கறை செலுத்தி வந்தார். அதிககாலம் யாழ்ப்பாணத்தில் தங்குவது, நினைவேந்தல்களில் கலந்து கொள்வது, முந்திக்கொண்டு அறிக்கை விடுவதில் சம்பந்தனுக்கு எதிராகக் கருத்து வெளியிடுவது, மகாநாயக்கர்களை முந்திக்கொண்டு சந்திப்பது எனப் பல்வேறு தளங்களில் தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டார்.

> பெரிய எதிர்பார்ப்புக்களுடன் 'மலர்ந்தது தமிழரசு' என்ற தலைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண சபையால் மக்கள் எதிர்பார்த்த எதனையும் எட்டமுடியவில்லை.

மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சகல கட்சிகளும் தமது ஒரு விருப்பு வாக்குகளை விக்னேஸ்வரனுக்குப் போட வைத்ததன் காரணமாகவே ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை அவரால் பெறமுடிந்தது. இது தமிழரசுக் கட்சிக்கு மக்கள் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்கின் வெளிப்பாடே.

### கூட்டமைப்பின் வாக்குகளே குறையும்

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது பல்கலைக்கழக மாணவத் தலைவராக இருந்த செல்வராஜா கஜேந்திரனை விடுதலைப் புலிகளின் சார்பில் போட்டியிட வைத்தனர். ஒரு இலட்சத்துப் பன்னிரெண்டாயிரம் வாக்குகளை அவர் பெற்றிருந்தார். ஆனால், விடுதலைப் புலிகள் இல்லாத காலத்தில் 2ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளையே அவரால் பெறமுடிந்தது.

புதிய கட்சி ஒன்று உருவெடுத்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகளே இரண்டாக உடையும் வாய்ப்புண்டு. ஏனைய தமிழர்கள், ஈ.பி.டி.பி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என வாக்களிப்பவர்கள் அந்த வாக்குகளைப் புதிய கட்சிக்கு அளிக்கப்போவதில்லை. கூட்டமைப்பின் ஒரு தொகுதி வாக்குகளை வைத்துப் புதிய கட்சி முற்றுமுழுதான வெற்றியைப் பெற்றுவிட முடியாது. இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு சதம் கூடப் பணச்செலவின்றி "மற்றவர்களுக்கு ஏன் வாக்களிக்கக்கூடாது" என்பதை எடுத்துக்கூறி, வாக்குகளைப் பெற்றுவிடுகின்றனர். இனிவரும் தேர்தலில் தமிழ் கூட்டு எதிரணியினரையும் விமர்சிக்கும் நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்படும். கடந்த காலத்தில் ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என இருந்ததற்கு மேலதிகமாகப் புதிய கட்சியை விமர்சனம் செய்யவேண்டி ஏற்படும்.

### தமிழ் அரசுக்கட்சி வாக்காளர்களின் நிலை

தமிழரசுக்கட்சி மிக நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதால், கோயில் தலைவர்கள், கிராம அமைப்புக்களின் தலைவர்கள், கமக்கார அமைப்புக்கள், ஆசிரியர்கள், கிறிஸ்தவ அமைப்புக்கள், சமாதான நீதிவான்கள் எனத் தமிழ் மக்களின் பெரும்பகுதி மக்கள் அந்தக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுவருகிறார்கள். இந்த மக்களுக்குத் தெரிந்த ஒரேயொரு சின்னம் வீட்டுச்சின்னம் தான். "ஏன் வீட்டுக்கு வாக்களித்தாய்?" என்று ஒரு வாக்களித்தவர்களிடம் கேட்டால், அதற்கான ஆழமான கருத்தொன்றை அவரால் கூற முடிவதில்லை. ஆனால், ஒவ்வொரு தேர்தலிலும் அவர் அதற்கே வாக்களிக்கிறார். இது ஒரு மதம் போல மக்கள் மத்தியில் படிந்திருக்கிறது. அதனால் அந்தப் பிரதிநிதிகள் மக்களுக்கு அதைச் செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் என்று மக்கள் கேட்பதுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 2015ஆம் ஆண்டில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டே சுரேஸ் பிரேமச்சந்திரன் தேர்தலில் தோல்வியடைந்தார். அதேபோல் பல முற்போக்கான கருத்துக்களை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தாலோ அந்தக் கட்சியில் போட்டியிட்ட ஏனையோராலோ ஒரு ஆசனத்தைக்கூடப் பெற முடியவில்லை.

### புதிய கட்சியின் நிலை…?

1986ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடை செய்தபோது அந்த அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து புலிகளுக்கு எதிராகச் செயற்படக்கூடிய பலத்தைப் பெறவில்லை. அவர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின்மையே அதற்குக் காரணமாகியது.

அதேபோன்றதொரு சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு எதிராகப் போராடமுடியாத நிலை புதிய தமிழ்க் கூட்;;டணிக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கக்கூடிய அல்லது மக்கள் மாறி வாக்களிக்கக்கூடிய தலைவராகத் தமிழ்க் கூட்டு எதிரணியினர் விக்னேஸ்வரனை எதிர்பார்க்கின்றனர். உடல் நிலையில் மிகவும் நலிந்துபோயிருக்கும் அவர் வெற்றிபெற்றால் கூட அவருக்குப் பின் இந்தப் புதிய கட்சியின் நிலை என்னவாகும் என்பது கேள்விக்குறியே?

### விக்கினேஸ்வரன் இனவாதி…!

பெரிய எதிர்பார்ப்புக்களுடன் 'மலர்ந்தது தமிழரசு' என்ற தலைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட வ்டமாகாண சபையால் மக்கள் எதிர்பார்த்த எதனையும் எட்டமுடியவில்லை. "விக்னேஸ்வரன் இனவாதி" என்றும் சம்பந்தன் "சிறந்த தலைவர்" என்றும் கூறுமளவுக்கு நல்லாட்சி அரசு வந்துவிட்டது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் பிளவுபடுவது என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் சாதகமானது. அமைச்சர் றிசாத் பதியுதீன் "வடமாகாண முதல்வர் திட்டமிட்டே முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்" என்ற குற்றச்சாட்டை வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்ற விடயத்தில் முன்வைத்துள்ளார். சிங்களவர் மத்தியிலும் விக்னேஸ்வரனுக்கு எதிரான குரல் பௌத்த பீடங்களிலிருந்தும் தீவிர போக்குடைய சிங்களத் தலைவர்களிடையே இருந்தும் எழுந்துள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது 'தமிழீழத்துக்கு' ஆதரவான ஒரு பிரிவினராகவே விக்னேஸ்வரன் தலைமை தாங்க இருக்கும் அணி பார்க்கப்படுகிறது.

### தோற்றவர்களே பிரிவை நாடுகிறார்கள்

புதிய கட்சியொன்று உருவாக்கப்படவேண்டும் என வற்புறுத்துபவர்கள் யாரென்று தேடிப்பார்த்தால் தேர்தலில் தோல்வியுற்றவர்கள், தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் செல்லக் காத்திருந்து தவறியவர்கள், மணல் வியாபாரிகள், கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், கப்பம் போன்ற வேலைத்திட்டங்களில் ஈடுபட்டவர்கள் என மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தவர்களே விக்னேஸ்வரனின் பின்னால் அணிதிரளத் தீர்மானித்திருக்கின்றனர். இதில் கொழும்பில் பிறந்து வளர்ந்த விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமுமே விதிவிலக்கானவர்கள். இவர்கள் சிங்கள மக்களுடன் தொடர்புபட்டவர்களாக இருந்த போதிலும் தற்போது தமது கொள்கைகளை மாற்றியுள்ளனர்.

எனினும் இவர்கள் இயக்கங்களில் இருக்கவில்லை என்பதால் மக்களுடன் நேரடியாக முரண்படாதவர்கள். ஆக, 2018 ஜனவரியில் நடைபெறவுள்ள பிரதேச சபைத் தேர்தல்களுக்கு முன்னதாக இந்தப் புதிய தமிழர் எதிர்ப்புக்கூட்டணி தயாராகி விட வேண்டும். இதற்குக் கால அவகாசம் போதாதுள்ளது. தற்போது தமிழ்த் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் இந்த இழுபறி நிலை தமிழ் மக்களுக்கு நிச்சயம் இலாபமாக இருக்கப்போவதில்லை.

## மேடை ஏறு....



கவிதை

கோவை திரு

தன்னாற்றலில் தன்னிறைவுகொண்டு
தனித்துவமாய் ஆளுமை வளர்த்து
பல மணித்துளிகளை உரமாக்கி நீ
வரைந்த படைப்பை அரங்கேற்று.

எடுத்த எடுப்பில் அரங்கம் தனில்
நிறைவான கைதட்டல்களை எண்ணாதே
விமர்சனங்களை ஏணிப் படியாக்கு
பயத்தை தூக்கிப் போடு

விருத்திக்கு பல அரங்கு ஏறு
அரங்கமே உன் படைப்பால்
அதிர்ந்து, படைப்பில் மௌனிக்க
படைப்பால் வெல்லும் அகிலத்தை

அந்தக் கால நினைவுகள்

மிருசுவில் தமிழ்தாசன்

# கால் கோச்சியில் வரும் ஆசிரியர்கள்



தாமோதரம்பிள்ளை வாத்தியாருக்குக் கையும் ஓடவில்லைக் காலும் ஓடவில்லை. சுடுகஞ்சி குடித்த நாய்போல ஓடியலைந்துகொண்டிருந்தார்.

"என்ன வாத்தியார்! ஏதேன் பிரச்சினையே"! பாலசிங்கம் வாத்தியார் பவ்வியமாகக் கேட்டார்.

"நாளைக்குச் சோதினைக்காரன் வரப்போறானாம் வாத்தியார். அதுவும் ஒரு புதுப் பெடியனாம். மோட்டச் சைக்கிளிலை தான் வருவாராம். புது இன்ஸ்பெக்ரர் எல்லே! கொஞ்சம் கடுமையாய்த் தான் நிக்கப் போறான். அதுதான் ஒரே யோசினையாய்க் கிடக்குது. சே....! வாத்தியார்! ஓடிப் போய் மொனிற்றர் பெடியளைப் பிடிச்சு பிறெப் எஸ்.எஸ்.சி. வகுப்பையும் எஸ்.எஸ்.எஸ்.சி. யையும் ஒண்டாக்குங்கோ. நடுவிலை வைச்சிருக்கிற அந்த ஸ்கிறீனை எடுத்து இரண்டு வகுப்பையும். ஒண்டாக்குங்கோ. இப்ப ஒரு மணிக்கு எல்லாருக்கும் கூட்டமெண்டு அறிவியுங்கோ! மினக் கடப் படாது"

தலைமை ஆசிரியரின் உத்தரவின்படி கூட்டம் ஆரம்பமாகிவிட்டது.

"ஏய் பிள்ளையள்! நாளைக்கு இஞ்சை சோதினைக் காரன் வரப்போறார். எல்லாரும் வடிவாய் உங்கடை கை நிகங்களை வெட்டிக் குளிச்சு முழுகித் திருநீறு சந்தனம் போட்டு வடிவாய் வர வேணும். அதோடை பெடியங்கள்! வடிவாய்க் கேளுங்கோ. வேட்டி உடுக்கிறவை, வேட்டியை நல்லாய்த் தோய்ச்சு நீலம் போட்டு நல்ல சட்டையும் போட்டுக்கொண்டு வாருங்கோ. களிசான் போடுற பிள்ளையள் களிசானுக்குத் தெறியில்லாட்டில் அதை உடுத்துக்கொண்டு வரக்குடாது. உங்கட கொம்மா மாரிட்டை, கொக்கா மாரிட்டை சட்டை ஊசி வாங்கிக் கவனமாய்க் குத்திக் கொண்டுவரவேணும். சோதினைக் காரன் ஏதேன் கேள்வியள் கேட்டால், மசிந்திக்கொண்டு நிக்கக்கூடாது. மற்றது... வாத்தியாரவை அடிக்கிறவையோ எண்டு கேட்டாரெண்டால் அடிக்கிறதில்லையெண்டு சொல்ல வேணும். கேட்டுதேடா வேதாரணியத்தின்ரை பெடியா! நீதான் ஒரு குள்ளன். உன்னை நம்பேலாது"

"வாத்தியார்! நீங்கள்தானே சொல்லுறனிங்கள் பொய் சொல்லக்கூடாதெண்டு" இராசரத்தினம் பட்டென்று கூறினான். "டேய் பேயா! அது நாளைக்கு மட்டும் சொல்லலாம். இப்ப எதிர்த்துக் கதைச்சியெண்டால் பிரம்பெடுத்துத் தருவன் நல்ல பூசை! ஓ! சொல்லிப்போட்டன்."

"மற்றது அரியரத்தினம் வாத்தியார்! உந்தப் பெடியளைக் கூட்டிக்கொண்டு போய் 'ஒண்டுக்கு' நிக்கிற கக்கூசைக் கழுவிப் போடுங்கோ. சோதினைக் காரன் வந்து போகும் வரைக்கும் அதுக்கை ஒருத்தரும் போகக்கூடாது" தலைமை ஆசிரியர் இத்துடன் கூட்டத்தை முடித்துக்கொண்டார்.

● ● ●

மறுநாள். தவறாது சோதனைக் காரனும் அறிவித்த நேரத்துக்கே வந்துவிட்டார். அறிவித்தல் கொடுத்துவிட்டுச் சோதனை செய்ய வந்தபடியால் தாமோதரம்பிள்ளை வாத்தியாருக்கு அவ்வளவு சிரமங்களிருக்கவில்லை. எல்லாமே சௌகரியமாகிப் போய்விட்டன. சோதனை முடித்து ஒரு மணி நேரத்துக்குள்ளே தனது பென்னம்பெரிய பி.எஸ்.ஏ. மோட்டார் சைக்கிளில் தொற்றி உதைக்க அது ஆபத்தான ஒலியை எழுப்பி ஊர் முழுவதும் வேடிக்கை காட்டியபடி விரைந்தது. அந்த மோட்டார் சைக்கிளை வேடிக்கை பார்க்கவென ஒரு கூட்டம் கூடிநின்றது. அது போனபின்பே அவர்களும் அவ்விடத்தை விட்டகன்றனர். அனைவருக்கும் வினோதமானதொரு அனுபவம்.

"மெய்யே! மகேசுவரிச் ரீச்சர்! டாப்புக் கொப்பி, பாடப் பதிவுக் கொப்பி ஏதேன் கேட்டவரே?"

"இல்லை வாத்தியார். எத்தனை பிள்ளையளுக்குப் பணிஸ், பால் எல்லாம் குடுக்கிறதெண்டு கேட்டார்"

"அது சரி! இப்ப ஒரு புதுப் பிரச்சினை தெரியுமோ! பள்ளிக்குடத்திலை விளையாட்டுப் போட்டி வைக்க வேணுமாம். கலை விழா நாடகங்கள் நடத்த வேணுமாம். கண்டிப்பாய்ச் சொல்லிப் போட்டுது மனிசன்."

● ● ●

தாமோதரம்பிள்ளை வாத்தியார் இந்தப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பதினெட்டு வருடங்கள் சேவையாற்றி வருகின்றார். படிப்பைத் தவிர வேறு எந்தத் துறைகளையும் அறிமுகப்படுத்தவில்லை இதுவரை.

"விளையாட்டுப் போட்டியிலை. வேட்டியை மடிச்சுக் கொண்டோ இல்லாட்டில் கொடுக்குக் கட்டியெண்டாலும் பெடியங்கள் ஓடுவங்கள். பெம்பிளைப் பிள்ளையள் கால் முட்டப் பாவாடையோடை என்னெண்டு ஓடுறதப்பா! உதுகளெல்லாம் பள்ளிக்குடங்களிலை தேள்வையில்லாத வேலையள். பெடியள் தாங்கள் விரும்பினால் தங்கடை தங்கடை வீடு வழிய போய் வார் ஒட்டமோ, கெந்தி அடிச்சோ என்ன விளையாட்டெண்டாலும் விளையாடட்டுமன். உந்தச் சங்காரங்களெல்லாம் என்னத்துக்கு.? முந்தின காலத்து இன்ஸ்பெற்றர் மார் உப்பிடியொரு ஆய்க்கினையும் தரயில்லை. இப்ப இளந்தாரிப் பெடிளைப் பிடிச்சு... சே! நினைக்க நினைக்க எனக்கு வாயிலை வருகுது..."

அந்தப் பாடசாலையில் கிட்டத்தட்ட இருநூற்றைம்பது பிள்ளைகள் வரை கல்வி கற்கிறார்கள். அரிவரி, பெரிய அரிவரி என்று ஆரம்பமாகி பிறெப் எஸ்.எஸ். சி, எஸ்.எஸ்.சிவரை இயங்கும் ஒரு பாடாசலை. அரிவரி வகுப்புகளுக்கு ஆசிரியைகள் மகேஸ்வரியும், மனோன்மணியும் பொறுப்பாயிருந்தனர். குடியியல், உலக சரித்திரம், இலங்கைச் சரித்திரம் கற்பிப்பதில் பத்மநாதன் வாத்தியார் திறமையானவராக இருந்தார். இப்படியாக ஒவ்வொருவரையும் சிறப்பாகத் தெரிவு செய்து நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி வந்தார் தலைமை வாத்தியார் தாமோதரம்பிள்ளை. மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பணிஸ், பால் சரியாக வழங்கப்படுகின்றனவா என்பதைப் பரிசோதிப்பது, பாடசாலைக்குச் சமூகமளிக்காத மாணவர்களை அழைத்துத் துவரங்கம்பினால் நாலு சாத்துச் சாத்துவது போன்ற கடமைகள் தலைமை வாத்தியாரின் முக்கிய பணிகளாகவிருந்தன.

● ● ●

வகுப்புகளைச் சுற்றிப் பார்வையிடுவதற்காகப் போய்க் கொண்டிருந்த தாமோதரம்பிள்ளை வாத்தியாரை ஏழாம் வகுப்பில் கற்பித்துக்கொண்டிருந்த சாம்பசிவம் வாத்தியார் ஓடோடி வந்து வழிமறித்தார். இருவரும் ஏதோ இரகசியமாகச் சிறிது நேரம் உரையாடினார்கள்.

"அப்படியோ சங்கதி!"

முகத்தில் கோபாக்கினி முளாசிப் பற்றியது. கண்கள் கொவ்வைப் பழங்களாகச் சிவந்துவிட்டன.

"ஆரடி அது சிவபாக்கியம்" உருத்திர தாண்டவமாடிய தலைமை வாத்தியாரைப் பார்க்கச் சிவபாக்கி யத்துக்கு உடல் நடுங்கியது. வேறு வழியில்லை. வாங்கிலை விட்டெழுந்து அவரண்டையிற் சென்றாள்.

"என்னடி! உங்கை வீட்டுத் தெருவிலை சைக்கிள் ஓடிப்பழகிறியாம்?"

சிவபாக்கியத்துக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. சாம்பசிவம் வாத்தியார் தான் நன்றாகப் பற்ற வைத்திருக்கின்றாரென்று. அன்றொருநாள் அவளின் வீட்டுத் தெருவில் அண்ணன் சதாசிவத்தின் சைக்கிளை எடுத்து ஓடிப் பழகும்போது சாம்பசிவத்தாரின் பார்வையில் மாட்டிக்கொண்டது. ஞாபகத்துக்கு வந்தது.

"ஓம் வாத்தியார்! அது அண்ணையின்ரை சைக்கிளைச் சும்மா எடுத்து ஓடிப் பழகி....!"

"பொத்தடி வாயை! நீயொரு பெம்பிளைப்பிள்ளையெல்லே! சைக்கிள் ஓடலாமா? பொம்பிளைப்பிள்ளையள் சைக்கிள் ஓடுறது என்ன பழக்கம். உது ஆர் காட்டித் தந்தது. இனிமேல் சைக்கிலைத் தொட்டியெண்டால் 'சேட்டிக்கேற்'றைத் தந்து வீட்டை கலைச்சுப் போடுவன். ஆம்பிளைப் பிள்ளையள் தான் சைக்கிள் ஓடுறது. பெம்பிளைப் பிள்ளையள் ஒழுக்கமாய் வீட்டிலை இருக்க வேணும். முழுப்பாவாடை சட்டை போட வேணும். உங்கை ஆரேன் கட்டைச் சட்டை போட்டதெண்டு அறியட்டும். கால் முட்டச் சட்டை போட்டு அடக்கொடுக்கமாய் இருங்கோ. எந்த நேரமும் நெத்தியிலை திருநீறு சந்தனம் போட்டிருக்க வேணும். படம், கிடமெண்டு ஓரிடமும் வெளிக்கிடக்குடாது. எந்த ஒரு ஆம்பிளைப் பெடியளோடையும் எந்தக் காரணம் கொண்டும் பறையக்குடாது. சொல்லிப் போட்டன்."

தலைமை வாத்தியாரின் இந்த அறிவுரைகள் சிவபாக்கியத்துக்கு மட்டுமல்ல. அன்றைக்கு ஏழாம் வகுப்பிலிருந்த அத்தனை பெண் பிள்ளைகளுக்கும் சமர்ப்பணமாகிக் கொண்டது.

மொனிற்றர் மனோகரன் தண்டவாளத்து இரும்புத் துண்டில் ஓங்கி அடிக்கத் தொடங்கினான். ஆம்! நேரம் மாலை மூன்றரை மணியாகிவிட்டது. பாடசாலை வகுப்புக்கள் யாவும் முடிந்துவிட மாணவர்கள் புத்தகக் கட்டுக்களைச் சுமந்தபடி தமது வீடுகளை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். தாமோதரம்பிள்ளை வாத்தியாரும் நடக்கத் தொடங்கினார். இரண்டரை மைல் தூரம் நடக்க வேண்டும். அவருடைய வீட்டுக்குச் சைக்கிளில் போகலாம். அவருக்குத்தான் சைக்கிள் ஓடத் தெரியாதே! அவர் மட்டுமா? சக ஆண் ஆசிரியர்கள் பலரும் கால் கோச்சியிலேதான் போய்க்கொண்டிருந்தனர். வேறு வழி....?

04

**ஏய் பிள்ளையள்! நாளைக்கு இஞ்சை சோதினைக் காரன் வரப் போறார். எல்லாரும் வடிவாய் உங்கடை கை நிகங்களை வெட்டிக் குளிச்சு முழுகித் திருநீறு சந்தனம் போட்டு வடிவாய் வர வேணும்.**

# ஜங்கிள் புக் பாணியில் ஒரு 'லயன் கிங்'



'டிஸ்னி'யின் 'லயன் கிங்' படம் மீண்டும் அதிரடி அனிமேஷன் படமாக உருவாகிறது. இந்தப் படம் 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியாகும் என 'டிஸ்னி' அறிவித்துள்ளது. 'டிஸ்னி' நிறுவனத்தின் புகழ்பெற்ற அனிமேஷன் படங்களில் ஒன்று 'லயன் கிங்'. ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்' கதையைத் தழுவி எடுக்கப்பட்ட இந்தப் படம் 1994ஆம் ஆண்டு வெளியாகி உலக அளவில் பெரிய வரவேற்பைப் பெற்றது. வசூலில் சாதனைகளையும் படைத்தது.

'டிஸ்னி'யின் புகழ்பெற்ற அனிமேஷன் படங்களில் பல, சமீப காலங்களில் இப்படியான அதிரடிப் படங்களாக மறுபதிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. 'ஆலிஸ் இன் வொண்டர்லாண்ட்', 'சிண்ட்ரெல்லா', 'தி ஜங்கிள் புக்', 'பியூட்டி அண்ட் தி பீஸ்ற்' உள்ளிட்ட படங்களில் இத்தயைக புதிய பாணியிலமைந்த மறுபதிப்பு வடிவங்கள் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து தற்போது 'லயன் கிங்' படமும் அத்தகையதொரு அதிரடிப் படமாக மறுபதிப்புச் செய்யப்படவுள்ளது. 'அயன் மன்' 1, 2, 'செவ்', 'தி ஜங்கிள் புக்' (2016) உள்ளிட்ட படங்களை இயக்கிய ஜோன் வ்பேவ்ரூ, இந்த 'லயன் கிங்' மறுபதிப்பை இயக்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சிம்பாவின் குரலாக டொனால்ட் க்ளோவர், முதல் லயன் கிங் படத்தில் முபாஸா கதாபாத்திரத்துக்குக் குரல் தந்த ஜேம்ஸ் ஏர்ல் ஜோன்ஸ், சிம்பாவின் இணையான நாலாவின் குரலாகப் பாடகி பியோன்ஸே உள்ளிட்டோர் படத்தில் பங்காற்றவுள்ளனர். 'தி ஜங்கிள் புக்' பாணியிலேயே முப்பரிமாண கிராபிக்ஸ் நுட்பங்களுடன் கதாபாத்திரங்கள் அனைத்தும் 'லயன் கிங் 2019' ஆக உருவாகின்றன. 'ஜங்கிள் புக்'கை விட மேம்பட்ட கிராபிக்ஸ் இந்தப் படத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்

79வயதான இயக்குநர் கென் லோச், 'ஐ டானியல் பிளேக்' படத்துக்காக 'தங்கப்பனை' விருது பெற்றிருக்கிறார். இதன் மூலம் கேன்ஸ் விழாவில், இரண்டு முறை 'தங்கப்பனை' விருது வென்ற இயக்குநர்கள்(9) பட்டியலில் கென் லோச்சும் இணைந்து இருக்கிறார். இதற்கு முன். 2006ஆம் ஆண்டு 'தி விண்ட் தட் ஷேக்ஸ் தி பார்லி' படத்துக்காக கென் லோச் 'தங்கப்பனை' விருது பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஐ, டானியல் பிளேக்'

இங்கிலாந்தில் வாழும் பிளேக்கிற்கு 80வயதாகிறது. திடீரென அவருக்கு நெஞ்சு வலி ஏற்படுகிறது. அவரால் இனி வேலைக்குச் செல்ல முடியாது எனக் கூறுகிறது அந்த நாட்டு அரசு. அதன் சட்டங்களும். ஆனால். தன் உடல்நலம் நன்றாகத்தான் இருக்கிறது. தான் வேலைக்குச் செல்ல முடியும் என வாதிடுகிறார் பிளேக். ஆனால் அந்த நாட்டுச் சட்டத்தில் அதற்கு அனுமதி கிடையாது. சட்டங்கள் அவரை ஓய்வில் இருக்கச் சொல்கின்றன. ஓய்வில் இருக்கும்போது ஓய்வூதியம் பெறுவதற்கும் பிளேக் அவஸ்தைப் படுகிறார். ஓய்விலிருக்கச் சொல்லியும் ஓய்வூதியம் பெறச் சொல்லியும் அவரை இறுக்கும் ஏகப்பட்ட சட்ட திட்டங்களால் அவதியுறுகிறார் பிளேக். இந்தச் சூழ்நிலையில் அவரைப் போன்றே அவதியுறும் கேட்டியைப் பார்க்கிறார். அவருக்கு உதவுகிறார். அந்தச் சட்டங்களும் அமைப்புகளும் அவர்கள் வாழ்வில் எப்படியெல்லாம் இடையூறாகின்றன என்பதே படத்தின் கதை. அவர்கள் அதை எதிர்கொள்ளும் போராட்டங்கள் அதை மேம்படுத்துகின்றன.

### சட்டங்களுக்காக மக்கள் அல்ல

இறுக்கமான சட்ட திட்டங்கள் மக்களைக் குற்றம் செய்ய விடாமல் ஒழுங்குபடுத்தும் என நினைத்தால் அது தவறு என்பதை நமக்குச் சொல்கிறார் பிளேக். மக்களுக்கு உதவக் கூடிய வகையில்தான் சட்டங்கள் இருக்க வேண்டும். மக்களுக்காகத்தான் சட்டங்களும் அமைப்புகளும்; சட்டங்களுக்காக மக்கள் இல்லை எனச் சொல்கின்றன பிளேக்கிற்கும் கேட்டிற்கும் இடையே நடக்கும் சம்பவங்கள். மருத்துவரிடம் பிளேக் சொல்லும் பதில்கள் சிரிப்பை ஏற்படுத்தினாலும், உண்மையில் இங்கிலாந்தில் சமூக அமைப்பு அவ்வளவு இறுக்கமாக இருக்கிறது என்பதே அதில் கிண்டலாக வெளிவருகிறது. அங்கே இருக்கும் அரசு அமைப்புகள் மட்டுமல்ல தனியார் கடைகளும் கூட சட்ட திட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றுகின்றன. வேறு வழி இல்லாமல் செய்யக் கூடாத தொழிலைச் செய்கிறாள் கேட்டி. இப்படிப் படம் முழுக்க அந்த நாட்டுச் சட்டஅமைப்பின் மீது விமர்சனங்களை வைக்கிறது படம். அதை மக்களுக்குப் புரியாத வகையில் சொல்லாமல் மிக வெளிப்படையாகத் தைரியமாக அந்தக் கடுமையான அமைப்பால் பாதிக்கப்பட்ட மனிதர்களை நாயகர்களாக வைத்துக் கதையைச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் கென் லோச்.

### இங்கிலாந்தின் இறுக்கமான சட்டதிட்டங்கள்

சட்டங்கள் மூலம் எந்த உதவியையும் பெற முடியாத கேட்டிற்கு பிளேக் உதவி செய்கிறார். அவளது குழந்தை களுக்குப் பரிசுகளைக் கொடுக்கிறார். ஏறக்குறைய தாத்தாவைப் போல இருக்கிறார். பிளேக்கினைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் அவரால் முடிந்த அளவுக்கு உதவி செய்கிறார். ஆனால், அவரால் சட்ட திட்டங்களோடு போராட முடியவில்லை. 80வயதான அவரைக் கணினியில் இணையத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை நிரப்பச் சொல்வது என்பது அதிகபட்சமான நகைச்சுவையாக இருந்தாலும், நடைமுறைச் சிக்கல் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நெஞ்சு வலியைக் காரணம் காட்டி அவருடைய வேலையைப் பறிக்கிறது சட்டம். மறுபுறம் அவருக்குத் தேவையான உதவித்தொகையைப் பெறுவதற்கு அது இழுத்தடிப்புச் செய்கிறது. மேல்முறையீடுகள் செய்தும் பலனில்லாமல் சோர்ந்து போகிறார் பிளேக். உணவு வங்கியில் கேட்டியினால் பசியை அடக்க முடியாமல் அங்கேயே சாப்பிடுவதும், உடல்நலம் இல்லாமல் பிளேக் வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கும்போது கேட்டியின் மகள் பிளேக்கிடம் பேசும் வசனங்களும் இங்கிலாந்தின் சட்ட அமைப்பால் பாதிக்கப்படும் மனிதர்களின் உட்சபட்ச வலியை நமக்குக் கடத்துகின்றன. ஆனால் படம் முழுதும் நம்மை அழ வைக்காமலிருக்க அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் மீதான கிண்டலின் மூலமே காட்சிகள் நகர்கின்றன.





ஒரு நாட்டின் சட்டங்களும் அமைப்புகளும் மக்களுக்கு உதவவே அமைக்கப்பட்டவை. மக்களை நல்வழிப்படுத்துவதே அவற்றின் ஒரே நோக்கம்.

### மனிதருக்கு உதவாத சட்டங்கள் எதற்கு...?

உலகில் வளர்ந்த நாடாக இருக்கும் இங்கிலாந்தின் சட்ட திட்டங்கள் சாதாரண மக்களை எப்படியெல்லாம் அவதிக்குள்ளாக்குகின்றன என்பதை ஒரு காட்சியில், பிளேக்கின் அந்தக் கடிதத்தில் இருக்கும் வார்த்தைகள் நமக்குச் சொல்கின்றன. தனது ஓய்வூதியத்துக்கான எல்லா முயற்சிகளையும் செய்து சோர்ந்துபோன பிளேக் இறுதியாகத் தனது எதிர்ப்புக் குரலைச் சுவரில் எழுதிக் காட்டுகிறார். அவ்வளவு கட்டுப்பாடான நாட்டில் இதற்கான எதிர்விளைவுகள் எப்படி இருக்கும்? எல்லாவற்றையும் தன்னுடைய 80ஆவது வயதிலும் எதிர்கொள்கிறார் பிளேக்.

"நான் பிச்சைக்காரன் இல்லை, திருடன் இல்லை, பணக்காரனும் இல்லை. என்னுடைய சுமாரியாதையை எங்கேயும் இழக்க விரும்பவில்லை. அதேநேரத்தில் நான் நாயும் இல்லை. நான் இந்த நாட்டின் குடிமகன். எனக்கான உரிமைகள் என்னைக் காப்பற்றும்."

இந்த வார்த்தைகள்தான் பிளேக்கின், கேட்டியின். இன்னுமிருக்கும் இங்கிலாந்தின் எளிய மனிதர்களின் நிலையைத் தெளிவாக விளக்குகின்றன.

ஒரு நாட்டின் சட்டங்களும் அமைப்புகளும் மக்களுக்கு உதவவே அமைக்கப்பட்டவை. மக்களை நல்வழிப்படுத்துவதே அவற்றின் ஒரே நோக்கம். அனைவரது பாதுகாப்புக்கும் அவையே உத்தரவாதமளிக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டுக்கும் அவை மாறுபடுகின்றன. அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அவை உதவி செய்யும் விதமாகத்தான் இருக்க வேண்டும். இவற்றின் மூலம் அனைத்து மனிதர்களும் நிம்மதியாக வாழவேண்டும். அதற்குதவாத சட்ட திட்டங்கள் எதற்கு...? நடைமுறைச் சிக்கல்களை யோசிக்காமல் கண்மூடித்தனமாக அமைப்பையும் சட்டத்தையும் பின்பற்ற ஆரம்பித்தோமேயானால் என்ன நிகழும்? இதையே 'ஐ, டானியல் பிளேக்' திரையாக்கியுள்ளது. ஆக, 'ஐ டானியல் பிளேக்' இங்கிலாந்தைக் கிண்டல் செய்யும் அருமையான திரை அனுபவம்.




# கலக்கியது சுனாமி!

தென்கிழக்குப் பிரதேசத்தில் கடலை அண்மித்துள்ள பல தமிழ், முஸ்லிம் கரையோரப் பிரதேச மக்கள் கடந்த புதன்கிழமை 'சுனாமி' வதந்தியால் பெரும் அல்லோல கல்லோலத்துக்கு உள்ளாகினர். அன்றையதினம் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முளைவிட்ட சுனாமி வதந்தி மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அசுர வேகத்தில் பரவி மக்களின், இயல்பு வாழ்க்கையைப் பாதித்தது. குறித்ததினத்தன்று காலையில் பரவத்தொடங்கிய சுனாமி வதந்தி பலமணிநேரம்(நண்பகல்வரை) நீடித்து மக்களை அவலத்துக்குள்ளாக்கியது. காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட (கிணற்று நீர்மட்டக்குறைவு) சில அறிகுறிகளே சுனாமி வரப்போகின்றதோ...! எனும் சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியதாகப் பின்னர் தெரிய வந்தது.

வைத்தியசாலைகளிலிருந்து நோயாளர்கள் தாமாகவே வெளியேறிச்சென்றதுடன், பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளிலிருந்து அழைத்தும் சென்றனர். அத்துடன் வதந்தி பரவியதும் இளைஞர்கள் பயமின்றி கடற்கரைகளை நோக்கிப் படையெடுத்ததையும் அவதானிக்கமுடிந்தது.

*'பாவம்! 2004 டிசெம்பரில் சுடுகண்ட பூனைகளல்லவா!'*



தொகுப்பு
அனார்கலி

## டிப்ளோமா பயிற்சி நெறி

கிராம அபிவிருத்தித்திணைக்களம் அம்பாறை மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டுக்கான மகளிர் அபிவிருத்தி டிப்ளோமாப் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதன்படி, தையல்பயிற்சி, அழகுக்கலை, மனையியல், கைவினைப் பொருள்கள் உட்பட மேலும் சில பயிற்சி நெறிகள் ஒருவருடத்துக்கான முழுநேரப்பயிற்சி நெறிகளாக 01-01-2018 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்முனை, கல்முனைத்தமிழ், சாய்ந்தமருது, காரைதீவு, இறக்காமம், நிந்தவூர், நாவிதன்வெளி, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடி, வேம்பு,திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்களிலேயே இந்த டிப்ளோமாப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்வோருக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்பட விருப்பத்துடன், பயிற்சியாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது!



## இந்த அவலம் பாரீர்!

கிழக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் பிரிவிலுள்ள நிந்தவூர் தலைமை தபாலக வளாகத்தில் ஒரு சிறுமழை பெய்தாலும் மழை நீர் தேங்கி நிற்கும் அவலம் நீடித்து வருகின்றது. இதனால் மழைகாலங்களில் தமது தபாலகக் கருமங்களுக்காக இந்தத் தபாலகத்துக்கு வரும் பொதுமக்கள் முன்றலில் தேங்கிநிற்கும் வெள்ள நீருக்கு முகம்கொடுத்துப் பல அசௌகரியங்களை எதிர்கொண்ட பின்னரே கரும பீடங்களைச் சென்றடைய வேண்டியுள்ளது.

நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டது. ஆனாலும் இன்னும் நிலமை சீரமைக்கப்படவில்லை, தபால் திணைக்களமும் திரும்பிப் பார்ப்பதாக இல்லை.

'பாவம் மக்கள்'

## வருகிறது, வரப்பிரசாதம்!

மத்திய அரசின் கீழான சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாகச் சுகாதாரப் பிரதி அமைச்சர் எம்.சி.பைஸால் காசிம் தெரிவித்துள்ளார்.

இதன்படி பிராந்திய ரீதியான மகப்பேற்று மற்றும் சிறுவர் வைத்தியசாலையொன்று பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படவிருப்பதுடன், பாலமுனை வைத்தியசாலையில் பிராந்தியத்துக்கான கண் சிகிச்சைப் பிரிவும், கல்முனையில் விபத்துச் சேவை விஷேட பிரிவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இன,மத,பிரதேச வாதங்களுக்கு அப்பால் தன்னுடைய சேவை தொடரும் எனவும் அவர் கூளுரைத்துள்ளார்.

*'உன் பணி தொடரட்டும்'*

## கசியும் தகவல்கள்!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்நோக்குவதற்காக அம்பாறை மாவட்டத்தில் சில முஸ்லிம் கட்டசிகள் இப்போதிருந்தே உஷார் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றன. வாக்காளப் பெருமக்களுக்கு வலைவீசும் வகையிலான தேர்தல் கால நலநோன்புத் திட்ட உதவு பொருள்களில் அரிசி, மாவு, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் இடம் பெற்றதாகவும், நிலமை மாறி எரிவாயு அடுப்பு (காஸ் குக்கர், றைஸ் குக்கர்) மட்டுமில்லாமல் முச்சக்கர வண்டிரயர்களும் இப்போது புகுந்திருப்பதாக அரசியல் அவதானி ஒருவர் நகைச்சுவையாகக் கூறினார். "காசு மரங்களை உசுப்பி விட்டுள்ளேன். அள்ளிக்கொள்ளுங்கள். ஆனால் வாக்குகளைமட்டும் மரத்துக்கு மட்டும் அளித்து விடுங்கள்"என முன்னொரு சமயம் தேர்தல் ப்ரப்புரை மேடையில் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் சொன்னது ஞாபகத்துக்கு வருகின்றது.



## பணி பாராட்டு!

தேசிய நீலப்பசுமை அரச தலைவர் வெள்ளி விருதினையும், கிழக்கு மாகாண உற்பத்தித் திறன் போட்டியில் முதலிடம் பெற்று அதற்கான விருதினையும் அண்மையில் பெற்றுக் கொண்டது நிந்தவூர் ஆதரவைத்தியசாலை. இதனையொட்டி வைத்தியசாலை உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் பாராட்டி மதிப்புறுத்தும் விழா ஒன்றை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை அண்மையில் நடாத்தியது.

அபிவிருத்திச் சபைத்தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.நஸீர் அகமட் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சுகாதார பிரதி அமைச்சர் எம். சி. பைஸால் காசிம் முதன்மை விருத்தினராகக் கலந்து கொண்டார்.



## கேள்விக்கென்ன பதில்...?

தூயமுஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் கூட்டமைப்பின் தலைமை ஏற்பாட்டாளரும், முன்னாள் ,ராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலி தனது நிந்தவூர் இல்லத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது நெருங்கிய சகாக்களுடன் அரசியல் நிலமைகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது வடக்குக், கிழக்கு இணைப்புப் பற்றியும், சில முஸ்லிம் தலைமைகள் விடும் அறிக்கைகள் பற்றியும் ஒருவர் ஹஸனலியிடம் கேள்வி எழுப்பினார்.

'வடக்குக் கிழக்கு இணைவதானாலும் சரி, பிரிவதானாலும் சரி, அது நிபந்தனையுடன் இடம்பெற வேண்டுமென நமது மறைந்தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார்" எனப்பட்டெனப் பதிலளித்தார் ஹஸனலி. அத்துடன் நின்றுவிடாது 'பிரிக்கவேண்டும் இணைந்தால் குருதி ஆறு ஓடும் என அறிக்கை விடுபடுவார்கள் எத்தகைய நிபந்தனைளுடன் இப்படிக் கூறுகிறார்கள்' எனக் கேள்வியும் எழுப்பினார்!

*'வடக்குக் கிழக்கு இணைப்புக்கு ஹஸனலி பச்சைக் கொடிதானோ?*

# அரசியல் மயப்படுத்தப்பட்ட அரச இயந்திரம்

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்



ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் மூலமே மக்கள் தமக்கான ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்கின்றனர். நாடளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை வென்றெடுக்கும் கட்சியின் தலைவர் தலைமை அமைச்சராகவும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் நியமனம் பெறுகின்றனர். சில நாடுகளில் அரச தலைவரை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்கிறார்கள். இன்னும் சில நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைத் தெரிவு செய்கின்றனர். நாட்டுக்கு நாடு அரச தலைவரின் அதிகாரப் பரப்பு மாறுபடுவதுண்டு. எப்படியிருப்பினும் அரச தலைவர், தலைமை அமைச்சர், அமைச்சரவை என்பனவே அதிகாரமுள்ள அரசாகின்றன. அதேவேளை நீதி நிர்வாகம், சிவில் நிர்வாகம், மத்திய வங்கி, சிறைச்சாலை, ஆயுதப்படைகள் என்பன அரச இயந்திரம் எனப்படுகின்றது. அரசு முன்வைக்கும் திட்டங்களை முன்கொண்டு செல்வதிலும், நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் இவையே அதிகாரம் கொண்டவையாக விளங்குகின்றன. நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை மீறி நாடளுமன்றம் சட்டங்களை இயற்றினால் அவற்றை நிராகரிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு.

**ஊறிப்போய்விட்ட அரசியல் தலையீடுகள்**


அரசுகள் காலத்துக்குக் காலம் தேர்தல்கள் மூலம் மாற்றியமைக்கக் கூடியன. ஆனால், அரச இயந்திரம் அப்படியல்ல. அது நிரந்தரமானது. அதில் தலைமைப்பதவி வகிப்பவர்கள் மாற்றப்படலாம். ஆனால் அது மாற்றமடையாது தனது போக்கில் இயங்கிக் கொண்டிருக்கும். அண்மையில் இலங்கைக் கணக்காளர்களைப் பாராட்டிக் கௌரவித்து இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன கடந்த 35,40வருட காலப் பகுதியில் அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக அரச அதிகாரிகள் தங்கள் பணிகளை கச்சிதமாகவும், முறையாகவும் மேற்கொள்ள முடியவில்லை எனவும் தற்சமயம் அந்த நிலை மாற்றப்பட்டு வருவதாகவும் எனினும் நீண்ட காலமாக ஊறிப்போய் விட்ட இந்த நிலைமையை உடனடியாக மாற்ற முடியாததெனவும் அதற்குச் சிறிது காலம் செல்லும் எனவும் தெரிவித்தார். மேலும் அந்த நாள்களில் அதிகாரிகள் தூரப்பிரதேசங்களுக்குச் சென்று அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தமையையும் சுட்டிக்காட்டினார். அதாவது அரசியல்வாதிகளின் தலையீடுகள் காரணமாக அரச இயந்திரத்தின் இயல்பான கடமைகள் பாதிக்கப்பட்டமையை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஒரு கிராமசேவையாளராகப் பணியாற்றியவர் என்ற அடிப்படையில் இந்த விடயத்தை அவரால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்துள்ளது.

**இனவாத அரசியல் மயப்படுத்தல்!**

அரசியல்வாதிகள் அரச இயந்திரத்தின் பணிகளில் தலையீடு செய்வதைக் கண்டித்து அந்த நிலைமையை மாற்ற முயற்சிக்கும் மைத்திரி அதைவிட ஆபத்தான ஒருபோக்கு வளர்ச்சியடைந்து ஆழமாக வேரூன்றிவிட்டதைக் கவனத்தில் எடுக்கத் தவறி விட்டார். அது என்னவென்றால், அரச இயந்திரமே அரசியல் மயப்படுத்தப்படுவதாகும். அதிலும் இனவாத அரசியல் மயப்படுவது என்பதும் உன்னிப்பாக அவதானிக்கவேண்டிய விடயமாகும். ஒரு காலத்தில் பதவி நியமனங்கள் பரீட்சைகள் மூலமோ, நேர்முகத்தேர்வுகள் மூலமோ வழங்கப்பட்டன. இடமாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கின்படி மேற்கொள்ளப்பட்டன. பதவி உயர்வுகள் திறமை அடிப்படையில் இடம் பெற்றன. ஆனால், கடந்த பல வருடங்களாக நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் என்பன அரசியல் வாதிகளின் ஆதிக்கத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே பதவியிலுள்ளோர் தங்கள் அதிகாரங்களை மக்களுக்குச் சேவை செய்வதைவிட அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே மேற்கொள்கின்றனர். அதன் காரணமாக எவ்வித அழுத்தங்கள் இல்லாமலேயே அரச இயந்திரம் இயல்பாகவே அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டது. இன்று இனவாத அரசியல் மயப்படுத்தலே முனைப்புப் பெற்று நிற்கிறது. குறிப்பாகச் சட்டமா அதிபர் திணைக்களம், பரீட்சைகள் திணைக்களம், காவல்துறை, பாதுகாப்புப்படைகள் என்பன தனியான ஆணையாளர்கள் தலைமையிலேயும் சட்டமா அதிபர் தலைமையிலேயும் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சுதந்திரமாகச் செயற்படுவதாகவே கூறப்படுகிறது. ஆனால் அவை எடுக்கும் நடவடிக்கைகளிலிருந்து சுயமாகவே அவை இனவாத அரசியலின் அடிப்படையில் செயற்பட்டு வருவது தெளிவாகிறது. அதாவது ஆணையாளர்கள், சட்டமா அதிபர்கள் என்ற கோட்பாடு, அந்தச் சுதந்திரம் இன ஒடுக்குமுறையின் கருவியாகச் செயற்படும் நிலையே தொடர்கிறது.

**அரசியல் கைதிகள் விடயத்தில் அரச இயந்திரம்**

சட்டமா அதிபர் திணைக்களம் சட்டம், ஒழுங்கு என்பவற்றின் நியாயத்தன்மையை மழுங்கடித்து முற்றுமுழுதாக இனவாத அடிப்படையிலேயே செயற்பட்டு வருகிறது. கடந்த 10வருடங்களுக்கு மேலாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வந்த அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை திடீரென அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு விட்டது. வவுனியாவில் சாட்சியாளருக்குப் பாதுகாப்பில்லை எனக் காரணம் கூறப்பட்டது. வவுனியா இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அந்த நகரிலேயே பிரதான இராணுவ முகாம்கள் காவல் நிலையங்கள் அமைந்துள்ளன. இந்த நிலையில் அங்கு பாதுகாப்பு இல்லையென்பது உண்மைக்குப் புறம்பானதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். அந்த



அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்திச் சாகும் தறுவாயை எட்டியபோதும் சட்டமா அதிபர் திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதித்துறை மரபின்படி குற்றம் சுமத்துபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு நிதிபதிகளையோ, நீதிமன்றங்களையோ மாற்றக் கோரும் உரிமை உண்டு. ஆனால், அந்த உரிமை சட்டமா அதிபர் திணைக்களத்தால் மூர்க்கமாக மறுக்கப்பட்டுள்ளது. கடந்த கால அனுபவங்களைப் பார்க்கும்போது மூன்று கைதிகளுக்கும் எப்படியாவது தண்டனை வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இந்த நீதிமன்ற மாற்றம் மேற்கொள்ளப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது. புரியாத மொழி, விசாரனைகள் என்பன காரணமாகவும் சட்டமா அதிபர், நீதித்துறை சார்ந்தோரின் இனவாத முனைப்புக் கள் காரணமாகவும் கைதிகள் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

**பாரபட்சமான தீர்ப்பிடல்கள்**

மூதூர் படுகொலை வழக்கில் எதிரிகளுக்குப் பாதுகாப்பு இல்லையெனக் கூறப்பட்டது. திருகோணமலை மேல் நீதிமன்றிலிருந்து அனுராதபுரத்துக்கு வழக்கு மாற்றப்பட்டது. பின்னர் கொழும்புக்கு மாற்றப்பட்டு அங்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சாட்சிகள் சரியாகக் குற்றவாளிகளை அடையாளம் காட்டின. விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. ஆனால், ஜூரிகளின் தீர்ப்பின்படி குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். இப்படியான நிலையில் வழக்குகள் இந்த வழக்குக் கொழும்புக்கு மாற்றப்பட்டதும் ஜூரிகள் சபை நியமிக்கப்பட்டதும் குற்றவாளிகளை விடுதலை செய்யவேண்டும் என்பதற்காகவா? என்ற கேள்வி எழுகிறது. இதில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதும் எதிரிகள் சிங்களப்படையினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 10வருடங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த சில வழக்குகள் கொழும்பு, அனுராதபுர நீதிமன்றங்களில் அவசரமாக விசாரிக்கப்பட்டு உச்சபட்ச தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமென அரசு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி பன்னாட்டு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே அந்தச் சட்டம் நீக்கப்படுவதற்கு முன்பாக எப்படியாவது அரசியல் கைதிகளுக்கு அதிகபட்ச தண்டனையை வழங்கிவிட வேண்டும் என்பதற்காகவே வழக்குகள் அவசரமாக விசாரிக்கப்படுகின்றன போலும்!

**அரசுகள் மாறினாலும் அரச இயந்திரம் மாறாது**

நீதியை நிலை நாட்ட வேண்டிய சட்டமாஅதிபர் திணைக்களம் இனவாதத்தால் அரசியல் மயமாக்கப்பட்டிருக்கிறது. இதனால் நீதிமன்றங்களின் புனிதம் களங்கப்படுகிறது. இவ்வாறே சுதந்திரமாகச் செயற்படவேண்டிய அரச இயந்திரத்தின் முக்கிய பிரிவான பாதுகாப்புப் படை இனவாத அடிப்படையில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் வழிநடத்தலில் தமிழ் மக்கள் மத்தியில் வன்முறைகள், கொலை, கொள்ளைகள், என்பவற்றை மேற்கொள்கின்றது. பிரதிபலனாக எவ்வித குற்றச்செயல்களில் ஈடுபடாதவர்கள் மீது காரணமில்லாமலே சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சிறைச்சாலைகளில் இடம்பெறும் படுகொலைகள் சிறைச்சாலைத் திணைக்களத்தின் தனித்துவத்தையே கேலிக்குள்ளாக்குகின்றன. 1938ஆம் ஆண்டில் வெலிக்கடைச் சிறயில் தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்டது 2015ஆம் ஆண்டில் வெலிக்கடையில் அரசியல் சக்திகளின் பின்னணியில் கைதிகள் கொல்லப்பட்டமை, தங்களின் விடுதலை கோரிப் போராட்டம் நடத்திய சில அரசியல் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டதும் எல்லோரும் அறிந்த சம்பவங்களே. ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் இலங்கையில் அரச இயந்திரம் என்பது முற்றாகவே அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமில்லை. எனவே எந்த அரசு ஆட்சியமைத்தாலும் இலங்கையில் ஜனநாயகம், நீதி, நியாயம் என்பன வெறும் காணல் நீரே.

கட்டுரை

ஸூடோ ஸ்வாமி




# மெர்சல் அடைய வைக்கும் 'மெதமுலான' வரி!

கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம், ஒவ்வொரு துறைகளிலும் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் குறித்து அலசப்பட்டு வருகின்றது. நிதி அமைச்சரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான மங்கள சமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 'நீலப்பசுமை' எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்து உரை நிகழ்த்திய நிதி அமைச்சர், கடந்த அரசின் காலத்தில் இலங்கை பெற்ற கடன்கள் காரணமாக இலங்கையர் ஒவ்வொருவர் மீதும் வலிந்து திணிக்கப்பட்டுள்ள கடன் சுமை தொடர்பான விவரங்களைப் புட்டு புட்டு வைத்திருக்கிறார். அரசு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள 7ஆயிரம் பில்லியன் ரூபா தொடர்பில் அடுத்து வரும் மூன்று வருடங்கள் தீர்க்கமானவையாக அமையும் என்று குறிப்பிட்டிருக்கும் மங்கள சமரவீர, 2018ஆம் ஆண்டில் மாத்திரம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகையாக 1970பில்லியன் ரூபா இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். குறித்த கடன்சுமையின் காரணமாக 2018ஆம் ஆண்டுக்குரிய முதலீட்டு நடவடிக்கைகளில் கைவைக்காமல், கடனை மீளச் செலுத்துவதற்கு புதிய வரி ஒன்றை முன்மொழிவதாக நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார். கடன் மீள் செலுத்தல் சிறப்பு அறவீடு என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் புதிய அறவீட்டுக்கான செல்லப்பெயர் 'மெதமுலான வரி' என்பதாகும். இந்தப் பெயரிடலும் மங்கள் சமரவீரவினாலேயே நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

**சிறப்புப் பெயர்கொண்ட சிறப்பு அறவீடு**

முன்னைய அரசு பெற்ற கடனை அடைப்பதை முழு முதல் இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட்டிருக்கும் இந்த வரிக்கான செல்லப்பெயர், ஒரு இடுகுறிப் பெயர் அல்ல, காரணப்பெயர் ஆகும். தென் மாகாணத்தின் மெதமுலான பிரதேசத்திலிருந்து புறப்பட்டு வந்த நபராலும் அவருடைய கூட்டத்தின ராலும் எடுக்கப்பட்ட முடிவுகளால் தற்போதைய இலங்கையாரிடம் சுமத்தப்பட்டிருக்கும் சுமையைக் கருத்தில் கொண்டே இந்தப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. வங்கிகளில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களில் ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் 20சதம் அல்லது ஒவ்வொரு பத்தாயிரம் ரூபா கொடுக்கல் வாங்கலிலும் 2ரூபா வீதம் எனும் அடிப்படையில் 2018ஆம் ஏப்பிரலில் அடுத்த நிதியாண்டு ஆரம்பம் முதல் வங்கிகளிடமிருந்து பிடுங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கும் என்று உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள இந்த நடைமுறை, வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களை இலக்கு வைத்ததே அன்றி வாடிக்கையாளரை அல்ல என்று தலையில் அடித்து சத்தியம் செய்யாத குறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மெதமுலான வரி மூலம் 20சதம், 20சதமாக திரட்டத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் மொத்த அனுமானிப்புத் தொகை 20பில்லியன் ரூபாய்கள் ஆகும்.



மெதமுலான வரி நடைமுறை தொடர்பில் அமைச்சர்கள் மட்டத்தில் மீள மீள வலியுறுத்தல்களும் விளக்கங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வரியானது நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் பாதிக்காத வகையில் புகுத்தப்பட்டிருப்பதாக அமைச்சரான சரத் அமுனுகம குறிப்பிடுகிறார். நிதி விவகாரத்துக்கான இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரட்ணவும் மெதமுலான வரியின் சுமை வாடிக்கையாளரிடம் சுமத்தப்படாது என உறுதி வழங்கியிருக்கிறார்.

கடனை மீளச் செலுத்துவதற்கான சிறப்பு வரிக்கான சிறப்புப் பெயரைக் கேட்டு ஒவ்வாமைக்குட்பட்ட ஒன்றிணைந்த எதிரணித் தரப்பு, குறித்த வரிக்கு பிணைமுறி மோசடி வரி என்று பெயரிடுவதே பொருத்தமானது என்று வேறு அறிவித்திருக்கிறது. மறைமுக வரிகளைக் கொண்டதென வர்ணிக்கப்படும் இதில் பிரேரிக்கப்பட்டுள்ள மெதமுலான வரி வாடிக்கையாளரிடம் அறவிடப்படமாட்டாது என்று அரசு வழங்கியுள்ள வாக்கைக் காப்பாற்ற வேண்டும்.

**சுக்கிரதிசையில் பயணிக்கும் இலங்கையின் வங்கித்துறை**

ஆங்காங்கே சில ஏற்றத் தாழ்வுகள் நிலவினாலும் இலங்கையின் வங்கித்துறை பொதுவில் சுக்கிரதிசையிலேயே பயணம் செய்கிறது. 2017ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கையில் இயங்கும் வங்கிகள் ஈட்டிய இலாபங்கள் தொடர்பில் அண்மையில் வெளியாகியுள்ள அறிக்கைகள் இதைத் துலாம்பரமாகக் காட்டியுள்ளன.

கடந்தசெப்டெம்பர்மாதம்30ஆம்திகதியுடன் முடிவடைந்த இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கான வர்த்தக வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 19.718 பில்லியன் ரூபாய்கள் என்றும் வரிக்குப் பிந்திய இலாபம் 11.675 பில்லியன் ரூபாய்கள் என்றும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. என்.டி.பி. எனப்படும் தேசிய அபிவிருத்தி வங்கியின் இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கான வரிக்கு முந்திய இலாபமாக 5679மில்லியன் ரூபாய்கள் ஈட்டப்பட்டிருக்கிறது. அதே வேளை வரிக்குப் பிந்திய இலாபமாக 3,310 மில்லியன் ஈட்டப்பட்டிருக்கிறது. பான் ஏசியா வங்கி, இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக 1.8பில்லியன் ரூபாய்களையும் வரிக்குப் பிந்திய இலாபமாக 918.1மில்லியன் ரூபாய்களையும் சம்பாதித்திருக்கிறது. கடந்த செம்ரெம்பர் 30ஆம் திகதி வரையான கடந்த ஒன்பது மாத காலப்பகுதியில் வரிக்குப் பின்னான இலாபமாக 3,002மில்லியன் ரூபாய்களை உழைத்திருக்கிறது செலான் வங்கி. அதே காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபமாக 16.8 பில்லியன் ரூபாய்களையும் வரிக்குப் பிந்திய இலாபமாக 11.8 பில்லியன் ரூபாய்களையும் கண்டிருக்கிறது ஹற்றன் தேசிய வங்கி. வரிக்கு முந்திய இலாபமாக 4341மில்லியன்ரூபாய்களையும் வரிக்குப் பிந்திய இலாபமாக 3418மில்லியன் ரூபாய்களையும் பதிவு செய்திருக்கிறது டி.எவ்.சி.சி. வங்கி. 2016ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் 6.7 பில்லியன் ரூபாய்களை வரிக்குப் பிந்திய இலாபமாகச் சம்பாதித்திருந்த சம்பத் வங்கி, இந்த ஆண்டின் அதே காலப்பகுதியில் 8.5பில்லியன் ரூபாய்களை வரிக்குப்பின்னாக உழைத்திருக்கிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றாகப் பட்டியல்படுத்தப்படும் இலங்கையின் வங்கிகள் வங்கிச் சேவைகள் மூலம் வருடாவருடம் இலாபம் எனும் பெயரில் சுருட்டும்; மில்லியன் தொகையிலான பணம், பொருளாதார நோக்கில் இலங்கைக் குடிமக்களுக்கு ஆரோக்கியமான கொடுக்கல்வாங்கல் சூழலை கொண்டிருக்கிறதா? அல்லது குடிமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் வகையில் அமைகிறதா? என்பது கேள்விக்குரியது. இந்தப் பின்னணியில் தான் மெதமுலான வரி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**வங்கித்துறையினரின் எதிர்வினை**

வருடாவருடம் அதிக இலாபமீட்டிவரும் இலங்கையின் வங்கித்துறை, 20 பில்லியன் ரூபாய்களைத் திரட்டத் திட்டமிட்டிருக்கும் உத்தேச வரி நடைமுறை தொடர்பில் எத்தகைய எதிர்வினையைக் காண்பிக்கப் போகின்றன என்பது இன்னமும் அம்பலத்துக்கு வரவில்லை. எனினும், குறித்த வரியை இன்னோரன்ன நடைமுறைகளைக் கையாண்டு வாடிக்கையாளரின் தலையிலேயே கட்ட முனைவார்கள் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது.

குறித்த வரி அறவீடு வங்கித்துறையினரின் இலாபத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தாது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், அது வங்கிகளின் வருமான வரியிலிருந்து கழிக்கப்பட முடியும் என்றும் மங்கள சமரவீர நாடாளுமன்றுக்கு அறிவித்திருக்கிறார்.

வங்கிகளில் பண வைப்பு மற்றும் மீள எடுப்பு என்பவற்றை இந்த வரி முறைமை இலக்கு வைப்பதானால், தானியங்கி இயந்திரப் பணப்பரிமாற்று சேவையினூடான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படாது என்பதுடன் குறித்த சேவையை விஸ்தரிப்புச் செய்வதில் வங்கிகள் காட்டி வந்த ஆர்வத்திலும் வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டிருக்கிறது. இதை விட பண மீள எடுப்பு தொடர்பில் வாடிக்கையாளரை அசௌகரியப்படுத்தும் ஏனைய கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் வங்கிகள் அறிமுகப்படுத்துவதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றன.

**ஒன்றிணைந்த எதிரணியினரின் பெயர் பிரேரிப்பு**

கடனை மீளச் செலுத்துவதற்கான சிறப்பு வரிக்கான சிறப்புப் பெயரைக் கேட்டு ஒவ்வாமைக்குட்பட்ட ஒன்றிணைந்த எதிரணித் தரப்பு, குறித்த வரிக்கு பிணைமுறி மோசடி வரி என்று பெயரிடுவதே பொருத்தமானது என்று வேறு அறிவித்திருக்கிறது.

மறைமுக வரிகளைக் கொண்டதென வர்ணிக்கப்படும் இதில் பிரேரிக்கப்பட்டுள்ள மெதமுலான வரி வாடிக்கையாளரிடம் அறவிடப்படமாட்டாது என்று அரசு வழங்கியுள்ள வாக்கைக் காப்பாற்ற வேண்டும். மட்டுமல்லாமல் வங்கிகள் திட்டமிடப்போகும் எதிர்வினை தொடர்பிலும் அரசு விழிப்பாயிருக்க வேண்டும்.

## வரலாற்றில் வாழும்

# எஸ்.எம்.கோபாலரட்ணம்

கட்டுரை

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

எங்கள் மண்ணின் மூத்த பத்திரிகையாளர் எஸ். எம். கோபாலரத்தினம் என்கின்ற கோபு அவர்கள் கடந்த 15ஆம் திகதி காலமானார் என்பது ஒரு வரலாற்றுப் பதிவாகி விட்டது. இறக்கும்போது அவரது வயது 87. ஆனால் தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியைப் பத்திரிகைத் துறையில் பணியாற்றித் தன் செயற் திறனால் ஒரு பாடத்திட்டத்தினையே உருவாக்கிச் சென்றுள்ளார்.

புறச் சூழல் ஒத்துழைக்காத காலங்களில், பல்வேறு அரசியல், பொருண்மிய நெருக்கடிகளின் தலை வலிகளைச் சுமந்து கொண்டு சரியான செய்தியைத் தரமான முறையில் மக்களுக்குத் தருவதில் அவர் திடமாக உழைத்தார் என்பதில் இருந்து அந்த நேரிய பண்பு கொண்ட பொதுத் தளத்தில் செயற்பட்ட அவரைப் புரிந்து கொள்ள முடியும்.

அவருடைய மிகச் சிறந்த பண்பாகப் பெருமையுடன் கூறப்படுவது யாதெனில் ஒரு செய்தி எப்படி வெளிவர வேண்டும் என்பதைவிட அந்தச் செய்தி எப்படி வரக்கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டினார். பத்திரிகைகள் மக்களை ஆற்றுப்படுத்தும் ஒரு பிரதான சக்தி. பத்திரிகைகள் பிழையான கருத்துக்களுக்கோ, பொய்யான எடுகோள்களுக்கோ முன்னுதாரணமாக திகழ்ந்துவிடக் கூடாது என்பது அவர் கோட்பாடாக இருந்தது.

ஒரு செய்தியைப் பத்திரிகை நிருபர்களோ, செய்தி ஆசிரியார்களோ அப்படியே விழுங்கி உள்ளபடியே கக்காமல் அதிலுள்ள உண்மைத் தன்மை, ஏனைய தகவல்கள் எல்லாம் சரியானவையா என்பதை உறுதி செய்த பின்னரே அந்தச் செய்தியை வெளியிட வேண்டும் என்பதை அவர் தவறாது கடைப்பிடித்தார்.

அவரின் இந்தச் செயற்பாடு காரணமாக அவர் பணியாற்றிய பத்திரிகைகள் சிறப்புப் பெற்றன.

எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அது மக்களின் சகல ரசனைகளுக்கும் தீனி போடும் ஒரு ஊடகமாக அமையாமல் மக்களின் மதிப்பார்ந்த நல்ல ரசனைகளை மாத்திரம் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும் என அவர் போன்றவர்கள் செயற்பட்டதன் காரணத்தால் தான் இன்று சிறப்புப் பெற்ற ஒரு சில பத்திரிகைகள் நல்ல முறையில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

"அச்சு ஊடகம் ஏறத்தாழத் தெய்வம் போன்றது. அது நின்று தொடரும் பலனைத் தருவது. அரசனைப்போல உடன் ஆணைகளைப் பிறப்பிப்பதில்லை" என்பார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

"பத்திரிகை ஆசிரியர்களை ஆங்கிலத்தில் 'எடிட்டர்' என்பர். இதற்கு 'செம்மைப்படுத்துநர் - செவ்வி தாக்குநர்' என்பதே சரியான தமிழ்ப்பதம்" என்று கூறும் பேராசிரியர், "இலங்கையில் திருவாளர் நல்லையா, ஈ.ராமநாதன், வே.க.ப.நாதன், பிராண தர்த்திகரன், எஸ்.டி.சிவநாயகம், கே.வி.எஸ்.வாஸ், க.கைலாசபதி, ஆர். சிவகுருநாதன், கே.சிவப்பிரகாசம் ஆகியோரும் பிரதேச பத்திரிகை நிலையில் இராஜா. அரியரத்தினம், எஸ்.எம்.போபாலரத்தினம் போன்றோரும் முக்கியமானவர்கள்" என்று குறிப்பிடுகின்றார்.

வீரகேசரியில் ஏழு ஆண்டுகளும் ஈழநாடு பத்திரிகையில் 21ஆண்டுகளும் அவர் பணி புரிந்தார். இவை தவிர ஈழமுரசு, ஈழநாதம், செய்திக் கதிர், காலைக்கதிர், தினக்கதிர், சுடரொளி என காலத்துக்குக் காலம் அவரது ஆசிரியப் பணியால் மேம்பட்ட பத்திரிகைகள் அநேகம்.

ஈழப் போராட்டம் உச்சம் பெற்றிருந்த வேளையில், ஈழமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகி விடுதலைப் போராட்டத்துக்கு உந்து சக்தியானார். அதன் வெளிப்பாடகத்தான் ஆக்கிரமிக்க வந்த இந்திய இராணுவம் ஈழமுரசுப் பத்திரிகையைக் குண்டு வைத்துத் தகர்த்தபோது பத்திரிகையோடு தொடர்புபட்ட பலரையும் கைது செய்து சிறையிலடைத்தது. அதில் பிரதானமானவர் கோபாலரத்தினம் ஐயா.

இலங்கை மண்ணில் இந்தியா வியாபித்த சிறையில் அவஸ்தைகளை அனுபவித்தவர் அவர். அதன் காரணமாக 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற கட்டுரைத் தொடரை எழுதி நூலாக்கினார். இரண்டு பதிப்புக்களைக் கண்டது அது.

அவரது ஒப்பற்ற பத்திரிகைத்துறைப் பணியைப் பாராட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் 2004ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதி விருது வழங்கிக் கௌரவித்தமை ஒரு முக்கியமான விடயமாகும்.


பத்திரிகைத் துறைப் பணியோடு ஈழ மண்ணில் இந்தியச் சிறை என்ற நூலுக்கு மேலதிகமாக 'அந்த ஓர் உயிர் தானா உயிர்', 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு', 'ஈழம் மொழியில்லாப் பயணத்தின் முடிவில்லா வரலாறு' போன்ற நூல்களை எழுதினார்.

கோபு எனும் எஸ்.எம்.கோபாலரத்தினத்தின் கீழ் பணியாற்றித் தற்போது பிரான்சில் வசிக்கும் ஊடகவியலாளர். என்.கேதுரைசிங்கம் அவர்களின் கருத்துக்களுடன் இந்தப் பதிவினை நிறைவு செய்கின்றேன்.

1980களில் நான் பத்திரிகை உலகத்தில் நுழைந்த போது இவர் ஈழநாட்டில் கடமையாற்றி விட்டு விலகியிருந்தார். ஈழநாட்டில் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் கோபுவைப் பற்றி எல்லோரும் வியந்து கூறுவார்கள் சிலர் அவரை அடையாளமும் காட்டியிருந்தார்கள்.

பலதடவைகள் அவரை கண்டேன் பேசியதில்லை. 1981 ஆம் ஆண்டில் ஈழநாட்டில் இருந்து விலகியிருந்தாலும் 1984-85 களில் ஈழநாடு வாரமலரில் 'நினைவில் நிறைந்த அரசியலாளர் சிலர்' என்ற தலைப்பில் வாரா வாரம் கட்டுரைகள் எழுதி வந்தார். ஈழத்தமிழர்களின் போராட்ட வாழ்வை ஆவணப்படுத்தும் வகையில் அந்த எழுத்துகள் விரிவடைந்து சென்றன. பின்னர் அவரை சந்தித்துக் கட்டுரையைப் பற்றி பேசினேன் "எழுதிப்போட்டு திருப்பி வாசிக்கும் பழக்கமோ அல்லது திருத்தி எழுதும் பழக்கமோ என்னிடமில்லை" என்றார். அதுமட்டுமல்ல குறிப்புகள் எதுவும் இல்லாமலே எழுதும் எழுத்துச்சித்தர் கோபு ஐயா என்பதையும் தெரிந்து கொண்டேன்.

2002ஆம் ஆண்டு அவர் பாரிஸ் வந்தார். பாரிஸ் ஈழநாடு ஆசிரியர் எஸ்.எஸ்.குகநாதன் கோபு அவர்களை தமது அலுவலகத்துக்கு அழைத்துச் சந்திப்பொன்றை நடத்தினார். அதில் நானும் கலந்து கொண்டேன் பல விடயங்கள் தொடர்பாக பேசிக்கொண்டோம். பலருடைய



> எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அது மக்களின் சகல ரசனைகளுக்கும் தீனி போடும் ஒரு ஊடகமாக அமையாமல் மக்களின் மதிப்பார்ந்த நல்ல ரசனைகளை மாத்திரம் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும்.

கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் தான் எழுதிய 'முடிவில்லா பயணம்' அரசியல் கட்டுரைகள் தொடர்பாகவும் கூறினார் அதுவே பின்னர் 'ஈழம் முடிவில்லா பயணத்தில் முடியாத வரலாறு' எனப் புத்தக வடிவில் வெளியானது. 'அந்த ஒரு உயிர்தானா உயிர்' என்கிற தலைப்பில் அவர் எழுதிய ஆசிரிய தலையங்கங்கள் நூலுருவில் வெளிவந்துள்ளன. வெறுமனே ஒரு பத்திரிகையாளர் மட்டுமல்ல, தீர்க்கதரிசி, முக்காலமும் உணர்ந்த ஞானி அவர்.




### மேற்படி நூலில் எஸ்.எம். கோபாலரட்ணம் எழுதிய என்னுரையில் ஒருபகுதி...

அமைதி காப்பதற்காகவும் அல்லல்படும் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆறுதலளிக்கவுமென வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது.

இச்சிறையில் நூற்றுக் கணக்கானோர் அடைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நானும் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு 'இந்தியச் சிறையில்' அடைக்கப்பட்டேன். சரியாக இரண்டு மாதங்கள்(அறுபத்திரெண்டு நாட்கள்) இந்திய இராணுவத்தின் சிறையிலிருந்தேன். இச்சிறை வாசத்தின் போது யான் பெற்ற அனுபவம், அங்கு கண்டு, கேட்டுப் பெற்றவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

சிறைக்குள் எழுதுவதற்குப் பேனாவோ எழுதும் தாள்களோ கிடைக்கவில்லை. நான் கைது செய்யப்பட்ட சமயத்திலிருந்து சிறையிலிருந்து விடுதலையாகும் வரை நடந்த நிகழ்வுகள், சிறையில் நான் சந்தித்தவர்கள், அவர்களிடமிருந்து கேட்டறிந்தவை அனைத்தையும் மூளையின் ஒரு பகுதியில் பதிவு செய்து வைத்துக் கொண்டேன்.

பண்டிதர் நேரு முதல் இந்தியத் தலைவர்கள் பலரும் சிறையிலிருந்தபோது எழுதியவைகள் உலகப் புகழ்பெற்ற நூல்களாக, இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. நான் என்ன அரசியல் தலைவனா?

விடுதலையானதும் என்னை என் மனைவி அவசரமாகக் கொழும்புக்குக் கூட்டிச் சென்றார். அங்கு எனது விடுதலைக்குப் பல வழிகளிலும் முயற்சி செய்த என் அருமை நண்பன் காமினி நவரத்தினாவைச் சந்தித்தேன். அவர் என்னிடம் ஐநூறு எழுதும் தாள்களைக் கொடுத்து சிறை அனுபவங்களைக் கட்டுரையாக எழுதும்படியும் தேவைப்பட்டால் மேலும் தாள்கள் எடுத்துத் தருவதாகவும் சொன்னார். தமது அலுவலகத்திலேயே இருந்து எழுதும்படியும் சொன்னார். கோட்டை கனல்றோவில் 23ஆம் இலக்கக் கட்டடத்திலுள்ள 'சந்தேச நியுஸ் ஏஜன்சி' அலுவலகம் என் போன்ற பல பத்திரிகையாளர்களுக்கும் அலுவலகமாகவும் ஆலோசனைக் கூடமாகவும் சந்திக்குமிடமாகவும் இருந்தது.

அந்தக் கட்டடத்தில் இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்து பின்னர் என்மீது அளவற்ற அன்பும் பாசமும் நெசமும் கொண்டிருந்த கொழும்பு திருமதி நல்ல திருவின் இல்லத்திலும் முல்லேரியாவில் எனது உடன் பிறந்த அண்ணண் அருள் பிரகாசம் வீட்டிலுமாக எழுதி முடித்தேன்....

1989ஆம் ஆண்டு மனைவியும் நானும் தமிழ்நாட்டுக்குச் சென்றபோது இக்கட்டுரைத் தொகுப்புக்களையும் கொண்டுபோயிருந்தேன். சென்னையில் அன்பன் ஏ.எஸ்.பன்னீர் செல்வத்தை சந்தித்தபோது இந்தக் கட்டுரையை நூலுருவில் வெளியிட வேண்டும் என்றும் நல்ல நம்பிக்கையான ஒரு பதிப்பகத்திடம் இதை ஒப்படைக்கவேண்டும் என்றும் கேட்டேன்.

"முதலில் என்னுடன் வாங்க" என்று கூறி கட்டுரைத் தொகுப்புடன் பன்னீர் செல்வம் என்னைக் கூட்டிச் சென்றார். ஆனந்த விகடன் இல்லத்தில் துணை ஆசிரியர் ராவைச் சந்தித்தோம். ஜூனியர் விகடனில் இக்கட்டுரையை முதலில் பிரசுரிக்கலாம் என்று ராவ் கேட்டார். பின்னர் விகடன் இணையாசிரியர் மதனுடனும் சந்தித்துக் கட்டுரையை நூலாக வெளியிட வேண்டுமென்ற எனது விருப்பத்தைச் சென்னேன். 'முதலில் ஜூனியர் விகடனில் வெளிவரட்டும். பின்னர் நூலாக வெளியிடலாம்" என்று சொன்னார்கள். சம்மதித்தேன். இரண்டு தினங்களின் பின் வந்து சந்திக்கும்படி சொல்லிக் கட்டுரையை வாங்கிக் கொண்டார்கள். நாடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக்கொண்டு இரண்டு தினங்களின் பின் ராவைச் சந்தித்தேன். ஜயாயிரம் ரூபா கட்டுரை வெளியிடுவதற்குச் சன்மானமாகத் தந்தார். விகடனின் சன்மானம்! இதுவே என்படைப்புக்கு ஒரே நேரத்தில் கிடைத்த முதல் பெரிய தொகை.

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 1990ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஆறு மாதங்கள் இக்கட்டுரை ஜூனியர் விகடனில் தொடராக வெளிவந்து வாசகர்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது.

# படத்தின் வெற்றியை டுபாயில் கொண்டாடிய மெர்சல் படக்குழு



விஜய் நடிப்பில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது மெர்சல் படம். மெர்சல் படத்தின் வெற்றியை அடுத்து டுபாயில் வெற்றியைக் கொண்டாடியுள்ளது மெர்சல் குழு. இந்தப் படத்தை அட்லி இயக்கியிருந்தார். படத்தில் இடம்பெற்ற சில காட்சிகளை நீக்க வேண்டும் என்று அரசியல் ரீதியாக எதிர்ப்புகள் கிளம்பியதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்தது.

இவ்வாறாக அனைத்துத் தடைகளையும் தாண்டி படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் படத்தின் வெற்றியை டுபாயில் கொண்டாடியுள்ளது படக்குழு.



twitter.com/Kozhiyaar

கூட்டமா இருக்கும் போது 'சிங்கிளா' இருக்கிறத நினைச்சு பெருமையும், தனியா இருக்கும் போது வருத்தம் அடைவதும் சிலரின் வாடிக்கையே!!!



twitter.com/HAJAMYDEENNKS

நாம எப்போ கீழே விழுவோம்னு பார்த்துக்கிட்டே இருக்காங்க பலர்.. தூக்கிவிட அல்ல ஏறி மிதித்துவிட்டு போக...!



twitter.com/iamlaxmi1

நாம் வாழ்க்கையில் அடுத்தவரின் வழித்தடங்களை பின்பற்றி நடந்து கொண்டிருந்தால்...,
எமக்கான சொந்தப் பாதையை நாம் இன்னும் உருவாக்கிக் கொள்ளவில்லை என அர்த்தம்..

எல்லாத்தையும் மறந்திட்டு திட்டு வாங்கிறது ஆண்



எல்லாத்தையும் ஞாபகம் வைச்சி திட்டுறது பெண்

என்னை
அதிகம் பதம் பார்ப்பது
அன்பெனும்
வன்முறையே...





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு உருவாகும். இலாபம் திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** அன்பும், கருணையும் மனதில் மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை பெறுவர்.

**மிதுனம்:** வீண் பேச்சுகளைத் தவிர்த்தல் நல்லது. தொழில் வியாபாரத்தில் கவனமாக செயலாற்றவும். பணியாளர்கள் சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** மனக்குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரி செய்வது நல்லது. பணவரவு மிதமாக இருக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிங்கம்:** முக்கிய செயல் தடையின்றி நிறைவேறும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூலம் உண்டாகும். பணவரவு திருப்திகரமாகும்.

**கன்னி:** தகுதி மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். தொழில் வியாபாரம் மந்தகதியில் இயங்கும். பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**துலாம்:** இஷ்ட தெய்வ அருள் நன்மைக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி ப்பணியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு நடத்த திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் சீராக கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** செயலில் மனஉறுதி வெளிப்படும். கூடுதல் உழைப்பால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். தாராள பணவரவு இருக்கும்.

**மகரம்:** வியக்கும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவுடன் முன்னேறுவர்.

**கும்பம்:** நன்றியுணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் முயற்சி தேவைப்படும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடும்.

**மீனம்:** ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் நிலுவை ப்பணி நிறைவேறும். ஆதாயம் மிதமாக இருக்கும்.

நாம ஒரு பாட்டு பாடி அதை அலாரம் ட்யூனா வெக்கனும்



அப்பதான் அலாரம் அடிச்சா பயத்தில உடனே எழுந்திடுவம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 1 | 3 | 6 | 5 | 8 | 7 | 2 |
| 6 | 3 | 7 | 9 | 8 | 2 | 5 | 4 | 1 |
| 8 | 5 | 2 | 4 | 7 | 1 | 6 | 3 | 9 |
| 3 | 2 | 9 | 6 | 1 | 7 | 4 | 5 | 8 |
| 5 | 1 | 6 | 8 | 9 | 4 | 3 | 2 | 7 |
| 4 | 7 | 8 | 5 | 2 | 3 | 9 | 1 | 6 |
| 2 | 9 | 3 | 1 | 5 | 6 | 7 | 8 | 4 |
| 7 | 8 | 4 | 2 | 3 | 9 | 1 | 6 | 5 |
| 1 | 6 | 5 | 7 | 4 | 8 | 2 | 9 | 3 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# சிரிப்பின் தன்மைகள்

வெற்றியில் சிரிப்பவன் வீரன்.

கண்பார்த்துச் சிரிப்பவன் கஞ்சன்.

துன்பத்தில் சிரிப்பவன் மனிதன்.

மகிமையில் சிரிப்பவன் மன்னன்.

மாண்பில் சிரிப்பவன் பண்பாளன்.

மோகத்தில் சிரிப்பவன் வெறியன்.

கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்.

ஓடவிட்டு சிரிப்பவன் நயவஞ்சகன்.

தெரியாதென்று சிரிப்பவன் நடிகன்.

நின்று சிரிப்பவன் நினைவுள்ளவன்.

ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்.

கோபத்தில் சிரிப்பவன் சிந்தனையாளன்.

இன்பத்தில் சிரிப்பவன் ஏமாளி.

நினைவோடு சிரிப்பவன் அறிவாளி.

இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் கோமாளி..

குழைந்து சிரிப்பவன் சந்தர்ப்பவாதி.

நிறைய ஆண்களின் அன்பு கணக்கில் வராத கறுப்பு பணத்தைப் போன்றது



செலுத்தத் தெரிவதில்லை. அதிகமாகச் சேமித்து வைப்பார்கள்.

வெறிச்சோடிய சாலைகள்தான்
வேகத்தைக் காதலித்து
விபத்துகளைப் பிரசவிப்பது!




Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 900 | 1000 |
| நண்டு | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 700 | 500 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 400 | 350 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 350 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | – |
| ஓரா | 300 | 300 | 400 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | 200 |
| சூடை | 100 | 120 | 120 | 200 |
| ஒட்டி | 100 | 200 | 300 | 300 |
| திருக்கை | 250 | 200 | 400 | 300 |
| மதனம் | 150 | 150 | 250 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 400 | – |
| வாளை | 100 | 150 | 300 | 200 |

# நாக்கின் நிறத்தை வைத்து உடல்நலத்தை அறிந்து கொள்ளலாம்




நாக்கில் ஏற்படும் நிற மாற்றங்களைக் கொண்டு உங்கள் உடல்நலத்தை அறிந்து கொள்வது எப்படி எனத் தெரிந்து கொள்வோம்.

உடலில் எலும்புகள் இல்லாத உறுப்புகளில் நாக்கும் ஒன்று. நாம் உண்ணும் உணவின் சுவையை அறிய உதவுவதும் நாக்குத்தான். அதற்கு உதவும் வகையில் நாக்கில் 'சுவையுணர்வு ஏற்பிகள்' ஏராளமாக உள்ளன. இவை இனிப்பு, உப்பு, புளிப்பு, கசப்பு ஆகிய நான்கு அடிப்படைச் சுவைகளை உணர்த்துகின்றன. நாக்கைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தவறினால் பக்ரீரியா, வைரஸ், 'கான்டிடா ஆல்பிகன்ஸ்' எனும் பூஞ்சை போன்ற தொற்றுக் கிருமிகள் நாக்கைப் பாதிக்கும். அப்போது நாக்கில் புண்கள் வரும்.

இரும்புச்சத்து, விற்றமின் சத்து உட்பட்ட பல ஊட்டச்சத்துகள் குறைவாக உள்ளவர்களுக்கு நாக்கில் அடிக்கடி புண்கள் வரும். நோய் எதிர்ப்பாற்றல் குறைந்துள்ளவர்களுக்கும், வெற்றிலை பாக்கு, பான் மசாலா, புகையிலை போடுபவர்கள், புகைபிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள் ஆகியோருக்கும் நாக்கில் புண் வரும் வாய்ப்பு அதிகம்.

ஸ்டீராய்டு, 'ஆன்டிபயாடிக்' போன்ற சில மருந்துகளை அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளும்போதும், சில மருந்துகளின் ஒவ்வாமை காரணமாகவும் நாக்கில் புண் ஏற்படுவதுண்டு. தேர்வு நேரங்களில் மாணவர்களுக்கு உண்டாகிற மன அழுத்தம், தூக்க மின்மைகூட நாக்கில் புண் உண்டாகக் காரணமாக அமையும். பற்களில் 'கிளிப்' போட்டிருப்பவர்களுக்கும் செயற்கைப் பல்செட் சரியாகப் பொருந்தாதவர்களுக்கும் நாக்கில் புண் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புண்டு. இப்போது குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் வருகிறது. கட்டுப்படுத்தத் தவறினால் நாக்கில் புண் வரும்.

- வெற்றிலைப் போடாமலேயே சிலருக்கு நாக்கு மிக அதிகமாகச் சிவந்து காணப்படும். இது விற்றமின் 'பி12' மற்றும் இரும்புச்சத்துக் குறைபாடு இருப்பதற்கான அறிகுறியாகும். பெரும்பாலும் சுத்த சைவமாக இருப்பவர்களுக்கு நாக்கு மிக சிவப்பாக இருக்கும். மருத்துவரிடம் ஆலோசித்து அதற்கேற்ப உணவு வகைகளை எடுத்துக் கொள்வது அவசியம்.
- கரு நாக்கு (கருமை அல்லது ப்ரௌன்நிற படிவம் நாக்கில் படர்ந்திருக்கும்) உடையவர்கள் சரியாக அவர்களது வாய் மற்றும் பற்களை பராமரிப்பது இல்லை என்று அர்த்தம் கொள்ளப்படும். இதனால் வாய் துர்நாற்றம் ஏற்படும். நீங்கள் சாப்பிடும் உணவின் சுவையை மாறுபட்டு உணர்வீர்கள். அதிகமாக புகை மற்றும் மது அருந்துபவர்களுக்கு இவ்வாறு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
- நாக்கில் வெள்ளை நிறத்தில் சீஸ் போன்று படிவம் படர்ந்திருந்தால் வாயில் ஈஸ்ட் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். இந்த வாய் ஈஸ்ட் தொற்று ஏற்படுவது, நோய் எதிர்ப்பு மண்டலத்தின் வலிமைக் குறைகிறது என்பதற்கான அறிகுறி. இதனால் ஆன்டிபயாட்டிக் உணவுகள் அதிகம் உட்கொள்ள வேண்டியது அவசியம்.
- வயது அதிகமானாலோ அல்லது பூஞ்சைத் தொற்று ( Fungal) ஏற்பட்டாலோ இவ்வாறு நாக்கில் சுருக்கம் அல்லது வெட்டு ஏற்பட்டது போல இருக்கும். ஆன்டி ஃபங்கள் (AntiFungal) மருந்துகள் எடுத்துக் கொள்வது தான் இந்த பிரச்சனைக்கான தீர்வு.
- நாக்கில் சிவப்பாக சிதைக் காயம் ஒரு சில வாரங்களுக்கு மேல் தொடர்ந்து இருப்பதுபோல இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் சிகிச்சை மேற்கொள்ளுங்கள். இது நாக்குப் புற்றுநோயாக இருக்க வாய்ப்பிருக்கிறது. காரமான உணவுகள் சாப்பிட்டால் ஓரிரு வாரம் இது போன்ற சிவந்த சிதைக்காயம் ஏற்படுவது சகஜம் தான்.
- உங்கள் நாக்கு எரிச்சலுக்கு நீங்கள் உபயோகப்படுத்தும் பற்பசை (Tooth Paste) கூடக் காரணமாக இருக்கலாம். மற்றும் பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலம் நெருங்கும்போது இது போன்ற நாக்கு எரிச்சல் ஏற்படும்.



# அதிகாலையில் எழுந்தால் உடற்பருமனை தடுக்கலாம்

அதிகாலையில் கண் விழிப்பவர்கள், தாமதமாக கண்விழிப்பவர்களை விட ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், சிறந்த உடல்வாகு கொண்டவர்களாகவும் இருப்பர்.

நல்ல உடல் வாகைப் பெற்றுக் கொள்வதற்கு சூரியன் உதித்த பின்பு தூங்குவதை விடுத்து, அதிகாலையிலேயே படுக்கையில் இருந்து எழுந்து கொள்ள வேண்டும் என்கிறது ஒரு ஆய்வு.

அதிகாலையில் எழுபவர்கள் தங்களின் வேலையைச் சுறு சுறுப்பாகச் செய்வதோடு, தங்கள் குழந்தைகளையும் பாடசாலைக்கு விரைவாக அனுப்பி வைப்பதும், நள்ளிரவுப்பொழுது வரை வேலை பார்த்துவிட்டு வீடு திரும்புபவர்கள் மன அழுத்தத்தினாலும், உடல் பருமன் பிரச்சினையாலும் அவதிப்படுவது குறித்தும் இந்த ஆய்வில் தெரிய வந்தது.

மேலும், இந்த ஆய்வில் பங்கேற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களிடம் அவர்களின் உறங்கும் பழக்கம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அவர்களில் அதிகாலையில் எழுபவர்கள் சராசரியாக காலை 6.45 மணிக்கு தாங்கள் துயில் கலைந்து எழுவதாக தெரிவித்தனர். நள்ளிரவையும் தாண்டி தாமதமாக படுக்கைக்கு உறங்கச் செல்லும் வழக்கம் கொண்டவர்கள் சராசரியாக 8 மணி 45 நிமிடத்துக்கு எழுவதாக கூறினர்.

வார இறுதி நாள்களில் மகிழ்ச்சியுடன் இரவுப் பொழுதை அதிக நேரம் கழிக்கும் இளைஞர்கள், காலையில் 7 மணி 45 நிமிடத்துக்கு எழுந்திருப்பதாக தெரிவித்தனர். ஆய்வின் முடிவில், அதிகாலையில் சீக்கிரம் கண் விழிப்பவர்கள், தாமதமாக கண்விழிப்பவர்களை விட ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், சிறந்த உடல்வாகு கொண்டவர்களாகவும் இருப்பது உறுதி செய்யப்பட்டது.



## இது புதுசு

பெண்களுக்கான கைப்பைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 2ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 80 | 80 | 80 | 70 |
| கத்தரி | 200 | 240 | 200 | 240 | 200 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 50 | 50 |
| பயிற்றை | 200 | 240 | 300 | 240 | 240 |
| பாகல் | 300 | 300 | 350 | 300 | 300 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 320 | 140 | 120 | 130 | 140 |
| சி.வெங்காயம் | 350 | 300 | 300 | 320 | 280 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 | 80 |
| தக்காளி | 120 | 120 | 200 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 70 |
| கீரை | 50 | 50 | 40 | 20 | 50 |
| பொன்னாங்கானி | 40 | 30 | 40 | 30 | 40 |
| ப.மிளகாய் | 550 | 700 | 800 | 600 | 600 |
| புடோல் | 80 | 120 | 120 | 100 | 120 |
| கோவா | 160 | 160 | 140 | 140 | 140 |
| வெண்டி | 100 | 120 | 160 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 180 | 180 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 220 | 200 |
| தேங்காய் | 75 | 100 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 80 | 100 | 90 | 110 |
| தேசிக்காய் | 100 | 100 | 150 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 250 | 200 | 280 |
| கரட் | 160 | 200 | 200 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 400 | 120 | 200 |

கட்டுரை

நடராசா லோகதயாளன்

# இரட்டைக் குடியுரிமையும் தொடரும் இடர்ப்பாடுகளும்



'தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும்' என்ற எண்ணம் மகிந்த அணிக்கு இயற்கையாகவே அமைந்ததொன்று. அது வெளிப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகக் காலி மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் நியமன விடயம் அமைந்திருந்தது. காலி மாவட்டத்தில் இருந்து பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகிய கீதா குமாரசிங்க, இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்த காரணத்தால் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய தமது பதவியை இழந்திருந்தார். பதவியிழந்த கீதாவின் இடத்துக்குப் புதியவர் ஒருவரை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் காலி மாவட்டத்திலிருந்து போட்டியிட்டு அதி கூடிய வாக்குகள் பெற்ற வேட்பாளர்களில் ஏழாவது இடம் வகித்த வேட்பாளரது பெயர் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

### சட்டக் குழப்பம்

கீதா குமாரசிங்காவின் இடத்தை நிரப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவரின் பெயரை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அரச அச்சகத்துக்குக் கடந்த 8ஆம் திகதி அனுப்பியிருந்தார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய. இந்த நிலையில் அதேதினம் மதியம் மகிந்த அணி சார்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒரு கடிதம் கையளிக்கப்பட்டது. அதாவது நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின்படி பதவியிழக்கும் நாடாளுமன்ற உறுப்பினரின் இடத்தை நிரப்பும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இருப்பதாக அரசமைப்பில் எங்குமே குறிப்பி டப்படாத காரணத்தால் புதியவரின் பெயரை வெளியிடும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கிடையாது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அன்று மாலை அவசரமாகக் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசமைப்பைப் புரட்டினர். சட்டச் சிக்கல்கள் தொடர்பிலும் ஆராய்ந்தனர். இருப்பினும் அவர்களால் இறுதி முடிவுக்கு வர முடியவில்லை. பின்னர் ஆணைக்குழுவின் தலைவர் அவசர அவசரமாக அரச அச்சகத்துக்குச் சென்று காலையில் தாம் கையளித்த வர்த்தகமானிக்கான அறிவித்தலை மீளப் பெற்றுச் சென்றார்.

### சட்டமா அதிபரிடமிருந்து விளக்கம்

பிரச்சினை அத்தோடு முடிந்துவிடவில்லை. மீண்டும் அது குறித்து ஆராயப்பட்டது. இருப்பினும் சட்டம் தீர்ப்பளித்த குறித்த விடயத்துக்குச் சட்டரீதியாகவே பதிலளிப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்தது. குறித்த விடயம் தொடர்பில் சட்ட விளக்கம் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மறுநாள் சட்டமா அதிபருக்குக் கடிதம் அனுப்பியது. விடயத்தை ஆராய்ந்த சட்டமா அதிபர் திணைக்களம், குறித்த உறுப்பினரைத் தெரிவு செய்வதில் எந்தத் தடையுமே கிடையாது. உடனடியாக அவரை நியமிக்க முடியும். என்ற விளக்கத்தை வழங்கியது. மறுநாளே புதிய நாடாளுமன்ற உறுப்பினர் சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். தனது அணியின் ஒரு இலக்கு (கீதா குமாரசிங்க) வீழ்த்தப்பட்டதனால் அவருக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்படுவர். மைத்திரி அணிக்குப் பலம் சேர்த்து விடக் கூடாது என்பதில் மகிந்த கவனம் கொண்டிருந்ததாலே இந்த இடர்ப்பாடு ஏற்பட்டது. இறுதியில் மகிந்த அணி தனது உறுப்பினர் ஒருவரை இழந்து மூக்கு டைபட்டது. இப்போது அடுத்த கட்ட வியூகங்கள் தொடர்பான சிந்தனையில் இருக்கிறது மகிந்த அணி.

### மைத்திரி அணிக்குச் சவால்கள்

ஒரு இலக்கைக் காப்பாற்றிய மகிழ்ச்சியில் மைத்திரி அணி இருப்பினும் அடுத்த பிரச்சினையாக அது வரவு செலவுத் திட்டத்திலும், முன்மொழியப்பட்ட புதிய அரசமைப்பு விடயத்திலும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டும். அதனால் புதிய 'அரசமைப்புத் தொடர்பான வாக்கெடுப்பு'க்கு முன்னர் கூட்டாட்சிக்குள் சில பல அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்துடன் எஞ்சியிருக்கின்ற இலங்கையின் 224நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவராவது இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ளனரா என்ற தேடுதலும் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தமிழர் தரப்பில், வடக்குக் கிழக்குப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவராவது இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ளார்களா? என்றும் ஆராயப்பட்டிருக்கிறது. இதில் எம்மவர்கள் எவருமே இடம்பிடித்திருக்கவில்லை. தப்பி பிழைத்துக் கொண்டனர். ஆனால் நடவடிக்கைகள் அத்தோடு நின்றுவிடவில்லை. நாட்டின் ஏனைய மாவட்ட உறுப்பினர்கள் பற்றியும் இரண்டு தரப்புக்களும் ஏட்டிக்குப் போட்டியாக ஆராயத் தொடங்கியிருக்கின்றன. இதனால் இலங்கை அசியல் தற்போதைக்குக் கொஞ்சம் சூடுபிடித்திருக்கிறது.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 498

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | | | | 10 | |
| | | | | 11 | 12 | | |
| | 13 | | 14 | | | | 15 |
| 16 | | | 17 | | | 18 | |
| | | 19 | | | 20 | | |
| | 21 | | | | | 22 | |

அனுப்புபவர் பெயர்:................................................

முழுமையான தபால் விலாசம்: ................................

................................................................

கையொப்பம்:....................................................

### இடமிருந்து வலம்

1. பகைமை பாராட்டல்
4. வீடுகளில் வளர்க்கப்படும் ஒரு பயன்தரு மரம்
7. வெட்கம், மானம் என்பவற்றுடன் கூடுதலாக உபயோகப்படுத்தப்படும் ஒரு கூட்டுச் சொல்
8. பஞ்சுக் கொடி
9. விரிப்பு
10. நிலம்
11. பொருத்தமான நிலை
13. மனைவி
16. வழி
17. நிகழ்வு
19. என்க
20. ஒரு நாட்டின் தலைநகரம்
21. சீனி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் தண்டு வகைத் தாவரம்
22. ஒரு காட்டு மிருகம்

### மேலிருந்து கீழ்

1. நம்பிக்கைக்கு மாறாக விளைவிக்கும் ஊறு
2. நடிப்புக்காகப் போடுவது
3. வேதனம்
4. உயிர்ப்பின் ஆரம்பம்
5. கொஞ்சுதல்
6. புரவி
8. நிலத்தில் உருள வைத்து விளையாடும் ஒரு விளையாட்டு உபகரணம்
12. கணவன் - மனைவி என்பதற்கான பொதுச் சொல்
13. தசை
14. உறுதிப்பத்திரம்
15. சந்திரன்
16. கொடை வள்ளல் ஒருவன்
18. குறும்பு
19. மாட்டின் சாணம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 496 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)உலகாயதம்(6)லகரி (7)இரை (8)கரிய (9)காசாக்க (12)பதி (13)கருக்கல் (14)அலி (15)காலை (16)சாப்பாடு (19)சம்பாதி (20) இமை

**மேலிருந்து கீழ்**

(1)உலகப்பற்று (2)லகரி (3)காரியம் (4)தரை (5)திரை (7)இசைக்கலை (9) காரு (10) சாக்காடு (11)கல் (13)கலிப்பா (14)அசாம் (17)பாதி (18)சுமை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 496இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
தி.ரா.ஜீவராணி,
கரைப்பிரான் பிள்ளையார் கோவிலடி, இல.43, பழம்றோட், ஆனைக்கோட்டை

**2 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதிசிவம்,
இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
ந.செல்வராணி,
சிவன் வீதி, காரைநகர்

**சொற்சிலம்பம் போட்டி இல.498**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (29.11.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.498 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.12.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 496 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## மேடம்

செவ்வாய், புதன், குரு நற்பலன் வழங்குவர். அனைவரிடமும் இதமான வார்த்தை பேசுவீர்கள். நண்பர்களின் அன்பு, பாசம் மகிழ்ச்சி தரும். வாகனப் பயணத்தால் நன்மை உண்டாகும். புத்திரர் பிடிவாத குணம் நீங்கி, உங்களின் சொல் கேட்டு நடப்பர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி குடும்ப ஒற்றுமைக்கு வித்திடுவார். சுற்றுலா பயணம் மூலம் இனிய அனுபவம் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்புக்கு உரியவராவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## இடபம்

ராகு, சூரியன், சந்திரன் சுபபலன் தருவர். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உத்வேகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தேவை பெருமளவு பூர்த்தியாகும். வாகனப் பயன்பாட்டால் ஓரளவு நன்மை உண்டாகும். புத்திரர் பொதுவிஷயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவர். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது. ஆரோக்கியம் மேம்படும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். மனைவியின் பாசம் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு மூலம் வருமானத்தை பெருக்குவர். மாணவர்கள் படிப்பு தவிர்த்த விஷயங்களில் ஈடுபட வேண்டாம்.

## மிதுனம்

புதன், குரு, சுக்கிரன், சனீஸ்வரர் அளப்பரிய நன்மை தருவர். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். உடன்பிறந்தவர் அன்பு பாசத்துடன் உதவுவர். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தாயின் அன்பு, பாசம் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். புத்திரர் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வர். ஆரோக்கியம் சீராக இருக்கும். இளமைக்கால நண்பரை சந்திக்க வாய்ப்புண்டு. மனைவி இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் சீரான வளர்ச்சி பெறும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்களின் உதவி கிடைக்கும்.

## கடகம்

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் அனுகூல பலன் தருவர். சுய கவுரவத்தை பாதுகாக்கும் வகையில் செயல்படுவீர்கள். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தாமதமான செயலில் முன்னேற்றம் உண்டாகும். தம்பி, தங்கையரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். வழக்கு, விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணியில் ஈடுபடுவர். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி பெறுவர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், கேது, புதனால் நற்பலன் உண்டாகும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் காண்பீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர் உங்கள் சொல்லுக்கு மதிப்பளிப்பர். ஆரோக்கியம் மேம்படும். விருந்து, விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். மனைவி பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வார். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். இலாபம் பெருகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை ஏற்று முன்னேறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், குரு, ராகு ஆதாய பலன் வழங்குவர். புதிய முயற்சியில் ஈடுபட முயல்வீர்கள். வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரார் படிப்பு; வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். கடன் தொந்தரவு குறையும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். தொழில்,வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி உண்டாகும். இலாபம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் ஈடுபாடு கொள்வர்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 19.11.2017 தொடக்கம் 25.11.2017 வரை

## துலாம்

சுக்கிரன், சந்திரன் அனுகூல பலன் தருவர். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். வாகனத்தில் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். புத்திரரின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். எதிர்ப்புக்களை மாற்று உபாயத்தால் சரி செய்ய முயல்வீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனைவியின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் குளறுபடி நேராமல் விழிப்புடன் இருப்பது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் நண்பர்களுடன் சுற்றுவதை குறைக்கவும்.

## விருச்சிகம்

செவ்வாய், சுக்கிரன், கேது அதிர்ஷ்டகரமான பலன் வழங்குவர். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். குடும்பத்தினரால் நன்மையும், புகழும் வந்து சேரும். தம்பி, தங்கையரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரர் உங்கள் பேச்சை ஏற்பதில் பிடிவாதம் கொள்வர். ஆரோக்கியம் பலம் பெறும். பகைவரால் இருந்த தொந்தரவு மறையும். மனைவியுடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் கேட்ட கடனுதவி கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் அக்கறை தேவை.

## தனுசு

சூரியன், சுக்கிரன், குரு தாராள நற்பலன் தருவர். நண்பர் மத்தியில் செல்வாக்கு உயரும். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற ஆலோசனை சொல்வீர்கள். எதிர்ப்பாளர் சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி வழி சார்ந்த உறவினரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் பணியில் முன்னேற்றம் காண்பர். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் கற்றுக்கொள்வர்.

## மகரம்

சூரியன், புதன், சனீஸ்வரர் நன்மை தர காத்திருக்கின்றனர். வாழ்வு வளம் பெற புதிய சூழ்நிலை உருவாகும். அன்றாட பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் ஆன்மிகத்தில் ஆர்வமுடன் ஈடுபடுவர். வம்பு, வழக்கில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவை.

## கும்பம்


ராகு, புதன், குரு, சுக்கிரன் தாராள நன்மை வழங்குவர். இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். உறவினர் நெருங்கி வந்து சொந்தம் பாராட்டுவர். வாகன பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் படிப்பு, செயல் திறனில் முன்னேறுவர். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல் நிலை திருப்தி தரும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் எளிதாக பணி புரிந்து சலுகை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## மீனம்

சுக்கிரன், கேது, சந்திரன் நற்பலன் தருவர். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் உதவி கிடைக்கும். குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் குளறுபடியில் முடியலாம். எதிர்மறை எண்ணம் கொண்டவர்களை நெருங்க வேண்டாம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணியை குறித்த கால அவகாசத்தில் நிறைவேற்றுவர். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

கட்டுரை

நடராசா லோகதயாளன்



# இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

முதற்கோணல் முற்றும் கோணல் என்பது பழமொழி. இன்று எமது அரசியல் கட்சிகள் எடுக்கும் நிலைப்பாட்டுக்கும் இது பொருத்தமான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனெனில், கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் நூலகத்தில் வைத்து ஓர் அரசியல் கூட்டு அறிவிக்கப்பட்டமை இன்றைய காலகட்ட அரசியலைப் பொறுத்தவரை ஒரு கோணலான செயற்பாடாகவே நோக்கத்தக்கது. அந்தக்கூட்டில் முதலமைச்சரை இணைத் தலைவராகக் கொண்டு தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவுடன், தாம் ஒரு புதிய அரசியல் முன்னணியை ஆரம்பிப்பதாக கஜேந்திரகுமாரும் - சுரேஸ் பிரேமச்சந்திரனும் அறிவித்தனர். ஆனால் அதே சந்திப்பில் பங்கு கொண்ட தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் தனது உரையில் குறித்த விடயம் தொடர்பில் கருத்துரைக்கும் போது: "உள்ளூராட்சித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தம்மிடையே போட்டி போடக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றன. ஒரு புறத்தில் சகல கட்சிகளையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபடுத்தப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், சில கட்சிகளின் தனித்துவமான எதிர்பார்ப்புக்கள் அல்லது நல உரித்துக்கள் பற்றிய அவர்களது சிந்தனைகள் அந்தக் கட்சிகளைத் தனித்துப் போட்டியிட உந்துகின்றன போலத் தெரிகின்றது. இவற்றுள் எமக்கு அனுசரணை வழங்கும் கட்சிகள் சிலவும் உள்ளடங்குகின்றன" எனத் தெரிவித்திருந்தார். அத்தோடு "ஆரம்பத்திலிருந்தே ஐந்து கட்சிகள் சேர்ந்தே என்னை முதலமைச்சர் பதவிக்கு சிபார்சு செய்தன. இதனால் கட்சி ரீதியாக எவருடனும் நான் முரண்பட முன்வரவில்லை" என்றும் தெரிவித்திருந்தார். மேற்குறித்த கருத்தையே வெளியில் காத்திருந்த செய்தியாளர்களிடமும் அவர் தெரிவித்திருந்தார்.

**முதலமைச்சர் வெளியேறியதும் மூண்டது சர்ச்சை**

அதன் பின்னர் உட்கட்சி மோதல் உச்சம் பெற்றது. முதலமைச்சரின் இந்தக் கூற்றை வன்மையாகக் கண்டிப்பதாக இந்தக் கூட்டத்திலேயே சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டார். சுரேசின் அந்தக் கருத்தை ஒட்டிக் கருத்து வெளியிட்ட கஜேந்திரகுமாரும், சுரேசின் கூற்றைத் தாமும் ஆமோதிப்பதாகக் கூறினார். இதேநேரம் பேரவையின் மற்றுமோர் உறுப்பினர் முதலமைச்சரை நம்பியே பேரவைக்கு வந்தோம். முதலமைச்சர் இந்த அணியைப் பலப்படுத்த வேண்டும். மாறாக மலினப்படுத்தும் கருத்துக்களை முன்வைக்கக் கூடாது என்ற வகையில் கருத்து வெளியிட்டார். இதன் காரணமாக, தான் வெளியிட்ட கருத்து நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த முதலமைச்சர் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். உதவியாளர் மூலம் முதலமைச்சரின் கோப்புக்களும் வெளியில் எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வாறு வெளியேறிய முதலமைச்சர் தனது கருத்து நிலைப்பாட்டை ஊடகவியலாளர்களிடம் உறுதிப்படுத்தித் தெரிவித்து விட்டு வெளியேறினார். இதன் பின்னர் தமிழ் மக்கள் பேரவையிலும் சர்ச்சை மூண்டது.

**தோற்றவர்கள் முதலமைச்சரைப் பயன்படுத்துகிறார்கள்!**

ஒப்புக்குக் கூட்டத்தை நடத்தி, அதன் மூலம் கஜேந்திரகுமார், சுரேஸ், மற்றும் பேரவையில் அங்கம் வகிக்கும் சிலரை அரசியலில் இடம்பிடிக்க வைக்கும் முயற்சி பிசுபிசுக்குமா? என்ற ஐயம் பேரவையினரின் மத்தியில் தொற்றியபோதிலும், இறுதியில் கட்சி மற்றும் பேரவை சார் வேட்பாளர் தேர்வுக்கு பேரவையின் மூன்றாவது இணைத்தலைவர் வைத்திய கலாநிதி லக்ஸ்மன் தலைமையில் ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது. 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஆரம்பிக்கும்போதே, எதிர்காலத்தில் தமிழ் மக்கள் பேரவைக்கு இந்த நிலமைதான் ஏற்படும் என அன்றே பலர் ஆருடம் கூறியபோது சிலர் அதனை மறுத்து, பேரவை அரசியல் கட்சியாகவோ அல்லது அரசியல் கட்சிக்கு ஆதரவாகவோ செயல்படாது என்றனர்.


வடக்கு மாகாண முதலமைச்சர் அதற்கும் ஒரு படிமேலாகச் சென்று, "பேரவை மக்கள் இயக்கம் மட்டுமே, அரசியல் கட்சியாக எந்தக் காலத்திலும் மாற்றப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தின் பின்பே, இணைத் தலைமையை ஏற்க நான் இணங்கினேன்" என்று தெரிவித்திருந்தார். அவ்வாறானால், 12ஆம் திகதிக் கூட்ட முடிவில் எவர் வெளியிட்ட கருத்துத் தவறானது எனத் தீர்ப்புக் கூற வேண்டிய பொறுப்பு தற்போது நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனிடமே விடப்படுகி ன்றது. இங்கே வடக்கு மாகாண முதலமைச்சர் அன்றும் இன்றும் கூறிய கூற்றுக்கள் சரியானவை எனில், இரண்டு கட்சிகளது தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்து நிலைப்பாடுகள் தவறானவை என பகிரங்கமாக முதலமைச்சர் மீண்டும் ஒருமுறை கூறியே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. அதை விடுத்து, இந்த இரண்டு கட்சிகளும் கூறுவதே சரியான நிலைப்பாடு எனில், இந்த மக்கள் அமைப்பு ஒருபோதும் அரசியலில் பிரவேசிக்காது என எனக்கு எழுத்தில் உத்தரவாதம் அளித்தமையினாலேயே நான் பேரவையின் இணைத் தலைவர் பதவியை ஏற்றேன் என்ற முதலமைச்சரின் நிலைப்பாடு வலுவிழந்து போகிறது. ஏனெனில் பேரவை எனவும் 'எழுக தமிழ்' என்ற மகுட வாக்கியத்தையும் கூறும்போதே, இதற்குள் பலர் தமது கட்சி அரசியல் சார்ந்தே நிற்கின்றனர். தாம் இழந்த பதவிகளை அல்லது மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் பின் கதவால் அரசியலுக்குள் வர இந்தப் பேரவை வழி சமைக்குமா...? என்றெல்லாம் கேள்வி எழுப்பட்டது. அவற்றுக்கெல்லாம் பதிலளித்த முதலமைச்சர் அவற்றை அடியோடு மறுத்தார். இதன் மூலம் தாம் அரசியலில் ஏறுவதற்கான ஏணியாகவே இங்கே முதலமைச்சரை மற்றையவர்கள் பயன்படுத்துகின்றனர் என்ற கூற்று மெய்ப்பிக்கப்படுகின்றது.

**மக்கள் பேரவையில் தளம்பல்**

ஒரு புறத்தில், தமிழ் மக்கள் பேரவையே முதலமைச்சரின் கையை மீறி அல்லது கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டதோ? எனவும் எண்ணத் தோன்றுகின்றது. அதே நேரம் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்த வேளையிலும் சரி 'எழுக தமிழ்' காலத்திலும் சரி தென்பட்ட பலமுகங்களை இன்று பேரவையில் காணவும் முடியவில்லை. இதனால் இவ்விடயத்தில் இறுதி முடிவையும் உறுதியான தெளிவுபடுத்தலையும் மக்களுக்குக் கூறவேண்டிய பொறுப்பு முதலமைச்சரின் மீதே சுமத்தப்படுகின்றது. "தமிழ் மக்கள் பேரவையானது, அரசியல் உள்நோக்கம் கொண்டது. அது தோற்றுப் போனவர்களையும், நிராகரிக்கப்பட்டவர்களையும் பின் கதவால் அரசியலுக்குக் கொண்டுவரத் துடிக்கும் அமைப்பு" எனக் கூறியபோதிலும், "இல்லை... இது மக்கள் இயக்கம். அரசியல் ரீதியில் செயற்படமாட்டது" எனத் தெரிவிக்கப்பட்ட கூற்று இன்று பொய்த்துப் போய்விட்டது. அதற்கும் அப்பால் இரண்டு பேரணிகளையும் மூன்று முழுக் கடையடைப்புக்களையும் ஒழுங்கு செய்து நடத்தியவர்கள் என்பதைத் தவிர்த்து வேறு எதையும் பேரவைத் தரப்பினர் சாதித்ததில்லை.

தற்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பில் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படும் நிலையில், ஒப்புக்குத் தானும் ஒரு கருத்தரங்கையோ அல்லது ஒரு விளக்கக் கூட்டத்தையோ நடாத்தக்கூட திராணியற்றுப் போயுள்ளது பேரவை. இந்த நிலையில் எப்போது தேர்தல் வரும், எப்போது அதிகாரக் கதிரைகளை கைப்பற்றுவோம் எனக் காத்திருந்தவர்கள் போன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் களம் காண முனைப்புக் காட்டி இவர்கள் செயற்படுவதைப் பார்க்கும் போது, இந்த அரசியல் வெத்துவேட்டுக்கள் எவ்வளவுதான் கையைச் சுட்டுக் கொண்ட போதிலும் ஒருபோதுமே திருந்தப் போவதில்லையா? என்று பச்சாதாபப்படத்தான் முடிகிறது. ■

> ஒப்புக்குக் கூட்டத்தை நடத்தி அதன் மூலம் கஜேந்திரகுமார், சுரேஸ், மற்றும் பேரவையில் அங்கம் வகிக்கும் சிலரை அரசியலில் இடம்பிடிக்க வைக்கும் முயற்சி பிசுபிசுக்குமா? என்ற ஐயம் பேரவையினரின் மத்தியில் தொற்றியபோதிலும் இறுதியில் கட்சி மற்றும் பேரவை சார் வேட்பாளர் தேர்வுக்கு பேரவையின் மூன்றாவது இணைத்தலைவர் வைத்திய கலாநிதி லக்ஸ்மன் தலைமையில் ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது.



# வரவு - செலவுத் திட்டம் வடக்கில் கவனம்

கட்டுரை

லோ.சேயாள்

> நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் காணப்படுகின்ற சிறு நீரக நோய் அதிகரிப்பைக் கவனத்தில் கொண்டு பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் அதி நவீன வசதிகளுடன் சிறப்பு சிறுநீரகச் சிகித்சைத் தொகுதிகள் நிறுவப்படவுள்ளன. இதற்கு 450 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**2018** ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பும் நிறைவுற்றிருக்கிறது. பல விவாதங்களின் பின்னர் சில திருத்தங்களுடன் அது நிறைவுக்கு வந்துள்ளது. இதில் வடக்குக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளே நிறைந்து கிடக்கின்றன.

**வடக்குக்கான திட்டங்கள் சில**

முக்கோண பொருளாதார வலயத்துக்கென நவீன பொருளதார மையமொன்று, யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு 100மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மடு, கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் மற்றும் நல்லூர் ஆகிய இடங்களில் யாத்திரிகர்கள் தங்குமிடங்களை நிறுவுவதற்கு 100மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மற்றும் கிளிநொச்சியில் உணவு பதனிடும் இரண்டு நிலையங்களுக்கு 40மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டித் துறைமுகத்தை மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்து மீன் உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு வசதியளிக்கும் வகையில் குளிர் அறைகள் மற்றும் களஞ்சியங்கள் நிறுவப்படும். இதற்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி கைத்தொழில் வலயத்தில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் நிறுவனங்களின் மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் 50 சதவீதத்தை 2வருடங்களுக்கு அரசு பொறுப்பேற்கவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய விளைபொருள்களைச் சேமித்து வைக்கக் கூடிய வகையில் பண்டகசாலைகளின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 250மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடித் துறைமுகங்களில் இறங்கு துறைகள் மற்றும் நங்கூரமிடும் தளங்களை விருத்தி செய்வதற்கு 650மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குள் வடக்கின் காரைநகர் மீன்பிடித் துறைமுகமும் உள்ளடங்குகின்றது.

தனியார் துறையினதும் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தினதும் ஆதரவுடன் சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தால் மட்டக்களப்பு, திருகோணமலை பிரெட்றிக் கோட்டை, மன்னார் கோட்டை, அல்லி ராணிக் கோட்டை மற்றும் கற்பிட்டி கோட்டை உள்ளடங்கலாக 6 கோட்டைகளை அபிவிருத்தி செய்வதற்கு 250மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் சகல வசதிகளையும் கொண்ட நூலகம் மற்றுந் தகவல் தொழில்நுட்ப நிலையம் என்பவற்றை அமைப்பதற்கு 200மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் காணப்படுகின்ற சிறுநீரக நோய் அதிகரிப்பைக் கவனத்தில் கொண்டு பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் அதி நவீன வசதிகளுடன் சிறப்பு சிறுநீரகச் சிகிச்சைத் தொகுதிகள் நிறுவப்படவுள்ளன. இதற்கு 450 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடத் தொகுதி இடம் மாற்றம் செய்யப்பட்டு விரிவாக்கம் செய்யப்படுவதற்கு 100மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நல்லிணக்கத்தினை முதன்மைப் படுத்திய வாழ்வாதார அபிவிருத்தி, பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அரசு ஆதரவளிக்கும்.

இது வடக்கிலுள்ள சிறப்புத் தேவையுடைய பெண்களுக்குச் சிறப்பு நிலையம் நிர்மாணிப்பதையும் உள்ளடக்கியதாகும். இதற்காக 2ஆயிரத்து 750மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத்துக்கு 250மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார்- தாழ்வுப்பாட்டில் கலாசார மண்டபம் அமைக்க 25 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மேலும் இணைக்கப்பட்ட திட்டங்கள்**

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா முன்மொழிந்த 22 திட்டங்களும் இத்துடன் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளன. இதனால் 2018ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்ட முனைப்புக்கள் அனைத்தும் வடக்கை விருத்தி செய்வதிலேயே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் குறித்த வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பொது அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டனர்.



*கிளிநொச்சி மாவட்ட இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன்*

"வடக்கின் நலன்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி இந்த வரவு - செலவுத்திட்டம் வரையப்பட்டுள்ளது. முன்னாள் போராளிகளுக்கான வேலை வாய்ப்புச் சலுகை என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கு எமது மாவட்டத்தின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துவந்த பெரிய நெற்களஞ்சியம் ஒன்றுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேரடி நன்மைகள் அதிகம் இல்லாதுவிடினும் இந்த வரவு செலவுத் திட்டம் ஓரளவுக்கு நிம்மதியளிப்பதனால் இதை வரவேற்கலாம்'



*மன்னார் மாவட்ட மீனவர் சமாசத் தலைவர் சூசை மரியதாஸ்குரூஸ்*

' 'நீண்ட காலத்தின் பின்பு வடக்கையும் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள ஒரு வரவு - செலவுத்திட்டமாக அமைந்திருக்கின்றது. அத்துடன் எமது மாவட்டம் தொடர்பிலும் சமூகம் சார்ந்தும் சற்றுக் கவனம் செலுத்தியிருப்பதும் ஆறுதல் அளிக்கின்றது. ஆழ் கடலில் தொழில் செய்வதற்குத் தேவையான உபகரணங்களின் கொள்வனவுக்கு 50வீத மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மானியத்தை இதுவரையில் வடக்கு மீனவர்களுக்கு வழங்கப்பட்டதே கிடையாது. எனவே அந்த மானியம் எமது மாகாண மீனவர்களுக்கும் கிடைக்க ஆவண செய்ய வேண்டும். பொது நல நோக்கில் பார்க்கையில் 2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை வரவேற்க முடியும்"

*இத் அரச உயர்மட்டத்தில் பணிபுரியும் ஒரு பெண் அதிகாரி*

"வடக்குக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு முன் மொழியப்பட்டு அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதியைப் பெறுவது அனுமதி பெற்றதை விடவும் கடினமான காரியம். அவ்வாறு அந்த நிதியைப் பெற்று இந்தத் திட்டம் முழுவதும் நடைமுறைப் படுத்தப்படுமா? என்பது எமது தலைமைகளின் செயற்பாட்டு வேகத்தைப் பொறுத்தது. இத்தனை திட்டத்தினையும் அனுமதித்து இடம்பெயர்ந்தோர், பெண் தலைமைத்துவக் குடும்பம், முன்னாள் போராளிகள் என அவர்கள் பக்கமும் அரசு தனது பார்வையைத் திருப்பியமை வரவேற்கத்தக்க விடயமே. அத்துடன் அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அது பெரும் ஏமாற்றம் அளிக்கின்றது'

*மூத்த கூட்டுறவாளர், தற்போதைய சி.க.கூ.சங்கங்களின் உப தலைவர் தி.இலகுநாதன்*

"இலங்கை அரசால் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக முன்வைக்கப்பட்டுவரும் பாதீட்டில் வடக்குக் கிழக்குத் தொடர்பில் அதிக கரிசனை செலுத்தப்படுவது கிடையாது. நாட்டில் தமிழ் மக்களின் பல அத்தியாவசிய விடயங்களில் பதில் கூறமுடியாத நிலையில் உள்ள அரசு மக்கள் அபிவிருத்தி சார்ந்த விட யத்தினையேனும் நிறைவேற்றி சற்றுச் சாந்தப்படுத்த எண்ணியுள்ளதுபோல் தென்படுகின்றது. இதற்காகவே வடக்கில் அதிக கரிசணை கொண்ட பாதீடாக இது அமைந்துள்ளது. அதற்காக இந்தப் பாதீட்டினை வரவேற்கலாம். இதேநேரம் கூட்டுறவு சார்பிலும் நலிந்துபோகும் நிலையில் உள்ள ப.நோ.கூ.சங்கங்கள் சார்பிலும் விருத்தி நடவடிக்கைகள் எவையும் உள்ளடக்கப்படாதமை கவலையளிக்கின்றது"

*யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிச் சங்கத் தலைவர் இராசமணி விஜயராசா*

"வடக்கைப் பொறுத்த வரையில் பல திட்டங்கள் உள்ளதாகக் கூறப்பட்டாலும் அன்றாடம் உழைத்து வாழ்பவர்களுக்கு எதுவுமே இல்லை என்ற நிலையே காணப்படுகின்றது. இதேநேரம் சில முச்சக்கர வண்டிச் சாரதிகளின் இடர்பாடுகளை அறியாது குறைகூறும் சம்பவங்களும் உண்டு. மீற்றர் பொருத்தும் யோசனை வரவேற்கத்தக்கது.

இதேநேரம் டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளைப் பங்களாதேசுக்கு ஏற்றிச் சூரிய சக்தியில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வதும் காலப்பொருத்தம். ஆனால் எதுவும் அரசியல் வாதிகளின் வருமானமாக அமையாது விடின் வரவேற்கத்தக்கது"

# கால்பந்து உலகில் பேரதிர்ச்சி!




விளையாட்டு
பிரகாஸ்

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறாமல் வெளியேறியுள்ளது மிகப்பெரும் ஜாம்பவானான இத்தாலி. இத்தாலியின் வெளியேற்றம் அந்த அணிக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த கால்பந்தாட்ட உலகுக்குமே பெரும் அதிர்ச்சியாக அமைந்தது.

தகுதிச்சுற்று ஆட்டத்தில் இத்தாலியை எதிர்த்து சுவீடன் மோதியது. இரண்டு அணிகளும் தமது மைதானத்தில் ஓர் ஆட்டத்திலும், மற்றைய அணியின் மைதானத்தில் ஓர் ஆட்டத்திலும் மோதவேண்டும் என்பது விதி. சுவீடனில் முன்னதாக நடைபெற்ற ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் சுவீடன் வெற்றி பெற்றது. இந்த நிலையில் இத்தாலியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சுவீடனை ஒரு கோலின் வித்தியாசத்தில் வீழ்த்தினால் மட்டுமே இத்தாலியால் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்குத் தகுதி பெறமுடியும் என்ற நிலை இருந்தது.

இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததை அடுத்து முதலாவது ஆட்டத்தில் (சுவீடனில் நடைபெற்ற ஆட்டத்தில்) வெற்றிபெற்ற சுவீடன் உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற இத்தாலி வெளியேற்றப்பட்டது.

இத்தாலி அணி இதற்கு முன்னர் 1934, 1938, 1982, 2006ஆம் ஆண்டுகளில் சம்பியனானது. இவ்வாறு நான்கு தடவைகள் மகுடம் சூடிய அணி இம்முறை குறைந்த பட்சம் தகதி பெறாமல் வெளியேறியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கு இத்தாலி தகுதிபெறாமல் வெளியேறியிருப்பது இது முதல் தடவை.

இத்தாலி வெளியேற்றப்பட்ட நிலையில், இத்தாலிய கோல் காப்பாளரான ஜல்லூயிஜியின் கால்பந்தாட்ட வாழ்க்கை தோல்வியுடன் முடிவுக்கு வந்துள்ளது. 39 வயதான ஜல்லூயிஜி புபான் 1997ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு எதிராக அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். 20 ஆண்டுகளுக்கு மேலாக விளையாடும் காலத்தில் 175 ஆட்டங்களில் இத்தாலியை பிரதி நிதித்து வப்படுத்தியதோடு 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற அணியிலும் இடம்பிடித்திருந்தார்.

## வேண்டும் ஓய்வு

நான் ஒன்றும் ரோபோ அல்ல. எனக்கும் ஓய்வு வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. இலங்கைக்கு எதிரான தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"நான் ஏன் ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் தொடர்ந்து ஏராளமான ஆட்டங்களில் விளையாடியுள்ளேன். எனவே எனக்கும் ஓய்வு தேவை. எனக்கு எப்போது வேண்டுமோ அப்போது நான் ஓய்வு எடுத்துக்கொள்ளுவேன். நான் ஒன்றும் கிரிக்கெட் ரோபோ கிடையாது" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக நட்சத்திர வீரர் பாண்டியா தொடர்ந்து விளையாடிவந்த நிலையில், இலங்கைக்கு எதிரான தொடரில் பாண்டியாவுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## கொண்டாடுவதற்கு எதுவுமேயில்லை



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி லக்மலின் அபாரப் பந்துவீச்சில் பெரும் தடுமாற்றம் கண்டது. இந்தியாவின் தடுமாற்றம் இலங்கை ரசிகர்களால் பெரியளவில் கொண்டாடப்படுகிறது.

ஆனால் உண்மையில் இது கொண்டாடப்பட வேண்டிய விடயம் அல்ல. இந்திய மண்ணில் வழக்கமாகத் தயாரிக்கப்படும் ஆடுகளங்கள் போல் இம்முறை ஆடுகளங்கள் தயாரிக்கப்படவில்லை. இலங்கைக்கு எதிரான தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. எனவே தென்னாபிரிக்க ஆடுகளங்களைப் போன்ற ஆடுகளங்களே இந்திய - இலங்கைத் தொடரில் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லின், இலங் கையை வைத்து தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளப் பழகுகிறது இந்திய அணி.

வழக்கமாக அஸ்வின், ஜடேயா எனும் இரண்டு சுழல் வீரர்களுக்குச் சாதகமான ஆடுகளங்களை அமைத்து தனது பலத்தை மேலும் மிகைப்படுத்தும் இந்தியா, தனது மண்ணில் எதிரணியின் பலம் என்னவோ அதற்குச் சாதகமான ஆடு களங்களை அமைக்கத் துணிந்தமைக்காகவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒரு சபாஷ்.

## மக்ஸ்வெல் புறக்கணிப்பு




நடப்பு வருடத்துக்கான ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் மக்ஸ்வெல் நீக்கப்பட்டமை மீண்டும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சகலதுறை வீரரான மக்ஸ்வெல், ஆஸ்திரேலிய கிரிக்கெட் தெரிவுக்குழுவால் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடருக்காக ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இன்னும் சில தினங்களில் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆஸ்திரேலிய அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் மக்ஸ்வெலுக்கு இடம்கொடுக்கப்படவில்லை.

சகலதுறை வீரரான மக்ஸ்வெல் புறக்கணிக்கப்பட்டமையை அடுத்து அவருக்கு பல தரப்பிடம் இருந்தும் ஆதரவு தெரிவிக்கப்படுகிறது. மக்ஸ்வெல்லை அணியில் சேர்த்திருக்க வேண்டும் என்று தெரிவித்து ஆஸ்திரேலிய தெரிவுக்குழுவின் மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

# கமுகு பயிர்செய்கை



க.பிரதீபன்

பொதுப்பெயர் - கமுகு, பாக்கு
தாவரவியல் பெயர் - Areca Catechu

**கமுகு செய்கையின் முக்கியத்துவம்**

- ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு வருடத்திற்கு பாக்கு செய்கை மூலம் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (250,000.00 ரூபா) வரை வருமானம் பெறலாம்.
- தனிப்பயிராக கமுகு நடுவதாயின் ஒரு ஏக்கருக்கு 440 கன்றுகள் நடப்படும்.
- ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 750 காய்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**பயன்பாடு**

- உடம்பிற்கு சூட்டுத்தன்மையுடைய உணர்வை தூண்டுகிறது.
- உடன் பாக்காகவும் உலர் பாக்காகவும் பயன்படுத்தலாம்.
- பச்சை பாக்கை வெட்டி அதற்கு சுவையூட்டி வேறுபட்ட உற்பத்திகள் உருவாக்கப்படுகின்றன.
- ஆயுள்வேத பாரம்பரிய மருந்துக்கள் தயாரிப்பில் பயன்படுகிறது.




- பற்பசைகளின் உள்ளீடாகப் பயன்படுத்தப்படுகிறது.

**மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை**




- விலங்கு மருத்துவத்துறையில் நாடாப் புழுக்கள் குடல் ஒட்டுண்ணிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இலை மடல் ஆனது தட்டுக்கள் பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.
- முதிர்ச்சி அடைந்த தண்டுகள் கட்டடப் பொருட்களாக பயன்படுத்தப்படுகிறது.

**இனங்கள்**

- உள்ளூர் இனம். தேசிய இனமாகும்
- ஹம்பன் பாக்கு
- வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட நாட்டுப்பாக்கு.

**தேவையான சூழல் காரணிகள்**

- கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் மீற்றர் வரையான பிரதேசம்.
- வருடாந்த மழைவீழ்ச்சிஆயிரத்து 750 மி.மீ பரவலான மழைவீழ்ச்சி.
- வெப்பநிலை 15 - 32°C வரை
- நன்கு நீர் வடியும் இருவாட்டி மண் சிறந்தது.
- மண் ஈரலிப்பு தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.
- நாட்டியதிலிருந்து: 23 வருடங்கள் வரை 40% நிழல் அவசியம்.
- வயதுடைய மரங்கள் மிதமான நிழல் சூழலில் கூடுதல் விளைவைத் தரும்.
- உயர் நிழல் உள்ள இடங்கள் சரிவான நிலங்கள் பொருத்தமானவை.

**நடுகைக்கான கன்றுகளை தெரிவு செய்தல்**

- நடுகைக்கான கன்று குறைந்தது 4 இலைகளை கொண்டிருத்தல் வேண்டும்
- இலைப்பரப்பு அகலமாக பரம்பி; இருத்தல் வேண்டும்.
- தடிப்பான தண்டு உடைய குட்டையான கன்றுகள் நடுகைக்கு உகந்தது. மெல்லிய உயரிய கன்றுகள் நடுகைக்கு பொருத்தமற்றவை.

**நடுகை முறை**

- சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது;.
- நடுகைக்கான குழி 1.5'X1.5' X1.5' நீள அகல ஆழமுடையதாக அமைத்தல் வேண்டும்.

(49ஆம் பக்கம் பார்க்க)

# கமுகு...



(48ஆம் பக்கத் தொடர்ச்சி)

- சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப் பப்பட வேண்டும்.
- நடுகை இடைவெளி 10 அடி X 10 அடி
- நடுகைக்குழியில் கன்றுகள் ஆழத்தில் நடுதல் சிறந்தது. இதன் மூலம் மரம் சரிந்து விழுவதை தடுப்பதுடன் கூடிய விளைச்சலை யும் பெறலாம்.
- கன்றுகள் நாட்டிய பின்னர் தென்னை ஓலை அல்லது காய்ந்த வாழைச்சருகு மூலம் தற்காலிகமாக நிழல் வழங்க வேண்டும்.
- நேரடியாக சூரியஒளி படும் இடத்தில் இலைகள் கருகி வளர்ச்சி குன்றும்.
- நடுகை செய்து இரண்டு வரு டங்களில் 4 இற்கும் மேற்பட்ட முடிச்சுக்கள் இருத்தல் வேண் டும்.
- 5 வருடங்களின் பின்னர் முதல் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.
- நலிவடைந்த கன்றுகள் அகற்றப்பட வேண்டும்.
- 40-50 வருடங்கள் வரை வாழ்க்கைக் காலம் உடையது ஆகையால் கூடிய விளைச்சலை பெற்றுக்கொள்ள சிறந்த வர்க்கக் கன்றுகளை நடுகை செய்தல் வேண்டும்.
- இந்தப் பயிர்ச்செய்கையில் பராமரிப்பு மிக இலகுவானதாக இருக்கும்.

**அறுவடை**

- 6-7 வருடங்களின் பின் முதலாம் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்
- 10 -15 வருடங்களில் அதிகூடிய விளைச்சல
- 40 வருடங்களின் பின் உற்பத்தி குறைவடைந்து செல்லும்.
- நாட்டு இனம் ஜூலை முதல் செப்ரம்பர் வரையும் ஊர்ப் பாக்கு ஒக்ரோபர் தொடக்கம் ஏப்ரல் காலப்பகுதியில் விளைச்சலை தரும்.
- தேசிய இனத்தில் வருடத்திற்கு 3 -5 குலைகளை பெற்றுக் கொள்ள முடியும். ஒரு குலையில் 250 - 400 காய்கள் வீதம் பெற்றுக்கொள்ளலாம்.

**பாக்கை நீண்ட நாட்கள் சேமிக்கும் முறைகள்**

1. சேற்றுப் பாக்கு - நீரில் அமிழத்தி வளி அற்ற நிலைக்கு உட்படுத்தல்
2. கொட்டப் பாக்கு - வெயிலில் உலர்த்தல் மூலம்.
3. சீவல் பாக்கு - முற்றாத பாக்கு சீவலாக வெட்டி வெயிலில் உலர்த்தல்


Softlogic Finance தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்

- முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
- தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
- செயற்திறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
- பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
- தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 40,000/-

சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444



அனைத்து சீட்டுழுப்புக்களிலும் அதிகளவு வெற்றியாளர்கள் – சுப்பர் பரிசுகளை வெல்லும் அதிக வாய்ப்புகள்

மக்களை அதிகளவில் வெற்றி பெறச்செய்யும் லொத்தர்


ராசி அதிர்ஷ்டம்



உங்களை வெற்றியாளராக்கும் தனயோகம்

அபிவிருத்தி லொத்தர் சபை


# காமா கதிர் மின்னல்




அமெரிக்காவில் உள்ள இரண்டு லைகோ ஈர்ப்பு அலைகள் நோக்குக் கூடங்களும் ஐரோப்பாவில் உள்ள விர்கோ ஈர்ப்பு அலை நோக்குக்கூடமும் இணைந்து கடந்த ஒகஸ்ட் 17ஆம் திகதியன்று முதன்முறையாக இரண்டு நியூட்ரான் விண்மீன்கள் ஒன்றுடன் ஒன்று மோதிப் பிணையும் நிகழ்வில் ஏற்பட்ட ஈர்ப்பு அலைகளை இனம் கண்டுள்ளன. இதே நிகழ்வுடன் ஒத்து, அதே திசையில் அதே தொலைவில் காமா கதிர் மின்னலும் ஏற்பட்டுள்ளது. இரண்டு நியூட்ரான் விண்மீன்களின் மோதலில்தான் வானில் பெரும்பாலான காமா கதிர் மின்னல்கள் ஏற்படுகின்றன என இந்த ஆய்வு உறுதிசெய்கிறது. இதன் மூலம் வானியல் புதிருக்கும் விடை கிடைத்துள்ளது. ஒக்ரோபர் 17ஆம் திகதியன்று இரவு, உலகின் பல்வேறு நாடுகளில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சிகளில் இந்தத் தகவலை விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தார்கள்.

சூரியனைப்போல 1.1 மற்றும் 1.6 மடங்கு நிறை கொண்ட இரண்டு நியூட்ரான் விண்மீன்கள், ஒன்றை ஒன்று 100நொடிகள் சுற்றி வந்து, ஒன்றுடன் ஒன்று மோதின. இதுபோன்ற மோதலில் கிடைக்கும் தரவுகள் அதிக திணிவு கொண்ட நிலையில், பொருள்கள் எப்படிச் செயற்படும் என்பதை எமக்குக் காட்டும் என்பதால் அடிப்படை இயற்பியல் ஆய்வுக்கு இது பெரிய அளவில் உதவும் என்று கருதப்படுகிறது.

வெறும் 130 மில்லியன் ஒளியாண்டு தொலைவில் நிகழ்ந்த 'ஜி.டபிள்யூ.170817' என்ற பலமான இந்த நிகழ்வுதான் இதுவரை எமக்கு மிக அண்மிதமாக நிகழ்ந்து இனம் காணப்பட்ட ஈர்ப்பு அலைகள் ஆகும். எனவே, இதுவரை நாம் கண்டுள்ள ஈர்ப்பு அலைகளைவிடப் பலமான அலைகள் பூமியை வந்து அடைந்தன. இதைத் தொடர்ந்து, வானில் அந்தத் திசை நோக்கி உலகின் பல தொலைநோக்கிகளைத் திருப்பி ஆராய்ந்தபோது, பிணைந்த பொருளை தொலைநோக்கி வழியே காண முடிந்துள்ளது. இதுவரை கண்ட நிகழ்வுகள் எல்லாம் இரண்டு கருந்துளைகள் பிணைந்து புதிய இராட்சதக் கருந்துளை உருவான நிகழ்வுகள்தான். கருந்துளைகளை வேறு எந்தத் தொலைநோக்கியாலும் காண முடியாது. ஆனால், இந்தமுறை, பிணைந்து பிறந்த நியூட்ரான் விண்மீனை காமா அலைகள் முதலிய மின்காந்த அலைகளில் காணமுடியும். தொலைநோக்கிகள் தந்துள்ள சான்று ஈர்ப்பு அலைகள் நோக்குக்கூடத்துக்குக் கிடைத்த சான்று எனக் கொள்ளலாம். முதன்முதலில் ஈர்ப்பு அலைகள் 2015 ஆம் ஆண்டில் இனம் காணப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்பை செய்த கருவிகளை உருவாக்கியவர்களுக்கு இந்த ஆண்டு 'உலகைக் குலுக்கிய கண்டு பிடிப்பு' என்ற பாராட்டுதலும் நோபல் பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.




## நியூட்ரன் விண்மீன்கள்

அதிக நிறை கொண்ட விண்மீன்கள் மூப்படைந்து, விண்மீன் சுப்பர் நோவா எனும் நிகழ்வாக வெடித்துச் சிதறும்போது, அதன் மையம் நியூட்ரன் விண்மீனாக மறுபிறப்பு எடுக்கும். சூரியனைவிடக் கூடுதல் நிறை கொண்டிருந்தாலும், நியூட்ரன் விண்மீனின் அளவு வெறும் 20 கிலோமீற்றர்தான். நியூட்ரன் விண்மீனே பிரபஞ்சத்தில் மிக அதிகமான திணிவு கொண்ட வான்பொருள். ஒரே ஒரு தேக்கரண்டி அளவு நியூட்ரன் விண்மீனின் நிறை எவரெஸ்ட் மலையின் நிறையைவிடக் கூடுதலாக இருக்கும் .

அதிக திணிவுள்ள இரண்டு நியூட்ரன் விண்மீன்கள் ஒன்றை ஒன்று சுற்றிவந்து மோதியதில், தீப்பொறிபோலப் பலத்த ஆற்றலுடன் காமா கதிர் வீச்சு வெளிப்பட்டது. காமா தொலைநோக்கிகள் இந்த காமா கதிர் வீச்சை, ஈர்ப்பு அலைகள் காணப்பட்ட இரண்டு நொடிகள் கழித்து இனம் கண்டன. ஈர்ப்பு அலைகளும் காமா அலைகளும் அண்ணளவாக 13கோடி கிலோ மீற்றர் தொலைவிலிருந்து புறப்பட்டு, ஒருசேர எமை வந்தடைகின்றன. இதன் மூலம் ஐன்ஸ்டைன் முன்னர் கணித்தபடி, "ஈர்ப்பு அலைகளின் வேகமும் ஒளியின் வேகமும் ஒன்று என எம்மால் உறுதிப் படுத்திக் கொள்ள முடிகிறது. பிரபஞ்சம் எந்த வேகத்தில் விரிவடைகிறது" என்பதை இதுபோன்ற தரவுகளிலிருந்து அறிய முடியும்.


## காமா கதிர் மின்னல் புதிர்

முதன்முதலில் காமா கதிர்களை இனம் காணும் கருவியைச் செயற்கைக் கோளில் வைத்து அனுப்பியதற்கான காரணம் விநோதமானது. வானியல் ஆராய்ச்சிக்காக அந்தக் கருவியை அனுப்பவில்லை. பூமியில் எங்காவது அணுகுண்டு வெடித்தால், அதிலிருந்து காமா கதிர் மின்னல் போலத் தோன்றும் என்பதால், ரஷ்யா அவையடக்கமாக அணுகுண்டு வெடிப்புச் சோதனை செய்கிறதா என உளவு பார்க்கத்தான் முதன்முதலில் காமா கதிர் ஆய்வுக் கலங்களை விண்ணுக்கு அனுப்பியது. கடந்த காலத்தில் அவ்வப்போது வானில் அங்கும் இங்கும் பலத்த ஆற்றலுடன் சில நொடிகள் மட்டுமே நீடிக்கும் காமா கதிர் வீச்சைப் பல ஆண்டுகளாக விஞ்ஞானிகள் கவனித்து வந்துள்ளனர். முதலில் இதுபோன்ற காமா கதிர்வீச்சைத் தற்செயலாகக் கண்ட போது ரஷ்யா இரகசியமாக அணுகுண்டு சோதனை செய்கிறது என்றே கருதினார்கள். பின்னர்தான், இந்தக் காமா கதிர் மின்னல் ஆழ விண்வெளியிலிருந்து வருகிறது என்பது உறுதியானது.

தி இந்து

# 42ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் தற்போதைய ஆலயம் கட்டப்பட்டு 42ஆவது ஆண்டு நிறைவு விழா, சிறப்பு மலர் வெளியீட்டுடன் கொண்டாப்படுவது குறித்து இவ்வாக்கம் பேசுகிறது. இவ்வாக்கத்துக்குரிய தகவல்கள் 42ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலரில் இருந்து பெறப்பட்டுள்ளன.

**கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார்**

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரிடம் இந்த நிகழ்வு குறித்து உதயன் பத்திரிகையின் சூரியகாந்தி விசேட இணைப்பிதழின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதிக்கு கருத்துரைக்கும் போது, "கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கிலே இளையோர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். இருப்பினும் அவர்கள் மிகுந்த உறுதியுடனும் உற்சாகத்துடனும் செயலாற்றுவது மகிழ்ச்சி தருகிறது. அவர்கள் தற்போதைய ஆலயம் கட்டப்பட்டு 42 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பு மலர் வெளியீட்டுடன் கொண்டாடுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர்களையும், கிறிஸ்து அரசர் ஆலய பங்கு மக்கள் அனைவரையும் இந்த வேளையில் அன்போடு வாழ்த்தி நிற்கிறேன். இவ் ஆலய கட்டடப்பணிகளில் அன்று முன்னின்று உழைத்த லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளாரையும் இன்னும் சிறப்பாக அவருக்கு துணையாக இருந்து கிறிஸ்து அரசர் ஆலய கட்டடப் பணிகளை முன்னின்று வெற்றிகரமாக நடத்தி முடித்த மறைந்த ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளாரையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன். சிங்கராயர் அடிகளார் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இழைப்பாற வேண்டி நிற்கிறேன்.

இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு இணங்க கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கு மக்கள் வாழ வேண்டும் என விரும்புகிறேன். பங்கு ஆலயத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. இந்தத் திருத்த வேலைகளுக்கு நல்மனதுள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வாழ்கின்ற பங்கு மக்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பங்கு மக்களும் அன்புதவி செய்ய வேண்டும் என பகிரங்க அழைப்பினை முன்வைக்கிறேன்.

ஆலயவளாகத்தில் வெள்ளம் நிறைந்திருப்பது பெரும்பிரச்சினையாக உள்ளது. அது தாழ்ந்த பிரதேசமாக இருப்பதால் அதற்குரிய விதமாக வடிகால் அமைத்து நீர் வழிந்தோடக்கூடிய வழி செய்ய வேண்டும் என அரச அதிபருக்கும், பிரதேச செயலருக்கும் மாநகராட்சிக்கும் விண்ணப்பம் செய்திருக்கிறேன். விரைவில் ஆவன செய்வார்கள் என நம்பியிருக்கிறேன். கிறிஸ்து அரசர் இங்கு வாழ்கின்ற பங்கு மக்களையும், புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற பங்கு மக்களையும் நிறைவாக ஆசீர்வதிக்க இறைவரம் வேண்டி நிற்கிறேன்." என்றார்.

**கிறிஸ்து அரசர் ஆலய ஆரம்ப கொட்டிற் கோவில் வரலாறு**

யாழ்.குடா நாட்டின் தென்மேற்குத் திசையில் கொய்யாத்தோட்டம் என்னும் சிற்றூரானது அமைந்துள்ளது. இது யாழ் நகரத்தின் மையத்தில் இருந்து அண்ணளவாக நான்கு மைல் தூரத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள ஜே.65 மற்றும் ஜே.66 ஆகிய இரு கிராமசேவகர் பிரிவு களைக்கொண்ட ஒரு கிராமமாக விளங்குகிறது.

வடக்கே ஈச்சமோட்டையையும், கிழக்கே பாசையூரையும், மேற்கே குருநகரையும், தெற்கே கடலினையும் எல்லைகளாக கொண்டமைந்துள்ள கொய்யாத்தோட்டத்தில் இந்து மக்களும் கத்தோலிக்க மக்களும் அன்புறவாகப் பழகுவதற்கு ஆதாரமாக இந்து கோவிலும்; கத்தோலிக்க ஆலயமும் அருகருகில் அமைந்திருப்பது சிறந்த சான்றாகும். இங்கு வசிக்கும் ஏறக்குறைய 785 குடும்பங்களில் 3 ஆயிரத்து 85 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 150 குடும்பங்கள் எமது பங்கில் பதிவு பெற்ற கத்தோலிக்க குடும்பங்களாகும்.

கொய்யாத்தோட்டத்தின் பூர்விக மக்களாகிய ஒரு சில குடும்பங்களினை தவிர ஏனைய குடும்பங்கள் அதிகமாக 1940 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதிகளில் பல்வேறு இடங்களில் இருந்து வந்து இங்கு குடியேறிவர்களாவர். இவர்கள் ஆரம்பம் முதல் திருப்பலி மற்றும் வழிபாடுகளுக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்துக்கும், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் சென்று வந்தனர்.

**கிறிஸ்து அரசர் நிரந்தர ஆலய வரலாறு**

இவ்வாறாக வழிபாடாற்ற யாழ். மரியன்னை பேராலயத்துக்குச் சென்று வந்த மக்களை அக்காலத்தில் மரியன்னை பேராலயத்தின் பங்குத்தந்தையாக இருந்த பீ.ரி ஜேம்ஸ் அ.ம.தி அடிகளாரும், உதவிப் பங்குத்தந்தையர்களாக இருந்த லூயிஸ் அந்தோனிப் பிள்ளை அ.ம.தி அடிகளார் மற்றும் அன்ரன் ராஜகாரியர் அடிகளார் போன்றோரும் இங்கு ஓர் ஆலயம் கட்டுவதற்கான ஆவலை மக்கள் மத்தியிலும் . அவ்வூரில் இளைஞர்கள் மத்தியிலும் விதைத்தனர்.




1955 ஆம் ஆண்டுகளின் ஆரம்பங்களில் ஒரு சிறிய ஆலயத்தினை கட்டுவிக்க ஏற்றதான ஒரு இடத்தினை தேடும் படலம் ஆரம்பமானது. குருநகரைச் சேர்ந்த றோஸ் தங்கக்குட்டி என்பவர் கொய்யாத்தோட்டத்தின் நடுப்பகுதியில் பனங்கூடலாகவும், கொய்யாக்காடாகவும் இருந்த இன்றைய ஆலயம் அமைந்துள்ள காணியை அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயர் எமிலியானுாஸ்பிள்ளை ஆண்டகையிடம் கொடுத்திருந்தார்.

கொய்யாத்தோட்டத்தில் ஆலயம் ஒன்றை கட்டுவதற்கு ஏற்ற ஒரு இடத்தை தேடிய வேளை இப்பிரதேசத்தில் ஆலயம் இல்லாததை உணர்ந்த ஆயர் றோஸ் தங்கக்குட்டி என்பவரால் வழங்கப்பட்ட காணியை ஆலயம் கட்டுவதற்காக இலவசமாக வழங்கினார் என மூத்தோரின் வாய்வழிப் பாரம்பரியம் கூறுகிறது. ஆலயம் கட்டுவதற்கான இடம் கிடைத்தவுடன் கொட்டில் கோயில் ஒன்றினை 1956 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கட்ட முடிவெடுத்து. அந்த சுற்று வட்டாரத்திலே இல்லாத கிறிஸ்து அரசரின் பெயரை அவ்வாலயத்துக்குச் சூட்ட ஊர் மக்கள் அனைவரும் ஏகமனதாக முடிவெடுத்தனர்.

முதற்கட்டமாக ஆலயத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்த வளவில் காணப்பட்ட கொய்யா மரங்கள். பனை மரங்கள் என்பன தறிக்கப்பட்டு ஆலய வளவில் முதலாவதாக கட்டப்பட்ட குருசினை ஆசனக்கோயிலில் பங்குத்தந்தையாக இருந்த ஜோண் மேரி அ.ம.தி அடிகளார் ஆசீர்வதித்துள்ளார். ஆலய வளவில் தறிக்கப்பட்ட மரங்களில் இருந்து ஆறு பெரிய கப்புக்கள் எடுக்கப்பட்டு தற்போது இருக்கின்ற ஆலயத்துக்கு சற்று முன்னால் கிழக்கு பக்கமாக 1956ஆம் ஆண்டின் இறுதியில் கிறிஸ்து அரசருக்கென ஓலைக்கொட்டிலாலான ஓர் ஆலயத்தினை கட்டினர். 1966 ஆம் ஆண்டு வரை யாழ் மரியன்னை பேராலய பங்குடன் பதிவில் இருந்த இவ் ஆலயமானது 1967 ஆம் ஆண்டு பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி அடிகளாரின் பணிக்காலத்தில் முதன் முதலாவதாக பாண்டியந்தாழ்வு பங்குடன் இணைக்கப்பட்டது.

**லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் மற்றும் உதவிப்பங்குத்தந்தை ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளார் காலம்**

1974ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாண்டியந்தாழ்வு பங்குக்கு புதிய பங்குத்தந்தையாக லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளாரும், உதவிப்பங்குத் தந்தையாக ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளாரும் நிய மிக்கப்பட்டனர். பாண்டியந்தாழ்வு பங்கிலிருந்து இக் கொட்டில் கோயிலில் திருப்பலியை ஒப்புக்கொடுக்க ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளார் முதன் முதலாக 1974 ஆம் ஆண்டு ஆனி மாதம் வந்தார்.

1975ஆம் ஆண்டின் முதல் மாதத்திலே புதிய ஆலயத்துக்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பமானது. 1975 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றது.

**ஆலயத்தின் திறப்பு விழா**

அமலமரித் தியாகிகள் சபையின் ஆரம்ப கர்த்தாவான யூஜின் டி மசனட் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்ட தினமான, 1975 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி புதிய ஆலயம் திறந்து வைக்கப்பட்டது. அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வராக இருந்த ஜேம்ஸ் குக் அ.ம.தி அடிகள் புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திருப்பலியினை தலைமையேற்று நிறைவேற்றியிருந்தார். ஆலய கட்டுமானப் பணிகள் பூர்த்தியான அடுத்த வருடம், ஆலயத்தின் பின்புறத்தில் வலது புறமாக லூர்து மாதாவுக்கு என சிறியதொரு கெபி கட்டப்பட்டது. 1977ஆம் ஆண்டு தொடக்கத்தில் பாண்டியந்தாழ்வு பங்கில் இருந்து லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளாரும் உதவிப்பங்குத்தந்தை ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளாரும் வேறு பங்குக்கு மாற்றம் பெற்றுச் சென்றனர்.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்கள் பாண்டியன்தாழ்வு பங்கு துணைப்பங்காக இருந்த போது பணியாற்றிய பங்குத்தந்தையர்கள் வருமாறு:

அல்பிரட் அ.ம.தி அடிகளார் (1959 - 1961), செல்வரட்ணம் அ.ம.தி அடிகளார் (1961 1966), பிரான்சிஸ் சேவியர் அ.ம.தி அடிகளார் ( 1966-1967), சி. மரியாம்பிள்ளை அ.ம.தி அடிகளார் (1967 - 1967), பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி அடிகளார் (1967-1974), லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் (1974-1977), கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் (1977 - 1980), பெனட் கொன்சன்ரைன் அடிகளார் (1980 - 1982), மேரி ஜோசவ் அடிகளார் (1982 - 1989), குணசீலன் அடிகளார் (1989 - 1993), எஸ்.ஜே.,ராஜநாயகம் அடிகளார் (1993 - 1996 ), சூசைநாதன் அடிகளார் (1996 - 1997), இரவிச்சந்திரன் அடிகளார் (1997 - 1999), பி.எம்.இம்மானுவேல் அடிகளார் (1999 - 2004).

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயம் 2005 ஆம் ஆண்டு தனிப் பங்காகிய பின்னர் பணியாற்றிய பங்கு தந்தையர்கள் வருமாறு:

றெக்ஸ் சவுந்தரா அடிகளார் (2005 - 2010), சகாயதாசன் அடிகளார் (2010, ஐப்பசி - 2011, மாசி), தேவசகாயம் அடிகளார் (2011 - 2016), ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் (2016 ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலம் வரை)

**ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் காலத்தில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கு**

2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் புதிய பங்குத்தந்தையாக வந்த ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் மிகக்குறுகிய காலத்தில் பல்வேறான பணிகளினை மேற்கொண்டுள்ளார். ஆலயத்தில் புதிதாக சிறிய அளவிலான ஒரு மண்டபத்தினை கட்டுவித்ததோடு பங்குப்பணிமனையின் உட்புறத்தினை புனரமைப்பு செய்துள்ளார்.

அத்தோடு ஆலயத்தில் பல்வேறான பணிகளினை முன்னெடுப்பதற்கு இளைஞர்களை ப்யன்படுத்தி அவர்களுடன் இணைந்து செயற்படுவதே சிறந்த வழி என்பதனை தனது அனுபவ ரீதியில் உணர்ந்தவராக இளையோர் ஒன்றியத்துக்கு பரிபூரண ஆதரவு வழங்கினார். அவர்கள் ஊடாக சிறுவர்கள் தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறார். யாழ்மறை மாவட்டத்தில் 1956 ஆம் ஆண்டு கொட்டில் கோவிலாக உருவான கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலயம் 1975 ஆம் ஆண்டு பெரிய ஆலயமாகி இன்றும் விசுவாச ஒளி பரப்பி வருகிறது.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 80
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.11.18
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,320,945/-
வெற்றி இலக்கங்கள்
12 13 43 72 H

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 730
சீட்டிழுப்பு திகதி 18.11.2017 சனிக்கிழமை
G 28 33 50 58
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 45,768, 828/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2957 திகதி 18.11.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
02 09 41 73 W
போனஸ் இல. 20
திங்கட் கிழமை ஜக்பொட் 51, 628,665/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 093
சீட்டிழுப்பு திகதி 18.11.2017 சனிக்கிழமை
Development Fortune
வெற்றி இலக்கங்கள்
04 14 22 28
சுப்பர் இலக்கம் 06
அதிர்ஷ்ட மாதம் ஏப்ரல்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 60,01, 320/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54, 14, 711/=
அடுத்த ஜக்பொட் ரூ. 13, 58, 110/=
2017.11.23 ஆந் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

British BUSINESS COLLEGE
Where Students Come First
20ஆவது வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2018ம் ஆண்டிற்கான அனுமதிகள்
BBC Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய
பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

CELEBRATING 20 YEAR IN EDUCATION 1998 2018

NO ADMISSION FEES
NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விசேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல்3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
❖ போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும்



வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

## மயங்கி வீழ்ந்த குடும்பத்தலைவர் உயிரிழப்பு

### கோப்பாயில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 19

மதிய உணவு சாப்பிட்ட பின்னர் மயங்கி வீழ்ந்தவர் உயிரிழந்துள்ளார். கோப்பாயைச் சேர்ந்த கிருஸ்ணன் சந்திரசேகரம் (வயது- 64) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது வீட்டில் மதிய உணவை சாப்பிட்ட பின்னர் எழுந்தபோது மயக்கமடைந்து வீழ்ந்துள்ளார். மயக்கமடைந்த அவரை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உறவினர்கள் கொண்டு சென்றனர். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது. (5,8,ரி)

## 2ஆவது மாணவர் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், நவ 19.

யாழ்ப்பாணம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இரண்டாவது மாணவர் நாடாளுமன்றம் நாளை திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருநாவுக்கரசு அபாஜிதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் வேலாயுதர் உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர் என பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது. (21)

The Hands that Protect LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

IMMEDIATE VACANCY
SITE SUPERVISOR

We are looking for a qualified Site supervisor who will be able to supervise the construction of our new Five storey LIC building in Jaffna on full time basis.

**Requirements**
- NDT/BSc or equivalent (CIVIL) qualification with at least 3-5 years of building construction experience.
- Age Below 50 years

This will be a **walk - in interview** at our LIC Jaffna Branch.
Interview will be held at the below venue

| | |
|---|---|
| Date and Time | : 24th November 9.00 a.m. Onward. |
| Address & Contact | : 2811/1, Clock Tower Road, Jaffna |
| Tel. | : 0212226325/6 (phone) |
| E-mail ID | : rageesh83@gmail.com |

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா (தங்கம்மா) இரத்தினராசா



பிறப்பு 17.02.1942 இறப்பு 17.11.2017

யாழ். அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இரத்தினராசா அவர்கள் 17.11.2017 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அப்பையா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினராசா (சங்குவேலி) அவர்களின் அன்பு மனைவியும், கலாநிதி (சுவிஸ்), குகராஜா(கனடா), குகேந்திரன் (சின்னதம்பி சுவிஸ்), குணராஜா (ராஜன் சுவிஸ்), வசந்தநிதி (சுவிஸ்), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வர்களான இராசமணி, சின்னராசா மற்றும் பூமணி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், யோகசிங்கம் (சுவிஸ்), புஸ்பமாலா (கனடா), உதயகுமாரி (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்), தமோதரம்பிள்ளை (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி அவர்களின் அன்புமைத்துனியும், ஜான்சி சுரேஸ்(சுவிஸ்), நெனிஷா கோகுலன்(சுவிஸ்), லக்ஷனா(கனடா), அஸ்வினா (கனடா), கௌதமன் யதுலா (சுவிஸ், இலங்கை), அபிஷனா (சுவிஸ்), விபிஷன் (சுவிஸ்), அக்ஷியா (சுவிஸ்), லவனியா குபேரன் (சுவிஸ்), சங்கவி (சுவிஸ்), பிரவீன் (கனடா), சஹானா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரதியா (சுவிஸ்), அமிர்தா (சுவிஸ்), ஆரூஷ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அச்சுவேலி தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைத்தொழில்பேட்டை வீதி,
தோப்பு, அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் (குணம்) 076 482 8726
நந்தினி - 076 937 1228

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் சந்திரதாசன்



பிறப்பு 14.02.1953 இறப்பு 18.11.2017

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சந்திரதாசன் நேற்று (18.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின்அன்புக்கணவரும்சைலா, சியாமளா, வின்சன், சர்மிளா, சிவாஜினி ஆகியோரின்அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 127 9585

தகவல்: குடும்பத்தினர்.

## கிந்தோட்டை...

இடம்பெற்ற வன்முறையில் 62 வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆகக் குறைந்தது 10 வாகனங்கள் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிந்தோட்டையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தால் அங்குள்ள சிங்கள, முஸ்லிம் தரப்பினரிடையில் முரண்பாடு எழுந்தது. இதைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களின் வீடுகள், பள்ளிவாசல்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. சொத்துக்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இந்தக் களேபரத்தையடுத்து சிறப்பு அதிரடிப்படையினர், பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். ஊரடங்குச் சட்டம் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து சமூகவலைத்தளங்களில் இனவாதப் பரப்புரையை முன்னெடுக்கும் காணொலிகள் வெளியிடப்பட்டிருந்தன. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை உடனடியாகக் கைது செய்யுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க உடனடியாகவே பணிப்புரைவிடுத்தார். அத்துடன் வன்முறைச் சம்பவம் தொடர்பான காணொலிகள், ஒளிப்படங்களை வெளியிடவேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வன்முறை இடம்பெற்ற பகுதிகளை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசாரதேரர் நேரில் சென்று நேற்றுப் பார்வையிட்டார். அதேபோன்று முஸ்லிம் அமைச்சர்களான ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோரும் அங்கு சென்று நிலமைகளை அவதானித்தனர். இதனைவிட பொலிஸ்மா அதிபர் பூஜித்தும் அந்தப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்றைய தினம் பதற்றம் ஓரளவு தணிந்துள்ள போதிலும், பெருமளவு பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அங்கு குவிக்கப்பட்டனர். நேற்றுக் காலையில் விலக்கிக் கொள்ளப்பட்ட ஊரடங்கு உத்தரவு மாலை 6 மணிக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது. இன்று காலை 6 மணியுடன் அது நீக்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

(உ-5)

## பிரபாகரனிடம்...

திருக்க முடிந்திருக்கும். போர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இராணுவம் பலமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, நீதி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பாதுகாப்புக்காக படையினர் பலர் உயிரை தியாகம் செய்தனர். இதனால் நாம் கவலை கொள்ள மாட்டோம். பாதுகாப்புப் படையினருக்குள்ள தலையாய பொறுப்பு அரசமைப்பைப் பாதுகாப்பதாகும். அவர்கள் அதற்கு முன்னின்று செயற்படுவர்.

முப்பது வருடம் போர் இருந்தது. அப்போது நாட்டில் பாதுகாப்பு இருந்ததாக நான் நினைக்கவில்லை. போரை வெல்லப் பெரும் சேவைகளை முன்னெடுத்தோம். பாதுகாப்புப் படைகளில் 99.5 வீதம் தேசப்பற்றுள்ளவர்கள் இருந்தனர். 5 வீதத்தினர் நாட்டைப் பற்றிச் சிந்திக்காமல் சில குழுக்களின் பின்னால் பணத்துக்காகச் செயற்பட்டனர். போரில் 30 ஆயிரம் பாதுகாப்பு படையினர் உயிரிழந்தனர். அதில் 28 ஆயிரம் பேர் தரைப்படையினராவர். 3,000 பேர் ஊனமுற்றனர். இந்த ஒட்டு மொத்த படையினரின் உதவிகள் இன்றி எம்மால் வெற்றியடைந்திருக்க முடியாது.

போரின்போது பாதுகாப்புப் படையில் 3 லட்சம் படையினர் இருந்தனர். அதில் 2 லட்சம் பேருக்கு நானே தலைமை வகித்தேன். இராணுவத்துக்கு பன்னாட்டுத் தரம்வாய்ந்த பாதுகாப்புச் செயன்முறைத் திட்டம் இல்லை. பாதுகாப்புத் திட்டமில்லை. படையினருக்குப் பயிற்சி வழங்கவேண்டும். எதிர்காலத்தில் நாட்டுக்குள் பிரச்சினைகள் வரலாம். தற்போது படையினருக்கு உரிய இடம் வழங்க வேண்டும்.

கடந்த காலங்களை விடவும் பாதுகாப்புக்கு ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சியில் பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கிடுவதனை விடுத்து அதற்குப் பதிலாகக் கொள்ளையிட்டனர்.

கடற்படையின் பணத்தை அவன்காா்ட் நிறுவனத்துக்கு வழங்கினர். ரத்னாலங்க போன்ற நிறுவனத்தால் அப்போதைய பாதுகாப்புச் செயலர் வியாபாரம் செய்து ஊழல் செய்தார். இதுபோன்ற அனைத்துக் குற்றங்களுக்கும் தண்டனை வழங்கவேண்டும். குடும்ப அரசியல் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

தற்போது வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்றப் போவதாக கூறுகின்றனர். வடக்கும் கிழக்கு தெற்கிலும் இராணுவம் இருக்க வேண்டியது அவசியமாகும். எங்கு இராணுவம் இருக்கவேண்டும் என்பதை இராணுவமே தீர்மானிக்கும். இராணுவத்தை பலவீனப்படுத்த நாம் முனையவில்லை. நாடுமுழுவதும் இராணுவ முகாம்கள் இருக்கும்.

இராணுவத்தினர் என்ற வகையில் எமக்கு அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளது. எனினும் அமெரிக்க இராணுவத் தளபதி இங்கு நடக்கும் மாநாடொன்றுக்கு தலைமை அதிதியாக வருகின்றார். இதனை இப்படியே விட்டுச் சும்மா இருக்கமுடியாது. இந்த நெருக்கடியில் இருந்து நாம் மீள வேண்டும். அதனை விடுத்து முட்டாள் தனமாக பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

இராணுவத் தளபதி குற்றம் செய்திருந்தால் அதுதொடர்பில் விசாரணை செய்யவேண்டும். அதனை விடுத்து முட்டாள் தனமாகப் பேசிக் கொண்டிருப்பதனால் எம்மால் நெருக்கடிகளில் இருந்து மீள முடியாது - என்றார். (உ-5,31)

## காலி...

யான வன்முறைக்குத் தூபமிடும் செயல். முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களின் சகோதரர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களின் சகோதரர்கள் என்பதையும், இந்த மூன்று இனத்தவர்களும் இந்த நாட்டின் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்பதையும் வன்முறையில் ஈடுபட்டவர்களும் அவர்களைத் தூண்டிவிட்டவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

வன்முறையில் ஈடுபட்டவர்களையும், அவர்களைத் தூண்டி விட்டவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவது ஆட்சியில் உள்ள அரசின் முக்கிய கடமையாகும் - என்றார். (உ-5)

## வாள்வெட்டுக்கள்...

குற்றவாளிகளை விரைந்து கைது செய்வதற்கான முழு முயற்சியில் தாம் இறங்கியுள்ளார் என அவர் பாதிக்கப்பட்டவர்களிடம் தெரிவித்தார்.

மேலும், தனது உத்தரவுக்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் வீதிச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பதையும் அவர் ஒவ்வொரு பகுதிகளுக்கும் நேரில் சென்று கண்காணித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## வடக்கு...

20 வயது இளைஞர்கள் நாலைந்து பேர் மோதிக்கொள்கின்றனர். அவர்களில் பலர் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். வெளியில் உள்ளவர்கள் சில தரப்புகள் தங்களுக்கு இடையே மோதிக்கொள்கின்றன. அவர்களின் நோக்கம் சிறைகளிலுள்ளவர்களின் மன நிலை மாறக்கூடாது என்பதேயாகும்"- என்றார். (உ-5,8)

## ரி.ஆர்.ஒவின்...

வாத தடுப்புப் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்பட்டிருந்தது. அந்தக் கழகத்தின் வைப்புக்கள் அரச வங்கிகளிலும் இருந்தன. அத்துடன் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாட்டாளர்களும் அரச வங்கிகளில் கணக்கு வைத்திருந்தனர்.

இந்தக் கணக்கு விவரங்கள் தொடர்பான விசாரணைகளை, போர் முடிந்து 8 ஆண்டுகளின் பின்னர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு ஆரம்பித்துள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, அரச வங்கிகளின் முகாமையாளர்களாகச் செயற்பட்டவர்களை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கொழும்பில் நாளை திங்கட்கிழமை 4ஆம் மாடியில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கவுள்ளன. (உ-5,8,102)

## ஆதரவு...

30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 5 நாள்கள் நடத்தப்பட்டுள்ளது. எனினும் விவாதம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

இதற்கிடையில் வழிநடத்தல் குழு கடந்த வியாழக்கிழமை திடீரெனக் கூடியது. அரசமைப்புச் சபையில் இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தை டிசெம்பர் 2ஆம் திகதி நடத்துவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும், அரசமைப்பு உருவாக்கப் பொறிமுறை தொடர்பில் பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றது. உண்மை நிலையை மக்களுக்கு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும். அந்தப் பணியை, அரச தகவல் திணைக்களத்தின் ஊடாக உடனடியாக முன்னெடுக்கவேண்டும் என்று வழிநடத்தல் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## குற்றங்களை...

தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலி கிந்தோட்டையில் சிங்கள, முஸ்லிம் இனக்குழுக்களுக்கிடையில் மோதல் நிலமைகள் ஏற்பட்டுள்ளன. இனமோதல்களை மேற்கொள்ளும் நடவடிக்கைளுக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இடமளிக்கக் கூடாது.

அண்மைய நாள்களாக பிணைமுறி மோசடிகள், அலோசியஸுடன் உரையாடிய கோப் குழு உறுப்பினர்களின் விவரங்களே பத்திரிகையில் முன்பக்கச் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலமையில்தான் கிந்தோட்டையில் இனமோதலும் நடக்கின்றது. இந்த இரண்டுக்கும் இடையிலான தொடர்பு என்ன? குற்றங்களை மறைக்க மக்களிடத்தில் இனவாதத் தீ மூட்டப்படுகின்றதா?

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜுலையையும் இவ்வாறுதான் செய்தார்கள். எந்தவொரு நபருக்கும் இன்னொருவரைத் தாக்குவதற்கு அவரின் சொத்துக்களுக்குச் சேதப்படுத்துவதற்கு உரிமை கிடையாது.

தெற்கைப் போன்றுதான் வடக்கில் பதற்றமான நிலமை இருக்கின்றது. ஆவா என்றொரு குழு இருந்தது. பின்னர் அதற்கு எதிரான மற்றொரு குழு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடத்தில் இது தொடர்பில் கேட்டுப் பிரயோசனமில்லை. அவர்களுக்கு அது தொடர்பாகக் கவலை இல்லை. அவர்கள் அரசியல் ஒப்பந்தக்காரர்களாகிவிட்டனர். அவர்கள் இவற்றைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் வடக்கு தமிழ் மக்கள் அச்சத்தில் இருக்கின்றார்கள்.

அங்குள்ள பொலிஸார் சோம்பல்காரர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இன்னும் கொஞ்ச நாள்கள் செல்லும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல சாதாரண மக்களுக்கும் சலூட் அடிக்க வேண்டிய நிலமை ஏற்படும். அங்கு சட்டம் ஒழுங்கு முழுமையாக வீழ்ச்சியடைந்துவிட்டது.

தற்போது ஆர்ப்பாட்டம் காரணமாக வடக்கில் இராணுவ முகாம் அகற்றப்படுகின்றது. பெற்றோல் பிரச்சினை இந்தப் பக்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இரணைமடு இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

அப்படியென்றால் பனாகொட, ஹோமாகம மக்களும் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று போராட முடியுமல்லவா? இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது தேசியபாதுகாப்பு, போர் மூலோபாயங்களின் அடிப்படையில் நடைபெறவேண்டும். யாருடைய் விருப்பு வெறுப்புக்கும் ஏற்ப நடத்த முடியாது. நாங்கள் நாட;டை உங்களிடத்தில் ஒப்படைக்கும் போது இவ்வாறா ஒப்படைத்தோம்;. தேசிய பாதுகாப்பை வைத்து நடத்தும் கால்பந்து விளையாட்டை நிறுத்தவேண்டும் - என்றார். (5,31)

## ஐ.நாவின்...

பரிந்துரைகள் பல்வேறு நாடுகளால் முன்வைக் கப்பட்டிருந்தன.

மீளாய்வின் தீர்மானம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

அங்கு உரையாற்றிய பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, முன்வைக்கப்பட்ட 230 பரிந்துரைகளில், 177 பரிந்துரைகளை மாத்திரம் அரசு ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.

ஏனைய பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா வெளிப்படையாக கூறவில்லை. 53 பரிந்துரைகளையும் கவனத்திற் கொண்டுள்ளதாக மாத்திரம் அவர் குறிப்பிட்டார். (உ-5)

## மகிந்த...

கோத்தபாய ராஜபக்சவே சந்திப்பை ஏற்பாடு செய்தார்.

தற்போதைய குழப்பமான அரசியல் நிலமை மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள இழுபறி நிலமைகள் தொடர்பில் இரு தலைவர்களும் நேரடியாகச் சந்தித்து பேசினால் சுமுக முடிவுகளை எடுக்கலாம் எனக் கருதப்பட்டு இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டபோதும் ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்று அறியமுடிந்தது.

**பசில் அதிருப்தி**

இந்த இரகசியச் சந்திப்பு தொடர்பில் மகிந்த ராஜபக்சவின் மற்றுமொரு தம்பியார் பசில் ராஜபக்ச கடும் அதிருப்தியில் இருக்கின்றார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த அணியைப் பலப்படுத்த தாம் தீவிர முயற்சிகளை எடுத்து வரும் நிலையில் அரசியல் நிலமைகளை அறியாமல் கோத்தபாய இப்படியான சந்திப்புக்களை ஏற்பாடு செய்வது அரசியல் ரீதியில் மகிந்தவுக்கு பின்னடைவைத் தருமென பசில் கடும் அதிருப்தியை வெளியிட்டார் எனவும் மேலும் அறியமுடிந்தது.

(உ-5)

## விக்கி...

தைப் போசிக்கின்றனர். அதில் சிவாஜிங்கம் ஒரு நகைச்சுவையாளர். இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீறி இனவாதம் பேசுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதற்குள் உள்ளீர்க்க முனைகின்றனர். வடக்கில் இனவாதம் பேசுபவர்கள் அரசியலுக்காகவே இதனை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலைவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலும் இனவாத மனோநிலை உருவாகியுள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்திருக்கின்றார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும். தேசியக் கொடி தொடர்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு இருக்கலாம். இருந்தாலும் தற்போதுள்ள தேசியக் ஒகாடி தான் அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாம் 1978ஆம் ஆண்டு அரசமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அந்த அரசமைப்பின் கீழேயே செயற்படவேண்டியவர்களாக இருக்கின்றோம். வடக்கு மாகாண கல்வி அமைச்சர் அரசமைப்பை மீறியுள்ளார்.

அவர் இவ்வாறு செய்ததன் பின்னணியில் இருப்பது இனவாதமே. தமிழ் இனவாதம் தோன்றினால் சிங்கள இனவாதமும் தோன்றும். இனவாதத்தை இனவாதத்தால் தோற்கடிக்க முடியாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பரப்புரைகளில் ஒன்றாகத்தான் இனவாத அணுகுமுறையும் இப்போதே போசிக்கப்படுகின்றது.

இனவாதம் எங்கு எழுந்தாலும் நாம் அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் - என்றார். (உ-5)

## 35 கிலோ...

பொலிஸார் கஞ்சாவை மீட்டனர்.

"பொதியிடத் தயாராக இருந்த நிலையில் 35 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதனை வைத்திருந்த சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ளோம்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-5,9)

## ஆஸியிலிருந்து...

களில் குறைந்தபட்ச வசதிகளேனும் இல்லை. இவர்களை மீண்டும் இந்த நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசு நடடிவடிக்கை எடுக்குமா? கிறிஸ்மஸ் தீவில், பபுவா, நியுகினியா மற்றும் நவுருவில் உள்ள முகாம்களில் இருக்கின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை பற்றி விசாரிக்கப்பட்டுள்ளதா? அங்குள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எவ்வளவு?'' என்று கேள்வி முன்வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் திலக் மாரப்பன, அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

''கிறிஸ்மஸ் தீவில் 12 பேரும், பபுவா நியுகினியாவில் 21 பேரும், ஆஸ்திரேலியாவின் மையப் பகுதியில் 70 பேரும் நவுரு தீவில் 94 பேரும் தற்போது குடியுரிமையின்றிய நிலையில் இருக்கின்றனர். ஏதிலி முகாம்களில் உள்ளவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்கான வானூர்திச் செலவினத்தை ஆஸ்திரேலிய அரசு பொறுப்பேற்கும். கடவுச்சீட்டு இல்லாதவர்களுக்காக தற்காலிக ஆவணங்களைத் தயாரிக்க இலங்கைத் தூதரகம் உதவியளிக்கின்றது"- என்றார். (உ-5)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 19
அரியாலை அருணோதய சன சமூக நிலையம் நடத்தும் முன் பள்ளி பாலர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நிலையை முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் துடுப்பாட்ட பயிற்றுனர் வி.கே.சண்முகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-422)

## சூதாட்டத்தில் ஈடுபடுவதற்காக அணுகப்பட்டார் கிரேமி கிறீமர்



மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் கடந்த மாதம் இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டமொன்றில் சிம்பாப்வே அணியின் தலைவரான கிறீமர் சூதாட்டத் தரகர்களால் அணுகப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

தன்னை சூதாட்டத் தரகரொருவர் சூதாட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக நாடினார் என்று கிறீமர் தெரிவித்ததை அடுத்து அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிம்பாப்வே கிரிக்கெட் சபை, பன்னாட்டு கிரிக்கெட் சபை ஆகியன தனித்தனியாக இது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான தொடரிலும் சிம்பாப்வே வீரர்கள் மீதும் இலங்கை வீரர்கள் மீதும் சூதாட்டம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

---

## 3ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 06 . 1956



ஆண்டவன் அடியில்
23 . 11 . 2014

அமரர்
### பொன்னுத்துரை யோகராசா

அப்பா நீங்கள் எங்களுக்கு கிடைத்த அரும் பெரும் பொக்கிஷம் உங்களை தொலைத்து விட்டு இன்று வரை தேடுகின்றோம் அப்பா!

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணசாமி குகதாஸன்



தோற்றம் 01.04.1979 மறைவு 31.07.2017

வடக்கு மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி குகதாஸன் 31.07.2017 சவுதியில் அகாலமரணமானார்.

அன்னார் கிருஷ்ணசாமி சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகனும் தர்மலிங்கம் தவறஞ்சிதம் தம்பதியரின் மருமகனும் தர்மேந்தினியின் அன்புக் கணவரும் நிஷோன், கிரிஷோன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி, குகன், கவிதா ஆகியோரின் சகோதரனும் தயாநந்தினி, பிரபாகரன், பிரபவதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை கைதடி நுணாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

---

### இராசையா இராஜேஸ்வரன் (துரை)



பார்மணியம் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜேஸ்வரன் (துரை) 17.11.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.40 மணிக்கு இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், பாலசிங்கம் - சகுந்தலை தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி பத்மாவதியின் பாசமிகு கணவரும், ஜீவனா, யுமேஸ் (ஆசிரியர் - மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராணி மற்றும் இரட்ணம்,இராமேஸ்வரன் (லண்டன்), இராஜமகேந்திரன் (பிரான்ஸ்), இராஜமனோகரன் (பிரான்ஸ்), இராஜசந்திரன் (பிரான்ஸ்), இராஜ இந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நந்தகுமார், தவக்குமார், பிறேமாவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒருமணிக்கு தெல்லிப்பழை, கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்மணியம் வீதி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 326 6331

---

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பிள்ளை கந்தசாமி



காந்தியூர் புலோலி வடமேற்கைச் சேர்ந்த திருமதி சின்னப்பிள்ளை கந்தசாமி 15.11.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், இராசரத்தினம் (கனடா), செல்வராசா, யோகராசா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், கருணேஸ்வரி, மங்களேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தியூர்,
புலோலி வடமேற்கு.

தகவல்
குடும்பத்தினர்.

021 226 1216

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கௌரி துரைராசா



உரும்பிராய் கிழக்கு, ஞானவைரவர் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரி துரைராசா அவர்கள் 17.11.2017 வெள்ளிக்கிழமை உரும்பிராயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், துரைராசா (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும், துஷித்தா (லண்டன்), துஷாரா (லண்டன்), துசீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சி ஆனந்தன், சுதர்சன், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஈஸ்வரி அம்மா (லண்டன்), கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிவலோகேஸ்வரி, மகாதேவன், சிவமலர், இராசலட்சுமி, சிவயோகன், நந்தினி ஆகியோரின் மைத்துனியும், சிவசுதன், கஜன், சிந்துஜா, சிந்துராஜ், சிந்தீபா, சிந்துராஜு ஆகியோரின் பெரிய தாயாரும், பிரணவி, கிரிஷன், திலக்ஷன், சியாமளன், லியோன், அஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மைத்துனி சிவயோகேஸ்வரி (தேவி) துரைராசா அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.120, ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்
மு.துரைராசா (கணவர்)
021 222 0475

---

### திருமதி ஜெகசோதி சிவக்கொழுந்து



தோற்றம் 03.03.1939 மறைவு 11.11.2017

அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகசோதி சிவக்கொழுந்து ஜேர்மனியில் 11.11. 2017 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் வைரவப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும் அனுராதா, இரவீந்திரன், கீதா, சுரேந்திரன், குகனேந்திரன், சுஜதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசா, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருபாநிதி, ஜெயந்திமாலா, நடராஜா, நிர்மலாதேவி, விஜிதா, சுகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கீதன் காயத்திரி, சாரங்கன் கோகுலா, வாகீசன், காருண்யா, மாதங்கன், சர்மிலன், திசா, சாரண்யா, கஜதீபன், கேகயன், விகர்ணன், துஷாந்தன், கிஷாந்தன், நித்திலன், மிதுண்யா, கிதுஷன், கிஷாலி, கதுஷன், சபினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைஷவி, விஷனி, கபிஷா, லாஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ விக்கினேஸ்வரா வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.


தகவல்:
திருமதி பாமினி கமலநாதன்



# நீக்கப்பட்டார் இத்தாலியின் பயிற்சியாளர்

ரஷ்யாவில், அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கு இத்தாலி, தகுதி பெறாததைத் தொடர்ந்து, இத்தாலியின் தலைமைப் பயிற்சியாளர் ஜியம்பியரோ வென்ரூரா நீக்கப்பட்டார்.
ஜியம்பியரோ வென்ரூராவின் பயிற்சியில் இத்தாலி பெரியளவில் பெறுபேறுகளை வெளிப்படுத்தவில்லை. உலகக் கிண்ணத் தகுதிகாண் தொடரில், ஸ்பெய்னுக்கெதிராக ஒரு புள்ளியை மாத்திரம் இத்தாலி பெற்றதோடு, சொந்த மண்ணில் இடம்பெற்ற மசிடோனியாவுடனான ஆட்டத்திலும் சமநிலை முடிவையே பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆஷஸ் தொடருக்கான ஆஸி. அணி அறிவிப்பு



நடப்பு வருட ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. மக்ஸ்வெலுக்கு அணியில் இடம் கொடுக்கப்படவில்லை.
வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடருக்கான ஏற்பாடுகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு அந்த அணி தற்போது ஆஸ்திரேலியாவில் முகாமிட்டுள்ளது. இந்த நிலையில் இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.
ஆஸ்திரேலிய அணி விவரம் - சிமித் (தலைவர்), வோர்ணர் (உப தலைவர்), கமரோன் பான்கிராப்ட், பீட்டர் ஹாண்ட்ஸ்கொம்ப், சோன் மார்ஷ், உஸ்மன் கவாஜா, டிம்பெயின், லையன், ஹசில்வூட், மிச்செல் ஸ்ராக், ஜக்சன் பேர்ட், கம்மின்ஸ், சாட் சயர்ஸ்.
ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் பிரிஸ்பெய்னில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 2, டிசெம்பர் 14, டிசெம்பர் 26, ஜனவரி 4 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன. (ம)


# டோனிக்கு ஆதரவு வழங்கும் கோக்லியின் செயற்பாடு அற்புதமானது

*கங்குலி பெருமிதம்*

"நெருக்கடியான நேரத்தில் டோனிக்கு கோக்லி வழங்கும் ஆதரவு மிகவும் அற்புதமானது" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.
நியூசிலாந்துக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் டோனி தடுமாற்றத்தை வெளிப்படுத்தினார். இதையடுத்து டோனி மீது பெருமளவில் விமர்சனங்கள் வைக்கப்பட்டன. குறிப்பாக முன்னாள் வீரர் லக்ஷ்மன் டோனி ஓய்வு பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் டோனிக்கு ஆதரவாக பகிரங்கமாக கருத்துத் தெரிவித்திருந்தார் கோக்லி. 2019ஆம் ஆண்டுவரை டோனி அணியில் இருக்க வேண்டிய தன் அவசியத்தை கோக்லி ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கங்குலி இவ்வாறு குறிப்பிட்டார்.
"விராட் கோக்லி அற்புதமான தலைவர். ஓய்வு அறையில் அவர் வீரர்களுடன் என்ன பேசுவார் என்பது எனக்கு தெரியாது. ஆனால் வீரர்களுடன் அவர் பழகும் விதம் சிறப்பானது. சம்பியன் வீரரான டோனிக்கு ஆதரவு அளிக்கும் கோக்லியின் செயற்பாடு அற்புதமானது" என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



# அரையிறுதியில் றோயர் பெடரர்



இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடைபெற்றுவரும் உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில், அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.
பெடரர் தனது காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தில் உள்ள வீரரான ஜேர்மனியின் அலெக்சான்டரை எதிர்த்து மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். இரண்டாவது செற்றை 5:7 என்ற அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் அலெக்சான்டர். மூன்றாவதும் இறுதியானதுமான செற் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் விதத்தில் அமைந்தது. அந்த செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெடரரின் வசமாக முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர். (ம)

# முன்னிலைபெற இலங்கைக்கு அதிக வாய்ப்பு



இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது. எனினும் இன்னும் முதல் இன்னிங்ஸ் கூட முழுமை பெறாத காரணத்தால் இலங்கை அணியின் வெற்றி சந்தேகமே.
இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை வேகப் பந்து வீச்சாளர்களின் சிறந்த பந்துவீச்சால் இந்திய அணி இரண்டாம் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புஜாரா 47 ஓட்டங்களுடனும், சகா 6 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.
அரைச்சதம் கடந்தார் புஜாரா. அவர் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சகா, ஜடேயா, சமி ஆகியோர் பின்வரிசையில் அடித்தாடினர். இதனால் இந்திய அணி ஓரளவு தலைநிமிர்ந்தது. முடிவில் 172 ஓட்டங்களில் சுருண்டது இந்திய அணி. பந்துவீச்சில் லக்மல் 4 இலக்குகளையும், கமகே, சானக, பெரேரா மூவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்களாக சமர விக்கிரம, கருணாரத்ன இருவரும் களமிறங்கினர். 23 ஓட்டங்களுடன் சமர விக்கிரமவும், 8 ஓட்டங்களுடன் கருணாரத்னவும் ஆட்டமிழந்தனர். இருவரையும் புவனேஸ்வர் குமார் வீழ்த்தினார். திரிமன்னே, மத்தியூஸ் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்தனர். திரிமன்னே 51 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். நாள் முடிவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



பிறப்பு 03.07.1949 — இறப்பு 17.11.2017

### வீரசிங்கம் கிருபானந்தமூர்த்தி

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் பழையவாடி, புளியங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தோணிக்கல் வவுனியாவை தற்கால வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கிருபானந்தமூர்த்தி 17.11.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வீரசிங்கம் - கமலம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபனா, கீர்த்தனா, நிதர்சன் அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதரன் (கண்ணன்), மகிந்தன் (பிரான்ஸ்). ஆகியோரின் மாமனும் கிருபாதேவி (ஓய்வுநிலை அதிபர்), ஆனந்தன் (லண்டன்), இந்திராதேவி (கொழும்பு), சவுந்தலாதேவி (கனடா), ஸ்ரீரங்கமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாராணி (லண்டன்), பாலசுப்பிரமணியம் (கொழும்பு), மகேஸ்வரன் (கனடா), தவராணி (ஜேர்மனி), திலகவதி, காலஞ்சென்ற நடராசா, கமலா, செல்வராசா, யோகராசா, தர்மராசா, சிவராசா காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும் துவஸ்திகா, சுவஸ்திகன், தினோஸ்கா, ஷகாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் வவுனியாவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி 10.00 மணிக்கு பழையவாடி, புளியங்குளத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி நல்லடக்கத்திற்கு பி.ப. 2.00 மணிக்கு பழையவாடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர். 077 744 4122**

## காணி விற்பனைக்கு

பளை, புதுக்காடு சந்திக்கு அருகில் A9 வீதியில் 180 அடி முகப்பாக கொண்ட 7 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. **தொடர்பு - 077 2915823**

## விற்பனைக்கு

நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் (பொன் செல்வ மகால் மண்டபத்திற்கு அருகில்).
வீட்டுடன் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
வீட்டின் பெறுமதி தேவையில்லை.
**077 639 5068**

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 493 1111**

## மரண அறிவித்தல்

### திருமதி மாலினிதேவி வேதநாதன்

*(ஓய்வுபெற்ற அதிபர் சி.சி.த.க. பாடசாலை, கொக்குவில் மேற்கு.)*



ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினிதேவி வேதநாதன் நேற்று (17.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் டொக்டர் வேத நாதன் (ஓய்வு, யாழ்.மாநகரசபை) இன் அன்பு மனைவியும் Dr.பவந்தன் (வவுனியா பொது வைத்தியசாலை), கஜந்தன் (பொறியியலாளர், நியூசிலாந்து), சேந்தன் (அபி விருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr.ஜெயந்தி (கொழும்பு, களுபோவில பொது வைத்தியசாலை), சந்திரிக்கா (நியூசிலாந்து), சிந்துஜா (தேசிய நூலகம், கொழும்பு) ஆகியோரின் மாமியும் அக்ஷிகா, தனனிகா, அனையன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - நாகம்மா (நயினாதீவு) தம்பதியரின் அன்பு மருமகளும் புவனசுந்தரி (பவானி, கனடா), ஸ்ரீதரன் (கனடா), கிருபாகரன் (கனடா), கிருசாலினி (கனடா), பரிபாலினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சபாநாதன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் மகேஸ்வரநாதன், மீனாட்சி, காலஞ்சென்ற புண்ணியநாதன் மற்றும் குணராஜா, சிவகுமாரி, கமலா, வரதராஜா, கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தவமணி காலஞ்சென்றவர்களான சோமேஸ்வரி, நவநீதகிருஷ்ணன் மற்றும் சொர்ணம்மா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் தயானந்தம், ஞானபண்டிதன், காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

தகவல்
**குடும்பத்தினர்.**
**0212213157**

## அமெரிக்க லொத்தர் இலவச வீசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
0768226243
**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம், கிறிஸ்தவ (RC) சமய 1985 இல் பிறந்த அரச உயர் பதவியிலுள்ள (Officer Grade) மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. கிறிஸ்தவ (RC), இந்து சமயத்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுவர்.
**077 574 0258**

## வீட்டுவேலைக்கு பணிப்பெண் தேவை

வயது - 35- 50
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
**077 636 2004**


## Study in Latvia



**Why Study in Latvia (Europe)?**

* Bachelors / Master / Doctoral level
* English medium
* IELTS not required
* Easy visa procedures
* Very low course fee
* One day old funds acceptable
* 20 Hours part time allowed
* Schengen Visa( Valid for 26 Countries)

Admission open for Feb- 2018

ICS Study Overseas
Admission Line : 077 3013060
107, B 1/1 Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்






2 years warranty^
+
Free wireless charger
^Applied for purchases before 31st December 2017 only

Available at: JKOA | SINGER | SINGHAGIRI | softlogic | WOW.lk

SIMPLY DIAL
011 SAMSUNG
7267864

www.facebook.com/SamsungLanka
Colours Available: Black Orchid Gray
Network Partner: Dialog


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.